# தேசத்திற்கு சக்தியளித்தல்



**ஆண்டறிக்கை 2016**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

# உள்ளடக்கம்


அறிக்கையிடலுக்கான எமது அணுகுமுறை ..... 2

எமது வியாபாரம் ..... 4

நோக்கு,செயற்பணி மற்றும் இலக்குகள் ..... 5

எமது வியாபார மாதிரி ..... 6

எமது தலைமைத்துவக் குழு ..... 7

எமது தற்போதைய பணிப்பாளர் சபை ..... 7

சிரேஷ்ட முகாமைத்துவக் குழு ..... 10

தலைவரின் மீளாய்வு ..... 12

எமது தொழிற்பாட்டு சூழல் மற்றும் செயல்நுணுக்கம் ..... 15

எமது செயல்நுணுக்கம் பற்றிய வழங்கல் ..... 20

இடர் முகாமைத்துவ அறிக்கை ..... 30

கூட்டுத்தாபன ஆளுகை ..... 37

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை ..... 43

*பணிப்பாளர்களின் அறிக்கை* ..... 45

*நிதியியல் கூற்றுக்கள்* ..... 51

*விரிவான வருமானக் கூற்று* ..... 52

*நிதிநிலைக் கூற்று* ..... 53

*காசுப் பாய்ச்சல் கூற்று* ..... 54

*பங்கு மூலதன மாற்றக் கூற்று* ..... 55

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ..... 56

கணக்காய்வாளர் *அதிபதி அறிக்கை* ..... 91

ஒரேபார்வையில்பத்தாண்டுகள் ..... 142

*நிதியியல் கலைச் சொற்கள்* ..... 144

# அறிக்கையிடலுக்கான எமது அணுகுமுறை

## தேசத்திற்கு சக்தியளித்தல்

இது எமது இரண்டாவது வருடாந்த ஒருங்கிணைந்த அறிக்கையாகும். கூட்டுத்தாபனத்தின் செயல் நுணுக்கம், செயலாற்றுகை, ஆளுகை மற்றும் பெறுமதி உருவாக்கம் ஆகியன பற்றி மிகவும் வெளிப்படையாக இருப்பதன் மூலம் கடந்த வருடத்திலிருந்து எமது செயற்பாடுகள் மீதான அறிக்கையிடலுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை ஒன்றை நாம் மேற்கொண்டுள்ளோம்.

## நோக்கம் மற்றும் எல்லை என்பவற்றை தெரிவித்தல்

இவ் அறிக்கையானது, 2016 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரையுள்ள காலப்பகுதிக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வியாபார மாதிரி, நடவடிக்கைச் சூழல், முக்கிய இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள், அத்துடன் நல்லாட்சி மற்றும் நடவடிக்கைச் செயலாற்றுகை ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவலை வழங்குகிறது. எமது செயல்நுணுக்க வியாபார அலகுகளின் செயலாற்றுகையை இவ் அறிக்கை உள்ளடக்குகிறது. மேலும், வருடாந்த நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு அறிக்கையுடன் இணைத்து நாம் வெளியிட்டுள்ளோம். எமது அனைத்து அறிக்கைகளுக்குமான அறிக்கையிடல் செயன்முறையானது, இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்கள் (SLFRS / LKAS),சிறந்த ஆளுகைக்கான பகிரங்க தொழில் முயற்சி வழிகாட்டல்கள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் தேவைப்பாடுகளினால் வழிகாட்டப்பட்டுள்ளது.

**எமது வருடாந்த அறிக்கையைப் பயன்படுத்துதல்**

*ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கை (IR)*

*எமது செயல்நுணுக்கம்மற்றும் வியாபார மாதிரி, நடவடிக்கைச் சூழல், ஆளுகை, இயக்கச் செயலாற்றுகை மற்றும் நடவடிக்கைச் செயலாற்றுகைஆகியவற்றின் மீளாய்வுச் சுருக்கம்*

*வருடாந்த நிதிக் கூற்றுக்கள்*

SLFRS / LKAS*ஆகியவற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட, கணக்காய்வு செய்யப்பட்ட எமது நிதிப் பெறுபேறுகளின் விபரமான பகுப்பாய்வு*

### உண்மைப் பொருளுக்கான எமது அணுகுமுறை

குறுகிய, இடை மற்றும் நீண்டகாலத்திற்கு மேலாக பெறுமதி சேர்ப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுடைய இயலுமை பற்றி அறிவிக்கப்பட்ட மதிப்பீடு ஒன்றை செய்வதற்கு விருப்பமுடைய தற்போதுள்ள அல்லது எதிர்காலப் பங்காளர்களுக்கு முக்கிய நலனுடையதாக இருக்கும் என நாம் நம்புகின்ற தகவலை இவ் அறிக்கை வழங்குகின்றது. இவ் அறிக்கையின் அனைத்து தகவல்களும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில்(CPC)பெறுமதி உரிவாக்கத்தினைப் பாதிக்கின்ற விடயங்களுடன் தொடர்புடையன என்பதை உறுதிசெய்ய முயன்றுள்ளோம். எமது வியாபாரம் (பக்கம் 4 இருந்து 5 வரை), எமது வியாபார மாதிரி (பக்கம் 6) மற்றும் எமது பெறுமதித் தொடரில் உள்ளடங்கியுள்ள எமது செயற்பாடுகள் மற்றும் தாக்கங்கள் (பக்கம் 15 இருந்து 19 வரை) ஆகியவற்றைப் புரிந்து கொள்வது, CPC எவ்வாறு பெறுமதியை உருவாக்குகின்றது என்பதையும், பெறுமதியில் தாக்கம் செலுத்தும் பிரச்சினைகளை எவ்வாறு அடையாளங்காணுகின்றது என்பதையும் பாராட்டுவதற்கான அடிப்படையை உருவாக்குகின்றது. பெறுமதியை உருவாக்குவதற்கான எமது இயலுமை, எமது இயக்கச் சூழல் (பக்கம் 15 தொடக்கம் 19 வரை)மற்றும் இடர் வாய்ப்புக்களை விளைவிப்பதற்கான எமது பதில் ஆகியவற்றின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது (பக்கம் 30 இருந்து 35 வரை). இவ் அறிக்கையில் எமது செயலாற்றுகை ((பக்கம் 20 இருந்து 29 வரை)), எமது தலைமைத்துவக் குழு ((பக்கம் 7 இருந்து 11 வரை)) மற்றும் எமது ஆளுகைச் செயற்பாடுகள் பற்றியும் (பக்கம் 37 இருந்து 42 வரை) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எமது வருடாந்த நிதிக்கூற்றில் பங்காளர்களின் நலனாக இருக்கக்கூடிய மேலதிக தகவலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### உத்தரவாதம்

முகாமைத்துவத்திடமிருந்தும், உள்வாரி, வெளிவாரி உத்தரவாதம் வழங்குநர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தரவதைத்தை எமக்கு வழங்க இணைந்தஉத்தரவாத மாதிரி ஒன்றை நாம் பயன்படுத்துகின்றோம். . எமது வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2016 இற்கு கணக்காய்வாளர் தலைமையதிபதி உறுதியளித்திள்ளார் (91-125 வரையான பக்கங்களைப் பார்க்கவும்). நிதி மற்றும் நிதியில்லாக் குறிகாட்டிகளை உள்ளடக்கிய எமது ஒருங்கிணைந்த அறிக்கை -2016 பற்றிஅவ்விரு செயன்முறைகளும் குறிப்பிடுகின்றன. இணைந்தஉத்தரவாதத் திட்டத்தினை நிறைவேற்றுவது பற்றி வருடாந்த அடிப்படையில் சபைக்கு உள்ளக உத்தரவாதத்தினை எமது கணக்காய்வுக் குழு வழங்குகின்றது. கணக்காய்வுக் குழு அறிக்கை பக்கம் 43 தொடக்கம் 44 வரை காணப்படுகின்றது.

## முக்கிய விடயங்கள்

*மரணம் தொடர்பான வேலையின்மை*

*இத் தசாப்பதத்தில் ஈட்டப்பட்ட தேறிய இலாபம்*

*ஈட்டப்பட்ட இலாபம் ரூ. 53 பில்.*

*308 தொழிலாளர்கள் பயிற்றப்பட்டனர்.*

*1,639,047 MT உற்பத்தி உள்ளூரில் சுத்திகரிக்கப்பட்டது.*

*தேறிய வருமானம் ரூ.. 423 பில்.*

*12% இற்கு மேல்*

*அரசாங்கத்திற்கான உதவுதொகை*

*ரூ. 146 பில்.*

## பணிப்பாளர்களின்பொறுப்புகள்

இவ் அறிக்கைக்கான முழுமையான பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவற்றை கணக்காய்வுக் குழுவினால் ஆதரவளிக்கப்படும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சபை கொண்டுள்ளது. தமது குழு உறுப்பினர்களால் உதவியளிக்கப்படும் சிரேஸ்ட முகாமையானது, இவ் அறிக்கையின் தயாரிப்பு மற்றும் ஒருங்கிணைப்பிற்குப் பொறுப்பாகும். இச் சபை இந்த அறிக்கையினை கூட்டாக மீளாய்வு செய்துள்ளதுடன், அதன் உள்ளடக்கத்தின் உண்மைத் தன்மையினையும் உறுதிப்படுத்துகின்றது. CPC இன் விபர அறிக்கை, செயலாற்றுகையின் சமநிலைப்படுத்தப்பட்ட, பொருத்தமானதொரு முன்நிலைப்படுத்துகையாக இவ் அறிக்கையுள்ளது என இச் சபை நம்புகிறது.கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் 11.05.2018 மீதான இவ் அறிக்கைக்கு சபை அங்கீகாரமளித்துள்ளது.

**முன்நோக்கிய பார்வைக் கூற்றுக்கள்**

CPC இன் நிதி நிலைமை, பெறுபேறுகள், செயற்பாடுகள் மற்றும் வியாபாரம் ஆகியவற்றுடன் தொடர்புடைய சில முன்நோக்கிய பார்வைக் கூற்றுக்களை இவ் அறிக்கை உள்ளடக்கியுள்ளது. இக் கூற்றுக்கள் மற்றும் முன்னறிவிப்புகள் நிகழ்வுகளுடன் தொடர்புபட்டிருப்பதாலும், எதிர்காலத்தில் நிகழும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மீது சார்ந்து இருப்பதாலும் இடர் மற்றும் நிச்சயமின்மை ஆகியவற்றுடன் தொடர்புபட்டதாகவுள்ளது. இவ் முன்நோக்கிய பார்வைக் கூற்றினால் வெளிப்படுத்தப்பட்ட அல்லது தெரிவிக்கப்பட்டவற்றிலிருந்து முக்கியமாக வேறுபடுத்துவதற்கான உண்மையான விளைவுகளை அல்லது அபிவிருத்திகளை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு காரணிகள் உள்ளன.

**நிறுவனத்தின் பெயர்;**
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**சட்ட வடிவம்:**
1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரசாங்கக் கூட்டுத்தாபனம்

**பதிவு செய்யப்பட்ட காரியாலயம்**
இல. 609 கலாநிதி டானிஸ்டர் டி சில்வா மாவத்தை
கொழும்பு - 09
தொலைபேசி : + 94 11 5455455
தந்தி : "லங்கா ஓயில்"
கேபிள்கள் : சிபெற்கோ
டெலெக்ஸ் : 21235 – சீபெற்கோ- சீஈ
தொலைநகல் : + 94 11 5455400
மின்னஞ்சல் : cpcsec@ceypetco.gov.lk
இணையத்தளம் :www.ceypetco.gov.lk

**வரி செலுத்துநர் அடையாள இல. :409000053**

**பெறுமதி சேர் வரி பதிவு இல. :409000053 - 7000**

**நிதியாண்டு:** சனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31

**2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு பணிப்பாளர் சபை:**
திரு. ரீ ஜீ ஜயசிங்க (தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும்)
திரு. டீ சீ எஸ் செனவிரத்தின
திரு பீ கல்ஹேன
திரு எம் ஜீ ஜயசேன
திரு. ஆர் ஹரிஸ்சந்திர
திரு.கே ஏ விமலேந்திரராஜா
திரு. எஸ். பெர்னாண்டோ

**துணைக் கம்பனி**
சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட், எரிபொருள் நிரப்பு மையம், கொலன்னாவை

**கணக்காய்வாளர்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வங்கியாளர்கள்**
**மக்கள் வங்கி, கொமர்ஷல் வங்கி,**
**இலங்கை வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி**

# எமது வியாபாரம்

அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சி

2016 ஆம் ஆண்டில்2,562 தொழிலாளர்கள் (2015: 2,579)

உள்நாட்டு விற்பனை
**Rs. 440** பில்.
2015: Rs. 369 பில்.

**ஏற்றுமதி விற்பனை**
**ரூபா.35 பில்**
**2015. ரூபா.44 பில்**

பதப்படுத்தப்பட்ட கச்சா எண்ணெய்
**1,746,180 MT**
2015: 1,692,074 MT

**நாம் யார்**
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது, தேசத்திற்கான பிரதான பெற்றோலிய உற்பத்தி விநியோகஸ்தராக உள்ளது. வெகு தூரம் பயணிக்க தேசத்திற்கு இயலச் செய்யும் வகையில் எமது விநியோக நிலையங்கள் நாடு பூராகவும் பரந்துகாணப்படுகின்றன. எமது எண்ணெய் சுத்திகரிப்பு செயற்பாடுகள் சப்புகஸ்கந்தையில் அமைந்துள்ளதோடு, தலைமை அலுவலகம் கொழும்பு 9 இல் உள்ளது.சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிட்டட் (CPSTL) இல் 2/3 நலனை CPC கொண்டுள்ளது. CPSTL பெற்றோலிய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தி, விநியோகிக்கின்றது.

**நாம் செய்வது என்ன**
நாடு அதன் சக்தி தேவைப்பாடுகளைச் சீராகப் பெறுகின்றது என்பதை தேசத்திற்கான முக்கிய பெற்றோலிய உற்பத்திகளை வழங்குநராக நாம் உறுதிசெய்கிறோம். கச்சா எண்ணெயை நாம் சுத்திகரிப்பதுடன், பற்றாக்குறையின் பொருட்டு, பெற்றோலிய உற்பத்திகளை நாம் இறக்குமதி செய்கின்றோம். எமது பிரதான உற்பத்திகள் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், நப்தா, விமானஎரிப்பொருள், எரிபொருள் எண்ணெய், LPG, SBP மற்றும் மசகுஎண்ணெய்ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. அரசிற்கு சொந்தமானதொரு தொழில்முயற்சியாக, இலாபம் ஈட்டுவதை விடவும் சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகளைக் கையாளும் பொருட்டு மானிய விலையில் எமது உற்பத்திகளில் பெரும்பாலானவற்றைநாம் விற்பனை செய்கிறோம்.

**தெரிவின் தொழில்தருநராக இருத்தல்**

நாம் செய்யும் முக்கிய விடயமாக இருப்பது நீடித்த பயனுள்ள உறவுகளை உருவாக்குதல் ஆகும். நாம் அரச துறையில் தேர்ந்தெடுக்கப்பட்டதொரு தொழில் வழங்குநராகஉள்ளோம். 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 2,831 மக்களை தொழிலுக்கமர்த்தினோம். அவற்றில்2,562 நிரந்தர ஊழியர்கள், 1 ஒப்பந்தகாரர் மற்றும் 268 பயிலுநர்கள் என்போர் உள்ளடங்குவர்.

# நோக்கு,செயற்பணி மற்றும் இலக்குகள்

## நோக்கு

"தேசத்தின் சுபீட்சத்திற்கு பங்களிப்புச் செய்து பிராந்தியத்தில் பெற்றோலியம் மற்றும் அதனோடிணைந்த கைத்தொழிலில் வாடிக்கையாளர் விரும்பத்தகு, நம்பகத்தகு, சூழல் நட்புமிகு தொழில் முயற்சியில் முதன்மைபெற்று விளங்குதல்"

## செயற்பணி

"ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சூழல் பற்றிய மிகுந்த கரிசனையுடனும், பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதுடனும் கூடிய அனைத்து செயற்பாடுகளிலும் தொழிலாளர் பங்களிப்பினை ஈடுபடுத்தல், புதுமைபடைத்தல் மற்றும் உயர்ந்த ஒழுக்க விழுமியங்களை பேணுதல் ஆகியவற்றினூடாக தொழில் முயற்சியின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தினை பயன்படுத்துகின்ற அதேவேளை விசுவாசமும் வினைத்திறனுமிக்க விநியோகத்தர் வலையமைப்பொன்றினூடாக வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களையும் விஞ்சுகின்ற அனைத்து தீர்வுகளையும் சேவைகளையும் வழங்குவதனூடாக உயர்தரமிக்க பெற்றோலிய சுத்திகரிப்பு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் தலைசிறந்த தரத்தினை அடையப்பெறல்"

## இலக்குகள்

- சந்தைப்பங்கில் உயர்ந்த மட்டத்தினை தக்கவைத்தல்.
- கடுமையான போட்டிமிகு சூழலினை எதிர்கொள்ளும் பொருட்டு விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் தொழிற்பாடுகளில் தலைசிறந்த தரத்தினை அடைதல்.
- பிராந்தியத்தில் சக்தி மையமொன்றாக இலங்கை தோற்றம் பெறுவதற்கு மிக முக்கியபங்காளராக விளங்குதல்.
- அனைத்து ஊழியர் மட்டங்களிலும் உயர்ந்தளவிலான தொழில் நிபுணத்துவத்தினை மேம்படுத்துதலும் பேணுதலும்.
- உற்பத்தித் திறனையும் முகாமைத்துவத்தினையும் மேம்படுத்துவதற்கான நிறுவன கட்டமைப்பு மாற்றங்கள்.
- குறித்துரைக்கப்பட்ட தரநியமங்களை அதிகரிப்பதற்காக நிறுவன ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் நட்பு நடவடிக்கைகள்
- சமூகத்தின் நல்வாழ்விற்காக தேசிய மற்றும் சமூக கடப்பாடுகளுக்கு ஆதரவளித்தல்.
- இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பிரதான பங்களிப்பாளராக தோற்றம் பெறுதல்
- பெற்றோலியத் துறையில் இலங்கையின் கட்டுப்பாட்டினைத் தக்கவைத்தல்.

# எமது வியாபார மாதிரி

### எமது வருமானம்

- விற்பனை விலை (அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட உயர் மானிய விலை)
- விற்பனைத் தொகுதி

### எமது செலவு

- உலகளாவிய எண்ணெய் விலைகள்
- நாணயப் பரிமாற்று விகிதம்
- தொழிலாளர்
- விநியோகம்
- சக்தி
- மூலதன செலவினம்
- பராமரிப்பு
- வரி
- நிதியளிப்புச் செலவு

வாடிக்கையாளர் மதிப்புக்கூற்று

பணியாளர் மதிப்புக்கூற்று

பங்குதாரர் மதிப்புக்கூற்று

சமூக மதிப்புக்கூற்று

**எமது செயற்பாடுகள்**

**முதன்மைச் செயற்பாடுகள்**

இறக்குமதி செய்தல் - முதன்மை கச்சா எண்ணெய்

சுத்திகரிப்பு - சுத்திகரிக்கப்பட்ட பொருட்களினுள் கச்சா எண்ணெய்

களஞ்சியப்படுத்தல் - கச்சா எண்ணெய் மற்றும்சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள்

விநியோகித்தல் - தீவு முழுவதுமாகவுள்ள வாடிக்கையாளர்களுக்கு

**ஒத்துழைப்புச் செயற்பாடுகள்**

வியாபாரசெயல்நுணுக்கம்

தொழில்நுட்ப சேவைகள்

மக்கள் முகாமைத்துவம்

தகவல் தொழில்நுட்ப உதவி

கூட்டு சமூக முதலீடு

### எமது தலையாய பத்து இடர்கள்

1. பொருளாதார இடர்
2. பொருட்களின் விலை இடர்
3. பாதுகாப்பு இடர்
4. சந்தை இடர்
5. நாணயமாற்று விகித இடர்
6. வட்டி விகித இடர்
7. திரவஇடர்
8. கடன் இடர்
9. விநியோகஇடர்
10. மனித வள இடர்

### பெறுமதி உருவாக்கத்தில் தாக்கம் செலுத்தும் எமது செயற்பாட்டு சூழல்பிரச்சினைகள்

- மானிய விலையில் விலை நிர்ணயம்
- பெட்ரோலிய விலைகளில் உலகளாவியரீதியில் உயர்ந்த போக்கு
- நாணய மாற்று விகிதத்தில் ஏற்படும் பொதுவான மாற்றம்
- எண்ணெய் சுத்திகரிப்பு திறன் மற்றும் சேமிப்பு பற்றாக்குறை
- பெற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்க டொலர் கடன்களை தீர்ப்பதற்கு எதிர்நோக்கும் இடர்பாடுகள்
- குழாய்இணைப்பில் ஏற்படும்சேதமுற்ற நிலை

# எமது தலைமைத்துவக் குழு

*ஒரு கூட்டுத்தாபனத்தின் கலாச்சாரம் மற்றும் அதன் மூலோபாய இலக்குகளை நிறைவேற்றுவதற்கான திறமை ஆகியன அதன் தலைமைத்துவத்தின் தரத்தில் தங்கியுள்ளது. எமது பணிப்பாளர் சபை சிறந்த கூட்டுச் சூழலை மேம்படுத்துவதுடன், அதனைச் சாத்தியமாக்கும் தலைமைத்துவத்தையும் வழங்குகின்றது. எமது செயலாற்றுகைக்கு சபை முழுமையாக பங்களிப்புச் செய்கின்றது என்பதையும், நிறுவனம் அதன் செயற்பாட்டு, சமூக மற்றும் சூழல்ரீதியான குறிக்கோள்களை அடைவதற்காக கூட்டுத்தாபனத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது என்பதையும், உறுதி செய்வதற்காக சபை உறுப்பினர் ஒவ்வொருவரும் குறித்துரைப்பான திறன்கள் மற்றும் கண்காணிப்பு பதிவுகளின் அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர்.*

## எமது தற்போதைய பணிப்பாளர் சபை

**திரு. டி.ரணதுங்க (தலைவர்)**

(**2017**.05.25 ஆம் திகதியிலிருந்து தற்போது வரை)

**திரு.கே. ஏ. விமலேந்திரராஜா**

(2015**.11.19** ஆம் திகதியிலிருந்து தற்போது வரை)

வியாபார நிர்வாகத்தில் முதுமாணி (திட்டமிடல் முகாமைத்துவம்), தத்துவ முதுமாணி (பகிரங்கப் பொருளாதாரம்), அபிவிருத்திக் கல்வி மற்றும் பகிரங்கக் கொள்கையில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா, சர்வதேச அலுவல்களில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா, சட்டமாணி– இலங்கை திறந்த பல்கலைக்கழகம், கலைமாணி ( பொருளாதாரம்) (சிறப்புப் பட்டம்) – யாழ்ப்பாணம், சத்தியப்பிரமாணம் பெற்ற சட்டத்தரணி,

இலங்கை நிர்வாகச் சேவையில் அவுஸ்ரேலியாவிற்கான கணனிச் சமூக சான்றுப்படுத்தல் உத்தியோகத்தர்,

இலங்கை வங்கியின் மாற்றீட்டுப் பணிப்பாளர்,

இலங்கைச் சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர்,

வியாபார முதலீட்டுக் கொள்கைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், நிதி அமைச்சு,

முன்னாள் அமைச்சு ஆலோசகர்/ பணிப்பாளர், இலங்கை, பீஜீங், சீன உயர்ஸ்தானிகராலயம்/ வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,

தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு அபிவிருத்தி நிதியத்திற்கான நாட்டுப் பணிப்பாளர்,

கொழும்பு மனிதவள மேம்பாட்டு பல்கலைக்கழக நிறுவகத்தின் கல்விசார் நிர்வாக சபையின் உறுப்பினர்,

அரச ஊழியர் சேமலாப நிதிய அமைப்பின் முன்னாள் திறைசேரிப் பிரதிநிதி,

முன்னாள் சிரேஸ்ட உதவிச் செயலாளர் (IT & AR) / CIO, அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,

முன்னாள் உதவி நிகழ்ச்சித்திட்டமுகாமையாளர், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிகழ்ச்சிப்படுத்தப்பட்ட அறவீட்டிற்கான ஆற்றல் விருத்தி,

முன்னாள் உதவிச் செயலாளர், வெளிநாட்டு நிதியுதவி கருத்திட்டங்கள், கிழக்கு அபிவிருத்தி அமைச்சு,

முன்னாள் உதவிச் செயலாளர், திட்டமிடல் மற்றும் மீள்கட்டுமானம், துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டுமான அமைச்சு,

முன்னாள் SLAS பயிலிளவல், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்,

முன்னாள் சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம்- வவுனியா,

முன்னாள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், மாவட்ட செயலகம் - வவுனியா

திரு. ஏ. ரி. பண்டார கேரத்
(2017.05.29 ஆம் திகதியிலிருந்து தற்போது வரை)

**சிரேஸ்ட சட்டத்தரணி, சட்டமாணி(சிலோன்), லக்னோவில்விஷாத்பாட்ஹான்டே** டிப்ளோமா,
காணி எடுத்தற் சபை உறுப்பினர்,
கொழும்பு வாடகைச் சபை தவிசாளர்,
இலங்கைத் துறைமுக ஆளுகை சபையின் முன்னாள் பணிப்பாளர் மற்றும் கணக்காய்வுக் குழு உறுப்பினர்

திரு.ஆர்.ஏ.என். ஜயசுந்தர
(2017.05.29 ஆம் திகதியிலிருந்து தற்போது வரை)
ICASL – தகுதிச் சான்று, HNDA, M AAT, நிதியியல், நிதி இணை உறுப்பினர், கணக்காய்வு செய்தல் மற்றும் அபிவிருத்தி கணக்கியல் (ஐக்கிய இராச்சியம்)
பணிப்பாளர் - சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல் லிமிட்டட்
பணிப்பாளர் - தேசிய சேமிப்பு வங்கி (FMC)
பொருளாளர்,இலங்கை – சீன சமூகம்
பொருளாளர், கட்புலனற்றோருக்கான இலங்கை பேரவை
பொருளாளர், இலங்கை –பேல்ஜிய சங்கம்
முன்னாள் பிரதி நிதி முகாமையாளர் - இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

திரு.எஸ். தனதுங்கே
(2017.05.29 ஆம் திகதியிலிருந்து தற்போது வரை)
Registered Managers Award Deg. in Mgt – City & Guild (UK), NVQ Level 4 in Community Care – City & Guild (UK), Dip in project Mgt – London College (UK), Professional packaging and Franchising – Packaging Store Inc. (USA), Dip in Mgt – OUSL, Dip in Computer Programming & Systems design
தலைவர்–வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.
பணிப்பாளர் - சிலோன் சிப்பிங் ஏஜன்சி Pte லிமிடட், சிங்கப்பூர்
முன்னாள் பணிப்பாளர் - லங்கா கோல் கம்பனி லிமிடட்
மேம்படுத்துநர்/ பங்காளர்- விவன்ரா அசோசியேட்ஸ் (பிரைவட்) லிமிடட்
பணிப்பாளர்/ பொது முகாமையாளர்- மவுண்டின்ஹாக்பேக்கேஜிங் (பிரைவேட்) லிமிடட்.
முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி
முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி - Admire Tours & Events (UK) Ltd., Middlesex
பதிவுசெய்யப்பட்டமுன்னாள் முகாமையாளர்- Whiteheather Care Ltd. Weeley,Essex
பிரதான நிறைவேற்று அதிகாரிக்கான முன்னாள் நிறைவேற்று உதவியாளர் - சர்வதேச கிறிக்கட் பேரவை, லண்டன்.முன்னாள் நிர்வாகப் பணிப்பாளரும், தலைவரும்- Tour Organising, இலங்கை கிறிக்கட்
முன்னாள் பொது முகாமையாளர்- MTL/Mountain Hawk (Pvt) Ltd
முன்னாள் பணிப்பாளர், பொது முகாமையாளர் - Mountain Hawk Packaging (Pvt) Ltd.
முன்னாள் முகாமையாளர்- Business Development of Mountain Hawk Express (Pvt) Ltd / A franchisee of FedEx Inc. USA
முன்னாள்சந்தைப் பகுப்பாய்வாளர் - Mercantile Credit Ltd.

திரு. டப். எஸ். பெரேரா
(2017.05.29 தொடக்கம் தற்போது வரை)
விஞ்ஞான மாணி புவிச்சரிதவியல் (சிறப்பு) - UOP
பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர்,
JCT எண்ணெய் வங்கியின் பதில் முகாமைத்துவப் பணிப்பாளர்
துறைமுக மற்றும் கப்பற்றுறை அமைச்சரின் முன்னாள் ஒருங்கிணைப்புச் செயலாளர்
முன்னாள் ஆய்வு உதவியாளர், பாராளுமன்ற விவகார அமைச்சு
முன்னாள் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

# *2016* ஆம் ஆண்டு பணிப்பாளர் சபை

**திரு. ரி.ஜி ஜயசிங்க** (தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும்)
(2015.10.12.தொடக்கம் 2017.01.27 வரை)
விஞ்ஞான முதுமானி (பிராந்திய அபிவிருத்தி திட்டமிடல்) ஏஜரி - தாய்லாந்து.
அபிவிருத்திக் கொள்கை மற்றும் திட்டமிடல் டிப்ளோமா -UOW- ஐக்கிய இராச்சியம்
பிராந்திய அபிவிருத்தி திட்டமிடல் டிப்ளோமா – UNCRD– நாகோயா,
கலைமானி (இலங்கை), இலங்கை திட்டமிடல் சேவை – வகுப்பு 1
பணிப்பாளர் - சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட்
முன்னாள்செயலாளர், நிதி ஆணைக்குழு
முன்னாள் தலைவர் - முன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு
முன்னாள் துணைத் தலைவர், இலங்கை தேசிய தொழில்நுட்ப கல்வி நிறுவகம்
முன்னாள் உறுப்பினர், தேசிய கல்வி ஆணைக்குழு
முன்னாள் கருத்திட்டப்பணிப்பாளர் தென் மாகாண கிராமிய அபிவிருத்தி கருத்திட்டம்
முன்னாள் பிரதி பிரதம செயலாளர் - திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு

**திரு. டி சீ எஸ் செனவிரத்தன**
(2015.10.12. தொடக்கம் 2017.05.23 வரை)
உற்பத்தி டிப்ளோமா, வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் - சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட்
தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் - எஸ்எம்எஸ் ஹோல்டிங் பிறைவட் லிமிடட்
தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் - கிரீனெரி கம்பனி பிறைவட் லிமிடட்
தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் - பிளக் டயமண்ட் செகியூரிடி பிறைவட் லிமிடட்
தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் - எஸ்எம்எஸ் பிளான்டேசன் பிறைவட் லிமிடட்
தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் - எஸ்எம்எஸ் ரியலிடிஸ் பிறைவட் லிமிடட்

**திரு. பி. கல்ஹேன**
(**2015.10.12**தொடக்கம் 22.05.2017 வரை)
தத்துவ முதுமாணி மாணவர் – கொழும்பு, **FCMA (UK),**
**CIM** இறுதிப் பரீட்சை சித்தி, வியாபார நிருவாகமாணி (கௌரவ) (2ஆம் வகுப்பு) – கொழும்பு,
வியாபார முதுமாணி (திறமைச் சித்தி) – கொழும்பு,
**ICASL**-இறுதியாண்டு
தலைவர்- ஏஜஜசிஓ புரோபெர்டி டிவெலொப்மென்ட் லிமிடட்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஆணைக்குழு உறுப்பினர்
சபைப் பணிப்பாளர்- வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
பணிப்பாளர் - டைட்டான் பெகேஜிங் பிறைவட் லிமிடட்
முன்னாள் தலைவர் - இலங்கை நிலைபேண் சக்தி ஆளுகை சபை
முன்னாள் தலைவர்- தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆளுகை சபை
முன்னாள் தலைவர்- வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்
முன்னாள் தலைவர்- இலங்கை கைவினைப் பொருட்கள் சபை, லக்சல
முன்னாள் பணிப்பாளர் - லங்கா கோல் லிமிடட்
முன்னாள் பணிப்பாளர்; - ஜி எஸ் எம் பி டெக்னிக்கல் சேர்விசஸ் பிரைவட் லிமிடட்

திரு. எம் ஜி. ஜயசேன
(2015.10.12. தொடக்கம்2017.03.02 வரை)

திரு. ஆர் ஹரிஸ்சந்திர
(2015.10.12 தொடக்கம்2017.05.28 வரை)

திரு. ஜே. டயஸ்
(2016.01.21 தொடக்கம் 2016.03.03 வரை)
திரு. எஸ். பெர்னாண்டோ
(2016.03.17தொடக்கம் 2017.05.23 வரை)

## சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

**முகாமைத்துவப் பணிப்பாளர் (பதில் கடமை)**
**திரு. என். ஆர். ஆர். ஜயசேகர**
BSc Eng. (Mechanical Engineering), MBA, C.Eng., MIE(SL)

**எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை**
**சுத்திகரிப்பு முகாமையாளர் (பதில் கடமை)**
திரு. இ.ஏ.எஸ். எதிரிசிங்க
**BSc Eng. (Chemical Engineering), C.Eng. (Chemical), MIE(SL), MSLEMA**

**பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர்**
**(பராமரிப்பு மற்றும் கருத்திட்டங்கள்) (பதில் கடமை)**
திரு. டி. எம். பி. திசாநாயக்க
BSc Eng. (Mechanical Engineering) Hons., LLB Hons., C.Eng., MIE(SL), Attorney-at-law

**பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர்**
**(மின்சாரம் மற்றும் உபகரணங்கள்)**
திரு. எல். ஜி. எம். ஆர்.பெரேரா
BSc Eng. (Electronics & Telecommunication Engineering) Hons.

**பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள்)**
திரு. எம். சீ. வீரசேகர
BSc (Eng.), C.Eng., MIE (SL)

**முகாமையாளர் ( தொழிற்பாடுகள்– இருப்பு மற்றும் இறுதித் தொழிற்பாடுகள்) (பதில் கடமை)**
திரு. என். பீ. எம். பி. ஜீவசிறி

**செயலகம்**
**உதவி முகாமையாளர் (செயலகம்) (பதில் கடமை)**
திரு. ஏ. பி. கொரலேகெதர

**மனித வளங்கள்**
**பிரதிப் பொது முகாமையாளர் ( மனித வளங்கள் மற்றும் நிருவாகம்)**
திரு. எஸ். டப். கமகே
MBA - PIM-USJP, MSc - WAU-Holland, BSc - Ruhuna, PG Dip B&FA - CASL, Assoc. M (CIPD-UK), FCPM

**நிதி**
**பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)**
திரு. வி. என். வீரசூரிய
MBA – PIM – USJP, ACA, BSc, FCMA, ASA (Aus)

**சிரேஸ்ட நிதி முகாமையாளர்**
திருமதி/செல்வி. எம். சி. டி. பெரேரா
ACA, BCom (Sp) Hons

**தகவல் தொழில்நுட்ப தொழிற்பாட்டுப் பிரிவு முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)**
திருமதி. எம்.எஸ்.ஆர்.பெர்னாண்டோ
BSc (Computer Science) Hons. – Colombo, MIT (IT Management)– Colombo, EMBA - Colombo

**சட்டம்**
**பிரதான. சட்ட உத்தியோகத்தர்**
திருமதி/ செல்வி. ஆர். ஏ.கே.சி. ஆரியரட்ண
Attorney-at-law, Post Attorney Diploma in International Law

**பாதுகாப்பு மற்றும் விசாரணைகள் முகாமையாளர் (பாதுகாப்பு மற்றும் விசாரணை)**
மேஜர். எம்.ஆர்.எஸ்.பி. சமரசிங்க RWP RSP
PG Dip in Conflict Resolution & Peace Preparedness, Dip in HRM

**தொழில்நுட்ப சேவைகள் மற்றும் நிறுவன அலுவல்கள்**
**பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள்** மற்றும் நிறுவன அலுவல்கள்) (பதில் கடமை)
திரு. எம். ஏ. டி. மல்லிகாராச்சி
BSc Eng. (Production), MPMI, MIE(SL)

**முகாமையாளர் (மனித வளங்கள்)**

திரு.கே. டப். எஸ். புஸ்பலால்

BA (Political Science) Sp. Hons – Colombo, Certified professional member of AHRI – Australia, ACPM

**சந்தைப்படுத்தல்**

**பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)**

திரு. டப். எம்.கே. ஆர். பி. விக்கிரமசிங்க

MBA - Colombo, BSc (Chemistry) - UOP, M.I.Chem.C, CMSLIM

**முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)**

திரு. டப். டி. எல். சி. அபயகுணவர்தன

BSc (Bus. Admin) – USJP, PGDM (Mgt) - Wayamba

**முகாமையாளர் (சந்தைப்படுத்தல் – மசகு எண்ணெய் மற்றும் விசேட உற்பத்திகள்) (பதில் கடமை)**

திரு. எம். எம். திலகரத்ன

**வணிகம் மற்றும் வழங்கல் வலையமைப்பு**

**பிரதிப் பொது முகாமையாளர் (வணிகம் மற்றும் வழங்கல் வலையமைப்பு)**

திரு. எம்.கே. கருசிங்கே

BSc - Colombo, MSc (Maritime Affairs) - WMU – Sweden, MBA - PIM-USJP, MICS (UK), MISMM, EDBA - Colombo, Dip in Professional Shipping - Norway

**வணிக முகாமையாளர்**

திரு. டப். கே. எஸ். குணவர்தன

MSc (Maritime Affairs) - WMU – Sweden, MSc (Mgt & IT) - Kelaniya, BSc. (Mathematics) Sp. (2nd class upper) - Kelaniya, MSLIM

**பெறுகை மற்றும் இருப்புக்கள்**

**முகாமையாளர்(பெறுகை மற்றும் இருப்புக்கள்)**

**திரு. எஸ். டி. எஸ். ராஜபக்ஷ**

BSc Eng. (Mechanical), C.Eng., PG Dip in Industrial Engineering, Dip in Supplies & Materials Manager

**விமானச் செயற்பாடுகள்**

**முகாமையாளர் (விமானம் - செயற்பாடுகள்) (பதில் கடமை)**

திரு. ஆர். விஜயகுமார்

EDBA - Colombo

**பொறியியல் மற்றும் வளாகம்**

**முகாமையாளர் (பொறியியல் மற்றும் வளாகம்)**

திரு. ஜி. பி. கே. விஜேகோன்

BSc Eng. (Civil Engineering), AMIE (SL), PG Dip in Structural Engineering Designs

**விவசாய இரசாயனங்கள்**

**முகாமையாளர் (விவசாய இரசாயனங்கள்)**

திரு. பி. எஸ். எஸ். பெரேரா

MSc (Crop Science) - UOP, BSc (Agriculture) - UOP

**கப்பற்துறை**

**முகாமையாளர் (கப்பற்துறை)**

திரு. பி. யூ. ஆர். குணரத்னே

BSc (Physical Science) – Colombo, Dip in General Management – NIBM, PG Certificate of Training in Management - PIM, Certificate in Shipping & Clearance – ISMM

**உள்ளக கணக்காய்வு**

**முகாமையாளர் (கணக்காய்வு)**

திரு.ஆர்.ஏ.ரீ.ஐ. ரணசிங்க

ACA, CGMA, ACMA (UK), BSc (Bus Admin) – Sp - USJP

# தலைவரின் மீளாய்வு

*2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.*

பொருளாதாரச் சூழல், அரசியல் சூழல் ஆகிய இரண்டு தொடர்பாகவும் அதேபோல் சந்தை ஏற்ற இறக்கம் தொடர்பாகவும் உலகளாவிய நிச்சயமின்மையைக் கொண்ட வருடமொன்றாக இது உள்ளது. இந்நிலைமை உலகின் பல பாகங்களில் உள்ள வியாபாரங்களில் தாக்கத்தைச் செலுத்தும் அளவிற்கு எமது வியாபாரத்தைப் பாதித்திருந்தது. அத்தகைய நிலைமைகள் இருந்தபோதிலும், 53 பில்லியன் ரூபாய் வரிக்கு பிந்திய இலாபத்தை ஈட்டியமை இ.பெ. கூ. தாபனத்தின்வரலாற்றில் கடந்த தசாப்தத்தில் மிகவும்எழுச்சியூட்டும்ஆண்டாக இருந்துள்ளது என்ற உண்மையானது எமது செயற்பாடுகளின் விரிவாக்கத்திற்கு ஆதாரமாக உள்ளது. எரிபொருள் விநியோகப் பாதுகாப்பினை அடைவதில் முன்னொருபோதும் இல்லாத வகையில் நாட்டிற்கு உதவியளிப்பதில் கவனஞ் செலுத்துவதற்கு இது எமக்கு அனுமதியளிக்கும்..

**உலகளாவிய ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியில் வியாபாரத்தில் ஈடுபடுதல்**

நிலைத்திருப்பு மற்றும் வியாபார உலகம் ஆகியன ஒன்றாக இணைந்து செல்வதில்லை. அதாவது ஏற்ற இறக்கம் மற்றும் அதே நிலையை அடைதல், எதிராக மாறுதல் ஆகியன அதன் முறைகள் ஆகும். உலகளாவிய எண்ணெய் கைத்தொழில் நிலைமாற்றத்திலுள்ளது. சக்திக்கான கேள்வி குறிப்பாக ஆசியாவினுள் வேகமான வளர்ச்சியுடன்பொருளாதாரத்தை விருத்தி செய்வதிலிருந்தும் மற்றும் செழுமையை மேம்படுத்துவதிலிருந்தும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. மறுபுறம், உலகளாவிய சக்தி நுகர்வு இடைவிடாத இயக்கத்துடன் சக்தி வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மெதுவாகச் செல்லுகின்றது. சூழற் தேவைகள் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகள் ஆகியவற்றினால் கட்டுப்படுத்தப்படுகின்ற தூய்மையாக்கும்பொருள், குறைந்தளவு காபனைக் கொண்டதுமான எரி பொருளை நோக்கி சக்திக் கலப்பு மாற்றப்படுகின்றது. காபன் வெளியேற்றத்தைக் குறைக்கும் அதேவேளை தேசத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை வழங்கும் இந்த இரட்டைச் சவாலிற்கு இ.பெ. கூ. தாபனமும்தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

உலகளாவிய பெற்றோலிய விலையின் ஏற்ற இறக்கத்தை இ.பெ. கூ. தாபனத்தினால் கட்டுப்படுத்த முடியவில்லை. அத்துடன், நாட்டின் முதனிலை பெற்றோலிய வழங்குநராக உலகளாவிய விலைகளுடன் இதன் விலைகள் அதிகரித்திருக்கவில்லை. அதன் விளைவாக பெற்றோல் 92, பெற்றோல் 95 மற்றும் மண்ணெண்ணை மீதான இழப்பிற்கு இ.பெ.கூ. தாபனம் உள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும், வியாபாரத் தொடர்ச்சியினை உறுதிசெய்யும் பொருட்டு, எமது பெறுமதிமிக்க தொடர் செயற்பாடுகளுடனூடகவும், எமது நீண்டகால முதலீட்டுத் தீர்மானங்களிலும் இவ் ஏற்ற இறக்க விளைவுகளை நாம் அங்கீகரிப்பதற்கும், தெரிவிப்பதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டிய அவசியமுள்ளது. இழப்பினைக் குறைக்கும் நோக்குடன் செலவுப் பிரதிபலிப்பு விலையிடல் பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு இ.பெ.கூ. தாபனம் எதிர்பார்க்கின்றது.

**இலங்கைச் செயற்பாட்டுச் சூழல்**

மத்தியவங்கியின் பிரகாரம்,2016 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 4.4% ஆகக் காணப்பட்டது.இது சாதகமற்ற காலநிலை

மற்றும் மந்தமான உலகளாவிய பொருளாதார மீளடைவு காரணமாக முன்னைய வருடத்தை விடக் குறைவாக உள்ளது.காலநிலை தொடர்புபட்ட இடையூறுகள்,வரி மாற்றங்கள் மற்றும் சர்வதேசரீதியாக பொருட்களின் விலை அதிகரிப்பு ஆகியவற்றின்மோசமான தாக்கத்தின் காரணமாக பணவீக்கமானது முக்கியமாக வருடாந்த சராசரியாக 4% ஆக பதிவுசெய்யப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் மீதான ரூபாவின் மொத்த மதிப்பிறக்கம் 3.83 வீதமாகக் காணப்பட்டது. இபெ.கூ.தாபனத்தின்செலவுக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட பரந்த வரி விதிப்பானது அழுத்தத்தை கொடுத்துள்ளது. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது சந்தை வட்டி வீதங்கள் இபெ.கூ.தாபனத்திற்கு இறுக்கமான நிதிச் செலவினை உருவாக்கக்கூடிய மேல் நோக்கிய போக்கு ஒன்றைக் காட்டியிருந்தது. இருப்பினும், இபெ.கூ.தாபனம் கடன்களைக் குறைப்பதன் மூலம் அதன் நிதிச்செலவினை சமாளித்திருந்தது.

**தேசத்திற்கு சக்தியளித்தல்**

நாட்டின் வாழ்க்கைச் செலவில் செல்வாக்குச் செலுத்வதும், நாளாந்த வாழ்வின் சுமுகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதுமான அரசாங்கத்தினுடைய வளர்ச்சி நிகழ்ச்சி நிரலுக்கான முக்கியஇயக்கிகளில் ஒன்றாக பெற்றோலிய உற்பத்திகள் இருக்கின்ற படியினால் எமது வியாபார செயற்பாடானது கடினமானதொரு பணியாகக்காணப்படுகின்றது.

மக்களுக்குச் சுமையினைச் செலுத்தாமல் உலகளாவிய சந்தையில் விலை ஏற்ற இறக்கத்திற்கான எமது பொறுப்பானது எமது இலாபத்தினைக் குறைத்துள்ளது. எமது மதிப்பீடுகள் மூலம் வழிகாட்டப்பட்டு நாம் எடுக்க வேண்டியிருந்த தீர்மானங்கள் கடினமாக இருந்துள்ளன. மீளாய்வின் கீழான வருடத்தின் போது உள்ளூரில் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்தி 1,639,047மெ.தொ.ஆக இருந்ததுடன், தேசத்திற்கான சக்தியை தடையின்றி வழங்குவதை உறுதிப்படுத்திசுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளை இறக்குமதி செய்வதன் மூலம் நாட்டினுடைய கேள்வி இடைவெளியானது பூர்த்தி செய்யப்பட்டது.

இவ் வருடத்தின் போது ரூபா 423 பில். பெறுமதியான பெற்றோலிய உற்பத்திகளை விநியோகம் செய்துள்ளதுடன், கடந்த வருடத்தை விட இது 12%அதிகமானதாகும். விற்பனை அதிகரிப்புடன் சேர்ந்த விற்பனைச் செலவுக் குறைப்புடன்மொத்த இலாபமானது கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது 143.89% ஆல் அதிகரிக்கபட்டிருந்தது. தசாப்தத்திற்காக 53 பில். ரூபாயை உயரிய இலாபமாக இ.பெ.கூ. தாபனம் ஈட்டியிருந்த படியினால்,இந்த வருடம் இ.பெ.கூ. தாபனத்தின் பெறுபேறுகள் தொடர்பாகமிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் நின்றுவிடாது 10 பில்லியன் பெறுமதியான பங்கு இலாபத்தினை எமது முதனிலையாளரான இலங்கை அரசாங்கத்திற்கு இலாபத்தின் ஒரு பகுதியை வழங்குவதன் மூலம் மேலதிக நடவடிக்கைஒன்றையும் எடுத்துள்ளோம். அத்துடன் அரசாங்கத்தின் திரட்டிய நிதியத்திற்கு வரியாகவும், விசேட கட்டணமாகவும் 137 பில். ரூபாவினைப் பங்களிப்புச் செய்துள்ளோம். எதிர்மறை நிகர சொத்துகளின் நிலையில் ஏற்பட்ட குறைவானது 43 பில். ரூபாவாக இருந்தது.

**எதிர்காலத்தினுள்**

நாடு பூராகவும் தடையின்றி பெற்றோலிய உற்பத்திகளின் விநியோகத்துடன் தேசத்திற்கு சக்தியளிக்கும் தனது முயற்சியினை இ.பெ.கூ. தாபனம் தொடர்ந்து மேற்கொள்ளும். எமது மதிப்பீட்டுத் தொடரினை குறைப்பதற்கு மேலும் அபிவிருத்தித் கருத்திட்டங்கள் பலவற்றை மேற்கொள்வோம். சிறந்த சுகாதார வசதிகளுடன் மாற்றுத் திறனாளிகளுக்கு விசேட கவனஞ் செலுத்தி தன்னியக்க நிரப்பு நிலையங்களை அமைக்கவும் இ.பெ.கூ. தாபனம் திட்டமிட்டுள்ளது. நீண்டகாலத் தீர்வாக சப்புகஸ்கந்தவில் சுத்திகரிப்பு நிலையத்தை முழுமையாகப் புதுப்பிக்க எண்ணியுள்ளோம். நாற்பது வருடங்களின் பின்னர் கொழும்பு கோட்டையிலிருந்து கொலன்னாவை வரை செல்லும் குழாய் இணைப்புக்களைப்

பதுப்பிக்கும் பணி 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், மிக விரைவில் அதைப் பூர்த்தி செய்யவும் எதிர்பார்க்கிறோம்.

பெற்றோலிய சந்தையில் பெற்றோல் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். ஆயினும், இந்த வருடத்தில் கூட்டுத்தாபனம் எடுத்துள்ளதீர்மானங்கள் மற்றும் முகாமைத்துவத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள முக்கிய செயற்திட்டங்கள் ஆகியன தற்போதைய சவால்களினூடாக இ.பெ.கூ. தாபனத்தினைஅழைத்துச் செல்லும் என நம்புகின்றேன்.

**பாராட்டுகள்**

இவ் வரலாற்று ரீதியான இலாபத்தை அடைவதில் மகத்தான பங்களிப்பை வழங்கிய எமது முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் முகாமைத்துவக் குழு ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். கூட்டுத்தாபனத்தின் அனைத்து மட்டங்களிலும் பிரதானமாகஅதன் மக்களின் தரம் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்படும் சவால்களினூடாக இ.பெ.கூ. தாபனம்இடர்பாட்டைக் கடந்து செல்லும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். எமது தொழிற்பாடுகள், அதே போல அரசாங்க ஆளுகை சபைகள், வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள், மற்றும் பரந்தளவிலான பங்குதாரர் சமூகம் ஆகியோருடன் இ.பெ.கூ. தாபனம் வளர்த்துள்ள உறவுகளின் தரம் என்பவற்றில் புரியப்பட்ட வேலையின் தன்மையினால் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியான ஒத்துழைப்பு மற்றும் உதவிகளை வழங்கியமைக்காக கௌரவ அமைச்சர், கௌரவ பிரதி அமைச்சர் மற்றும் பெற்றோலிய வள அபிவுருத்தி அமைச்சின் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது விசேட பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இறுதியாக, இலாபத்தை ஈட்டக்கூடிய சூழ்நிலைக்கு நிறுவனத்தை வழிநடத்துவதில் தமது சீரான கண்காணிப்பையும், அறிவையும் வழங்கியமைக்காக எனது சபை உறுப்பினர்களுக்கு எனது குறிப்பான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இ.பெ.கூ. தாபனம்அதன் இலட்சிய மற்றும் தீர்க்கமான நடவடிக்கைத் திட்டங்கள்மீது செயற்படும் என்றும், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில்கூட்டுத்தாபனத்தின்விரிவாற்றலை உறுதிப்படுத்தும் என்றும் நான் நம்புகின்றேன்.

**நன்றி**

தமிக்கா றணதுங்க
**தலைவர்**
திகதி **11.05.2018**

# எமது தொழிற்பாட்டு சூழல் மற்றும் செயல்நுணுக்கம்

*எமது வியாபார மாதிரியில் பாரிய அழுத்தங்கொடுக்கின்ற கடுமையான செயற்பாட்டுச் சூழலின் மத்தியில் கடந்த தசாப்தத்தில் உயரிய இலாபத்தை ஈட்டிய இ.பெ.கூ.தாபனத்திற்கு குறிப்பாக துடிப்பானதும், ஊட்டமளிக்கும் ஆண்டாகவும் இது இருந்துள்ளது. உலகளாவிய சந்தையில் வீழ்ச்சியடைந்து செல்லும் எண்ணெய் விலைகள் மற்றும் நமது முக்கிய பங்குதாரர்களின் அதிக எதிர்பார்ப்புகள் ஆகியனஇ.பெ.கூ.தாபனத்தின் இலாபத்தை உயர்த்தியுள்ளன.*

*தேசத்திற்கு சக்தியளித்தல்*

அதிகரிக்கப்பட்ட வருமானம்

**423** பில்.ரூபா(2015: 377 பில்.ரூபா)

குறைக்கப்பட்ட விற்பனைப் பெறுமதி

**326** பில்.ரூபா(2015: 377 பில்.ரூபா)

குறைக்கப்பட்ட கடன்கள்

**194**பில்.ரூபா(2015: 268பில்.ரூபா)

செலவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எமது இலாபத்தை விருத்தி செய்தல்

**53**பில்.ரூபா( 2015: 21 பில்.ரூபா இழப்பு)

*95 ஒக்டேன் பெற்றோலில் 1 லீற்றருக்கான இழப்பு*

ரூபா ***8.92***

பிரதிபலிப்பு விலையிடல் செயல்நுணுக்கமானது இ. பெ.கூ.தாபனத்தின் இலாபத்தை சமப்படுத்துவதுடன், எதிர்மறை தேறிய சொத்து நிலைமையையும் குறைக்கும்.

### தேசத்திற்கு சக்தியளிக்கும் பயணத்தில்

எமது வணிக மாதிரிக்கான முக்கிய விளைவுகளைக் கொண்டஎமது செயல்பாட்டு சூழலில் ஏழு முக்கிய பிரச்சினைகளைஇனங்கண்டுள்ளோம்:

- மானியமளிக்கப்பட்டவீதத்தில் விலையிடப்பட்டமை
- பெற்றோல் விலையில் உலகளாவிய உயர்ந்த போக்கு
- நாணய மாற்று வீதத்தில் எற்பட்ட மாற்றம்
- எண்ணெய் சுத்திகரிப்பு திறன் மற்றும் சேமிப்பு பற்றாக்குறை
- பெற்றுக் கொள்ளப்பட்ட அமெரிக்க டொலர் கடன்களை தீர்ப்பதற்கு ஏற்பட்ட சிக்கல்கள்
- குழாயின் பாழடைந்த நில

### மானியமளிக்கப்பட்ட வீதத்தில் விலையிடப்பட்டமை

**பெற்றோலிய உற்பத்திகளுக்கான உள்ளூர் விலைகள் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்றன**

நவீன உலகில் பெற்றோலிய உற்பத்திகள் அத்தியாவசிய உற்பத்திகளாகியுள்ளதுடன், நாட்டினுடைய வாழ்க்கைச் செலவில் எண்ணெய் விலைகள் பெருமளவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையினால், பெற்றோலிய உற்பத்திகளுக்கான உள்ளூர் விலைகள் மானியமளிக்கப்பட்டவீதத்தில்அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்றன. அதனால், இ.பெ.கூ.தாபனம் முமையான தேச நலனுக்காக தமது இலாபத்தைக் குறைத்துள்ளது.

மானிய விலையின் காரணமாகஇ.பெ.கூ.தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பு பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது;

| உற்பத்தி | மானிய விலை (ரூ.) | லீற்றருக் கான இழப்பு (ரூ.) | மொத்த இழப்பு (ரூ. மில்) | அரசாங்கத்தில் இருந்து பெறப்பட்ட மானியம் |
|---|---|---|---|---|
| **பெற்றோல் 92** | 117.00 | 7.34 | 8,251 | - |
| **பெற்றோல் 95** | 128.00 | 8.92 | 1,291 | - |
| **மண்ணெண்ணை (உள்ளூர்)** | 49.00 | 17.81 | 2,982 | - |

| பெறுமதிக்கான விளைவுகள் | எவ்வாறு வெற்றி பெறுவது |
|---|---|
| மானிய விலையில் பெற்றோலிய உற்பத்திகளை விற்பனை செய்தல் வருவாய், இலாபம் மற்றும் காசுப்பாய்ச்சல் ஆகியவற்றின் மீது முக்கிய எதிர்மறைத் தாக்கத்தைக் கொண்டுள்ளது. காசுப்பாய்ச்சல் பிரச்சினைகளை இ.பெ.கூ.தாபனம்எதிர்கொள்ளும் போது கடன்களைக் கொண்ட வட்டியுடன் அதன் இலாபத்தை மேலும் குறைக்கின்றது. | 1. செலவு விலை பிரதிபலிப்பு, வெளிப்படையான எரிபொருள் விலையிடல் பொறிமுறை ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கத்தை அறிவுறுத்தல்<br>2. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 17ஆம் பிரிவிற்கிணங்க மானிய உரிமையைப் பெற அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை மேற்கொள்ளுதல்<br>3. கட்டுப்பாட்டுச் செலவினம் |

## பெற்றோலிய விலையில் உலகளாவிய அளவில் உயர்ந்த போக்கு

இ.பெ.கூ.தாபனம் உலகளாவிய சந்தையில் ஒரு விலையை நிர்ணயம் செய்வதாக உள்ளது.

இலங்கை பெற்றோலிய வளத்தைக் கொண்டிருக்காதபடியினால், உலக சந்தையிலிருந்து நாங்கள் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.மேலும் பெற்றோலியப் பொருட்களின் உலகளாவிய சந்தை விலையானது வீழ்ச்சியடைகின்ற போது, எரிபொருளைக் களஞ்சியப்படுத்துவதற்கு போதுமான களஞ்சிய வசதி இல்லை. இதன் காரணமாக, இ.பெ.கூ.தாபனம் உலகளாவிய சந்தையின் விலை ஏற்ற இறக்கங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.




இ.பெ.கூ.தாபனத்தின் விற்பனை செலவு மீது அழுத்தம் கொடுத்து 2016 ஆம் ஆண்டு சனவரியிலிருந்து31.965 அமெரிக்க டொலர்/ பரல் சராசரி விலையிலிருந்து டிசம்பரில்54.817 அமெரிக்க டொலர்/ பரல் வரை 71% ஆல் இந்த ஆண்டின் மெர்பன் FOB அபுதாபி விலைஅதிகரித்தது.அதே காலப்பகுதியில் சுப்பர் டீசல் மற்றும் ஆட்டோ டீசல் முறையே 71% மற்றும் 74% ஆல்அதிகரித்துள்ளது. அண்மைக்காலங்களில் உயர் அழுத்தத்தில் விலைகள் இருப்பதுடன், சந்தையில் எவ்வளவு உயரிய நிலையில் உள்ளது என்பதும் எவ்வளவு காலத்திற்கு அவ் உயரிய போக்கு காணப்படும் என்பதும் தெளிவில்லை.

| பெறுமதிக்கான விளைவுகள் | எவ்வாறு வெற்றி பெறுவது |
|---|---|
| **உயரிய விலைகள் மிகையளவினையும் மற்றும் பணத்தினையும் அழுத்தத்தின் கீழ் தந்துள்ளன. உலக சந்தையில் நாம் விலையினைத் தீர்மானிப்பதுடன், சந்தையில் சிறியளவிலான தாக்கத்தையும் கொண்டுள்ளோம்.** | 1. 1. உலகளாவிய சந்தையில் விலைகள் குறைந்து கொண்டிருக்கும் போது பெற்றோல் உற்பத்திகளை சேமிப்பதற்கான களஞ்சிய ஆற்றலை அதிகரித்தல்.<br>2. இயற்கை எரிவாயுவை அபிவிருத்தி செய்வதற்கும், உற்பத்தி செய்வதற்குமான திட்டத்தின் மூலம் இலங்கையின் பெற்றோலிய ஆய்வு முயற்சிகளை அரசாங்கம் புதுப்பித்தது. எரிவாயு வணிகமயமாக்கல் செயல்முறை வெற்றிகரமாக இருந்தால், அது உள்நாட்டு எரிவாயுவைப் பயன்படுத்தவும், இறக்குமதி செய்யப்பட்ட வடிகட்டிய எரிபொருளைக் குறைக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. |

## நாணய மாற்று விகிதத்தில் ஏற்பட்ட மாற்றம்

**இலங்கையில் முக்கிய இறக்குமதியாளராக இ.பெ.கூ.தாபனம் உள்ளது**

இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் அடிப்படையில்இ.பெ.கூ.தாபனம் செயற்படுவதுடன், நாணய மாற்று விகித மாற்றம் இலாபத்தைப் பாதிக்கின்றது. முழுமையாக 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு (2015: 9.03%) எதிராக 3.83%நாணய மதிப்பிறக்கத்தை ரூபாய் பதிவுசெய்திருந்தது. வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக ரூபாயின் பெறுமதி குறைவடைந்தமையின் காரணமாகஇ.பெ.கூ.தாபனத்திற்கு ரூ. 8,829 மில்.(2015: ரூ. 32,841.59 மில்.) இழப்பு ஏற்பட்டது. மேலும், இ.பெ.கூ.தாபனம் இரண்டு அரச வர்த்தக வங்கிகளிடமிருந்து மட்டும் அமெரிக்க டொலரைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது என்பதுடன் ஏனைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து போட்டியான விகிதத்தில் அமெரிக்க டொலரைக் கொள்வனவு செய்வதற்கு அது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.




| பெறுமதிக்கான விளைவுகள் | எவ்வாறு வெற்றி பெறுவது |
|---|---|
| **ரூபாயின் மதிப்பைக் குறைப்பது இலாபம் மற்றும் காசுப் பாச்சல் ஆகியவற்றின் மீது முக்கியமான எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் இ.பெ.கூ.தாபனம்இறக்குமதி பில்கள் மற்றும் வெளிநாட்டு நாணய கடன்களை உயர் நாணய மாற்று விகிதத்தில் தீர்க்க வேண்டியுள்ளது.** <br> **போட்டியுடைய விகிதங்களில் அமெரிக்க டாலர்களை வாங்குவதற்கான ஆற்றல் இன்மையானதுநாணய மாற்று விகிதத்திலிருந்து இழப்பை அதிகரிக்கிறது.** | 1. அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளத்தக்க மானியத்தின் மூலம் பெறப்பட்ட வெளிநாட்டு நாணய கடன்களைத் தீர்த்தல் <br> 2. எல்லா வர்த்தக வங்கிகளுடனான பேச்சுவார்த்தைகள் மூலமாகபோட்டியுடைய விகிதங்களில் அமெரிக்க டாலர்களை வாங்குவதற்காக இ.பெ.கூ.தாபனத்திற்கு சாத்தியமாக்குதல். |

## எண்ணெய் சுத்திகரிப்பு திறன் மற்றும் களஞ்சியப் பற்றாக்குறை

**பெற்றோலிய உற்பத்தியின் தன்மையானது வேறுபட்ட உற்பத்திகளுக்காக வேறுபட்ட களஞ்சியங்கள் தேவைப்படுத்தப்படுகிறது**.

கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் என்பனவற்றிற்கு வேறுபட்ட எரிபொருள் உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு வெவ்வேறு வகையான தாங்கிகள் தேவைப்படுகின்றன. பெற்றோலிய உற்பத்திக்கான அதுகரித்துவரும் கேள்வியுடன் தற்போதைய தாங்கியின் திறன் மற்றும் சுத்திகரிப்புத் திறன் ஆகியனவற்றிற்கு மேம்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு நடவடிக்கை மற்றும் கூடுதல் சேமிப்பக திறன் என்பவற்றிக்கான அழுத்தம் போதுமானதாக இல்லை. மேலும் உலகளாவிய விலைகள் குறைவடைந்திருந்த போதுஇ.பெ.கூ.தாபனம் எதிர்கால தேவைக்கு ஒரு செயல்திறன்மிக்க செயல்பாடாக அதிகமான பெற்றோலியத் தயாரிப்புகளை களஞ்சியப்படுத்தியிருக்கும். நிதி நெருக்கடியானது இதற்கான முக்கிய சவாலாக உள்ளது.

சுத்திகரிப்பு செயல்முறை மூலம் உருவாக்கப்பட்ட மேலதிக கீழ்நிலைப் பொருட்கள் ஏற்றுமதி மூலம் ஏற்பட்ட இழப்புக்கள் பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகிறது;

| உற்பத்தி | லீற்றருக்கான இழப்பு (ரூ.) | மொத்த இழப்பு (ரூ. மில்) |
|---|---|---|
| **எரிபொருள் எண்ணெய் 800'** | 19.71 | 727 |
| **இரசக்கற்பூரத்தைலம் (Naphtha)** | 18.54 | 1,580 |

## பெறப்பட்ட அமெரிக்க டொலர் கடன்களைத்தீர்ப்பதில் எதிர்கொள்ளப்படும் இடர்கள்

**பெற்றுக்கொண்ட அமெரிக்க டொலர் கடனை தனது தற்றுணிவில் தீர்ப்பதற்கு இ.பெ.கூ.தாபனம் சுதந்திரத்தைக் கொண்டிருக்கவில்லை.**

நிதிச் சவாலை எதிர்கொள்வதற்கு இ.பெ.கூ.தாபனம் கடன்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நிதி உதவியைப் பெற வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக பல்வேறு இடர்களை எதிர்நோக்குகின்றது. கடனைத் தீர்ப்பதற்கான நிதியின்மையானது இ.பெ.கூ.தாபனம் எதிர்கொள்ளும் பாரிய சவாலாகும். சந்தையில் அமெரிக்க டொலர் போதாமை போன்ற நிதி நிலைமையை இ.பெ.கூ.தாபனம் கொண்டிருப்பினும், நாட்டின் நாணயமாற்று விகிதத்தின் தாக்கம் கடனைத் தீர்ப்பதற்கு தடையாக உள்ளது. இதன் விளைவாக நிதிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இ.பெ.கூ.தாபனம் மேலும் வட்டி செலுத்தவேண்டியுள்ளதுடன் எதிர்மறை நிகரச் சொத்துக்களின் நிலைமையும் மேலும் தீவிரமாகவுள்ளது.

| | ரூ. மில் | குறிப்புகள் |
|---|---|---|
| நிதிச் செலவு | 11,404.537 | நிதி வழங்குநர்களுக்கு ஏற்படும் செலவுகள் |
| நிதி வருமானம் | 8,367.428 | அதிகப்படியான பணத்தை முதலீடு செய்வதன் மூலம் பெறப்பட்ட வட்டி |
| வட்டி ஈட்டும் முதலீடுகள் | 63,626.178 | அதிகப்படியான பணத்திலிருந்துசெய்யப்படும் முதலீடுகள் |
| வட்டியுடனானகடன் வாங்குதல் | 193,987.471 | நிதி பிரச்சினையை எதிர்கொள்வதற்கு பெறப்பட்ட நிதியங்கள் |

| பெறுமதிக்கான விளைவுகள் | எவ்வாறு வெற்றி பெறுவது |
|---|---|
| நிலுவையாகவுள்ள கடன்கள் இலாபத்தை வெகுவாகப் பாதிப்பதுடன்,உரிய நேரத்தில் தவணை கட்டணம் செலுத்த முடியாமையானது<br>மேலதிக வட்டி செலவினத்தை அதிகரிப்பதால் மேலும் இலாபத்தன்மையை பாதித்தது | 1. அரசாங்கத்திடமிருந்து பெறக்கூடிய மானிய அளவுகள் மீது அமெரிக்க டொலர் கடன்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துதல்<br>2. வட்டி வீதங்களை குறைக்க வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துதல்<br>3. பயன்தரு திறைசேரி முகாமைத்துவம்<br>4. அமெரிக்க டொலர் கடன்களை இலங்கை ரூபாய்க்கு மாற்றுவதற்கு வங்கிகள் மற்றும் திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடாத்துதல்<br>5. இ.பெ.கூ.தாபனத்திற்கு சிறந்த வட்டியில் அமெரிக்க டொலர் கடன்களைத் தீர்ப்பதற்கான தன்னுரிமையைக் கோருதல் |

**குழாய் இணைப்பில் பாழடைந்த நிலை**

**பாழடைந்த குழாய் இணைப்புக்கள் உயரிய தாமதக் கட்டணங்களை ஏற்படுத்துகின்றது**

நாட்டின் மொத்த குழாய் இணைப்புக்களும்துறைமுகத்திலிருந்து நிலையங்களிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை விடுவிக்க பயன்படுத்தப்படுகின்றன. இக் குழாய்இணைப்பில் எற்பட்ட பாழடைந்த நிலைமையானது, கப்பல் இடைத்தங்கலுக்கான இடத்தில் பாரிய நெரிசலை ஏற்படுத்தி, சரக்குகளை விடுவிக்கும் போது குறைந்த அழுத்தத்தினைப் பேணஇ.பெ.கூ.தாபனம் நிர்ப்பந்திக்கப்படுகின்றது. இதன் விளைவாக சரக்குகளை வெளியேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சராசரியான நேரம், நியம நேரத்தைவிட அதிகமாகும் என்பதோடு, இது இ.பெ.கூ.தாபனத்திற்கு அதிக தாமதக் கட்டணங்களையும் ஏற்படுத்துகின்றது.

| பெறுமதிக்கான விளைவுகள் | எவ்வாறு வெற்றி பெறுவது |
|---|---|
| இ.பெ.கூ.தாபனம் பற்றிய எண்ணத்தினைப் பாதிக்கும் அதேவேளையில், இறக்குமதி செலவு அதிகரிப்பதனால் தாமதக் கட்டணங்கள்இலாபத்தில் அதிகம் தாக்கம் செலுத்துகின்றன. | 1. கப்பல் ஆவணங்களின் மூலப் பிரதி இல்லாதவிடத்து கப்பல் உத்தரவாதம்/ வங்கி காப்பீடு ஆகியவற்றைப் பயன்படுத்தி சரக்கினை வெளியேற்றல்<br>2. உரிய நேரத்தில் ஆவணங்களை வழங்காதுள்ள விநியோகத்தர்களின் தவறு விடயத்தில், சம்பந்தப்பட்ட தாமதச் செலவானது விநியோகத்தர்களிடமிருந்து வர்த்தக செயற்பாட்டிற்காக அவற்றை அறவிடுவது பற்றி அறிவிக்கப்படுகின்றன. |

# எமது செயல்நுணுக்கம் பற்றிய வழங்கல்

*உலகலாவிய ரீதியிலான சவால் மிக்க சந்தை நிலமைகள் காணப்பட்ட போதிலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முழு வருட விளைவுகளானவை மிகவும் குறிப்பிடத்தக்கவை ஆகும். விற்பனை செலவில் 3.17 % மான குறைப்பும் இணைந்த 12.32 % வருமான அதிகரிப்பானது முன்னெப்போதும் இல்லாத 53 பில்லியன் ரூபா இலாபத்திற்கு பங்களிப்பு செலுத்தியது.*

*தேசத்திற்குசக்தியளித்தல்.*

அதிகரித்த மொத்த இலாபம்
**பில்லியன் ரூபா 97**(2015: **பில்லியன் ரூபா 40**)
நாணயமாற்று வீத மாற்றத்திலிருந்து குறைக்கப்பட்ட இழப்பு
**பில்லியன் ரூபா 9** (2015: **பில்லியன் ரூபா**)
குறைக்கப்பட்ட எதிர்மறை நிகர சொத்துகள்
**பில்லியன் ரூபா 186**(2015: 229 **ரூபா**)
கடந்த வருடத்தில் உலகலாவிய ரீதியில் ஏற்பட்ட எண்ணெய் விலை ஏற்ற இறக்கமானது இ.கூ.பெ. தாபனத்திற்கு குறிப்பிடத்தக்க காரணியாக உள்ளது.

*அமெரிக்க டொலர் மீதான ரூபா நாணயத்தின் மதிப்பிறக்கம்*
***3.83%***

அமெரிக்க டொலர் கடன்களை ரூபா கடன்களாக மாற்றுவதானது நாணயமாற்று வீதத்திலிருந்து ஏற்படுகின்ற நட்டத்தைக் குறைக்கும்.

பங்குதாரர் பெறுமதி முன்மொழிவு

**வருமானம்**

வருமானமானது ஏற்றுமதி மற்றும் கப்பல் எரிபொருள் வியாபாரத்தின் ஊடாக உள்நாட்டில் பெற்றோலிய உற்பத்திகளை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படுகின்றது. மீளாய்வின் கீழான வருடத்தின் போது உள்நாட்டு விற்பனைகளானவை ஆதிக்க வருமான மூலமாக இருந்ததோடு, அது சந்தைக் கேள்விகளால் 2015 ஆம் ஆண்டை விட 19.14 % அதிகமாக இருந்தது. சர்வதேச சந்தையில் பெற்றோலிய விலையில் ஏற்றத் தாழ்வுகள் இருந்த போதிலும், மீளாய்வின் கீழான வருடத்தின் போது உள்நாட்டு பெற்றோலிய விலைகள் நிலையாக இருந்தன என்பது பயனுடையதாகும். உள்நாட்டு விற்பனையானது அதிகரித்த போது,ஏற்றுமதிகள் மற்றும் கப்பல் எரிபொருள் விற்பனை ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானமானது முறையே 21% மற்றும்65% ஆக குறைவடைந்து இருக்கின்றது. மறுபுறம் விற்பனை வரிகளானவை 37.68% ஆல் அதிகரித்துள்ளது.

### விற்பனை அளவு




### வருமானம்




### 2016 இல் வருமானத் தொகுப்பு




### உள்நாட்டு பெற்றோலிய விலைகள்

| உற்பத்தி | 2014.01.01 இல் | 2014 செப்டெம்பரில் மீளாய்வு செய்யப்பட்டது | 2014 டிசெம்பரில் மீளாய்வு செய்யப்பட்டது | 2015 சனவரியில் மீளாய்வு செய்யப்பட்டது | 2015 ஜீலையில் மீளாய்வு செய்யப்பட்டது | 2015 நவம்பரில் மீளாய்வு செய்யப்பட்டது | 2016.12.31 இல் |
|---|---|---|---|---|---|---|---|
| பெற்றோல்-90/92 | 162.00 | 157.00 | 150.00 | 117.00 | - | - | 117.00 |
| பெற்றோல் -95 | 170.00 | 165.00 | 158.00 | 128.00 | - | - | 128.00 |
| Auto டீசல் | 121.00 | 118.00 | 111.00 | 95.00 | - | - | 95.00 |
| Super டீசல் | 145.00 | 140.00 | 133.00 | 110.00 | - | - | 110.00 |
| மண்ணெண்ணெய் (உள்நாட்டு) | 106.00 | 86.00 | 81.00 | 59.00 | - | 49.00 | 49.00 |
| எரிபொருள் எண்ணெய்-800 | 92.20 | - | - | 82.20 | 80.00 | - | 80.00 |
| எரிபொருள் எண்ணெய் -1500 | 90.00 | - | - | 80.00 | - | - | 80.00 |
| எரிபொருள் எண்ணெய் -3500 | 90.00 | - | - | 80.00 | - | - | 80.00 |

## ஏனைய வருமானம்

2,982 மில்லியன் ரூபா வரையில் அதிகரித்துச் செல்கின்ற ஏனைய பிரதான வருமான மூலமே மண்ணெண்ணெய் மானியவருமானமாகும். மண்ணெண்ணெயை அதன் செலவிலும் குறைவாகவிற்பதற்காகஅரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய மானியமே இதுவாகும். இம் மானியமானது அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும்,இ.பெ.கூ.தாபனமானது 2016 இல் ஏற்பட்ட நட்டங்களுக்காக எந்தவொரு மானியத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. இவ்வருடத்தில் இ.பெ.கூ.தாபனமானதுஇவ் வருடத்தில் குறிப்பாக அதன் துணைநிறுவனமானCPSTLஇல் இருந்து 293 மில்லியன் ரூபா பங்கு இலாப வருமானத்தை ஈட்டியுள்ளது.

## நாணயமாற்று வீத வேறுபாடுகள்

இவ் வருடத்தில் இ.பெ.கூ தாபனத்தால் முகங்கொடுக்கப்பட்டநாணய மாற்று வீத வேறுபாட்டு நட்டமானது 8,829 மில்லியன் ரூபாவாக இருந்ததோடு, அது முன்னைய வருடத்தை விட 73% குறைவாகும். இ.பெ.கூ தாபனத்தாமானது பெற்றோலிய உற்பத்திகளை.

இறக்குமதி செய்கின்றபடியினால், வெளிநாட்டு நாணயத்தின் மீதான இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கமே இந்நட்டத்திற்கான காரணமாகும்

**நாணய மாற்று வீத வேறுபாட்டிலிருந்து நட்டம்**




**எமது செயல்நுணுக்கங்கள்**

குறித்த வருடத்தில் ஈட்டிக் கொள்ளப்பட்ட இலாபத்தை அதிகரிப்பதற்காக இகூ தாபனமானது .பெ. பல்வேறு செயல்நுனுக்கங்களை செயற்படுத்தியிருந்தது.;

- ✓ பயனுறுதிவாய்ந்த திறைசேரி முகாமைத்துவத்துடன் இ.பெ.கூ தாபனமானது அதனது நிதிச் செலவினை 3.6 பில்லியனாக குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.
- ✓ இ.பெ.கூ தாபனமானது வங்கி மிகைப்பற்றுக்கு போகாது என உறுதிப்படுத்தும் அதேவேளையில், மேலதிக பணமானது வட்டியைப் ஈட்டித் தரும் மூலங்களில் முதலீடு செய்யப்பட்டது. இதன் விளைவாக நிதி வருமானமானது 3.4 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டதோடு, எந்தவங்கி மிகைப் பற்று வட்டிக்கும் உள்ளாக்கப்படவில்லை.
- ✓ வெளிப்படைத் தன்மையான இறக்குமதி பெறுகை செயற்பாடானது குறைந்த விலையில் தரம் வாய்ந்த பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்கு இ.பெ.கூ தாபனத்திற்கு சாத்தியமாக்கியது.
  இ.பெ.கூ தாபனமானது 32 பில்லியன் ரூபா வருமானத்தினை ஈட்டுகின்ற சக்தி உருவாக்கும் துறையிலிருந்து அதிகரித்த கேள்வியினை நிறைவேற்றக் கூடியதாக இருந்தது.. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது விற்பனை வருவாயானது 112% ஆல் அதிகரித்துள்ளது.
- ✓ விமானத் துறையில் பயன்படுத்தப்படும் செலவினைப் பிரதிபலிக்கும் விலை இருந்தபோதிலும் அதிகரித்த கேள்வியினைப் பிரதிபலிக்கும் வகையில் இ.பெ.கூ தாபனத்தின் விலைகளானவை சர்வதேச சந்தையில் போட்டித்தன்மை வாய்ந்தவையாகக் காணப்பட்டன.
- ✓ கப்பல் மூல ஆவணங்கள் வரை தாமதமின்றி கப்பல் உத்தரவாதம்/வங்கி காப்பீடு என்பவற்றை பயன்படுத்துகின்ற சரக்கினை தீர்த்தல்.
- ✓ முப்படைகள், பொலிஸ் மற்றும் புகையிரத சேவைகள் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து கிடைக்கத்தக்க வாணிபத்தினை எதிர்தீர்ப்பு செய்வதன் மூலம் 9.88 பில்லியன் ரூபா வரையிலான செலுத்தத்தக்க வரி / சுங்கத் தீர்வை ஆகியவை தீர்க்கப்பட்டன.

## நிதி வருமானம்

2015 ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது நிதி வருமானமானது 67% ஆல் விருத்தியடைந்துள்ளது.




## நிதிச்செலவு

இவ் வருடத்தில் இ.பெ.கூதாபனமானது11.4 மில்லியன் ரூபா செலவிற்கு உட்பட்டுள்ளதோடு, இது முன்னைய வருடத்தை விட 24% குறைவாகும்.இ.பெ.கூதாபனமானதுஇச்செலவினை குறைப்பதற்குகடுமையாக முயற்சி செய்வதோடு,இ.பெ.கூதாபனமானதுஇவ் வருடத்திலும் மிகைப்பற்று வட்டி ஏதும் இன்றிஅதன் நிதியினை பயனுறுதி வாய்ந்ததாக முகாமை செய்வதனை திறைசேரி முறிகள், நிலையான வைப்புக்கள் மற்றும் அழைப்பு வைப்புக்கள் ஆகியவை அச்சாதனங்களில் முதலீட்டைக் கட்டியெழுப்பியுள்ளதோடு, இவ் மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

அவதானிக்கும் போது அது பாராட்டுக்குரியதாகும்.கடனைத் தீர்த்தலுடன் நீண்டகால கடன்கள் மீதான வட்டி விகிதமானது 10.63 மில்லியன் ரூபாவாகக் குறைவடைந்துள்ளது.இவ் வருடத்தில் இ.பெ.கூதாபனமானத்திற்கு2004 ஆம் ஆண்டு மீளச்செலுத்த ஆரம்பிக்கபட்ட திறைசேரியின் (Exim Bank) கடனை செலுத்தக் கூடியதாக இருந்தது.அதன் வட்டி வீதமானது வருடத்திற்கு 12% ஆக இருந்தது.கடன் பெறுகைகளுடன் தொடர்புபட்ட குறைப்புக்களுடன் வெளிநாட்டு நாணய வங்கிகளில் இருந்து பெறப்பட்ட கடன்களுக்கான வட்டியானது 3,635 மில்லியன் ரூபாவால் குறைவடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் இ.பெ.கூதாபனமானது 71,200 மில்லியன் பெறுமதியான அதன் கடனை மீளச்செலுத்திய அதேவேளையில் 2015 ஆம் ஆண்டு 16,049 ரூபா கடனைப் பெற்று இருந்தது.

**வருமான வரி செலவு**

இலாபத்தன்மையின் தீவிர விருத்தி காரணமாக வருமான வரி செலவிலும் தீவிர அதிகரிப்பு ஒன்று இருந்தது. நடைமுறையில் உள்ள வரிச் சட்டத்திற்கு ஏற்ப , இ.பெ.கூ தாபனமானது செலுத்தத்தக்க வருமானத்தின்மீதான வரியாக 12,186 மில்லியன் ரூபாவினை செலுத்த வேண்டி இருந்ததோடு, 4,340 மில்லியன் ரூபாவினை பகிரந்தளிக்கப்படக்கூடிய இலாபத்தின் மீதான வரியாக செலுத்த வேண்டி இருந்தது.

**இலாபத்தன்மை**

| | 2016 | 2015 |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 23% | 11% |
| தொழிற்பாட்டு இலாப எல்லை | 19% | 7% |
| நிகர இலாப எல்லை | 13% | (5%) |

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இலாபத்தன்மை விகிதத்தில் சாதகமான விருத்தி ஒன்று காணப்படுகின்றது.வருமானமானது 12.32% ஆல் அதிகரித்தபோதுவிற்பனைச் செலவானது 3.17% ஆல் குறைவடைந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சர்வதேச சந்தையில் பெற்றோலிய விலைக் குறைப்பானது இ.பெ.கூ தாபனத்தின் மீது சாதகமான தாக்கத்தைச் செலுத்தியுள்ளது.சம்பாதித்த மொத்த இலாபமானது இவ் வருடத்தின் மொத்த செலவினத்தை பூர்த்தி செய்வதற்குபோதுமானதாக இருந்ததோடு, இ.பெ.கூ தாபனமானது 10,000 மில்லியன் ரூபாவினை பங்கிலாபமாக திறைசேரிக்கு பகிர்ந்தளித்தது.

## பிரிவுப் பகுப்பாய்வு

முகாமைத்துவ நோக்கங்களுக்காக இ.பெ.கூ தாபனமானது அதன் தொழிற்பாடுகளை எட்டு பிரதான வகைப்பாடுகளாக பிரித்துள்ளதோடு,2016 ஆம் ஆண்டில் அப் பிரிவுகளின் செயலாற்றுகை கீழே சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது..

### பகுதிரீதியான வருமானம்




### இலாபத்தன்மைக்கு பகுதி ரீதியான பங்களிப்பு




### போக்குவரத்துத் துறை

போக்குவரத்துத் துறையானது இ.பெ.கூ தாபனத்தில் பாரிய வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் து றையாகக் காணப்படுகின்றது. குறிப்பிட்ட வருடத்தில் இது 325 பில்லியன் வருமானத்தை ஈட்டிக் கொடுத்ததோடு, இது 2015 ஆம் ஆண்டை விட 24 பில்லியன் ரூபா அதிகரிப்பு ஆகும். நிலையானவிற்பனைவிலையுடன் சேர்ந்த தனியார் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான பொது மக்களின் விருப்பமானது கேள்வியினை அதிகரித்தது. அதிகமான சொகுசு வாகனங்களின் இறக்குமதியுடன் 95 ஒக்டேன் பெற்றோல் பாவனை மற்றும் லங்கா சுப்பர் டீசல் பாவனை ஆகியன முறையே 34.99%, 35.05% வளர்ச்சியினை வெளிக்காட்டியுள்ளன. புகை வெளியீடு அற்ற எரிபொருள் பாவனைக்கான பாவனையாளர்களின் விருப்பத்தில் ஏற்பட்ட மாற்றமும் இக்கேள்வி அதிகரிப்பிற்கு பங்களிப்புச்செய்யும் காரணியாக அமைந்துள்ளது.

### போக்குவரத்துத் துறையிலுருந்து இலாபம் / (நட்டம் )




இந்நான்கு உற்பத்திகளுக்குமான கேள்வி அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், இ.பெ.கூ தாபனமானது இறக்குமதி மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய செலவுகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக விற்பனை விலை போதாமையினால் நட்டம் அடைந்தது. விலையைப் பிரதிபலிக்கின்ற விலையிடும் சூத்திரம் ஒன்றின் அவசியமானது இங்கு நன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# எரிசக்தித்துறை




எரிசக்தித் துறையானது 91 பில்லியன் ரூபா வருமானத்தை சம்பாதித்து இ.பெ.கூ தாபனத்தின் பாரிய வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் துறையாகக்காணப்பட்டது. மறுபுறம், இவ் வருடத்தில் 32.04 பில்லியன் ரூபாயினை சம்பாதித்துக் கொடுத்த இலாபத் தன்மைக்கு பங்களிப்பு செய்த அதிகூடிய பங்களிப்பாளராக இத் துறை காணப்படுகின்றது.Auto டீசலுக்கான கேள்வியானது 7.53 பில்லியன் இலாபத்தை ஈட்டிக்கொடுத்து 334% ஆக அதிகரித்து இருக்கின்றது. அத்தோடு இது கடந்த வருடத்தை விட 7.01 பில்லியன் அதிகமாகும். எரிபொருள் எண்ணெய் 800" இற்கான கேள்வியும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது

156%ஆல் அதிகரிதத்தோடு, ஈட்டிக்கொண்ட இலாபமானது 16.78 பில்லியன் ரூபாவாகும். . இவ்இலாபமானது கடந்த வருடத்தை விட கிட்டத்தட்ட 5மடங்காகும். 4.46 பில்லியன் வருமானத்தை ஈட்டிக் கொடுத்த இரசக்கற்பூரத்தைல எண்ணெய் வியாபாரத்திலிருந்து பெறப்பட்ட வருமானமானது 12.9 பில்லியன் ஆகும்.இ.பெ.கூ தாபனமானது எரிசக்தித் துறையிலிருந்து அதிகரித்த கேள்விற்கான வழங்கலை எந்தத் தடையுமின்றி வழங்கக் கூடியதாக இருந்தமை பாராட்டுக்குரியதாகும்.

**விமானத்துறை**




குறித்த வருடத்தில் விமானத்துறையானது 32.04 பில்லியன் வருமானத்தை சம்பாதித்துக்

பகுதிசார் பகுப்பாய்வு

| துறை | விற்பனை வருமானம் (மில்.ரூபா) | இலாபம் / (நட்டம்) (மில்.ரூபா) | குறிப்புரைகள் |
|---|---|---|---|
| உள்நாட்டுத் துறை | 8,587 | (2,891) | அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட மானிய விற்பனை விலை |
| விவசாயம் | 41 | (90) | உயர் பதவியணிச் செலவு மற்றும் உற்பத்திகளைக் குறைந்த விலையில் வழங்கல் |
| கப்பல் எரிபொருள் | 479 | (66) | செலவை விட குறைவான விலையில் எரிபொருள் விற்பனை |
| ஏற்றுமதிகள் | 3,314 | (2,307) | செலவை விட குறைவான விலையில் எரிபொருள் எண்ணெய் மற்றும் இரசக்கற்பூரத்தைல விற்பனை |
| போக்குவரத்து | 325,380 | 23,298 | |
| மின்சார உற்பத்தி | 91,073 | 32,038 | |
| விமானத்துறை | 32,041 | 2,258 | |
| **கைத்தொழில்கள்** | **14,136** | **5,351** | |

கொண்டதோடு 2.26 பில்லியன் வருமானத்தையும் ஈட்டிக் கொண்டது. விலையைப் பிரதிபலிக்கின்ற விலையிடும் முயைமையின் அறிமுகத்துடன் A-1 ஜெட் மற்றும் Avgas ஆகியவற்றின் விலையானது சர்வதேச

எண்ணெய் விலைகளுடன் குறைவடைந்ததுஇருப்பினும், சர்வதேச சந்தையில் விலை சூத்திரத்தைப் பயன்படுத்தி மேற்கோள் காட்டப்பட்ட விலைகளானவை போட்டித் தன்மையினைக் குறித்துக் காட்டுகின்ற விற்பனை அளவுகளானவை அதிகரித்து இருக்கின்றன. A-1 ஜெட்களுக்கான உள்ளூர் வாடிக்கையாளர்களின் கேள்வியானது அதிகரிப்பதோடு இன்னும் அதனை சுற்றுலாத் துறை விருத்தியுடன் அதிகரிக்கலாம்.

**கைத்தொழிற் துறை**




இத் துறையானது இலாபத் தன்மைக்கு பங்களிப்புச் செய்கின்ற மூன்றாவது பாரிய துறை ஆகும்.. கைத்தொழிற் துறையிலிருந்தான வருமானமானது 14.14 பில்லியன் ஆக இருந்ததோடு இது முன்னைய வருடத்தைவிட 5.48% குறைவாக இருந்தது. இக் குறைவிற்கு ஒரு காரணம் கைத்தொழிற் துறை மண்ணெண்ணெய் மற்றும் S.B.P ஆகியவற்றுக்கான கேள்வி குறைந்தமையேஇக்குறைவிற்கு காரணமாகும்.கைத்தொழிற் துறை மண்ணெண்ணெய் , 800" எரிபொருள் எண்ணெய்,S.B.P. மற்றும் தார் ஆகியவற்றின் விற்பனை விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் வருவாய் வீழ்ச்சியடையக் காரணமாக இருந்த து. இருப்பினும் , கைத்தொழிற் துறையிலிருந்து ஈட்டிக்கொண்ட இலாபமானது 5.3 பில்லியனாக இருந்ததோடு, இது 2015 ஆம் ஆண்டின் இலாபத் தன்மையை விட 244% அதிகமாகும். 800' எரிபொருள் எண்ணெய்யானது இத் துறையின் பிரதான பங்களிப்பாளராக இருப்பதோடு இது 4.8 பில்லியன் இலாபத்தை ஈட்டிக் கொடுத்தது. முன்னைய வருடத்தில் 3.7 பில்லியன் வருமானத்தை ஈட்டிய அதேவேளையில் இவ்வாண்டில் 1500' எரிபொருள் எண்ணெய் விற்பனையானது குறித்த வருடத்தில் கைத்தொழிற்துறைக்கு பூஜ்ஜியமாகக் காணப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் , அக் கடந்த வருட விற்பனையானது 270 மில்லியன் ரூபா நட்டத்தில் முடிவடைந்த்தோடு,இவ் வருடம் இது இ.பெ.கூ தாபனத்திற்கு சேமிப்பாக அமைந்தது. தார் விற்பனையானது 2015 ஆம் ஆண்டில் நட்டத்தை ஏற்படுத்தி இருந்த போதிலும் இவ் வருடத்தில் 56 மில்லியன் இலாபத்தை ஈட்டிக்கொடுத்தமை பாராட்டுக்குரிய விடயமாகும். விற்பனை அளவு அதிகரித்தல் மற்றும் செலவை விட அதிகமான விலையிடல் ஆகியவையே இவ் இலாபத் தன்மைக்குப் பிரதான காரணிகளாகும்..

**உள்நாட்டுத்துறை**

அதி கூடிய மானிய விலையில் மண்ணெண்ணெயை வழங்கியதினால் வீட்டுத்துறையானது தொடர்ச்சியாக நட்டத்தை சந்தித்தது.

விற்பனை அளவானது 7.57% அதிகரித்த போதிலும் வருவாயானது 11.09% ஆல் குறைவடைந்துள்ளது. 2015 நவம்பரில் மேற்கொள்ளப்பட்ட 49 ரூபா வரையிலான விலைக் குறைப்பானது 2016 ஆம் ஆண்டு வருடம் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தாலும் அக் குறைப்பானது 2015 ஆம் ஆண்டு நவம்பருக்கப் பின்னர் 2015 ஆம் ஆண்டின் வருமானத்தில் தாக்கம் செலுத்தி இருந்தது. சர்வதேச பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக நட்டமானது கடந்த வருடத்தை விட குறைவாக இருந்தது. LPG விற்பனையானது 589 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்திருக்கின்றது. மாறாகஇலாபமானது, விற்பனை விலைக் குறைப்புடன் 92 மில்லியனாக அதிகரித்திருக்கின்றது.



### கப்பல் எரிபொருள்




கப்பல் எரிபொருள் விற்பனையின் மூலம் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருவாயானது 479 மில்லியன் ரூபாவாகும் இது கடந்த வருடத்தை விட 65% குறைவாகும்.எண்ணெய் எரிபொருள் விற்பனையானது நட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதனால், இவ் வருடம் கப்பல் எரிபொருள் தொழிற்பாடுகளானவை 66 மில்லியன் ரூபா நட்டத்தில் முடிவடைந்தது. எவ்வாறு இருப்பினும்,2015 ஆம் ஆண்டு இ.பெ.கூ தாபனத்தினம் செலவை விட அதிகமாக எரிபொருள் எண்ணெய்யை விற்கக் கூடியதாக இருந்தது. டீசல் விற்பனையானது நட்டத்தை ஓரளவு ஈடுசெய்த போதிலும் வருமானமானது குறைவாகும்.

### ஏற்றுமதித் துறை

இவ் வருடம் ஏற்றுமதித் துறையிலிருந்தான நட்டமானது 2.31 பில்லியன் ரூபாவாக குறைவடைந்தத அதேவேளையில் 2015 ஆம் ஆண்டு நட்டமானது 6.17 பில்லியன் ரூபாவாக இருந்தது. இரசகற்பூரத்தைல எண்ணெய் மற்றும் எரிபொருள் எண்ணெய் ஆகியவற்றுக்காக எரிசக்தித் துறை கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பானது இ.பெ.கூ தாபனத்தை இரசகற்பூரத்தைல எண்ணெய் மற்றும் எரிபொருள் எண்ணெய் ஆகியவற்றை நட்டத்தில் ஏற்றுமதி செய்வதிலிருந்து தடை செய்திருந்தது. இன்னும், இ.பெ.கூ தாபனமானது அதிகளவிலான எரிபொருள் எண்ணெய் மற்றும் இரசகற்பூரத்தைல எண்ணெய் ஆகியவற்றை போதியளவான களஞ்சிய கொள்ளளவு வசதியின்மையினால் நட்டத்தில் ஏற்றுமதி செய்யவேண்டியிருந்தது.




### விவசாயத் துறை

இவ் வருடத்தில் விவசாயத் துறையின் செயலாற்றுகையானது திருபதிகரமாக அமையவில்லை. ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானமானது 41 மில்லியனாக இருந்தோடு நட்டமானது 90 மில்லியன் ஆக இருந்தது. வருமானமானது 73.55% ஆக குறைவடைந்ததோடு,அதன் விளைவாக நட்டமானது 13.92% ஆக குறைவடைந்தது. விவசாயத்துறையினால் பின்பற்றப் படும் கொள்கையானது நாட்டின் விவசாய உற்பத்திகளை குறைந்த விலையில் வழங்கும் நோக்குடன் விவசாயத் துறையில் சந்தைக் கேள்வியை நிறைவேற்றுவதற்காகஅரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனம் என்ற வகையில் விவசாய இரசாயனங்களை நியாயமான விலையில் வழங்குவதாகும்

### 2016கைஆம் ஆண்டின் எமது செயலாற்று

குறித்த வருடத்தில் நாம் பல முக்கியமான செயற் திட்டங்களை திருப்திகரமாக நிறைவு செய்துள்ளோம்.

- ✓ சுத்திகரிப்புநிலையத்தில்பம்புஅலகினை மாற்றீடு செய்தல்
- ✓ மேலதிக A1ஜெட் தாங்கி ஒன்றை அமைத்தல் .
- ✓ மத்தள சர்வதேச விமான நிலையம், தலைமை அலுவலகபுதிய களஞ்சியக் கட்டடம் மற்றும் முத்துராஜவெல உராய்வு நீக்கி எண்ணெய்க் களஞ்சிய வலையமைப்புத் திட்டம் ஆகியவற்றைப் பூர்த்தி செய்தமை. .
- ✓ கட்டுநாயக்க, ஒருகொடவத்த மற்றும் ஆகிய இடங்களில் உயிர் அளவியலை அடிப்படையாகக் கொண்ட ஒன்றிணைக்கபட்ட வரவு முறைமை மற்றும் நீர் உள்ளீரப்பு மேற் கொள்ளல்.
- ✓ நாடளாவிய ரீதியில்உராய்வு நீக்கி எண்ணெய் விநியோகஸ்தர்களுக்கான ஒன்றிணைக்கப்பட்ட பொருள் விபரப் பட்டியல் மற்றும் களஞ்சிய முகாமைத்துவ முறைமை என்பவற்றை விருத்தி செய்தமை.
- ✓ மேலதிக 5 தாங்கிகள் சேர்க்கப்பட்டதன் மூலம் சுத்திகரிப்பு நிலையத்தின் களஞ்சியக் கொள்ளவானது அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ✓ விவசாய இரசாயன தொழிற்பாட்டுக்காக தன்னியக்க போத்தல் நிரப்பும் இயந்திரம் ஒன்று வாங்கிப் பொருத்தப்பட்டது.
- ✓ “காண்ட்ரி”கட்டுப்பாட்டு அறையானது புதிய கட்டுப்பாட்டுக் குழுக்களுக்கு மேலதிக இடத்தைப்பெற்றுக் கொடுப்பதற்காக விருத்தி செய்யப்பட்டது.
- ✓ நீர்க் குழாய் மாதிரியில் அமைந்த கொதிகலனை கொள்வனவு செய்தல்.

## கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை

### சொத்துக்கள்

கடன்களைத் தீர்த்தலுடன் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பிரதானமாக வணிகம் மற்றும் ஏனைய கிடைக்கத்தக்கவைகள், பொருட்பதிவேடுகள் மற்றும் முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்கிய சொத்துக்களானவை 4% ஆல்குறைவடைந்துள்ளன.பொருட்பதிவேடுகள்பிர தானமாக கச்சா எண்ணெய் மற்றும் முடிடைந்த பொருள் களஞ்சியம் என்பவற்றை13.55% ஆல் குறைத்துள்ளன.. பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை 71.45%ஆல் குறைவடைந்துள்ளது. மறுபுறம் குறுகிய கால முதலீடுகளானவை 15.36 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ள அதேவேளையில் கடன்கள் குறைவடைந்து இருக்கின்றன.கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது வியாபார பெறுகைகள் 14.53 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளன. இ.மி.சபையிலிருந்து நிலுவைத் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்குப் பிரதான காரணமாகும்.

### பொறுப்புக்கள்

2015 ஆம் ஆண்டுடன் ஒப்படும்போது தற்போது மற்றும் தற்போதுஅல்லாதபொறுப்புக்கள் 51 பில்லியன் ரூபாவாகக் குறைவடைந்துள்ளது. நிதிச் செலவுக் குறைப்பிற்கு இட்டுச் செல்லக் கூடிய கடன்களானவை 74 பில்லியன் ரூபாவாகக் குறைவடைந்துள்ளது. குறித்த வருடத்தில் இ.பெ.கூ.தாபனமானது 2004 ஆம் ஆண்டிலிருந்து வருடத்திற்கு 12 % வட்டியுடன் செலுத்தப்பட்டுக் கொண்டிருந்த Exim கடனைத் தீர்க்கக் கூடியதாக இருந்தது. எவ்வாறிருப்பினும், வியாபாரம் மற்றும் செலுத்ததக்கஏனையவைகள்14.4% அதிகரிக்கப்பட்டதோடு, நிலுவையில் உள்ள பிரதான பொறுப்பானது 139.81 பில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு உண்டியல்கள் ஆகும்.

நாங்கள் சிறப்பாகச் செய்திருப்போம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பின்வரும் இடர்பாடுகளுக்கிடையில் 53 பில்லியன் ரூபா முழு மொத்த வருமானத்தை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

- ✓ அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற அதி கூடிய மானிய விலையில் பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனை
- ✓ விலையைப் பிரதிபலிக்கக் கூடிய விலையிடும் முறைமை ஒன்று காணப்படாமை.
- ✓ 2015 ஆம் ஆண்டு உள்நாட்டு சில்லறை விலைகளானவை திருத்தியமைக்கப்பட்டதோடு அதன் பின்னர் சர்வதேச எண்ணெய் விலை அதிகரித்த போதிலும் திருத்தியமைக்கப்படவில்லை.
- ✓ 1971ஆம் அண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் படி மானியமளிக்கப்பட்ட விலையில் மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளுக்காக அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கத்தக்க மானியக் கூறானது கிடைக்கப் பெறவில்லை.
- ✓ நாணயமாற்று விகிதத்தில் நாணய மதிப்பிறக்க நட்டமானது 9 பில்லியன் ரூபாவாகும்.
- ✓ அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரிகள் மற்றும் விஷேட கட்டணங்களானவை 137 பில்லியன் ரூபாவாகும்.
- ✓ முகங்கொடுத்த நிதி இடர்பாடுகளைத் தீர்ப்பதற்காக பெறப்பட்ட கடன் பெறுகைகள் மூலம் ஏற்பட்ட நிதிச் செலவானது 11 பில்லியன் ரூபாவாகும்.
- ✓ அரசாங்கத்திடமிருந்து கிடைக்கத்தக்க மானியத்தினூடாக அரசுக்கு சொந்தமான வங்கிகளிலிருந்து பெறப்பட்ட கடன்களைத் தீர்ப்பதற்கான ஒரு பொறிமுறை இன்மை.
- ✓ இ.பெ.கூ தாபனத்திற்கு போதிய களஞ்சிய வசதிகள் இன்மையால் மேலதிக உலை எண்ணெய் மற்றும் இரசக்கற்பூரத்தைலம் ஆகியவை நட்டத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டன.
- ✓ சுத்திகரிப்பு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேவைக்கு அதிகமான அடிமட்ட உற்பத்திகள் அவற்றை நட்டத்தில் விற்பதற்கு அழுத்தத்தை ஏற்படுத்தியது.
- ✓ சேதமடைந்த நாட்டின் மொத்த குழாய்களில் பேணப்படுகின்ற குறைவான அழுத்தம் காரணமாக துறைமுகத்திலிருந்து உரிய இடத்திற்கு சரக்குகளைப் விடுவிப்பதற்கு எடுக்கப்பட்ட சராசரி நேரமானது நியம நேரத்தை விட அதிகமாகக் காணப்படுவதால் இ.பெ.கூ தாபனமானது தாமதமான கட்டணங்களுக்கு உட்பட வேண்டியுள்ளது.

## சமத்துவம்

ஈட்டிக் கொள்ளப்பட்ட பாராட்டத்தக்க இலாபத்துடன் கூட்டுத் தாபனத்தின் எதிர் மறை நிகர சொத்து நிலையானது 18.84% YOY ஆல்குறைவடைந்தது.மேலும் திறை சேரியிலிருந்து மானியப் பெறுகைகள் இருந்த போதிலும்இ.பெ.கூ தாபனமானது 10 பில்லியன் ரூபா பெறுமதியான பங்கிலாபத்தை திறைசேரிக்கு பெருமிதத்துடன் பகிர்ந்தளித்தது.




2008 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத்திடமிருந்து மானியம் எதனையும் பெறாத நிலையில் இ.பெ.கூ தாபனமானது எதிர்மறை நிகர சொத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது . இ.பெ.கூ தாபனமானது 2007 ஆம் ஆண்டு வரை மானியத்தைப் பெற்றுக் கொண்டு இருந்தது.இ.பெ.கூ தாபனமானது தொடர்ந்து இம் மானியத்தைப் பெற்று இருந்தால்,நாம் தொடர்நது நிதி நெருக்கடிகள் மற்றும் கடன் சூழ்நிலைகளுக்கு முகங் கொடுத்து இருக்க மாட்டோம். நிதிக் பொறுப்புககளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட வட்டியுடன் கூடிய வங்கிக் கடன்களானவை இ.பெ. கூ தாபனத்தின் நிதிச் செயலாற்றுகையை மோசமடையச் செய்தது.

# இடர் முகாமைத்துவ அறிக்கை

இவ் உறுதிமிக்க சமூக மற்றும் பொருளாதார சூழலில் நாட்டின் பாரிய பெற்றோலிய உற்பத்தி வழங்குநர் என்ற வகையில் இடர் முகாமைத்துவமானது இ.பெ .கூ தாபனத்தின் செயற்பாடுகளின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது.

**இடர் முகாமைத்துவத்தின் நோக்கமானது ;**

- சூழல்,சந்தை ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படுவதிலிருந்தும் மற்றும் உள்ளககடமைதவறுதலிருந்தும்கூட்டுத்தா பனத்தைப் பாதுகாத்தல் .
- வளர்ச்சி மற்றும் இடரினை சரியாக சமப்படுத்தல்
- நீணட கால இருப்பினை உறுதி செய்தல்.
- தீ அல்லது விபத்துக்கள் போன்ற எதிர்மறை நிகழ்வுகளிலிருந்துஎமது தொழிலாளர்கள், வாடிக்கையாளர்கள்,பொது மக்கள் மற்றும் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல்.

இ.பெ. கூ தாபனத்தின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு




இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்
நிதிச் சட்டம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள்
நல்லாட்சி தொடர்பான வழிகாட்டல்கள்
பொது தொழில்முயற்சிகளுக்கான சிறந்த நடவடிக்கைகள்
ஏனைய ஒழுங்குபடுத்தல்நடவடிக்கைமுறைகள்

இ.பெ.கூ.தாபனத்தின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பானது இத் தபானத்தைப் பாதிக்கின்ற பிரதான இடர்பாடுகளை இனங்காண்பதற்கும் மற்றும் நாட்டிற்கு சீரான சக்தி வழங்கலை உறுதி செய்யும் நோக்கத்துடன் அத்தகைய இடர்பாடுகளை பகுப்பாய்வு செய்த பின்னர் வினைத்திறனாக அந்த இடர்களை சமாளிப்பதற்கும் விருத்தி செய்யப்பட்டுள்ளது.. இது வினைத்திறனான திட்டமிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதற்கு இட்டுச் செல்கின்ற சீரான மற்றும் கட்டுப்பாடுடைய முறையில் கூட்டுத்தாபனமானது அதன் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவுகின்றது.

இ.பெ.கூதாபனத்தின் இடர் முகாமைத்துவசெயன்முறையானது இரு திடமான பாதுகாப்பு வழிமுறைகளினால் வலுப்படுத்தப்படுகின்றது;

1. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை
2. உள்வாரி மற்றும் வெளிவாரி கணக்காய்வுகள்

இ.பெ.கூ தாபனத்தின் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டம், ,1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம், நிதி ஒழுங்குவிதிகள், நல்லாட்சி தொடர்பான வழிகாட்டல்கள் , பொது தொழில் முயற்சிகளுக்கான சிறப்பான செயற்பாடுகள் மற்றும் பல்வேறுபட்ட ஏனைய ஒழுங்குவிதிகள் ஆகியவை இ.பெ.கூ தாபனத்தின் இடர் முகாமைத்துவக் கட்டமைபிற்கு வலுவான அடிப்படையினை நிறுவுகின்றன.

**1. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை**

இ.பெ.கூ தாபனமானது மேற்கூறப்பட்ட சட்டங்களுக்கு அமைவாக தெளிவாக வரையறை செய்யப்பட்ட கொள்கைகள் மற்றும் உருவாக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளுடன் விரிவான உள்ளகக் கட்டுப்பாட்டுமுறையினைக் கொண்டுள்ளது.இது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபடுகின்ற இடர்களை இனங்காணல், முகாமை செய்தல் மற்றும் தடுத்தல் ஆகியவற்றுக்கு உதவுகின்றது.

**2. உள்வாரி மற்றும் வெளிவாரி கணக்காய்வுகள்**

உள்வாரி மற்றும் வெளிவாரி கணக்காய்வுச் தொழிற்பாடுகளானவை இடர் முகாமைத்துவ செயற்பாடுகளில் முக்கிய பங்காற்றுகின்றன. உள்வாரி மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்கள், இனங்காண்கின்ற இடர்களை முகாமை செய்வதற்காக பதிலீட்டு செயற்பாடுகள் மற்றும் மேம்பாடுகளை பரிந்துரை செய்வதன் பொருட்டு நிதி மற்றும் ஏனைய தொழிற்பாட்டு முறைமைகளின் வடிவமைப்பு மற்றும் செயல்த்திறன் என்பவற்றை ஆராய்கின்றனர். . பணிப்பாளர் சபையினால் தாபிக்கப்பட்ட கணக்காய்வுக் குழுவானது,முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் முகாமைத்துவ எதிர்வினைகளை மீளாய்வு செய்கின்றது.

**இடர் முகாமைக்கான செயல்நுணுக்கங்கள்**

கூட்டுத் தாபனத்தின் செயல்நுணுக்கங்களானவை,இடரின் வகை மற்றும் இடரின் கடுமைத் தன்மைக்கு ஏற்ப இடர்களை முகாமை செய்வதற்காகப் பிரயோகிக்கப்படுகின்றன.இடர் ஒன்றை அடையாளங்காணும் போது இ.பெ.கூ தாபனமானது பின்வருவனவற்றில் ஒன்றைச் செய்யும்,

- அத்தகைய நிகழும் சாத்தியத்தை தடுத்தல் அல்லது
- மற்றொருதரப்பினருக்குஇடரினைபரிமாற்றம் செய்தல் அல்லது
- இடரின் விளைவுகளையும் மற்றும் அதற்கான மற்றும் பாதீட்டினையும் ஏற்றுக்கொள்ளல்

**இ.பெ.கூ தாபனத்தின் ஆளுகை கட்டமைப்பு**

கூட்டுத்தாபனத்தின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் செயல்த்திறனானது நன்கு வரையறை செய்யப்பட்ட ஆளுகைக் கட்டமைப்பினால் வலுப்படுத்தப்படுகின்றது.

இடர் முகாமைத்துவத்தின் உச்ச பொறுப்பானது தலைவரினால் தலைமை தாங்கப்படுகின்ற பணிப்பாளர் குழுவிடம் உள்ளதோடு,சபை மற்றும் நிறைவேற்று ஆகிய இரு மட்டத்திலும் உள்ள ஏனைய ஆளுகை குழுக்களினால் மீள்வலுப்படுத்தப்படுகின்றது.

இ.பெ.கூ தாபனத்தின் ஆளுகை கட்டமைப்பானது கூட்டுத்தாபன ஆளுகை அறிக்கையின் கீழ் 37 ஆம் பக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது.

**இ.பெ.கூ தாபனத்திற்கான இடர் வெளிப்பாடு**

கூட்டுத்தாபனமானது எதிர்கொண்ட இடர்கள் பற்றிய சுருக்கமான விபரம் மற்றும்இடரினை மேலும் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இடர் முகாமைத்துவ செயற்பாடுகளும் பிரேரணைகளுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| இடர் | இடரினால் ஏற்பட்ட தாக்கம் | இடர் எதிர்வினை | பிரேரணைகள் |
|---|---|---|---|
| **பொருளாதார இடர்** | | | |
| நாட்டின் பணவீக்க வீதமானது கூ.தாபனத்திற்கு அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது.பெற்றோலிய உற்பத்திகளை வழங்குவதில் சந்தை தலைவர் என்ற வகையிலும் அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனம் என்ற வகையிலும், சில பெற்றோலிய உற்பத்திகளானவைமேலதிக இலாபத்தை ஈட்டிக் கொள்வதை விட சமூக பொருளாதார சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்காக அதி கூடிய மானியவிலையில் வழங்கப்படுகின்றன.பெற்றோலிய விலையில் ஏற்படுகின்ற சிறு மாற்றங்களானவை நாட்டின் முழுப்பொருளாதாரத்திலும் கடுமையாகத் தாக்கம் செலுத்துகின்றன. | பண வீக்கம் போன்ற எதிர்மறைப் பொருளாதார காரணிகளானவை செலவினை அதிகரிப்பதோடு இலாபத்தைச் சிதைத்து வருமானத்தைக் குறைக்கின்றது. | கூட்டுத்தாபனத்தின் இலாபத் தன்மை மற்றும் நாட்டின் சமூக பொருளாதார நிலைமைகள் ஆகிய இரண்டினையும் சமப்படுத்துவதனை நோக்காகக் கொண்டு பெற்றோலிய உற்பத்திகளை போட்டித் தன்மையான விலையில் விற்பனை செய்வதற்காக இ.பெ.கூ தானத்திற்கு உதவும் வகையில் தீவிர செலவு முகாமைத்துவ முயற்சிகள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. | செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடும் பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தல் |

| இடர் | இடரினால் ஏற்பட்ட தாக்கம் | இடர் எதிர்வினை | பிரேரணைகள் |
|---|---|---|---|
| **பொருள் விலை இடர்** | | | |
| கச்சா எண்ணெய் மற்றும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகளானவை இறக்குமதி செய்யப்படுகின்றன. ஏனெனில் அத்தகைய வளங்கள் இலங்கையில் காணப்படுவதில்லை . இ.பெ. கூ தாபனத்தினால் இங்கு செல்வாக்குச் செலுத்த முடியாதவிடத்து, அத்தகைய உற்பத்திகளின் விலைகளானவை விநியோகத்தர்களால் தீர்மானிக்கப்படுகின்றன. | சர்வதேச எண்ணெய் விலை அதிகரிப்பானது விற்பனை செலவு,எல்லை/இலாபம் மற்றும் பண நிலை ஆகியவற்றில் எதிர்மறைத் தாக்கம் செலுத்துகின்றது. | கையிருப்பு மீளாய்வுக் குழுவானது நாட்டின் கையிருப்பு தேவையினையும் சர்வதேச எண்ணெய் விலையினையும் தொடர்ச்சியாக அவதானிப்பதோடு கையிருப்புக்களை செலவுப் பயனுறுதி வாய்ந்த முறையில் கொள்வனவு செய்கின்றது. | செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடும் பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தல்<br>• சர்வதேச சந்தையில் விலை குறையும் போது களஞ்சியக் கையிருப்புக்களுக்கு களஞ்சியக் கொள்ளளவினை அதிகரித்தல். |
| **உற்பத்தி இடர்** | | | |
| உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளைப் பெற்றுக் கொள்வதற்காக கச்சா எண்ணெயானது சுத்திகரிக்கப்படுகின்றது. | வெளியீட்டின் தரம் மற்றும் விரயங்கள் இலாபத் தன்மையில் தாக்கம் செலுத்துகின்றன. | கிடைக்கக்கூடியதொழிநுட்பம் மற்றும் அதிகபட்ச சாதகமானகொள்ளளவு ஆகியவற்றைப் பயன்படுத்தி கச்சாஎண்ணெய்யை சுத்திகரித்தல் | • சுத்திகரிப்பு தொழிற்பாடுகளை மேம்படுத்தல்.<br>• வெளியீட்டைக் களஞ்சியப் படுத்துவதற்காக களஞ்சியக் கொள்ளளவை அதிகரித்தல். |
| **தொழிற்பாட்டு இடர்** | | | |
| உள்ளக செயற்பாடுகள் மற்றும் முறைமைகள் இ.பெ.கூ தாபனத்தின் தொழிற்பாடுகளைப் பாதிக்கின்றன. | இலாபத் தன்மையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நேரம் உள்ளிட்டவினைத்திறனற்ற கட்டுப்பாடுகள் மற்றும் முறைமையில் உள்ள குறைபாடுகள் அதிகபட்ச விரயங்களை ஏற்படுத்தும். | தெளிவாக வரையறை செய்யப்பட்ட கொள்கைகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கையை உள்ளடக்கிய இடத்தில் உள்ளன.<br>• உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் உள்ள குறைபாடுகளை இனங் காண்பதற்கான நடைமுறை மதிப்பீடுகள் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.<br>• கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு படுகின்ற செயற்பாட்டு இடர்களை மட்டுப்படுத்துவதற்காக பெறுகைக் குழு மற்றும் கேள்விமனு சபை போன்ற பல்வேறு குழுக்கள் நடைமுறையில் உள்ளன.<br>• இ.பெ.கூ தாபனமானது அதனை நிர்வகிக்கின்ற சட்டங்கள்மற்றும்ஒழுங்குமுறைகளுக்கு இணங்குகின்றன. | தனியார் துறையுடன் போட்டியிடுவதற்கு உதவுகின்ற வகையில் நவீன தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி கட்டுப்பாடுகள் மற்றும் முறைமைகளானவை புதுப்பிக்கப்படல் வேண்டும். |

| இடர் | இடரினால் ஏற்பட்ட தாக்கம் | இடர் எதிர்வினை | பிரேரணைகள் |
|---|---|---|---|
| **பாதுகாப்பு இடர்** | | | |
| பெற்றோலிய உற்பதிதிகளானவை விரைவாகத் தீப்பற்றக் கூடியவை என்பதோடு, அவை பாதுகாப்பு தரநியமங்களை களைக் பின்பற்றி கையாளப்படுதல் வேண்டும். | பாதுகாப்புத் தரநியமங்களை பின்பற்றாது இருப்பதானது வியாபாரத்தைப் பாதிப்பதோடு மனித உயிர்கள் மற்றும் சொத்துக்களைச் சேதப்படுத்துகின்றன. | • சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான கொள்கைகளும் நடைமுறைகளும் உள்ளன.<br>• தொழிலாளர்களுக்கு நாளாந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. | தொடர்ச்சியாக எல்லாத் தொழிலாளர்களுக்கும் பயிற்சி வழங்கப்படல் வேண்டும். |
| **சந்தை இடர்** | | | |
| இ.பெ கூ தாபனமானது பிரதானமாகப் போட்டித் தன்மையினை தனியார் துறையிடமிருந்தே எதிர்கொள்கின்றது. | போட்டித் தன்மை மற்றும் பொருளாதார நிலமைகளுடனான வாடிக்கையாளர் மனப்பாங்கு மாற்றமானது இபெ.கூ தாபனத்தின் வருவாய்,எல்லைகள் மற்றும் நிதி நிலைகளைப் பாதிக்கின்றன. | • உற்பத்திப் பட்டியலை வகைப்படுத்தல்.<br>• வாடிக்கையாளருடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்.<br>• கடனாளிகளிடமிருந்துஅதிகரித்த சேகரிப்பு | மேலும் அரசாங்கத்துடன் தொடர்புடைய நிறுவனங்களில் இருந்தான வரவுகள் உள்ளிட்ட கடன் சேகரிப்புக்களை மேம்படுத்தல். |
| **மனித வளங்கள் இடர்** | | | |
| தேசத்துக்கான மிதமான எரிபொருள் வழங்கலை உறுதிப்படுத்துகின்ற மனித வளங்கள் அவசியம். திறமையான தொழிலாளர்களைக் கவர்தல்,பயிற்றுவித்தல் மற்றும் தொடர்ச்சியாக வேலையில் அமர்த்துவதோடு வழக்காடலுடன் தொடர்புடைய மனித வளங்களைத் தவிர்த்தல் ஆகியவை இ.பெ.கூ தாபனத்தினால் முகங்கொடுக்கப்படுகின்ற இடர்களாகும். | அதிக செலவு மற்றும் குறைவான இலாபம் ஆகியவற்றுக்கு இட்டுச் செல்லும் வகையிலுள்ள பொருத்தமற்ற தொழிலாளர் குழாமானது தொழிற்பாட்டு வினைத்திறன்களை கடுமையாகப் பாதிக்கின்றது. மேலும் இது பெற்றோலிய உற்பத்திகளின் தரம் மற்றும் இ.பெ.கூ தாபனத்தின் மதிப்பையும் பாதிக்கின்றது. மனித வளங்களுக்கு எதிரான வழக்காடலானது இ.பெ.கூ தாபனத்திற்கு தேவையற்றதொரு செலவாகும். | • ஊழியர்களைப் பயிற்றுவித்தல்.<br>• இ.பெ.கூ தாபனத்தினதும் தொழிலாளர்களினதும் நலன்களின் நியாயமான சமப்படுத்தலைத் தக்க வைக்கக்கூடிய தொழில் அமைப்புக்களுடனான கூட்டு ஒப்பந்தங்கள்.<br>• ஆளணியிரின் நலனோம்பு மற்றும் ஏனைய நன்மை பயக்கும் திட்டங்கள் ஊழியர் தக்கவைப்பினை உறுதிப்படுத்துகின்றன. | செயற்றிறனை அடிப்படையாகக் கொண்ட வெகுமதி மற்றும் பதவி உயர்வு முறைமையை அறிமுகப்படுத்தல். |
| தகவல் தொழிநுட்ப இடர் | | | |
| சரியான தீர்மானங்களை மேற்கொள்ள நம்பகமான தகவல் அவசியமாவதோடு சந்தையில் போட்டியிடுவதற்கு நவீன தகவல் தொழிநுட்பமானது அவசியமாகும். | குறைவான தகவல், தவறான தகவல் மற்றும் தகவல் பாதுகாப்பு ஆகியவை தவறான தீர்மானம் எடுத்தலுக்கு இட்டுச் செல்வதோடு, இலாபத்திற்குஊறுவிளைவித்து அதிக நேரத்தையும் எடுத்துக்கொள்ளும்.. | • இ.பெ.கூ தாபனமானது அதன் கொடுக்கல்வாங்கல்களை SAP முறைமையைக் கொண்டு பதிவு செய்கின்றது.<br>• பயனர்களுக்கு தகவல் தொழிநுட்ப பயிற்சி வழங்குகின்றது.. | • கூட்டுத் தாபனத்திற்கானSAP முறைமை,நிர்வாகஉரிமைகள்மீது முழுக்கட்டுப்பாட்டைஎடுத்துக்கொள்ளல். |

| இடர் | இடரினால் ஏற்பட்ட தாக்கம் | இடர் எதிர்வினை | பிரேரணைகள் |
|---|---|---|---|
| **நாணயமாற்று வீத இடர்** | | | |
| இ.பெ.கூ தாபனத்தின் வருமானமானது பெரும்பாலும் இலங்கை ரூபா நாணயத்திலே பரிமாற்றும் செய்து கொள்ளப்படுவதோடு பெற்றோலிய உற்பத்திகளின் செலவு மற்றும் கடன்களானவை அதிகமாக அமெரிக்க டொலர்களிலே மீள் செலுத்தப்படுகின்றன. | இலங்கையின் ரூபா நாணயத்திற்கு எதிரான அமெரிக்க டொலரின் மதிப்பிறக்கமானது இலாபத்தன்மை மற்றும் நிதி நிலைமை ஆகியவற்றை எதிர்மறையாகப் பாதிக்க க்கூடிய நாணயமாற்றுவீத நட்டத்தை அதிகரிக்கின்றது. | எல்லா வங்கிகளினாலும் குறிப்பிடப்பட்ட நாணயமாற்று வீதங்களானவை நாளாந்த அடிப்படையில் கண்காணிக்கப்படுவதோடு டொலர்கள் வங்கியில் குறிப்பிடப்பட்ட விலைக்கு வாங்கப்படுவதில்லை.ஆனால் சந்தை நடத்தைகளைக் கண்காணித்ததன் பின்னர் சந்தை விலைக்கு வாங்கப்படுகின்றது. | அமெரிக்க டொலர்களை அரசுக்குச் சொந்தமான இரு வர்த்தக வங்கிகளில் இருந்து மாத்திரம் வாங்குவதற்குப் பதிலாக உரிமம் அளிக்கப்பட்ட ஏதேனும் ஒரு வர்த்தக வங்கியில் இருந்து அமெரிக்கடொலர்களை போட்டித் தன்மையான விலைக்கு வாங்குவதற்கு தனியுரிமை அளித்தல் .<br>• அமெரிக்க டொலர்களில் உள்ள கடன்களை இலங்கைரூபாவிற்கு மாற்றல். |
| **வட்டி வீத இடர்** | | | |
| இ.பெ.கூ தாபனமானது உள்ளக ரீதியாக நிதியை ஈட்ட முடியாத போது நாட்டிற்கு மிதமான பெற்றோலிய உற்பத்தி வழங்கலை உறுதிப்படுத்த நிதிக் கடன் எடுக்கின்றது. | கடன்கள் மீது விதிக்கப்பட்ட வட்டியானது இ.பெ.கூ தாபனத்தின் இலாபத் தன்மை மீது வட்டிச் செலவு மற்றும் நிதிக் கட்டணங்களின் ஊடாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. | 2015 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நாணயக் கடன் வட்டி விகிதத்தினை 5.5 % இல் இருந்து 5% ஆகக் குறைத்தல். | • அரசாங்கமானது மானியக்கூறினைதாமதமின்றி தீர்க்கவேண்டும்.<br>• கிடைக்கக்கூடிய மானிய வழி வகையின் மூலம் அரசாங்கமானது சில வங்கிக்கடன் தொகைகளை பெறலாம். |
| **திரவத்தன்மை இடர்** | | | |
| உரிய நேரத்தில் கூட்டுத் தாபனத்தின் கடமைகளைப் பூர்த்தி செய்ய முடியாமை மற்றும் அதன் காரணமாக திரவததன்மையானது இடரிற்கு உட்படும். | உரிய நேரத்தில் செலுத்த முடியாதவிடத்து மேலதிக வட்டியினைச் செலுத்துதல் வட்டிச் செலவு,காசுப்பாச்சல் மற்றும் பொறுப்புநிலை ஆகியவற்றில் எதிர்மறைத்தாக்கம் செலுத்துகின்றது. மேலும், ஒரு | • கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மையானது தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு எதிர்காலத் திரவநிலைத் தேவைகளைக் கண்டறிதல்.<br>• கூட்டுத் தாபனமானது திறைசேரி மற்றும் வங்கிகளுட னான | மேலும் அரசாங்க நிறுவனங்கள் உள்ளிட்ட கடனாளிகளிடமிருந் தான சேகரிப்பை மேம்படுத்தல். |

| இடர் | இடரினால் ஏற்பட்ட தாக்கம் | இடர் எதிர்வினை | பிரேரணைகள் |
|---|---|---|---|
| | சொத்தினை விரைவாக விற்பனை செய்ய முடியாமை எதிர்பார்க்கப்பட்ட இலாபத் தன்மையினை தடுக்கின்றது. | சுமூகமான உறவின் ஊடாக பலதரப்பட்ட நிதியிடல் செயல்நுணுக் கங்க ளை ஒழுங்குபடுத் தி இருக்கின்றது.<br>கூட்டுத் தாபனத்தின் இலாபத் ன்மை மற்றும் திரவத் ன்மையானது சமப்படுத்தக் கூடிய வகையில் மேலதிக ணமானதுமுறையாக முதலீடு செய்யப்பட்டது. | |
| **கடன் இடர்** | | | |
| இ.பெ.கூ தாபனமானது அதன் உற்பத்திகளை கடன் அடிப்படையில் விற்பனை செய்வதனால் கடன் இடர் ஏற்படுகின்றது.<br>*1.* **இயல்பு நிலை இடர்**<br>இயல்பு நிலை இடரானது வாடிக்கையாளரின் இயல்பு நிலையிலிருந்து ஏற்படுகின்ற சாதாகமான நட்டங்களாகும்.<br>*2.* **செறிவுஇடர்**<br>குறிப்பிட்டஒரு வாடிக்கையாளர், துறைஅல்லதுஉற்பத்திக்குஅதிக கடன்வழங்குவதன்மூலம்செறிவு ஆபத்து உருவாகிறது. | எவரேனும் வாடிக்கையாளர் ஒருவர் இ.பெ.கூ தாபனத்திற்கு அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறுமிடத்து மற்றும் இயல்பு நிலைகள் அல்லது அவரது கட்டணங்களைத் தாமதப்படுத்தும் போது அது பணச் செலவுப் பிரச்சினைகளுக்கு வழிவகுப்பதோடு இலாபத்தன்மையில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும். | • இ.பெ.கூ தாபனத்தின் பெறுதல்களானவை பல் வேறுபட்ட துறைகளுக்கு வழங்குகின்ற உற்பத்தி வகைப்பாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப நன்கு வகைப்படுத்தப்பட்டுள்ளன.<br>• இ.பெ.கூ தாபனமானது அரசாங்கத்திற்கு செலுத்தத்தக்க வரிகள் மற்றும் தீர்வைகள் ஆகியவற்றின் பகுதி ஒன்றிற்கு எதிராக அரசாங்க நிறுவனங்களிலிருந்தான பெறுகைகளை ஈடுசெய்கின்றது. | 2016 டிசம்பர் 31 ஆகும் போதுவர்த்தகப் பெறுதல்களில் அண்ணளவாக 72% ஆனது, அரசாங்கத்துடன் தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து பெறப்படுவதினால், அரசாங்க நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்களை மேலும் குறைத்தல்.இது அறவீடுகள் மீது பின்பற்றப்படும் அழுத்தத்தை அதிகப்படுத்துகின்றது |



| இடர் | இடரினால் ஏற்பட்ட தாக்கம் | இடர் எதிர்வினை | பிரேரணைகள் |
|---|---|---|---|
| **சுற்றுச் சூழல் இடர்** | | | |
| நடைமுறையில் உள்ள அரசியல்,சட்ட,சமூக சூழ்நிலைகள் இ.பெ.கூ தாபனத்தின் செயற்பாடுகளில் தாக்கம் செலுத்துகின்றன. | அரசியல்,சட்ட, சமூக சூழலில் உள்ள மாற்றங்கள் இ.பெ.கூ தாபனத்தினால்மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களை மாற்றுகின்றன. இதுமறைமுகமாக இலாபத்தன்மையினைப் பாதிக்கின்றது. | • ஒழுங்குமுறைஇணக்கப்பாடுகளை தொடர்ந்துமீளாய்வுசெய்தல்.<br>• சமூக மற்றும் பொருளாதார ஸ்தீரத் தன்மையில் செல்வாக்குச் செலுத்துகின்ற பங்குதாரர்களுடன் சுமூகமான உறவினைப் பேணல். | மேலும் சுற்றுச்சூழல் இடர்களுக்கு முகங்கொடுக்க முன்னேற்பாட்டுடன் இருத்தல் |
| **வழங்குநர் இடர்** | | | |
| பெற்றோலிய உற்பத்திகளானவை சர்வ தேச சந்தையில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதோடு,வழங்குநர்கள் பின்வரும் அம்சங்கள் தொடர்பில் இ.பெ.கூ தாபனத்தின் மீது அழுத்தம் கொடுக்கின்றார்கள்.<br>1. **தர இடர்** உற்பத்திகளின் குறைபாடு மற்றும் தொழிநுட்ப தரத்தில் அமையாத உற்பத்திகள் ஆகியன தர இடரை ஏற்படுத்துகின்றன.<br>2. **சார்பு நிலை இடர்** பெரிய வழங்குநர்கள் மீது தங்கியிருத்தல் மற்றும் வழங்கல் தடை ஆகியன சார்பு நிலை இடரை ஏற்படுத்துகின்றன. | தரக் குறைவான உற்பத்திகள் மற்றும் உரிய நேரத்தில் உற்பத்திகளை வழங்காமை ஆகியன வாடிக்கையாளர்கள்மற்றும்வருவாய்இழக்ககாரணமாக அமைவதோடு, கூட்டுத்தாபனத்தின் நன்மதிப்பையும் பாதிக்கின்றது. | பெற்றோலிய உற்பத்திகளை உள்ளடக்கிய பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம் மற்றும் மிதமான வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுத் தாபனமானது களஞ்சிய மீளாய்வுக் குழு,பெறுகைக் குழு கேள்விமனு மதிப்பீட்டு குழுக்கள் போன்ற உப குழுக்களை தாபித்துள்ளது. | வழங்குநர்களுடன் சுமூகமான உறவினை மேம்படுத்தல். |

# கூட்டுத்தாபன ஆளுகை

சிறந்த கூட்டு நிறுவனஆளுகையானது, பங்குதாரர்களின் பெறுமானம் மற்றும் கூட்டுத் தாபனத்தின் வளங்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்கும், செயல்நுணுக்க வளர்ச்சி நோக்கங்களை அடைவதற்கும் வலுவான அடித்தளத்தை வழங்குகிறது. பொது தொழில் முயற்சிகள் குழுவினால்(COPE) மேற்கொள்ளப்படும் சுயாதீன மீளாய்வு அத்துடன் இ.பெ.கூ தாபனத்தின் செயற்பாடுகள் மற்றும் செயல்முறைகள் மீதான பொது மக்களின் அக்கறை என்பனஉயர் மட்டத்திலான ஒருங்கிணைப்பை உருவாக்குதல் மற்றும் இறுதியில் நல்லதொரு ஆளுகையை உறுதிப்படுத்தல் ஆகியவற்றில்.மேற்கொள்ளும் இணக்கப்பாட்டில்முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

### ஆளுகைக் கட்டமைப்பு




### இபெ.கூ தாபனச் சபை

செயல் நுணுக்கம்,நிதியியல் மற்றும் மதிப்பு சார்ந்த விடயங்கள் தொடர்பாக தீர்மானத்தை மேற்கொள்கின்ற பணிப்பாளர் சபையானது கூட்டுத்தாபனத்தின் பிரதான இயக்க சக்தியாகும்.1961 ஆம் ஆண்டின் 28 ம் இலக்க இ.பெ.கூ தாபன சட்டமானது தொழிற்படுவதற்கு மற்றும் நல்ல கூட்டு ஆளுகை ஆகியவற்றை உறுதி செய்வதற்கு சபைக்கான குறிகாட்டிகளை அமைத்துள்ளது. மேலும், இச்சட்டமானது பணிப்பாளரகளின் கூட்டமைவு,பதவிக்காலம் ஆகியவற்றை உள்ளடக்குவதோடு, அவர்களது வகிபாகம் மற்றும் பொறுப்புக்களையும் குறிப்பிடுகின்றது. கூட்டுத்தாபன சபையின் பணிப்பாளர்களை பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் நியமிக்கின்றார்.சபை உறுப்பினர்களுள் ஒருவர் திறைசேரியின் பிரதிநிதியும்இன்னும் ஒருவர் , பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதியும் ஆவார்.2016 ஆம் ஆண்டில் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளரைத் தவிர ஏனைய அனைத்துப் பணிப்பாளர்களும்நிறைவேற்று அதிகாரிகளாக இருக்கவில்லை.வெளியகக் கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட அக்கறை காரணமாக , 2017 ஆம் ஆண்டில் இ.பெ.கூ தாபனமானது இரு வேறு நபர்களைதலைவராகவும் முகாமைத்துவப் பணிப்பாளர்களாகவும் நியமித்தது.

இவ் அறிக்கையின் 7-10 வரையான பக்கங்களில் பணிப்பாளர்களின் தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கோடிட்டுக் காட்டுகின்ற சுருக்கமான வாழ்க்கை வரலாறு உள்ளடக்கப்பட்டுள்ளது. .

| பணிப்பாளர் | பணிப்பாளரின் நிலை | நியமனத் திகதி | பதவி விலகல் திகதி |
|---|---|---|---|
| திரு. ரி ஜி ஜயசிங்ஹ ◌(தலைவர் முகாமைத்துவப/ (பணிப்பாளர் | நிறைவேற்றுப்பணிப்பாளர் | 12/10/2015 | 27.01.2017 |
| திரு. டீ சீ எஸ் செனவிரத்ன | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 12/10/2015 | 23.05.2017 |
| திரு.ஜெ டயஸ் | நிறைவேற்றுஅல்லாதபணிப்பாளர் | 21/01/2016 | 03.03.2016 |
| திரு.கே ஏ விமலேந்திரராஜா | நிறைவேற்றுஅல்லாதபணிப்பாளர் | 19/11/2015 | N/A |
| திரு பி கல்ஹேன | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 12/10/2015 | 22.05.2017 |
| திருஆர் ஹரிஷ்சந்திர. | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 12/10/2015 | 28.05.2017 |
| திரு எம் ஜி ஜயசேன | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 12/10/2015 | 02.03.2017 |
| திரு.எஸ்பெர்னான்டோ. | நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் | 17/03/2016 | 23.05.2017 |

2016 ஆம் ஆண்டில் சபை வரவு

வழக்கமான சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடைபெற்றதோடு விசேட கூட்டங்கள் தேவைப்படும் போது ஏற்பாடு செய்யப்பட்டன.அழைப்பின் படி சிரேஷ்ட முகாமையாளர்கள் கூட்டங்களுக்கு வருகை தந்திருந்தனர்.சபைக் கூட்டங்களானவை முறையான நிகழ்ச்சி நிரலின் படி நடாத்தப்பட்டதோடு கூட்டங்களுக்கு முன்னர் பணிப்பாளர்களுக்கு உரிய தகவல்களின் விரிவான பின்னணி கூட்டுத்தாபன முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்டது.குறிப்பிட்ட வருடத்தில் 17 சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.கீழ உள்ள அட்டவணையானது சபைக்கூட்டங்களின் போதான ஒவ்வொரு பணிப்பாளரினதும் வருகையைக் காட்டுகின்றது.

| பணிப்பாளர் | திரு. ரிஜிஜயசிங்ஹ தலைவர் ) (முகாமைத்துவப் | திரு. டீ சீ எஸ் செனவிரத்ன | திரு.ஜெ டயஸ் | திரு.கே ஏ விமலேந்திர ராஜா | திரு பி கல்ஹேன | திருஆர் . ஹரிஷ்சந்திர | திரு.எம்.ஜி.ஜயசே ன | திருஎஸ் . .பெர்னான்டோ |
|---|---|---|---|---|---|---|---|---|
| 21/01/2016 | √ | √ | √ | √ | √ | √ | √ | NA |
| 16/02/2016 | √ | √ | √ | √ | √ | √ | √ | NA |
| 02/03/2016 | √ | √ | √ | √ | √ | √ | √ | NA |
| 29/03/2016 | √ | √ | R | √ | √ | √ | √ | √ |
| 01/04/2016 | √ | √ | R | √ | √ | √ | √ | √ |
| 25/04/2016 | √ | √ | R | √ | √ | √ | √ | √ |
| 17/05/2016 | √ | √ | R | E | √ | √ | √ | √ |
| 07/06/2016 | √ | E | R | √ | √ | √ | √ | √ |
| 29/06/2016 | √ | E | R | √ | √ | √ | √ | √ |
| 15/07/2016 | √ | E | R | √ | √ | √ | √ | √ |
| 11/08/2016 | √ | √ | R | √ | √ | √ | √ | √ |
| 26/08/2016 | √ | √ | R | E | √ | √ | √ | √ |
| 20/09/2016 | √ | √ | R | √ | √ | √ | √ | √ |
| 11/10/2016 | √ | √ | R | √ | √ | √ | √ | √ |
| 31/11/2016 | √ | √ | R | √ | √ | √ | √ | √ |
| 22/11/2016 | √ | √ | R | √ | √ | √ | E | √ |
| 15/12/2016 | √ | √ | R | E | √ | √ | √ | E |
| **கூட்டங்களின் எண்ணிக்கை**: 17 | 17/17 | 14/17 | 3/3 | 13/17 | 17/17 | 17/17 | 16/17 | 13/14 |

√ - வருகை தந்தோர் R – பதவி விலகியோர்

NA – நியமிக்கப்படாதோர் E – விடுவிக்கப்பட்டோர்

**பணிப்பாளரின் சுதந்திரம்**

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தின் படி, சபைக்கு மீள் நியமனத்திற்கு முன்னர்

> **சபையின் வகிபாகம்**
>
> கூட்டுத்தாபனத்தின் வெற்றிநிலைத்திருக்கும் தன்மையின் முழுமொத்த கடமையும் பொறுப்பும் சபையிடம் அளிக்கப்பட்டுள்ளது. ஆதன் வகிபாகமானது முதன்மையாக கூட்டுத்தாபனத்தின் செயல்நுணுக்கப் பணிப்புரைகள் மற்றும் செயற்பாட்டின் மீதான சீரான தலைமைத்துவத்தை செயல்படுத்துவதோடு பங்குதாரர்களின சிறப்பு கவனத்தைப் பாதுகாப்பதாகும்

பணிப்பாளர்களுக்கு மூன்று வருட காலத்தை மிஞ்சாத பதவிக் காலம் காணப்படுகின்றது.தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்னர், சபையானது உரிய தகவல்களை கூட்டுத் தாபன முகாமையிடமிருந்து ஆராய்வதோடு தேவைப்படும்போதுவெளியக நிபுணர்களிடமிருநதும் பெற்றுக்கொள்கின்றனர்.சபையானது தனது கடமைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு உதவும் வகையில் உரிய நேரத்தில் சபைக்குப் பொருத்தமான தகவல்களை கூட்டுத்தாபன முகாமையானது வழங்குகின்றது.

**சபையின் வகிபாகம்**

கூட்டுத்தாபனத்தின் வெற்றி,நிலைத்திருக்கும் தன்மையின் முழுமொத்த கடமையும் பொறுப்பும் சபையிடம் அளிக்கப்பட்டுள்ளது.அதன் வகிபாகமானது முதன்மையாக ,கூட்டுத் தாபனத்தின் செயல்நுணுக்கப் பணிப்புரைகள் மற்றும் செயற்பாட்டின் மீதான சீரான தலைமைத்துவத்தை செயல் படுத்துவதோடு பங்குதாரர்களின சிறப்பு கவனத்தைப் பாதுகாப்பதாகும்.

மேலும், இச் சபையானது கூட்டுத் தாபனத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்குப் பொறுப்பாக உள்ளது.இக் கடமையை செயற்படுத்துவதில் , இ.பெ.கூ தாபனத்தின் செயல்நுணுக்கத்தை உணர்தல், அதன் செயற்பாட்டு செயல் திறனையும் நிதி முடிவுகளையும் மேற்பார்வை செய்வதோடு இ.பெ.கூ தாபன ஆளுகைக் கட்டமைப்பின் காவலனாக இருப்பதில் இச் சபைக்கு இறுதிப் பொறுப்பு உள்ளது. இன்னும்கூடுதலாக, அவர்கள்சட்டரீதியானதேவைகள்மற்றும்நெறிமுறைதரத்திற்கு இணங்க பொறுப்புள்ளவர்களாவர்.

பணிப்பாளர் சபையானது அதன் ஏதேனும் ஓர் அதிகாரத்தை அல்லது கடமையைப் பணிப்பாளர் ஒருவர் அல்லது தொழிலாளர் ஒருவரிடம் கையளிக்கலாம்.அதிகாரமளிக்கப்பட்ட எல்லோரும் பணிப்பாளர் சபையின் பொது அல்லது விசேட பணிப்புரையுடன் தொடர்புபட்ட தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை அல்லது கடமையை நடைமுறைப்படுத்த அல்லது செயல்படுத்த வேண்டும். சபையானது கொள்கை உருவாக்கல்,நடைமுறைப்படுத்தல் மற்றும் அவர்களது வினைத்திறனான அமுல்படுத்தலை உறுதிப்படுத்துவதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் மீதான வினைத்திறனான முறைமையினை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றது. சபை உறுப்பினரகள் உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்களோடும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களோடும்நேரடியாகத் தொடர்பு கொள்கின்றனர்.

மேற்குறிப்பிடப்பட்டவைகளுக்குப் புறம்பாக, வருடாந்த நிதிக் கூற்றுக்கள், வருடாந்த வரவு செலவு, கூட்டுத்தாபனத் திட்டம், செயல் திட்டம் மற்றும் தினசரி நிதி செயன்முறைகளை மீளாய்வு செய்தல் ஆகியவற்றுக்கு அனுமதியை வழங்குவதற்கான பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. பிரதான நியமனங்களுடன் தொடர்புடைய அனுமதி, ஆளணிப் பதவி உயர்வுகள்,பாரிய மூலதன செலவின முதலீடு மற்றும் கூட்டுத்தாபன வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதிகள் ஆகியவற்றை வழங்கும் போது சபையானது மேற்பார்வை செய்கின்றது..

**உப குழுக்கள்**

பிரதான சபையின் சில செயற்பாடுகளைச் செயற்படுத்துகின்ற கணக்காய்வுக் குழுவினூடாக இச் சபைக்கு உதவியளிக்கப்படுகின்றது .மேலதிகமாக, முகாமைத்துவக் குழு,கையிருப்பு மீளாய்வுக் குழு ,பெறுகைக் குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு போன்ற நான்கு உப குழுக்கள் காணப்படுகின்றன.

**கணக்காய்வுக் குழு**

கணக்காய்வுக்குழுவானது முகாமைத்துவத்திலிருந்து சபைக்கு பொறுப்புடன் சுதந்திர வகிபங்கை வகிக்கின்றது. கணக்காய்வுக் குழுவானது சபையினால் தீர்மானிக்கப்பட்டதன் படி நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களைக்

கொண்டுள்ளது.. இவ் வருடாந்த அறிக்கையின் அமைப்பு,வகித்த வகிபங்கு,கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் கணக்காய்வுக் குழுவின் வரவு ஆகியவை கணக்காய்வு அறிக்கையின் 43 மற்றும் 44 ஆம் பக்கங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

### முகாமைத்துவக் குழு

இவ் வருடத்தில் , முகாமைத்துவக் குழுவானது இரண்டு அல்லது மூன்று பணிப்பாளர்களைக் கொண்டுள்ளதோடு அவற்றுள் ஒருவர் குழுவின் தலைவர் ஆவார்.செயற்பாட்டுத் தலைவரும் கூட்டங்களில் பங்கு பற்றுகின்றார்.பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட வேண்டிய அறிக்கையைப் பற்றி கலந்துரையாடுவதற்காக இக் குழுவானது மூன்று முறை சந்தித்தது.குழுவானது அதன் அறிக்கையினை இறுதி அனுமதிக்காக சபைக்கு ஒப்படைக்கின்றது.

இவ் வருடத்தின்கூட்டமைவு,வருகை

| குழு உறுப்பினர் | 15/02/2016 | 26/05/2016 | 08/08/2016 | கூட்டங்களின் எண்.: 3 |
|---|---|---|---|---|
| திருஏ.ஜே.டீ டயஸ். | √ | R | R | 1/1 |
| திரு பி கல்ஹேன | √ | √ | √ | 3/3 |
| திருஆர் . ஹரிஷ்சந்திர | √ | A | √ | 2/3 |
| திரு. ரிஜி.ஜயசிங்ஹ | NA | √ | √ | 2/2 |
| திரு.எஸ்.பெர்னான் டோ | NA | √ | √ | 2/2 |
| திருஎன்.ஆர்.ஆர். . ஜயசேகர | √ | E | √ | 2/3 |
| திரு.. எஸ்.டபிள்யூ.கமகே | √ | √ | √ | 3/3 |
| திரு.. ஜி.ஏஎஸ்.பி.குணவர்த ன | √ | √ | A | 2/3 |
| திரு.எம்.கே.கருசிங்ஹ | √ | √ | √ | 3/3 |
| திரு. டபிள்யூ.எஸ்.பெரேரா | √ | √ | √ | 3/3 |
| திரு. டபிள்யூ.எம்கே..ஆர்.பீ. விக்கிரமசிங்ஹ | √ | √ | √ | 3/3 |
| திரு. எஸ்.பி. விதான | √ | √ | √ | 3/3 |
| திரு. ஆர்.ஏகே.சி. ஆரியரத்ன | √ | √ | √ | 3/3 |
| திரு.கே.டிஜி.என்.ஐ.சப ரமாது | √ | √ | A | 2/3 |

√ - வருகை தந்தோர் A – வருகை தராதோர் R - பதவி விலகியோர்E - விடுவிக்கப்பட்டோர் NA - நியமிக்கப்படவில்லை

### கையிருப்பு மதிப்பீட்டுக் குழு

கையிருப்பு மதிப்பீட்டுக் குழுவானது நடைமுறையில் உள்ள கையிருப்பு நிலையைப் பகுப்பாய்வு செய்ததன் பின்னர் அடுத்து வருகின்ற மூன்று மாதங்களுக்குத் தேவையான கையிருப்புத் தேவையினை மதிப்பீடுசெய்கின்றது. CPSTL, IOC, PUFCL மற்றும் CEB பிரதிநிதிகளின் பங்களிப்புடன் வாராந்தம் சந்திப்புக்களை மேற்கொள்கின்றது. நாட்டில் எதிர்வு கூறப்பட்ட கேள்வி,சுத்திகரிப்பு உறபத்தித்திறன் மற்றும் தாங்கி கொள்ளளவுத் திறன் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட வேண்டிய அளவுகள் திட்டமிடப்படுகின்றன.இத் தொடர்ச்சியான நெருங்கிய செயன்முறையானது ஏற்றுமதி,சுத்திகரிப்பு மற்றும் நிறுத்திவைத்தற் செலவு ஆகியவற்றைக் குறைப்பதோடு தடையற்ற எரிபொருள் வழங்கலுடன் சுமூகமாக செயற்பட கூட்டுத்தாபனத்திற்கு உதவுகின்றது.

### பெறுகைக் குழு (PC) மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் (TEC)

தேசிய பெறுகை முகவர் நிலையமானது (NPA)உற்பத்திகள்,பொருட்கள்,சேவைகள் மற்றும் வேலைகளை வாங்குவதற்கு வழிகாட்டற் தொகுதி ஒன்றை வெளியிட்டுள்ளது. வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்வதற்கு,தாமதங்களைக் குறைப்பதற்கு,நிதி ரீதியாக மிகவும் நன்மையானதும் தரம் வாய்ந்த சிறந்த சேவை மற்றும் வழங்கலுக்காக இ.பெ.கூ தாபனத்திற்கு TEC மற்றும் PC ஆனவை NPA இனால் வெளியிடப்பட்ட வழிகாட்டலின் கீழ் தொழிற்படுகின்றன.

இ.பெ.கூ தாபனத்தில் பின்வரும் குழுக்களானவை கொள்வனவு பெறுமதியின் அடிப்படையில் தொழிற்படுகின்றன.

- திணைக்கள பெறுகைக் குழு
- அமைச்சின் பெறுகைக் குழு
- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு
- செயற்திட்டப் பெறுகைக் குழு
- பிராந்திய ।பெறுகைக் குழு

### பிரதான நிறுவனத்துடனான தொடர்பு

கூட்டுத்தாபனத்தின் வர்த்தகத் தொடர்ச்சியானது பங்குதாரர்களின் மனப்பூர்வமானதும் அர்த்தமானதுமான ஈடுபடுதலில் தங்கியுள்ளது.

இ.பெ.கூ தாபனமானது பங்குதாரர்களுக்கும் தாபனத்திற்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை அடையாளங்கண்டுள்ளது.பணிப்பாளரின் கருத்துப்படி, கூட்டுத் தாபனத்தைக் கட்டுப்படுத்துகின்ற இறுதிப் பிரதானி இலங்கை அரசாங்கமாகும். கூட்டுத் தாபனத்தின் செயற்பாடுகளை முகாமை செய்வதற்காக கூட்டுத் தாபனமானது,பெற்றோலிய அபிவிருத்தி வளங்கள் அமைச்சு,திறைசேரி மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றுடன் நெருக்கமாகப் பழகுகின்றது.மேலும் கூட்டுத் தாபனமானது விரிவான நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இந் நிறுவனங்களிலிருந்து அலோசனை மற்றும் வழிகாட்டலை நாடுகின்றது.அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளக்கூடிய பிரதான நபர் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் ஆவதோடு அத்தகைய தொடர்பாடல்களானவை வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் இடம் பெறும். இ.பெ.கூ தாபனமானது அரசாங்கத்திற்கு சிறப்பாக இயலுமான முறையில் தேவையான சட்ட ரீதியான மற்றும் ஏனைய உரிய எல்லாத் தகவல்களையும் வழங்குகின்றது.

**உள்ளகக் கட்டுப்பாடுகள்**

கூட்டுத்தாபனமானது சுமூகமாகத் தொழிற்படுவதற்கு வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று அவசியமாகும்.இம் முறைமையானது கூட்டுத் தாபனத்தின் சொத்துக்களைப் பாத்துகாப்பதனையும் முறையான பதிவுகள் பேணப்பட்டுள்ளது எனவும் உண்மையான தகவல்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டுள்ளது. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது இடர் முகாமைத்துவத்துடன் கூடிய நிதி,செயற்பாடு மற்றும் இணக்கக் கட்டுப்பாட்டு முறைகளை உள்ளடக்கியுள்ளது. நடைமுறையில், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது , கொள்கைகள் மற்றும் வணிக நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு இடரை நீக்குவதை விட ஏற்றுக் கொள்ளத்தக்க இடர் அறிக்கையினுள் இ.பெ.கூ தாபனத்தின் பிரதான இடர் பரப்புக்களை முகாமை செய்கின்றது.அதன்படி , உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் மூலம் நிதி நடவடிக்கைகள் அல்லது திருட்டு செயற்பாடுகளுக்கு எதிராகவும் நிதித்தகவல் ,பதிவுகள் மற்றும் முகாமைத்துவத்தின் தவறான கூற்றுக்களுக்கு எதிராக நியாயமான உறுதிப்பாடுகளை வழங்க முடியுமே தவிர முழுமையாக உறுதியளிக்க முடியாது.

கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது, எல்லா உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள், அவற்றின் நிறைவு மற்றும் வினைத்திறன் ஆகியவற்றை மதிப்பீடு செய்து உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் விருத்திற்கு பரிந்துரைகளைச் செய்வதற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது

**உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது தொழில் ரீதியாகத் தகுதி வாய்ந்த பட்டயக் கணக்காளர்களினால் நடாத்தப்படுகின்றது.உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை மதிப்பீடு செய்வதற்கும், இடர் பரப்புக்களை அடையாளங் காண்பதற்கும் கொடுக்கல் வாங்கல்களின் முழுமைத் தன்மையினை உறுதி செய்து கொள்வதற்கும் கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. மேலதிகமாக முகாமைத்துவத்திற்கு அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதனை நோக்காகக் கொண்டு விசேட புலனாய்வுகளை மேற்கொள்வதற்கு அவர்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ளார்கள். உற்பத்தி நட்டம் மற்றும் வருமான நட்டம் ஆகிய பரப்புக்களுடன் தொடர்பான இடர்களை அடையாளங்காணல்,உண்மையாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளுடனான கணக்காய்வுத் திட்டங்களின் கால அடிப்படையிலான மீளாய்வுகள் மற்றும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதிலுடன் கணக்காய்வுச் அதிபதியின் அறிக்கை பற்றிய கலந்துரையாடல்கள் என்பன உள்ளக கணக்காய்வினால் புரியப்படும் ஏனைய பணிகளாகும்.

**கூட்டு முகாமைத்துவம்**

தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர்,உருவாக்கப்பட்ட கொள்கைகள்,செயல்நுணுக்கப் பணிப்புரைகள் மற்றும் காலத்துக்குக் காலம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் தினசரி நடவடிக்கைகளை முகாமை செய்கின்றார்.இ.பெ.கூ தாபனத்தின் தொழிற்பாடுகள் மற்றும் பிரதான நிர்வாகம் ஆகிய இரண்டையும் சுத்திகரிப்பு தொழிற்பாடுகள், பிராந்திய அலுலகங்களை உள்ளடக்கிய பிரதான அலுவலகத் தொழிற்பாடுகள் என இரு பரந்த பரப்புக்களாகப் பாகுபடுத்தலாம்.

சுத்திகரிப்பு தொழிற்பாடானது, இலத்திரனியல் மற்றும் உபகரணங்கள், உற்பத்திகள் மற்றும்

தொழிற்பாடுகள், பராமரிப்பு மற்றும் கருத்திட்டங்கள் அத்துடன் தொழிநுட்ப சேவைகள் போன்ற பல்வேறு பிரதான பரப்புக்களில்உதவி சுத்திகரிப்பு முகாமையாளர்களினால் உதவிசெய்யப்படுகின்ற சுத்திகரிப்பு முகாமையாளரினால் தலைமை தாங்கப்படுகின்றது.

தலைமைக் காரியாலயமானது சிறந்த முகமைத்துவத்திற்காக பல்வேறு தொழிற்பாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அத் தொழிற்பாடுகள் ஒவ்வொன்றும் கூட்டுத தாபனத்தின் நாளாந்த தொழிற்பாட்டின் போது தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளருக்கு உதவி செய்கின்ற பிரதி பொது முகாமையாளரினால் அல்லது முகாமையாளரினால் தலைமை தாங்கப்படுகின்னறது. கூட்டுத் தாபன முகாமையாளர்கள் முறையே அவர்களது தொழிற்பாட்டுத் துறைகளுக்கு ஏற்ப திறமை,அனுபவம் மற்றும் கல்விப் பட்டங்களுடன் தகுதியைப் பெற்று இருக்கின்றனர். இவ் அறிக்கையின் 10,11 ஆம் பக்கங்களில் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் தகைமைகளைக் கோடிட்டுக் காட்டுகின்ற சுருக்கமான வாழ்க்கை வரலாறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இணக்கம் மற்றும் வெளிப்படைத் தன்மை

இணக்கத்துடன் பிரயோகப்படுத்தக் கூடிய சட்டவாக்கம்,ஒழுங்குவிதிகள்,நியமங்கள்,சிறந்த நடவடிக்கைகள் மற்றும் குறியீடுகள், அனைத்தும் கூ;ட்டுத் தாபனத்தின் வெற்றிக்கும் நிலைத்திருக்கும் தன்மைக்கும் உள்ளார்ந்ததாகும்.இபெ.கூ தாபனத்தின் ஆளுகையானது,இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கூட்டுத் தாபன ஆளுகை மீதான சிறந்த நடத்தைத் தொகுப்பு விதிகளில் அச்சிடப்பட்ட வழிகாட்டல்கள்,2003 இல் பொது தொழிற் துறைத் திணைக்களம் -நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட கூட்டுத் தாபன ஆளுகைக்கான பொது தொழில் முயற்சி வழிகாட்டல்கள் மூலம் கட்டமைக்கப்பட்டுள்ளது.பணிப்பாளர் சபையானது வலுவான கூட்டுத் தாபன ஆளுகை நடவடிக்கைகளை பாதுகாப்பதற்கு அத் தேவைப்பாடுகளுடன் இணங்க பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

இ.பெ.கூ தாபனமானது அதன் எல்லா செயற்பாடுகளின் போதும் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.கூட்டுத் தாபனமானது பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை கணக்காளர் தரநியமங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளுக்கு உடன்படுகின்றது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு ஏற்ப ,உள்ளகக் கட்டுப்பாட்டு முறையானது கூட்டுத் தாபனத்தின் அன்றாடதொழிற்பாடுகளுடன்ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.நிதிக்கூற்றுக்கள்வருடாந்தம்வெளியிடப்படுவதோடுபாராளுமன்றத்தில்அட்டவணைப்படுத்தப்படுகின்றது. நிதிச் சட்டத்திற்கு இணங்க,கூட்டுத் தாபனத்தின்வெளியகக்கணக்காய்வானதுகணக்காய்வாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

இ.பெ.கூ தாபனத்தின் கணக்காய்வுக் குழுவானது பணிப்பாளர் சபையின் உப குழுவாகும்.இது நிதி அறிக்கையிடல் மற்றும் இடர் முகாமைத்துவ நடவடிக்கை ஆகியவற்றின் சுயாதீன மதிப்பீட்டை வழங்குவதோடு அதன் கடமைகளை மேற்பார்வை செய்வதனை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதில் சபையை உறுதிப்படுத்துகின்றது.உரிய தகைமைகளையும் அனுபவங்களையும் கொண்ட நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள் கணக்காய்வுக் குழுவிற்கு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டதோடு அது பணிப்பாளர் சபைக்கு பொறுப்புடையதாகும்.

### கணக்காய்வுக் குழுவின் பிரதான கடமைகள்

குழுவின் கணக்காய்வுச் சாசனமானது பொது வர்த்தக தொழில் முயற்சிகளில் கணக்காய்வுக் குழுக்களை நடாத்துவதுடன் தொடர்புடைய திறைசேரி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட கடமைகள்,அதிகாரங்கள் மற்றும் குறிப்பிட்ட கடமைகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது.

பின்வருவன கணக்காய்வுக் குழுவின் பிரதான கடமைகள் ஆகும்.;

- உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் நிறைவு,நேரம் மற்றும் இருப்பை மீள்பரிசீலனை செய்தல்.
- வணிக செயற்பாடுகளில் உள்ள இணக்கப்பாடுகளை மேற்பார்வை செய்தல்.
- நிதி அறிக்கையிடல் முறையில் உள்ள வெளிப்பாட்டின் நிறைவை உறுதி செய்வதற்காக நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.
- இலங்கை கணக்கீட்டு தரநியமங்களை உள்ளடக்கிய நிதி அறிக்கையிடல் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் நிலைத் தன்மையை உறுதிப்படுத்தல்..
- கூட்டுத் தாபனம் முகங் கொடுக்கும் இடர், அவ் இடர்களை மட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் வினைத் திறனை மீளாய்வு செய்தல்.
- குறிப்பிட்ட வருடத்திற்கான கணக்காய்வுத் திட்டத்தினை கலந்துரையாடுவதும் அங்கீகரித்தலும்.

### கணக்காய்வுக் குழுக் கூட்டங்களும் தொகுப்பும்

கணக்காய்வுக் குழுக் கூட்டங்களானவை முறையான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் நடாத்தப்படுவதோடு,கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் சிரேஷ்ட முகமையாளரினால் அது தொடர்பான விரிவான பின்னணித் தகவல்கள் வழங்கப்படுகின்றன.பிரதிப் பொதி முகாமையாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் தெளிவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக அழைப்பின் பேரில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுகின்றனர்.

மீளாய்வின் கீழ், குறித்த வருடத்தில் நான்கு கணக்காய்வுக் கூட்டங்கள் இடம் பெற்றது. கூட்டங்களின் போதான உறுப்பினர்களின் தொகுப்பு மற்றும் வருகை என்பன பின்வருமாறு;

| குழு உறுப்பினர் | திரு. கே.ஏ.விமலேந்திரராஜா | திருபி.கல்ஹேன. | திருஆர்.ஹரிஸ்சந். | திருஎஸ்பெர்னான்டோ. | குழுவலிமை |
|---|---|---|---|---|---|
| 21/03/2016 | √ | √ | E | NA | 2/3 |
| 22/06/2016 | √ | E | √ | NA | 2/3 |
| 26/09/2016 | √ | √ | √ | E | 3/4 |
| 27/12/2016 | √ | √ | √ | √ | 4/4 |
| கூட்டங்களின் எண்: 4 | 4/4 | 3/4 | 3/4 | 1/2 | |

√ - வருகை தந்தோர் E – விலக்கப்பட்டோர் NA – நியமிக்கப்படவில்லை

திரு.கே.ஏ. விமலேந்திரராஜா அவர்கள் கணக்காய்வுக் குழுவின் தலைவராவார். 7-10 வரையான பக்கங்களில் கணக்காய்வுக் குழு உறுப்பினர்களின் சுய விபரங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. அவர்கள் தமது கடமைகளை மேற் கொள்ளும் போது வியாபார விவேகம்,நிதி, சட்டம் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவை மீதான அவர்களது தனிப்பட்ட மற்றும் கூட்டு அறிவு ஆகியவை ஒன்றாகக் கலந்திருந்தன.

**இவ்வாண்டில் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்**

மீளாய்வின் கீழ் இவ் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய கடமைகள் பின்வருமாறு

- முகாமைத்துவம், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுடன் இணைந்து உள்ளக கட்டுப்பாட்டு முறைமை பற்றி போதியளவு மீளாய்வு செய்யப்பட்டது.
- வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கையும் அதன்மீதான குறிப்புக்களும் கலந்துரையாடப்பட்டன
- கூட்டுத்தாபனத்தினால் முகங்கொடுக்கப்பட்ட முக்கிய செயல்நுணுக்க பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டது
- 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டது

**உள்ளக கணக்காய்வு**

கணக்காய்வுக் குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது உள்ளக கணக்காய்வினால் செயற்படுத்தப்படுகிறது

- உள்ளக கட்டுப்பாடுகளை மதிப்பீடு செய்தல்
- ஆபத்தான பகுதிகளை அடையாளங்காணல்
- கொடுக்கல்வாங்கல்களின் துல்லியத்தன்மை மற்றும் முழுமைத்தன்மையினை சரிபார்த்தல்
- முகாமைத்துவத்திற்கு பல்வேறு முக்கிய விடயங்கள் பற்றி அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கு சிறப்பு விசாரணைகளை மேற்கொள்ளுதல்
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை கலந்துரையாடல் மற்றும் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்
- வருடாந்த கணக்காய்வுத் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பணி செயலாற்றுகை என்பவற்றை அவ்வப்போதுமீளாய்வு செய்தல்.

கணக்காய்வு செயன்முறையின் போது அடையாளங்காணப்பட்ட விடயங்கள் பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் கணக்காய்வு ஐயவினாக்களை எழுப்புவதன் மூலம் முதன்மைப்படுத்திக்காட்டப்பட்டுள்ளன.

**இவ்வாண்டில் உள்ளக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய சுருக்கம்**

மீளாய்வின் கீழ் இவ்வாண்டில் குழுவானது அதன் செயற்பாடுகளை பின்வருமாறு நிறைவேற்றியது.

- 2015 டிசம்பர் 31 முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் கலந்துரையாடப்பட்டன.
- உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை நுணுக்கமாக மீளாய்வு செய்ததுடன், உரிய தரப்பினருக்கு பலவீனங்கள் தெரிவிக்கப்பட்டது
- கணக்காய்வுக் குழுவுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கலந்துரையாடப்பட்டன.
- நிதிக் கூற்றுக்களின் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை கலந்துரையாடப்பட்டது.
- அம்பாந்தோட்டையிலுள்ள எரிபொருள் எண்ணை பரிமாற்றங்கள் கண்காணிக்கப்பட்டன..
- முன் கணக்காய்வு செயற்பாடுகளில் ஈடுபட்டமை
- கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களை ஒழுங்கு செய்தல்

**முடிவுரை**

கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையானது கூட்டுத்தாபனத்தின் முயற்சிகள் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடன் .இணங்கும் வகையில் ஒரு நியாயமான உறுதியை கொடுக்கிற போதிலும் இது கணக்காய்வுக் குழு பரிந்துரைத்த சில பிரச்சகனைகளை கையாளக் கூடிய உள்ளக செவ்வைகளையும் மீதிகளையும் உள்ளடக்க கூடிய அளவீடுகளை எடுக்க வேண்டும் என்பதே கணக்காய்வுக் குழுவின் கருத்தாகும்.



கே.ஏ.விமலேந்திரராஜா
தலைவர்- கணக்காய்வுக்குழு
கொழும்பு
திகதி 11.05.2018

# பணிப்பாளர்களின் அறிக்கை

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 32(3) ஆம் பிரிவுக்கு அமைவாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களுடனும், மற்றும் அதன் குழுவினருடனும் சேர்ந்து ஆண்டறிக்கையினை முன்வைப்பதில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது. இவ் அறிக்கைக்குபணிப்பாளர் சபையினால் 11.05.2018 அன்று அங்கீகாரமளிக்கப்பட்டது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது, 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரசாங்கத்திற்கு உரித்தான ஒரு தொழில் முயற்சியாகும். இது பணிப்பாளர் சபையினால் நிருவகிக்கப்படுகிறது.

கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது, இல. 609, கலாநிதி டானிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09 என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

இவ் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாகவும், அத்துடன் 1971 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க நிதிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் மற்றும் அதற்குப் பின்னரான திருத்தங்களுக்கு இணங்கவும் இயைபுடைய வெளிப்படுத்தல்களுடன் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன.

### நோக்கு, செயற்பணி, மற்றும் நிறுவன இலக்குகள்

கூட்டுத்தாபனத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நிறுவன இலக்குகள் என்பன இவ் ஆண்டறிக்கையின் 5 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் நோக்கினையும், செயற்பணியினையும் அடைவதில் பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் உயர் மட்டத்திலான ஒழுக்க நியமங்கள் மற்றும் ஒருமைப்பாட்டிற்கிணங்க தமது செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

### பிரதான செயற்பாடுகள்

இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை இறக்கமதி செய்தல், சுத்திகரித்தல், மற்றும்விற்பனை செய்தல் என்பன கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகளாகும். கூட்டுத்தாபனமானது அதன் பெற்றோலிய உற்பத்திகள் சிலவற்றை ஏற்றுமதியும் செய்கின்றது.

### துணைக் கம்பனி

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது, 2/3 பங்கு உரிமையுடன் ஒரேயொரு துணைக் கம்பனியாக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் (CPSTL) காணப்படுகின்றது.எரிபொருள் சேமிப்பு ஏற்பாடு, விநியோக வசதிகள் மற்றும் தகவல் தொழிநுட்ப சேவை ஏற்பாடுகள் ஆகியவை CPSTL இன் பிரதான செயற்பாடுகளாகும்.

### ஆண்டின் செயலாற்றுகை பற்றிய மீளாய்வு

2016 நிதி ஆண்டு காலத்தில் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள் பற்றிய மீளாய்வும், அத்தொழிற்பாடுகளின் பெறுபேறுகளும் பக்கம் 12 தொடக்கம் 14 வரை தவிசாளரின் மீளாய்விலும் பக்கம் 20 தொடக்கம் 27 வரை கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ் அறிக்கைகள், ஆண்டறிக்கையின் ஒருங்கிணைந்தபாகமொன்றினை தோற்றுவிக்கின்றன.

### கூட்டுத்தாபனத்தினதும் குழுவினதும் நிதிக் கூற்றுக்கள்

2016 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் குழுவினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பதில் பிரதி முகாமையாளர் (நிதி), நிதி முகாமையாளர் ஆகியோரினால் கைச்சாத்திடப்பட்டு, பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 52 தொடக்கம 90 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளதுடன்,

ஆண்டறிக்கையினை முழுமையாக்கும் பாகமொன்றினைத் தோற்றுவிக்கின்றது.

**நிதி அறிக்கையிடுதலுக்கான பணிப்பாளர்களது பொறுப்பு**

கூட்டுத்தாபனத்தினதும், குழுவினதும் விவகாரங்களின் நிலை பற்றி உண்மையானதும் நியாயமானதுமான நோக்கொன்றினைப் பிரதிபலிக்கின்ற குழுவினதும் கூட்டுத்தாபனத்தினதும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது பணிப்பாளர சபையின் பொறுப்பாகும். விரிவான வருமானக் கூற்று, நிதிநிலைக கூற்று, பங்கு மூலதனமாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் 52 தொடக்கம் 90 ஆம் பக்கங்களில் தோன்றுகின்ற முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் அத்துடன் அவற்றுக்கான குறிப்புக்கள் என்பன 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களினாலும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினாலும் பணிக்கப்பட்டுள்ளவாறு இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளுடன் ஒத்திசைந்து காணப்படுகின்றன.

**கணக்காய்வாளரின் அறிக்கை**

கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளரான, கணக்காய்வாளர் நாயகம் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவுற்ற ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களையும் அதே போன்று திரட்டிய நிதிக் கூற்றுக்களையும் கணக்காய்வு செய்து, அதில் வழங்கப்பட்டகணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தின் 31 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு 91 தொடக்கம் 141 ஆம் பக்கங்கள் வரை தரப்பட்டுள்ளது.

**இவ்வாண்டின் போது முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும் மாற்றங்களும்**

மீளாய்வுக்குட்படும் ஆண்டின்போது, “நிதிக் கூற்றுக்களை எடுத்துரைத்தல்” மீதான 1ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமத்தினால் வேண்டப்பட்டவாறு முன்னைய நிதியாண்டில் பின்பற்றப்பட்டவற்றுடன் இசைந்திருந்த பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவும் காணப்பட்டிருக்கவில்லை. குழுவினதும் கூட்டுத்தாபனத்தினதும் நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்புகளுடன் சேர்த்து 56 தொடக்கம் 90 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

**நிதிப்பெறுபேறுகள்**

| | 2016<br>ரூபா. பில் | 2015<br>ரூபா. பில் |
|---|---|---|
| **வருவாய்** | **475.05** | **414.50** |
| குறைவு : விற்பனை வரிகள்(உற்பததி வரி & தே.நி.வ) | (51.99) | (37.77) |
| **தேறிய விற்பனை வருவாய்** | **423.06** | **376.73** |
| மொத்த இலாபம் | (260.44) | (283.48) |
| கழிக்குக : இறக்குமதி வரிகள் (சுங்க இறக்குமதி தீர்வை மற்றும் து.வி.அ) | (66.00) | (53.64) |
| **மொத்த இலாபம்** | **96.62** | **39.61** |
| ஏனைய தொழிற்படு வருமானம் | 0.61 | 0.37 |
| மண்ணெண்ணெய் மானியம் | 2.98 | 3.86 |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | (14.41) | (13.40) |
| நிர்வாகச் செலவுகள் | (4.38) | (3.59) |
| வருமான தலைப்புச் செலவுகள் | - | (3.86) |
| நிதிக் கட்டணங்கள் | (11.40) | (15.05) |
| நிதி வருமானம் | 8.37 | 5.01 |
| நாணய மாற்று வேறுபாடு | (8.83) | (32.84) |
| **வரிக்கு முந்திய இலாபம் /(நட்டம்)** | **69.55** | **(19.89)** |

## வருவாயும் இலாபமும்

மேற்படி அட்டவணையானது, 2016 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் நிதிப் பெறுபேறுகளின் சாராம்சத்தை ஒப்பீட்டுத் தொகைகளில் எடுத்துக்காட்டுகின்றது.

2016 இற்கான தனித்தனிதுறைசார் நட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| துறை | 2016 ரூபா. பில் | நட்டத்திற்கான காரணம் |
|---|---|---|
| போக்குவரத்து 92 ஒக்டேன் பெற்றோல் | 8.27 | • மானிய சில்லறை விலை<br>• சுங்க வரி , மதுவரி மற்றும் பிஏஎல் அதிகரிப்பு<br>• ஐ.அ.டொ. எதிராக இலங்கை ரூ பா. பெறுமதி இறக்கம்<br>• சர்வதேசஎண்ணெய்சந்தையில்பெட்ரோலியம் பொருட்களின்விலையில்உயர்வானநிலை |
| 95 ஒக்டேன் பெற்றோல் | 1.29 | |
| வீட்டுத்துறைமண்ணெண்ணை | 2.98 | • மானிய சில்லறை விலை |
| விவசாயம் விவசாய இரசாயனங்கள் | 0.9 | • உயர் பதவியணியினரின் செலவு<br>• நாட்டின்விவசாய துறையில் உற்பத்திச்செலவுகளை குறைந்த மட்டத்தில் பேணும் நோக்குடன் சில்லறைவிலை நியாய விலையாகக் காணப்படுகின்றன. |
| கப்பல் எரிபொருள் எண்ணெய் | 0.68 | • எரிபொருள் விற்பனை நட்டத்தில் |
| ஏற்றுமதி 800 படிக எண்ணெய் | 0.73<br>1.58 | • உள்நாட்டில் கேள்வி குறைந்தமையினால் களஞ்சிய போதாமையினால் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்வதற்குக் கூட்டுத்தாபனம் நிர்ப்பந்திக்கப்பட்டது. |

### வரி விதிப்பு

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய, மொத்த இலாபத்தில் 25 சதவீதமானது அரசாங்கத்திற்கு பங்கிலாபமாக வழங்கப்பட்டதனால், 2011/12 வரியாண்டிலிருந்து ஆரம்பிக்கின்ற 5 வருட காலத்திற்கும் இலாபங்கள் மற்றும் வருமானம் என்பவற்றின் மீது வருமான வரி செலுத்துவதிலிருந்து கூட்டுத்தாபனம் விலக்களிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், 2016 இலிருந்து தகுதிவாய்ந்த ஏற்றுமதிகள் மீது 12 %, வரிவிதிக்கத்தக்க வருமான மீதித்தொகை மீது 28 % மற்றும் பகிர்ந்தளிக்கத்தக்க இலாபங்கள் மீது 25% ஆகிய வருமான வரிகளை செலுத்த கூட்டுத்தாபனம் பொறுப்புடையதாகவுள்ளது..

### விசேட கட்டணம்

2014ஆம் ஆண்டின்போது, விசேட கட்டணம் ஒன்றாக ரூபா. 10 பில்லியனைக் கொடுப்பனவு செய்வதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை திறைசேரி அறிவுறுத்தியதுடன், 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா. 250 மில்லியன், 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா. 750 மில்லியன் மற்றும் 2016 தொடக்கம் 2024 வரையான காலப்பகுதிக்கு ரூபா.1000 மில்லியன் செலவொன்றாக வருமான கூற்றுக் கட்டணமாக அறவிடுவதற்கும் கோரியுள்ளது.

### ஆதனம்,பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

கூட்டுத்தாபனத்தின் ஆதனம்,பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் பற்றிய விவரங்களும் அவற்றின் குழுவும் 71 ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு 08 இல் தரப்பட்டுள்ளன.

### பங்களிக்கப்பட்ட மூலதனம்

2016 டிசம்பர் 31 இல் கூட்டுத்தாபனத்தின் மொத்த பங்களிக்கப்பட்ட மூலதனம் ரூபா. 28,487 மில்லியனாக இருந்தது. பங்களிக்கப்பட்ட மூலதனத்தின் விபரங்களானவை 76 ஆம் பக்க நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு 16 இல் தரப்பட்டுள்ளன.

### ஒதுக்குகள்

கூட்டுத்தாபனத்தின் ஒதுக்குகள் பற்றிய சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

| | 2016<br>ரூபா. பில் | 2015<br>ரூபா. பில் |
|---|---|---|
| மூலதன ஒதுக்கு | 4.99 | 4.99 |
| நிலையான உழைப்பு | (219.33) | (262.46) |

பங்கு மூலதன அசைவுகள் 55ஆம் பக்கத்தில் பங்கு மூலதன மாற்றக் கூற்றில் தரப்பட்டுள்ளன.

## பணிப்பாளர்கள்

2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையிலிருந்த பணிப்பாளர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பணிப்பாளரின் பெயர் | நிறைவேற்று/ நிறைவேற்று அல்லாத நிலை |
|---|---|
| ரீ. ஜி ஜயசிங்ஹ ( தலைவர் & முகாமைத்த்வப் பணிப்பாளர் ) | நிறைவேற்றுப்பணிப்பாளர் |
| டி சீ எஸ் செனவிரத்ன | நிறைவேற்று அல்லா பணிப்பாளர் |
| எம் ஜி ஜயசேன | நிறைவேற்று அல்லா பணிப்பாளர் |
| பீ கல்ஹேன | நிறைவேற்று அல்லா பணிப்பாளர் |
| ஆர் ஹரிஸ்சந்திர | நிறைவேற்று அல்லா பணிப்பாளர் |
| கே ஏ விமலேந்திரராஜா | நிறைவேற்று அல்லா பணிப்பாளர் |
| எஸ். பெர்னான்டோ | நிறைவேற்று அல்லா பணிப்பாளர் |

தற்போதுபதவிவகிக்கும்பணிப்பாளர்களின்பெயர்கள் பின்வருமாறு;

| பணிப்பாளரின் பெயர் | நிறைவேற்று/ நிறைவேற்றுஅல்லாதநிலை |
|---|---|
| டி ரணதுங்க (தலைவர்) | நிறைவேற்று பணிப்பாளர் |
| என். ஆர். ஆர். ஜயசேகர முகாமைத்த்வப் பணிப்பாளர் | நிறைவேற்று பணிப்பாளர் |
| கே ஏ விமலேந்திரராஜா | நிறைவேற்று அல்லா பணிப்பாளர் |
| ஆர் ஏ என் ஜயசுந்தர | நிறைவேற்று அல்லா பணிப்பாளர் |
| எஸ் தனதுங்க | நிறைவேற்று அல்லா பணிப்பாளர் |
| டபிள்யூ எஸ் பெரேரா | நிறைவேற்று அல்லா பணிப்பாளர் |
| ஏ எஸ் ஹேரத் | நிறைவேற்று அல்லா பணிப்பாளர் |

### பணிப்பாளர்களது கூட்டங்கள்

சபைக் கூட்டங்களையும், கணக்காய்வுக் கூட்டங்களையும் உள்ளடக்குகின்ற பணிப்பாளர்களின் கூட்டங்கள் பற்றிய விபரம் 37 தொடக்கம் 42 ஆம் பக்கங்கள் வரை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டின்போது நடைபெற்ற கூட்டங்களுக்கான பணிப்பாளர்களது வருகை ஆண்டறிக்கையில் 38 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### பணிப்பாளர்களின் ஊதியம்

இவ்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட பணிப்பாளர்களது வேதனங்கள் பின்வருமாறு

| | 2016<br>ரூபா. மில் | 2015<br>ரூபா. மில் |
|---|---|---|
| பணிப்பாளர்களின் வேதனாதிகள் | 1.76 | 2.49 |

### ஒப்பந்தங்களில் பணிப்பாளர்பளின் நலன்கள்

கூட்டுத்தாபனத்துடன் நேரடியான மற்றும் மறைமுகமான ஒபந்தங்களில் பணிப்பாளர்களது நலன்கள் 89 ஆம் பக்கத்தில் நிதிக்கூற்றுக்களுக்கான 29 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### இடர் முகாமைத்துவமும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும்

இடர்களை முகாமை செய்வதற்கான ஒட்டு மொத்த பொறுப்பினையும் பணிப்பாளர் சபை பொறுப்பேற்கின்றது. இந்நோக்கத்திற்காக, கூட்டுத்தாபனத்தில் பயனுறுதி மிக்க அனைத்தையும் உள்ளடக்கிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினைப் பணிப்பாளர் சபை நிறுவியுள்ளது. இடர்களை முகாமை செய்வதில் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட நடவடிக்கைகள் இடர் முகாமைத்துவ அறிக்கையின் 30 தொடக்கம் 36 வரையான பக்கங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

### நிறுவன ஆளுகை

### பணிப்பாளர்களின் பிரகடனங்கள்

பணிப்பாளர் சபை பின்வருமாறு பிரகடனம் செய்கின்றது

(அ) கூட்டுத்தாபனம் அதன் தொழிற்பாட்டினை நடாத்துவதில் ஏற்புடைய சகல சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதுடன் குறித்த சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் முரண்படுகின்ற எவ்வித செயற்பாட்டிலும் ஈடுபட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களிலுள்ள சகல விடய நலன்களையும் பணிப்பாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

(ஈ) ஆதரவளிக்கும் உகங்களுடன் வர்த்தகம் தொடர்ந்தியங்கும் நிலையில் உள்ளதுடன், பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தின் நிறுவன/ வியாபாரத் திட்டங்களை மீளாய்வ செய்து கூட்டுத்தாபனம் எதிர்காலத்தில் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு போதிய மூலவளங்களை கொண்டுள்ளது என திருப்தியடைகின்றது. அதற்கமைய, கூட்டுத்தாபனத்தினதும்அதன் குழுக்களினதும் நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன்,

(உ)நிதியியில்,தொழிற்பாடுகள் மற்றும் ஒத்திசைவுக் கட்டுப்பாடுகள் அத்துடன் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளகக் கட்டுப்பாடுகள் பற்றிய மீளாய்வொன்றை பணிப்பாளர்கள் மேற்கொண்டு, அவற்றின் பயனுறுதித் தன்மை மற்றும் வெற்றிகரமாக கடைப்பிடித்தல் பற்றிய நியாயமான உத்தரவாதமொன்றினைப் பெற்றுள்ளனர்.

நிறுவன ஆளுகை விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்குவதிலுள்ள நடைமுறைகள் மற்றும் செயற்பாங்குகள் என்பன நிறுவன ஆளுகை அறிக்கையின் 37 தொடக்கம் 42 வரையான பக்கங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

**மனித வளங்கள்**

கூட்டுத்தாபனத்தின் வர்த்தக செயற்பணி தூரநோக்கம் ஆகியவற்றை மெய்ப்பிப்பதில் மனிதவளங்களின் பெறுமதி வாய்ந்த வகிபாகத்தினைக் கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதற்கமைய, நிறுவன இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதில் மனித வள மூலதனத்தை அதிகரிப்பதற்கும், அவர்களின் பங்களிப்பினை உச்சப்படுத்துவதற்கும், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி ஊடாக தமது அறிவினையும் திறன்களையும் தொடர்ச்சியாகத் தரமுயர்த்துவதற்கு அனைத்து வகுப்பிலுள்ள ஊழியர் வகுப்புக்களுக்கும் போதிய வாய்ப்புகளை வழங்குவதன் மீது எமது மனிதவள கொள்கை வலியுறுத்துகின்றது. அதன் மனித வளங்களுள் உயர்மட்ட தொழிநுட்ப மற்றும் நிர்வாக திறமை கிடைப்பதனை உறுதி செய்வதற்கு மனிதவள மூலதன அபிவிருத்தியானது கூட்டுத்தாபனத்தின் முன்னுரிமை அளிக்கப்பட்ட குறிக்கோளாக தோற்றம் பெற்றுள்ளது.

**நிலுவையிலுள்ள வழக்காடல்கள்**

பணிப்பாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தரணிகளின் அபிப்பிராயத்தின் படி நிதிக் கூற்றுக்களின் 26 ஆம் குறிப்பின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்திற்கு எதிரான நிலுவையிலுள்ள வழக்காடல்கள் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையில் அல்லது அதன் எதிர்காலத் தொழிற்பாடுகளில் முக்கிய தாக்கத்தினைக் கொண்டிருக்காது.

**சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்குதல்**

கூட்டுத்தாபனமானது, ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு முரணானஎந்தவொரு செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை.

**சுற்றாடல் பாதுகாப்பு**

கூட்டுத்தாபனமானது இயைபுடைய சுற்றாடல் சம்பந்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கியொழுகுவதற்காக அதன் சிறந்த முயற்சிகளை பயன்படுத்தியுள்ளது.

**நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்**

இயைபுடைய ஒழுங்குபடுத்தல் மற்றும் நியதிச்சட்ட அதிகாரிகள் அனைவரினதும் ஒத்துழைப்புக் காரணமாக சகல நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் உரிய காலத்தில்கிடைக்கக்கூடிய நிதி ஆற்றல்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பணிப்பாளர்கள் தமது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், திருப்தியடைகின்றனர்.

**நிதிநிலைக் கூற்று திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்**

85 ஆம் பக்கத்தில்நிதிக் கூற்றுக்களின் 28 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, நிதிநிலைக் கூற்றுகளில் சீராக்கல்களை வேண்டுகின்ற முக்கிய நிகழ்வெதுவும் நிதிநிலைக் கூற்றுத் திகதிக்கு பின்னர் நிகழவில்லை.

**தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு**

பணிப்பாளர்கள் சபை, எதிர்காலத்திற்கான வர்த்தக ரீதியான நிலைத்திருத்தல் தன்மையின்

வலுவூட்டலினை உறுதி செய்யும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் எதிர்கால வாய்ப்புக்களை மேம்படுத்தும் நோக்குடன் நிறுவன வியாபாரத் திட்டத்தை தயாரித்துள்ளது.அதற்கமைய, நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும்எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

**கணக்காய்வாளர்களின் நியமனம்**

கணக்காய்வாளர் அதிபதி கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளராவார். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 154 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய அவர் நியமிக்கப்பட்டுள்ளார். 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கூட்டுத்தாபனச் சட்டத்தின் 31 ஆம் பிரிவிற்கமைய கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் ஊதியங்கள் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

**கணக்காய்வாளர்களின் ஊதியங்களும் கூட்டுத்தாபனத்துடனான ஒப்பந்தங்களில் அவர்களது அக்கறையும்**

கூட்டுத்தாபனத்தினால், 2016 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்காக கணக்காய்வுக் கட்டணங்களாக ரூபா 2.11 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் அறிந்த வரையில், கூட்டுத்தாபனத்துடனான அல்லது அதன் துணைக் கம்பனியுடனான ஒப்பந்தங்களில் கணக்காய்வாளர்கள் வேறு ஏதேனும் தொடர்பினை அல்லது அக்கறையினைக் கொண்டிருக்கவில்லை.

**அறிக்கையின் உள்ளடக்கங்களை ஏற்றுக் கொள்ளல்**

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32(3) ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு இவ் ஆண்டறிக்கையின் உள்ளடக்கங்களை பணிப்பாளர் சபை இத்தால் ஏற்றுக் கொள்கின்றது.

பணிப்பாளர் சபைக்காகவும் சார்பாகவும் இவ் ஆண்டறிக்கை கையொப்பமிடப்படுகின்றது.

டீ. ரணதுங்க
**தலைவர்**
கொழும்பு
திகதி **11.05.2018**

## *நிதியியல் கூற்றுக்கள்*


விரிவான வருமானக் கூற்று ........ 52

நிதிநிலைக் கூற்று ........ 53

*காசுப் பாய்ச்சல் கூற்று* ........ 54

*பங்கு மூலதன மாற்றக் கூற்று* ........ 55

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ........ 56

# விரிவான வருமானக் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | *தறிப்பு* | 2016 ரூபா.மில் | *2015* (மீளக்குறிப் பிடப்பட்டது)* ரூபா.மில் | 2016 ரூபா.மில் | *2015* (மீளக்குறிப் பிடப்பட்டது)* ரூபா.மில் |
|---|---|---|---|---|---|
| வருமானம் | *2* | 423,061.051 | *376,734.487* | 423,443.612 | *377,261.652* |
| விற்பனைச் செலவுகள் | | (326,440.767) | (337,118.644) | (332,651.704) | (343,301.815) |
| **மொத்த இலாபம்** | | **96,620.284** | **39,615.843** | **90,791.908** | **33,959.837** |
| ஏனைய தொழிற்படுத்தல் வருமானம் | *3* | 3,588.439 | 4,233.981 | 3,772.090 | 4,744.234 |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவு | | (14,411.946) | *(13,401.137)* | (2,590.776) | *(2,740.758)* |
| நிருவாகச் செலவுகள் | | (4,383.873) | *(3,591.512)* | (8,448.049) | *(7,169.492)* |
| **தொழிற்படுத்தல் இலாபம்** | *4* | **81,412.904** | **26,857.175** | **83,525.172** | **28,793.821** |
| மாற்று வீத மாறுபாடு | | (8,828.798) | (32,841.590) | (8,828.798) | (32,841.590) |
| நிதி வருமானம் | *5* | 8,374.112 | 5,011.670 | 8,464.482 | 5,037.480 |
| இழப்பு செலவுகள் | | - | (3,864.375) | - | (3,864.375) |
| நிதிச் செலவுகள் | *6* | (11,404.537) | *(15,048.660)* | (11,571.312) | *(15,048.660)* |
| **வரிக்கு முன்னர் இலாபம்/(நட்டம்)** | | **69,553.681** | **(19,885.780)** | **71,589.544** | **(17,923.324)** |
| வரிச் செலவுகள் | *7* | (16,526.602) | *(634.384)* | (17,150.545) | *(921.369)* |
| **ஆண்டிற்குரிய இலாபம்/(நட்டம்)** | | **53,027.081** | **(20,520.164)** | **54,439.000** | **(18,844.693)** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | | | |
| **இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படாத விடயங்கள்** | | | | | |
| ஓய்வு நலத்திட்டம் மீதான மீள் அளவீட்டு இலாபம்/(நட | *18* | 120.866 | *(167.186)* | 364.729 | *(299.648)* |
| ஏனைய விரிவான வருமானம் மீதான வரி | | - | - | (33.409) | |
| **இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு அதனைத் தொடர்ந்து வகைப்படுத்தப்பட்டுள்ள அல்லது வகைப்படக்கூடிய** | | | | | |
| விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதி சொத்துக்கள் மீது | *10.1* | (10.000) | *6.500* | (10.000) | *6.500* |
| **ஆண்டிற்குரிய ஏனைய விரிவான வருமானம் /(செலவு)** | | 110.866 | (160.686) | 321.320 | (293.148) |
| **ஆண்டிற்குரிய மொத்த ஏனைய விரிவான வருமானம்/(செ** | | **53,137.946** | **(20,680.850)** | **54,760.320** | **(19,137.841)** |
| **மொத்த விரிவான வருமானம்** | | | | | |
| நிறுவனம் உரிமையாளர்கள் | | 53,137.946 | (20,680.850) | 54,110.625 | (19,652.177) |
| கட்டுப்பாட்டில் அல்லாத நலன்கள் | | - | - | 649.695 | 514.336 |
| | | **53,137.946** | **(20,680.850)** | **54,760.320** | **(19,137.841)** |

* இங்கு குறிப்படப்பட்டுள்ள சில இலக்கங்கள் 2015 நிதி கூற்றுகளுடன் ஒத்துப்போகவில்லை என்பதோடு, குறிப்பு 25 இல் விரிவாக செய்யப்பட்டுள்ள சரிப்படுத்தல்களையும் பிரதிபலிக்காது

56 தொடக்கம் 90வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகள் நிதியியல் கூற்றுக்களில் ஓர் உள்ளகப் பகுதியை ஏற்படுத்துகின்றன.

# நிதிநிலைக் கூற்று

| டிசம்பர் 31 அன்று உள்ளவாறு | | இ. பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|---|
| | | 2016 | 2015* (மீள் குறிப்பிடப்பட்டது) | 2016 | 2015* (மீள் குறிப்பிடப்பட்டது) |
| | குறிட் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 8 | 13,505.655 | 13,871.821 | 30,305.510 | 30,525.314 |
| முதலீட்டு ஆதனம் | 8.3 | 41.575 | 43.022 | 41.575 | 43.022 |
| புலனாகாச் சொத்துக்கள் | 8.4 | - | - | 7.609 | 17.350 |
| துணை நிறுவனங்களின் முதலீடுகள் | 9 | 5,000.000 | 5,000.000 | - | - |
| நடைமுறையற்ற நிதிச் சொத்துக்கள் | 10 | 35,595.461 | 36,725.282 | 35,595.461 | 36,725.283 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை | 11 | 10,326.708 | 11,675.654 | 10,768.432 | 11,389.949 |
| | | 64,469.399 | 67,315.779 | 76,718.588 | 78,700.918 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | 13 | 35,476.885 | 41,035.111 | 35,888.223 | 41,363.947 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை | 11 | 48,397.974 | 26,859.315 | 52,446.899 | 30,564.156 |
| குறுகிய கால முதலீடுகள் | 14 | 28,065.844 | 12,704.860 | 28,065.844 | 12,704.859 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 15 | 14,579.410 | 51,058.236 | 17,034.827 | 51,806.202 |
| | | 126,520.114 | 131,657.522 | 133,435.793 | 136,439.164 |
| **மொத்த சொத்துக்கள்** | | **190,989.513** | **198,973.301** | **210,154.381** | **215,140.082** |
| **உரிமைகளும் பொறுப்புகளும்** | | | | | |
| **மூலதனமும் ஒதுக்குகளும்** | | | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | 16 | 28,487.125 | 28,487.125 | 28,487.125 | 28,487.125 |
| மூலதன ஒதுக்கு | 17 | 4,992.686 | 4,992.686 | 4,992.686 | 4,992.686 |
| வைத்திருக்கப்படும் வருவாய்கள் | | (219,326.658) | (262,464.604) | (209,094.494) | (253,270.777) |
| கட்டுப்படுத்தப்படாத நலன்கள் | | - | - | 7,616.937 | 7,096.913 |
| **மொத்தப் பங்கு** | | (185,846.847) | (228,984.793) | (167,997.746) | (212,694.053) |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | | | |
| ஓய்வூதிய நலக் கடப்பாடுகள் | 18 | 753.561 | 861.114 | 1,987.632 | 2,414.251 |
| பிற்போடப்பட்ட வரி | 23 | - | - | 1,005.757 | 544.863 |
| கடன்களும் பெறுகைகளும் | 19 | 265.858 | 341.817 | 1,176.909 | 1,740.668 |
| | | 1,019.419 | 1,202.931 | 4,170.298 | 4,699.782 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | |
| வர்த்தகமும் ஏனைய கொடுப்பனவு செய்யத்தக்கவைகளு | 20 | 182,095.327 | 159,171.227 | 179,661.102 | 155,054.462 |
| கடன்கள் மற்றும் பெறுகைகளின் நடைமுறை பகுதி | 19.1 | 37.980 | 361.664 | 525.780 | 857.619 |
| குறுகிய கால பெறுகைகள் | 21 | 193,683.634 | 267,222.272 | 193,794.948 | 267,222.272 |
| | | 375,816.940 | 426,755.163 | 373,981.829 | 423,134.353 |
| **மொத்த பங்கு மூலதனமும் பொறுப்புக்களும்** | | **190,989.513** | **198,973.301** | **210,154.381** | **215,140.082** |

* இங்கு குறிப்படப்பட்டுள்ள சில இலக்கங்கள் 2015 நிதி அறிக்கைகளுடன் ஒத்துப்போகவில்லை, குறிப்பு 25 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்களையும் பிரதிபலிக்காது

56 தொடக்கம் 90வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகள் நிதியியல் கூற்றுக்களில் ஒரு உள்ளகப் பகுதியை ஏற்படுத்துகின்றன
இந் நிதியியல் கூற்றுக்கள் 2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விவகார நிலை மற்றும் முடிவுற்ற ஆண்டுக்கான இலாபம் ஆகியவை பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை தருகின்றன.

வீ.என்.வீரசூர்ய
**பிரதிப் பொது முகாமையாளர்(நிதி)**

எம் சீ டீ பெ ரேரா
நிதி முகாமையாளர்

இந்நிதிக் கூற்றுக்களை தயாரித்து எடுத்துரைப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும்.
சபை சார்பாக அங்கீகரிக்கப்பட்டு, கையொப்பமிடப்பட்டது

தம்மிக்க ரணதுங்க
**தலைவர்**

கே.ஏ.விமலேந்திரராஜா
**பணிப்பாளர்**

# காசுப் பாய்ச்சல் கூற்று

| டிசம்பர் 31 முடிவுற்ற ஆண்டிற்கானது | தறிப்ட | 2016<br>ரூபா.மில் | 2015*<br>(மீளக்குறிப்பிடப்பட்டது)<br>ரூபா.மில் | 2016<br>ரூபா.மில் | 2015*<br>(மீளக்குறிப்பிடப்பட்டது)<br>ரூபா.மில் |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | **24** | 68,415.926 | 24,772.897 | 72,468.682 | 24,916.837 |
| | | | | - | |
| செலுத்தப்பட்ட வட்டி | **6** | (11,404.537) | (15,048.660) | (11,579.468) | (15,048.660) |
| செலுத்தப்பட்ட ஓய்வூதிய பணிக்கொடை | **18** | (122.286) | (68.623) | (234.210) | (167.891) |
| செலுத்தப்பட்ட வருமான வரி/நி.வை.வரி | | (2,357.487) | (409.006) | (2,526.976) | (409.006) |
| **தொழிற்பாடுகளிலிருந்து ஈட்டப்பட்ட (பயன்படுத்தப்பட்டு) தேறிய கா** | | 54,531.617 | 9,246.608 | 58,128.029 | 9,291.280 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் விற்பனை வரவு | | 42.332 | 36.151 | 93.603 | 44.463 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் பெற்றுக்கொள்ள | **8** | (477.658) | (972.115) | (1,391.070) | (1,162.087) |
| முதலீட்டிலிருந்து வருமானம் | | 292.502 | 0.004 | 0.002 | 0.004 |
| கிடைக்கப்பெற்ற வட்டி | **5** | 8,374.112 | 5,011.670 | 8,464.482 | 5,037.480 |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | 1,183.072 | (27,761.865) | 1,183.072 | (27,761.865) |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | (15,424.235) | 300.704 | (15,424.235) | 300.704 |
| | | | | - | |
| **முதலீட்டு செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | (6,009.875) | (23,385.451) | (7,074.146) | (23,541.301) |
| **நிதியியல் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாயச்சல்** | | | | | |
| மூலதனத்தை சேர்த்தல் | | - | 24,987.125 | - | 24,987.125 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | (10,000.000) | - | (10,162.500) | - |
| பெறப்பட்ட புதிய கடன்கள்/ கடன் மீள் செலுத்துதல் | | (71,200.033) | 16,048.986 | (71,973.537) | 14,997.932 |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து /(பயன்படுத்தப்பட்டு) தேறிய காசு** | | (81,200.033) | 41,036.111 | (82,136.037) | 39,985.057 |
| **காசு /காசுக்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு / (குறைவு)** | | (32,678.292) | 26,897.268 | (31,082.154) | 25,735.036 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு /காசுக்கு சமமானவை | | 44,700.416 | 17,803.148 | 45,448.382 | 19,713.346 |
| **ஆண்டின் இறுதியில் காசு /காசுக்கு சமமானவை** | **15** | **12,022.125** | **44,700.416** | **14,366.228** | **45,448.382** |

* இங்கு குறிப்படப்பட்டுள்ள சில இலக்கங்கள் 2015 நிதி அறிக்கைகளுடன் ஒத்துப்போகவில்லை, குறிப்பு 25 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்களை பிரதிபலிக்காது

56 தொடக்கம் 90வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகள் நிதியியல் கூற்றுக்களில் ஒரு உள்ளகப் பகுதியை ஏற்படுத்துகின்றன.

## *பங்கு மூலதன மாற்றக் கூற்று*

இ.பெ.கூ

| | பங்களிக்கப்பட்ட மூலதனம் ரூபா மில் | மூலதன ஒதுக்கு ரூபா மில் | வருமான ஒதுக்கு ரூபா மில் | மொத்த பங்கு மூலதனம் ரூபா மில் |
|---|---|---|---|---|
| **2015 ஜனவரி 1 இல் உள்ளவாறு** | **3,500.000** | **4,992.686** | **(240,749.436)** | **(232,256.750)** |
| முன்னைய கால சீராக்கல் (குறிப்பு 25) | | | (1,034.318) | (1,034.318) |
| **2015 ஜனவரி 1 இல் உள்ளவாறு மீள்குற** | **3,500.000** | **4,992.686** | **(241,783.754)** | **(233,291.068)** |
| * ஆண்டுக்கான இலாபம் | | | (20,520.164) | (20,520.164) |
| ஏனைய விரிவான வருமானம் | | | (160.686) | (160.686) |
| முதலீட்டு மேம்பாடுகளுக்காக விநியே | 24,987.125 | - | - | 24,987.125 |
| **2015டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீள்குற** | **28,487.125** | **4,992.686** | **(262,464.604)** | **(228,984.793)** |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | 53,027.081 | 53,027.081 |
| ஏனைய விரிவான வருமானம் | | | 110.866 | 110.866 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | | (10,000.00) | (10,000.00) |
| **2016டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | **28,487.125** | **4,992.686** | **(219,326.658)** | **(185,846.847)** |

## குழு

| | பங்களிக்கப்பட்ட மூலதனம் ரூபா மில் | மூலதன ஒதுக்குகள் ரூபா மில் | வருமான ஒதுக்குகள் ரூபா மில் | பங்குதாரர் நிதியம் ரூபா மில் | கட்டுப்படாத வட்டி ரூபா மில் | மொத்த பங்கு மூலதனம் ரூபா மில் |
|---|---|---|---|---|---|---|
| **2015 ஜனவரி 1 இல் உள்ளவாறு** | **3,500.000** | **4,992.686** | **(232,584.282)** | **(224,091.596)** | **6,582.577** | **(217,509.019)** |
| முன்னைய கால சீராக்கல் (குறிப்பு 25) | | | (1,034.318) | (1,034.318) | - | (1,034.318) |
| **2015 ஜனவரி 1 இல் உள்ளவாறு மீள்குற** | **3,500.000** | **4,992.686** | **(233,618.600)** | **(225,125.914)** | **6,582.577** | **(218,543.337)** |
| * ஆண்டுக்கான இலாபம் | | | (19,403.183) | (19,403.183) | 558.490 | (18,844.693) |
| ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானம் | | | (248.994) | (248.994) | (44.154) | (293.148) |
| முதலீட்டு மேம்பாடுகளுக்காக விநியே | 24,987.125 | - | - | 24,987.125 | - | 24,987.125 |
| **2015டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீள்குற** | **28,487.125** | **4,992.686** | **(253,270.777)** | **(219,790.966)** | **7,096.913** | **(212,694.053)** |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | 53,896.412 | 53,896.412 | 542.588 | 54,439.000 |
| ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானம் | | | 214.213 | 214.213 | 107.107 | 321.320 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | | (10,000.000) | (10,000.000) | (162.500) | (10,162.500) |
| 2015 இற்கான திரட்டு சீராக்கல் | | | 65.658 | 65.658 | 32.829 | 98.487 |
| **2016டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | **28,487.125** | **4,992.686** | **(209,094.494)** | **(175,614.683)** | **7,616.937** | **(167,997.746)** |

* இங்கு குறிப்படப்பட்டுள்ள சில இலக்கங்கள் 2015 நிதி அறிக்கைகளுடன் ஒத்துப்போகவில்லை, குறிப்பு 25 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்களை பிரதிபலிக்காது

56 தொடக்கம் 90வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு குறிப்புகள் நிதியியல் கூற்றுக்களில் ஒரு உள்ளகப் பகுதியை ஏற்படுத்துகின்றன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1.1 நிறுவனத் தகவல்கள்

**பொது**

இலங்கைபெற்றோலியக் கூட்டுத்தாபனம், 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையை அதன் உறைவிடமாகக் கொண்டுள்ளது.கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 609, கலாநிதிதி டானிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09 என்ற முகவரியில் அமையப் பெற்றுள்ளது.

**பிரதான செயற்பாடுகளும் வியாபாரத்தின் தன்மையும்**

| நிறுவனம் | முக்கிய நடவடிக்கை |
|---|---|
| **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்** | இலங்கையில்பெற்றோலியப்பொருட்கள்இறக்குமதி, சுத்திகரிப்புமற்றும்விற்பனைசெய்தல். |
| துணை சிலோன்பெட்ரோலியம்ஸ்டோரேஜ் டெர்மினல்லிமிடெட் | பெற்றோலியப்பொருட்களின் சேமிப்புமற்றும்விநியோகம் |

**தாய் நிறுவனமும் இறுதிக்கட்டுப்பாட்டு தரப்பினரும்**

கூட்டுத்தாபனமானது, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் அதிகார வரம்பின் கீழுள்ளது. பணிப்பாளர்களின் கருத்தில், சிறப்பு நிறுவன பொறுப்பாளரும் கட்டுப்படுத்தும் தரப்பினரும் இலங்கை அரசாங்கமாகும்.

**விநியோகத்திற்கான அங்கீகாரத் திகதி**

2016 டிசம்பர் 31 முடிவுற்ற ஆண்டிற்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன மற்றும் அதன் குழுமத்தின் நிதியியல் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையின் 2017 டிசம்பர் 21 ஆம் திகதிய தீர்மானத்திற்கமைய விநியோகிப்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டிருந்தது.

**இணக்கக் கூற்று**

விரிவான வருமானக் கூற்று, நிதி நிலைக் கூற்று, பங்கு மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் ('நிதியியல் கூற்றுகள்') ஆகியவற்றை உள்ளடக்கிய பெற்றோலியக் கூட்டுத்தாபன மற்றும் அதன் குழுமத்தின் நிதியியல் கூற்றுக்கள், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.நி.அ.நி/இ.க.நி) மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றுக்கிணங்கவும், அதற்கான திருத்தங்களின் கீழும் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 1.2 தயாரித்தலுக்கான அடிப்படை

நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு, விற்பனைக்காக கிடைக்ககூடிய நிதிச் சொத்துக்கள் மற்றும் தற்போதைய கடப்பாட்டு பெறுமதியில் அளவிடப்படுகின்ற வரையறுக்கப்பட்ட நன்மை பயக்கும் கடப்பாடு ஆகிவை தவிர நிதிக் கூற்றுக்கள்,திரண்ட அடிப்படையிலும்,வரலாற்று செலவு அடிப்படையின் கீழும் தயாரிக்கப்பட்டுள்ளன.

**முன்வைத்தல் மற்றும் தொழிற்பாட்டு நாணயம்**

நிதிக்கூற்றுகள் தொழிற்பாட்டு நாணயமாக இருக்கும் இலங்கை ரூபாயில் எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன், வேறுவகையில் குறித்துக் காட்டப்பட்டவை தவிர அனைத்து பெறுமானங்களும் கிட்டிய மில்லியனுக்கு முழுப் பெறுமானமாக்கப்பட்டுள்ளது.

**பொருண்மை மற்றும் மொத்தம்**

நிதிக்கூற்றில் ஒரே பொருட்களின் ஒவ்வொரு வகையும் தனித்தனியாக முன்வைக்கப்பட்டுள்ளன. முக்கியமற்ற பொருளாக இருந்தால் ஒழிய, மாறுபட்ட தன்மை மற்றும் தொழிற்பாட்டினை உடைய பொருட்கள் வெவ்வேறாக முன்வைக்கப்படுகின்றன.

**திரட்டு அடிப்படையிலானது**

2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்குரிய திரட்டு நிதிக்கூற்றுக்கள், (குழு என ஒன்றாக குறிப்பீடு செய்யப்படும்) கூட்டுத்தாபனத்தையும் அதன் துணை நிறுவனத்தையும் உள்ளடக்குகின்றன.

துணை நிறுவனங்களானவை கூட்டுத்தாபனத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களாகும். கூட்டுத்தாபனம் வெளிப்படுத்தப்படுகிற போது அல்லது முதலீட்டாளருடனான அதன் ஈடுபாட்டிலிருந்து

மாறுபட்ட வருமானங்களுக்கு உரிமை உள்ளபோது, முதலீட்டாளர் மீதான அதன் அதிகாரத்தின் மூலம் அந்த வருமானத்தை பாதிக்கும் திறனைக் கொண்டுள்ள போதும் கட்டுப்பாடானது அடையப்படுகின்றது.

குறிப்பாக, பின்வருவனவற்றைக் கொண்டிருந்தால் மட்டுமே,குழுவானது ஒரு முதலீட்டாளரை கட்டுப்படுத்துகின்றது,

- முதலீட்டாளர் மீதான அதிகாரம் (உ+ம், முதலீட்டாளர்களின் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை இயக்கும் தற்போதைய திறனைக் கொடுக்கும் நடைமுறையிலிருக்கும் உரிமைகள்)
- முதலீட்டாளருடனான அதன் ஈடுபாட்டிலிருந்து மாறுபட்ட வருமானங்களுக்கான வெளிப்பாடு அல்லது உரிமைகள்
- அதன் வருவாயில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக முதலீட்டாளர் மீது தனது அதிகாரத்தைப் பயன்படுத்தும் திறன்

பொதுவாக, வாக்களிப்பு உரிமைகளின் பெரும்பான்மை கட்டுப்பாட்டில் இருப்பதாக ஒரு ஊகம் உள்ளது.இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானதுசிலோன் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடெட் (CPSTL) இன்2/3 பங்கினை தன்னகத்தே கொண்டுள்ளதுடன்CPSTL ஐஅதன் துணை நிறுவனமாகவும் கருதுகிறது.

கட்டுப்பாட்டின் மூன்று உறுப்புகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாற்றங்கள் உள்ளன என்பதை உண்மைகளும் சூழ்நிலைகளும் சுட்டிக்காட்டா மல் விட்டால், முதலீட்டாளர் ஒருவர் கட்டுப்படுத்துகிறாரா இல்லையா என்பதை குழு மீண்டும் மதிப்பீடு செய்கிறது. துணை நிறவனத்தின் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் போது மற்றும் கூட்டுத்தாபனமானது துணை நிறுவனத்தின் மீது கட்டுப்பாட்டை இழக்கும் போதல்லாதொழிய துணை நிறுவனத்தின் ஒருங்கிணைப்பானது தொடங்குகிறது.

கூட்டுத்தாபனம் கட்டுப்பாட்டினைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து துணை நிறுவனத்தின் கட்டுப்பாட்டினை இழக்கும் திகதி வரை வருடத்தினுள் பெறப்பட்ட அல்லது அகற்றப்பட்ட துணை நிறுவனங்களின் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவை நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

துணை நிறுவனத்தின் ஏனைய விரிவான வருமானக் கூற்றின் (ஏ.வி.வ.கூ) இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஒவ்வொரு கூறுகளும், கூட்டுத்தாபனத்தின் தலைமை பங்குதாரர்களுக்கும் கட்டுப்பாட்டில் இல்லாத வட்டிகளுக்குமான பண்புகளாகும்.

துணை நிறுவனங்களின் நிதியியல் கூற்றுக்கள்கூட்டுத்தாபனத்தின் கணக்குக் கொள்கைகளுடன் இணங்குவதைத் தவிர வேறுவிதமாகக் கூறப்பிடாவிட்டால், அவை டிசம்பர் 31 ஆம் தேதி முடிவடைந்த ஒரு பொதுவான நிதி ஆண்டைக் கொண்டிருக்கும்.

உள்ளக கூட்டுத்தாபனத்தின் மிகுதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், வருமானம் மற்றும் செலவுகளானவை திரட்டு நிதியியல் கூற்றுக்களை தயாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

### கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டவையுடன் ஒத்திசைவாகக் காணப்படுகின்றன.

### ஒப்பீட்டு தகவல்

முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுகளை முன்வைத்தலும், வகைப்படுத்தலும் சிறப்பான முன்வைத்தலுக்காகவும், நடைமுறை ஆண்டில் உள்ளவற்றுடன் ஒப்பிடக் கூடியதாக இருப்பதற்கும் பொருத்தமானவிடத்து திருத்தப்பட்டுள்ளன.

**தொடர்ந்து இயங்குதல்**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் குழுவினதும் தொடர்ந்தியங்கும் நிலையினை அடிப்படையாகக் கொண்டு, அதாவது எதிர் காலத்திற்கான தொழிற்பாடுகளைத் தொடரும் ஊகத்துடன் இந்நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2016 டிசம்பர் 31 முடிவுற்ற ஆண்டிற்கான தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைவாக ரூபா. 185,847 மில்லியன் மற்றும் ரூபா. 167,998 மில்லியன் எதிர்மறையான பங்கு மூலதன நிலையினையும் கூட்டுத்தாபனம் ஏற்படுத்தியிருந்தபோதிலும் அதன் தொழிற்பாடுகளை ஒழித்துக் கட்டுவதற்கும் அதன் தொழிற்பாடுகளின் முக்கிய அளவுகளை மட்டுப்படுத்துவதற்கோ ஊகிக்கவில்லை.

**முக்கிய கணக்கீட்டுத் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் பற்றிய சாராம்சம்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலானது சில முக்கிய கணக்கீட்டு மதிப்பீடு மற்றும் ஊகங்களின் பயன்பாட்டினைத் தேவைப்படுத்துகின்றது. கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கின்ற செயன்முறையில் முகாமைத்துவம் அதன் தீர்மானத்தினை பிரயோகிப்பதனையும் வேண்டுகின்றது. சூழ்நிலையின் கீழ் நியாயமானதாகக் கருதப்படும் எதிர்ப்பார்ப்புகள் உட்பட, தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவை வரலாற்று அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆகையால், உண்மையான அனுபவங்கள் மற்றும் விளைவுகள் என்பன இத் தீர்மானங்கள், மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம். மதிப்பீடுகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் கருதுகோள்கள் தொடர்ந்து இயங்குதல் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டதுடன் மதிப்பீடுகளை கணக்கிடுவதற்கான திருத்தங்கள் வெற்றிகரமாக அங்கீகரிக்கப்பட்டன. தீர்மானத்தின் அல்லது சிக்கல் வாய்ந்த தன்மையின் அல்லது நிதிக்கூற்றுகளுக்கு முக்கியமாகக் காணப்படுகின்ற ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவை உரிய குறிப்புக்களில் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

- வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடுகள்– பணிக்கொடை; குறிப்பு இல. 1.4.9
- நிதி சொத்துக்களின் இழப்பு: குறிப்பு இல1.4.11
- சொத்து, தாவர மற்றும் உபகரணங்களின் பயனுள்ள வாழ்க்கை: குறிப்பு இல.1.4.5
- ஒத்திவைக்கப்பட்ட வரிவிதிப்பு: குறிப்பு 1.4.2

## 1.4 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்

### 1.4.1 வருமான ஏற்பிசைவு

கூட்டுத்தாபனத்திற்கு பொருளாதார நலன்கள் செல்கின்றது என்று எதிர்பார்க்கப்படும் அளவிற்குவருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. கருத்திற்கொள்ளப்பட்ட அல்லது பெறத்தக்க நிகர வர்த்தக தள்ளுபடிகள் மற்றும் விற்பனை வரிகளின் நியாயப் பெறுமதியில் வருவாயானது அளவிடப்படுகின்றது. பின்வரும் குறிப்பான கட்டளை விதிகள் வருவாயினை இனங்காணுவதற்காக பயன்படுத்தப்படுகின்றன.

**பொருட்கள் விற்பனை**

பொருட்கள் விற்பனையிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானமானது பொருட்களின் முக்கிய இடர்கள் மற்றும் சொத்துவத்தின் வெகுமதிகள் வாங்குபவருக்கு மாற்றப்படுகின்றபோது, வழமையாகப் பொருட்கள் அனுப்பப்படுவதன் மீது இனங்காணப்படுகிறது.

**வட்டி வருமானமும் செலவுகளும்**

மதிப்பிறக்கக் கிரயத்தில் கணிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிதியியல் சாதனங்களின் பொருட்டு,வட்டிச் செலவுகள் மற்றும் வருமானம் என்பவை பயனுறுதிவாய்ந்த வட்டி விகித முறையினைப் பாவித்து பதிவுசெய்யப்படுவதோடு, அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**பங்கிலாபங்கள்**

பங்கிலாப வருமானமானது, கொடுப்பனவினைக் பெறுவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படுகின்ற போது அங்கீகரிக்கப்படுகின்றது.

**வாடகை வருமானம்**

வாடகை வருமானம் குத்தகைக் காலத்தில் ஒரு நேரானஅடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண விற்பனையிலிருந்து இலாபம்/ (நட்டம்)**

ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரண விற்பனையிலிருந்து தோன்றுகின்ற இலாபம்/ (நட்டம்), வியாபாரம் இடம்பெற்ற காலப்பகுதியில் இனங்காணப்பட்டு ஏனைய வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது.

**முதலீட்டுப் பிணைகளிலிருந்து தோன்றுகின்ற இலாபம்/ (நட்டம்)**

உரிமைப் பங்குகள் மற்றும் நிதியியல் சாதனங்களின் விற்பனையிலிருந்து தோன்றுகின்ற இலாபம்/ (நட்டம்) கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற திகதியன்று கணக்கிடப்படுகின்றது.

**மண்ணெண்ணெய் மானியம்**

1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 17 ஆம் பிரிவிற்கமையவும் திறைசேரியின் செயலாளரினால் வழங்கப்பட்ட ரிரிஜபி /1/83 (1) ஆம் இலக்க கடிதத்திற்கமைவாகவும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் செலவுக்குக் கீழ் மண்ணெண்ணெய் விற்பனை செய்தல் மீதான மானியத்திற்கு உரித்துடையதாகும். மானியம் திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

**ஏனைய வருமானம்**

ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்பட்டுகின்றது.

### 1.4.2 செலவின அடையாளப்படுத்தல்

வினைத்திறன் வாய்ந்த நிலையில் வியாபாரத்தை நடாத்துவதில் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் பராமரிப்பில் உறப்படும் அனைத்து செலவினங்களும் காலப்பகுதிக்கான வருமானக் கூற்றில் விதிக்கப்பட்டுள்ளன.

**வரிவிதிப்பு**

இக்காலப் பகுதிக்கான வரிச்செலவுகள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை உள்ளடக்குகின்றன.

**(i) நடைமுறை வரி**

நிதிக்கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டவாறும், மற்றும் 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினதும் அதற்கான திருத்தங்களினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கணிக்கப்பட்டவாறும், வருமான அல்லது செலவின கூறுகளின் அடிப்படையில், வரிவிதிப்பு அதிகார சபைகளிடமிருந்து அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அல்லது அவற்றுக்கு செலுத்தவேண்டிய தொகையில் நடைமுறை மற்றும் முந்திய காலப்பகுதிக்கான நடைமுறை வருமான வரி சொத்துக்களும், பொறுப்புக்களும் அளவிடப்படுகின்றன.

**பிற்போடப்பட்ட வரி விதிப்பு**

நிதியறிக்கையிடல் நோக்கங்களுக்காக, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் அவை கொண்டுள்ள தொகை என்பவற்றின் வரி அடிப்படைகளுக்கிடையில் அறிக்கையிடும்திகதியில் தற்காலிக வேறுபாடுகளின் மீது, பொறுப்பு முறையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்பட்டுகிறது.

பிற்போடப்பட்ட வருமான வரி பொறுப்புக்கள், ஒரு வணிகத் தொகுதி அல்லாத, கொடுக்கல் வாங்கலின் போது கணக்கீட்டு இலாபத்தினை அல்லது வரிவிதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டம் இரண்டையும் பாதிக்காத கொடுக்கல் வாங்கலொன்றில் உள்ள சொத்து அல்லது பொறுப்பொன்றின் ஆரம்ப அடையாளப்படுத்தலில் இருந்து தோன்றுகின்ற பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்பு உள்ளவை தவிர அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்களுக்குமானதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துக்கள் கழிக்கப்படத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கெதிராக கிடைக்கத்தக்க வரி விதிக்கக்கூடியதாக நிகழக்கூடியதானவை என்ற ரீதியில் முன் கொண்டு செல்லப்பட்ட பயன்படுத்தப்படாத வரிச் சொத்துக்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளின் அத்துடன் வியாபார இணைப்பொன்றானதல்லாத மற்றும் கொடுக்கல் வாங்கலின் போது கணக்கீட்டு இலாபத்தையோ அல்லது வரிவிதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டம் இரண்டையும் பாதிக்காத கொடுக்கல் வாங்கலொன்றில் உள்ள சொத்து அல்லது பொறுப்பொன்றாக ஆரம்ப அடையாளப்படுத்தலில் இருந்து தோன்றுகின்ற கழிக்கப்படத்தக்க தற்காலிக வேறுபாடுகளுடன் தொடர்புறுகின்ற பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் உள்ளவை தவிர முன் கொண்டு செல்லப்பட்ட பயன்படுத்தப்படாத வரிச் சொத்துக்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளின் அனைத்து கழிக்கப்படத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்குமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் கொண்டுள்ள தொகை ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியன்றும் மீளாய்வு செய்யப்பட்டு, பயன்படுத்துவதற்கு பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்தினை முழுமையாக அல்லது பகுதியாக அனுமதிப்பதற்கு போதிய வரிவிதிப்பு இலாபம் கிடைக்கப்பெறும் என்பது இனிமேலும் சாத்தியமற்றது என்ற ரீதியில் குறைக்கப்படுகிறது. அடையாளப்படுத்தப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியன்றும் மறுமதிப்பீடு செய்யப்பட்டு, எதிர்காலத்தில் வரிவிதிக்கத்தக்க இலாபமானது அறவிடப்படவிருக்கும் பிற்போடப்பட்ட வரிச் சொத்திற்குஅனுமதியளிக்கும் என்ற சாத்தியம் ஏற்பட்டுள்ள அளவிற்கு இனங்காணப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும், சொத்து இனங்காணப்படுகின்ற போது அல்லது பொறுப்புத் தீர்வு செய்யப்படுகின்ற போது அறிக்கையிடும் திகதியன்று சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது நிலையாக சட்டமாக்கப்பட்டுள்ள வரி விகிதங்களின் அடிப்படையில் (மற்றும் வரிச் சட்டங்கள்) ஆண்டொன்றுக்கு ஏற்புடையதாக எதிர்ப்பார்க்கப்படுகின்ற வட்டி விகிதங்களில் அளவிடப்பட்டுள்ளன. பங்கு மூலதனத்தில் நேரடியாக இனங்காணப்பட்ட விடயங்களில் தொடர்புடைய பிற்போடப்பட்ட வருமான வரியானது, பங்கு மூலதனத்தில் இனங்காணப்பட்டுள்ளதுடன், வருமானக் கூற்றில் இனங்காணப்படவில்லை.

(ii) **விற்பனை வரி**

வருமானங்கள், செலவுகள் மற்றும் சொத்துக்கள் என்பன விற்பனைகள் வரி உள்ளடக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்ட பொருத்தமான, கிடைக்கப் பெறத்தக்க மற்றும் செலுத்தப்படத்தக்கவையாக சொத்துச் செலவு பகுதியொன்றாக அல்லது செலவு வகையொன்றின் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்ட விற்பனைகள் வரியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் சொத்துக்களின் அல்லது சேவையின் கொள்வனவொன்றின் மீது உறப்பட்ட விற்பனைகள், வரி, வரிவிதிப்பு அதிகார சபைகளிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ள முடியாதவை தவிர விற்பனைகள் வரியினுள் நிகரத் தொகையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வரி விதிப்பு அதிகார சபைகளுடன் தொடர்புடைய மீளப்பெறத்தக்க அல்லதுசெலுத்தப்படத்தக்க விற்பனைகள் வரித் தொகை ஐந்தொகையில் மீளப்பெறத்தக்க அல்லது செலுத்தப்படத்தக்கவைகளின் பகுதியொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

**கடனாக்க செலவுகள்**

சொத்துக்கள் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு தயார்படுத்துவதற்கு கணிசமான காலப்பகுதியினை அவசியமாக எடுக்கின்ற சொத்துக்களாக தகைமை பெறுகின்ற சொத்துக்களை பெற்றுக் கொள்வதற்கு, நிர்மாணிப்பதற்கு அல்லது உற்பத்தி செய்வதற்கு நேரடியாக சாட்டத்தக்க பொது அல்லது குறித்த கடன்பெறுகைக் கிரயங்கள் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனை செய்வதற்கு அச்சொத்துக்களின் கிரயங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. ஏனைய அனைத்து கடன்பெறுகைக் கிரயங்களும் அவை நிகழும் காலத்தில் செலவு வைக்கப்படுகின்றன.

### 1.4.3 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்

கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மற்றும் எடுத்துரைத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயங்களில் காணப்படும் கொடுக்கல் வாங்கல்கள் கொடுக்கல் வாங்கல் திகதியன்று நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் ஆரம்பத்தில் பதிவு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயங்களில் மாற்றப்பட்ட நாணய சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியன்று நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணயத்தின் நாணயமாற்று விகிதத்தில் மீள மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அனைத்து வித்தியாசங்களும் வருமானக் கூற்றுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்றுச் செலவில் அளவிடப்பட்ட நாணயம் சாரா விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல் வாங்கல் திகதயன்று உள்ளவாறு நாணயமாற்று விகிதத்தினைப் பயன்படுத்தி நாணய மாற்றம் செய்யப்படுகின்றது. வெளிநாட்டு நாணயத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயம் சாரா விடயங்கள் நியாயப் பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்ற போதுள்ள திகதியில் நாணயமாற்று விகிதங்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றன. நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயம் சாரா விடயங்களில் ஏற்படும் லாபம் அல்லது இழப்பு அவ்விடயத்தின் நியாயப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றத்தின் மீதான லாபம் அல்லது இழப்பு ஆகியவற்றை அடையாளம் காண்பதின் மூலம் சரி செய்யப்படுகிறது. (உதாரணம்; விடயங்களின் மீதான, OCI இல் அடையாளங்காணப்பட்ட நியாயப் பெறுமதி லாபம் அல்லது நட்டம் அல்லது OCI இல் இனங்காணப்பட்ட வரவு அல்லது நட்டம் அல்லது முறையே வரவு அல்லது நட்டம் ஆகிய நாணய மாற்று வித்தியாசங்கள் என்பன )

### 1.4.4 நடைமுறை எதிர் நடைமுறையல்லாத வகைப்படுத்தல்

நடைமுறை / நடைமுறையல்லாத வகைப்படுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு, குழுவானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றை நிதிநிலைக் கூற்றில் வழங்குகின்றது. சொத்தொன்றானது, பின்வரும் சந்தர்ப்பங்களில் நடைமுறை சொத்தாக வகைப்படுத்தப்படுகின்றது, அச்சொத்தானது,

- சாதாரணதொழிற்பாட்டு சுழற்சியில் உணர்ந்து கொள்ளப்பட அல்லது உத்தேசிக்கப்பட அல்லது விற்கப்பட

அல்லது நுகர்வதற்கு என எதிர்பார்க்கப்படும் போது.

- வர்த்தகம் செய்யும் நோக்கத்திற்காக முதன்மையாக நடாத்தப்படும் போது
- அறிக்கையிடும் காலத்திற்கு பின் பன்னிரண்டு மாதங்களுக்குள் உணர்ந்து கொள்ளப்பட எதிர்பார்க்கப்படும் போது

அல்லது

- அறிக்கையிடும் காலத்தின் பின்னர் குறைந்தபட்சம் பன்னிரண்டு மாதங்களுக்கு பொறுப்பொன்றினை தீர்ப்பதற்கு பரிமாற்றப்படுவதிலிருந்து அல்லது பயன்படுத்தப்படுவதிலிருந்து கட்டுப்படுத்தப்பட்டிருக்காத பட்சத்தில், காசு அல்லது காசுக்கு சமமானவையாக இருக்கும் போது

ஏனைய அனைத்து சொத்துக்களும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

பொறுப்பொன்றானது,பின்வரும் சந்தர்ப்பங்களில்நடைமுறைப் பொறுப் பாகக் கருதப்படும். அப் பொறுப்பானது,

- சாதாரண இயக்க சுழற்சியில் தீர்க்கப்பட எதிர்பார்க்கப்படுகிற போது
- வர்த்தகம் செய்யும் நோக்கத்திற்காக முதன்மையாக நடாத்தப்படுகிற போது
- அறிக்கையிடும் காலத்திற்குப் பின் பன்னிரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிற போது

அல்லது

- அறிக்கையிடும் காலப்பகுதிற்குப் பின்குறைந்தபட்சம் பன்னிரண்டு மாதங்களுக்கு பொறுப்புக் கூற்றினைஒத்திவைக்க நிபந்தனையற்ற உரிமை எதுவும் இல்லாத போது

குழுவானது ஏனைய அனைத்து பொறுப்புக்களையும் நடைமுறையல்லாதவையாக வகைப்படுத்துகின்றது.

பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் நடைமுறையல்லாத பொறுப்புகளாகவகைப்படுத்தப்பட்டகின்றன.

### 1.4.5 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவை நாளாந்த சேவைகள் செலவு உள்ளடங்காது, பெறுமதியில் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரண்ட சேதம் கழிக்கப்பட்ட விலையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அளவீடு**

சொத்தொன்றாக அடையாளப்படுத்துவதற்கான தகைமை பெறுகின்ற ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண வகையொன்று சொத்தினை அல்லது நிர்மாணத்தினை அல்லது பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு நேரடியாக சாட்டத்தக்க கொள்வனவுச் செலவில் அதனோடிணைந்த இடைநேர் விளைவான ஏதேனும் செலவுகளுடன் சேர்த்து ஆரம்பத்தில் அடையாளப்படுத்தப்படுகின்றன.

சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் செலவு, பொருட்களுக்கான செலவு, நேரடி ஊழியம் அல்லது அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டு நிலைக்கு சொத்தினை கொண்டு வருவதற்கு நேரடியாக சாட்டத்தக்க ஏனைய ஏதேனும் செலவுகள் மற்றும் பாகங்களைப் பிரித்தல் மற்றும் அகற்றுதல் அத்துடன் அவை அமையப் பெற்றுள்ள இடத்திற்கு மீள் பொருத்துவதற்கான செலவு என்பவற்றை உள்ளடக்குகின்றது. அங்கீகார அளவுகள் பூர்த்தி செய்யப்பட்டால், அச் செலவிற்கு உள்ளாக்கப்படும் போது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் பகுதியை மாற்றுவதற்கான செலவினையும் அச்செலவுகள் உள்ளடக்குகின்றன.

**செலவு மாதிரி**

குழுவானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு செலவு மாதிரியினை பிரயோகிக்கின்றதுடன் ஒன்று திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் ஏதேனும் ஒன்று திரட்டிய குறைபாட்டு இழப்புகளை கழித்து, அவற்றுடனான ஏதேனும் இடைநேர் விளைவான செலவுகளுடன் சேர்த்து கொள்வனவு அல்லது நிர்மாணச் செலவில் பதிவு செய்கின்றது.

**தொடர் செலவுகள்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண பொருளொன்றின் பாகம் மாற்றுதல் செலவு அப்பாகத்தினுள் அமையப் பெற்ற எதிர்கால நலன்கள் குழுவினுள் செல்லும் என்ற நிகழ்வுத் தன்மை இருக்குமிடத்தும் அதன் செலவு நம்பத்தகுந்தவாறு அளவிடக் கூடியதாகவிருப்பின் பொருள் கொண்டுள்ள தொகை அடையாளப்படுத்தப்படுகின்றது.

**மீளமைத்தல் செலவு**

மீளமைத்தல் அல்லது எதிர்கால பொருளாதார நலன்களை பேணுதல் ஆகிய நோக்கங்களுக்காக ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் திருத்தங்கள் மற்றும் பராமரிப்புகளுக்கான செலவு வருமானக் கூற்றில் அறவிடப்பட்டுள்ளது.

**இனங்காணாமை**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமொன்று கொண்டுள்ள தொகை பயன்பாட்டிலிருந்து அகற்றுதல் அல்லது அதன் பயன்பாட்டில் அல்லது அகற்றுதலிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நலன்கள் இல்லாமையின் பேரில் அடையாளப்படுத்தாது விடப்படுகின்றது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமொன்றின் அடையாளப்படுத்தாமையிலிருந்து தோன்றுகின்ற பெறுகை அல்லது இழப்பு பொருள் அடையாளப்படுத்தாது விடப்பட்ட போது வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பெறுமானமத் தேய்வு**

நிலம் ஒரு நிட்சியமற்ற வாழ்வைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுவதால் பெறுமானத் தேய்வு இல்லை.குழுவானது, பல்வேறு வகையான சொத்துக்கள் பற்றி மதிப்பிடப்பட்ட பிரயோசனமான வாழ்க்கைக்கு பொருத்தமான காலப்பகுதியின் மீது நேர்நிலை அடிப்படையில் பெறுமானத் தேய்வினை வழங்குகின்றது.இது பயன்படுத்துவதற்காக கிடைக்கக்கூடிய திகதியிலிருந்து தொடங்குகின்றது.சொத்து அடையாளப்படுத்தப்படாத தினத்தன்று பெறுமானத் தேய்வு நிறுத்தப்படுகிறது.

குழுவானது,மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்வு, எஞ்சிய பெறுமானம் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத் தேய்வு முறை என்பவற்றை முகாமைத்துவ தீர்ப்பைப் பயன்படுத்தி வியாபாரத் திட்டம் செயல்நுணுக்கங்கள், எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டு நிலை மற்றும் எதிர்கால அபிவிருத்திகள்போன்ற காரணிகளின் அடிப்படையில் ஆண்டுதோறும் மீளாய்வு செய்கிறது.
சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்வு பின்வருமாறு;

| **சொத்துக்கள்** | **ஆண்டுகள்** | |
|---|---|---|
| கட்டிடங்கள் | 35 - 50 Years | 40 Years |
| தாங்கிகள் | 20 - 40 Years | 40 Years |
| குழாய்கள் | 5 - 40 years | |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரசாதனங்கள் | 5 - 10 Years | 10 Years |
| நிலைத் தூண்களும் பம்பிகளும் | 10 - 15 years | 10 years |
| வாகனங்கள் | 4 - 5 Years | 4Years |
| தளபாடங்கள்/பொருத்துகள் மற்றும் அலுவலக | 3 - 10 Years | 3 Years |
| மிதவைகள் | 10 years | 10 years |
| எஸ் பீ.எம் வசதிகள் - தாங்கிப்பண்ணை | 40 Years | 40 Years |
| மத்தள விமான போக்குவரத்து வசதிகள் - எரி | 40 Years | 40 Years |
| - Ta எரிபொருள் குழாய் முறைமை | 40 Years | 40 Years |
| - Pi உள்ளக வீதி வலையமைப்பும் வேலிகளும் | 20 years | 20 years |
| - Ta அளவீட்டுக் கருவிகளும் மின் முறைமையும் | 10 years | 10 years |
| - Pi தீயணைப்புக் கருவிகள் | 10 years | 10 years |
| Gant ஏனைய சொத்துக்கள் | 08 years | 08 years |
| முத்துராஜவெல- பீ எல் ஈ எம் | 10 years | |

குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் சொத்துக்களின் எஞ்சிய பெறுமானம்,பயன்பாட்டு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வு முறை என்பன மீளாய்வு செய்யப்படுவதோடு, ஏற்புடையவிடத்து சீர்செய்யப்படுகின்றது.

**முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி**

முன்னெடுக்கப்படும் மூலதனப் பணியானது செலவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை கட்டிட நிர்மாணம், பிரதான பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் முறைமை வடிவமைப்பு ஆகியவற்றில் நேரடியாக உறப்பட்ட மூலதனத்தன்மையிலான செலவுகளாகும். இவை மூலதனமாக்கலில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**நிதியல்லாத சொத்துக்களின் சேதம்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் தொகை அறவிடப்பட முடியாது எனக் குறித்துக்காட்டப்படும் சந்தர்ப்பத்தில் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் ஏற்படும் போது சேதத்திற்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. சேத இழப்பொன்றானது, சொத்துக்களின் தொகை அதன் அறவிடப்படுகின்ற தொகையை விஞ்சுகின்ற தொகையாக அடையாளப்படுத்தப்படுகின்றது. அறவிடற் பெறுமதியானது விற்பனை செய்வதற்கும் பயன்பாட்டில் உள்ள பெறுமதிக்குமான செலவினை கழித்து சொத்தின் உயர்வான நியாயப் பெறுமதியாகும்.

சேதத்தினை மதிப்பிடும் நோக்கத்திற்காக, வேறாக இனங்காணத்தக்க காசுப்பாய்ச்சல்களாக (காசு ஈட்டும் அலகுகள்) மிகக் குறைந்த

மட்டங்களில் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. சேதத்தினைக் கொண்ட நிதியல்லாத சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதிக்கும் சேதம் பற்றிய பெறுமதிக் கழிவில் சாத்தியமாக பின்நோக்கிச் செல்லல் மீளாய்வு செய்யப்படுகின்றன.

### 1.4.6 முதலீடுகள்

**துணை நிறுவனங்களில் முதலீடு**

துணை நிறுவனங்களில் முதலீடுகளானவை, ஏதேனும் சேத இழப்புக்கள் இருப்பின் அவை கழித்து கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**முதலீட்டு ஆதனங்கள்**

**அங்கீகாரத்தின் அடிப்படை**

வாடகை உழைக்கின்ற அல்லது மூலதன பெறுமதி அதிகரித்தலுக்கான அல்லது இரண்டிக்குமான ஆனால் சாதாரண வியாபாரத்தில் விற்பனைக்காக அல்லாத ஆதனம் முதலீட்டு ஆதனமாகும்.

**அளவீடு**

முதலீட்டு ஆதனம் நிதியியல் கூற்றுக்களில் செலவு முறையின் கீழ் கணிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சொத்தொன்றாக அடையாளப்படுத்தப்பட்டதன் பின், ஆதனமானது பெறுமானத் தேய்மானம் மற்றும் சேத இழப்பு கழிக்கப்பட்டு செலவில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**பெறுமானத் தேய்வு**

பெறுமானத் தேய்வானது கொள்வனவுத் திகதியிலிருந்து பயன்பாட்டிலிருந்து அகற்றும் திகதி வரை சொத்து வகுப்புக்களின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் மீது நேர் நிரை அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இனங்காணாமை**

முதலீட்டு ஆதனங்கள், எதிர்கால நலன்கள் எதிர்பார்க்கப்படாமையினால் அகற்றப்பட்டு அல்லது நிரந்தரமாக மீளப் பெறப்படும் போது இனங்காணாது விடப்பட்டுள்ளது. பயன்பாட்டில் மாற்றங்கள் உள்ளபோது மாத்திரம் முதலீட்டு ஆதனங்களுக்கு அல்லது ஆதனங்களிலிருந்து இடமாற்றங்கள் செய்யப்படுகின்றன.

### 1.4.7 பொருட் பதிவேடு

பொருட் பதிவேடுகள், பயன்பாட்டிலிருந்து ஒதுக்குதல் மற்றும் மெதுவாக அசையும் பொருட்கள் என்பவற்றிற்கான போதிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதன் பின்னர் குறைந்த விலையில் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதியில் விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. நிகர தேறத்தக்க பெறுமதியானது விற்பனை மேற்கொள்வதற்கு மற்றும் நிறைவு செய்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு என்பவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் பொருட் பதிவேடுகள் விற்பனை செய்யக்கூடிய விலையில் விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அறிக்கையிடும் திகதியிலும், தற்போதைய கொடுக்கல் வாங்கல்களிலும் இருக்கின்ற சந்தை நிலைமைகள் மற்றும் விலைகள் தொடர்பாக NRV மதிப்பிடப்படுகின்றது.

தற்போதைய அமைவிடத்திற்கும் நிலைக்கும் பொருட்பதிவேடுகளை கொண்டு வருவதற்கு உறப்பட்ட செலவு பின்வரும் செலவுச் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டது.

| | |
|---|---|
| மூலப் பொருட்கள் | - முதலில் உள்வந்தது-முதலில் வெளிச்செல்லல் அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |
| முடிவுப் பொருட்கள்<br>அ) சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள்<br><br>ஆ) இறக்குமதிகள் | - நேரடி பொருட்கள், நேரடி தொழிலாளர் மற்றும் சாதாரண தொழிற்பாட்டு கொள்வனவு அடிப்படையினைக் கொண்டு தயாரிக்கப்படும் மேலதிக செலவுகளின் பொருத்தமான பகுதியொன்றின் செலவில் ஆனால் கடன் பெறல் செலவுகள் உள்ளடங்காது.<br>- முதலில் உள்வந்தது-முதலில் வெளிச்செல்லல் அடிப்படையிலான கொள்வனவுச் செலவில் |
| முன்னெடுக்கப்படும் பணி<br>அ) சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள்<br><br>ஆ) இறக்குமதிகள் | -நேரடி பொருட்கள், நேரடி தொழிலாளர் மற்றும் சாதாரண தொழிற்பாட்டு கொள்வனவு அடிப்படையினைக் கொண்டு தயாரிக்கப்படும் மேலதிக செலவுகளின் பொருத்தமான பகுதியொன்றின் செலவில் ஆனால் கடன் பெறல் செலவுகள் உள்ளடங்காது.<br>- முதலில் உள்வந்தது-முதலில் வெளிச்செல்லல் அடிப்படையிலான கொள்வனவுச் செலவில் |
| ஏனைய முடிவுப் பொருட்கள் | - சராசரி நிறை அடிப்படையிலான கொள்வனவுச் செலவில் |
| நுகரத்தக்கவையும் உதிரிப் பாகங்களும் | - சராசரி நிறை அடிப்படையிலான கொள்வனவுச் செலவில் |

### 1.4.8 காசும் காசுக்கு சமமானவையும்

காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் கையிலுள்ள காசும், கேள்வி கையிருப்புகளும் உயரிய குறுகிய கால திரவத்தன்மைக் கொண்ட முதலீடுகளும் அத்துடன் பெறுமதியில் முக்கியத்துவமற்ற மாற்ற இடருக்கு உட்பட்டவையாகவும் உள்ளன. காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக கையிலுள்ள காசு, நிகர வங்கி மேலதிக பற்று நிலுவைகளின் வஙகிகளிலுள்ள வைப்புக்களை காசு மற்றும் காசுக்கு சமமானவை உள்ளடக்குகின்றன. குறுகிய முதிர்வுகளுடனான முதலீடு அதாவது பெற்றுக்கொள்ளல் திகதிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதனை விடக் குறைந்த காலம் கொண்டவையும், காசு மற்றும் காசுக்கு சமமானவையாக கொள்ளப்பட்டுள்ளன.

### 1.4.9 ஏற்பாடுகளும் பொறுப்புகளும் ஏற்பாடுகள்

கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை தன்னகத்தே கொண்ட வள வெளிப் பாய்ச்சலொன்று தேவைப்படும் என்றும் கடப்பாடுகளின் தொகைகளுக்கு நம்பகத் தகுந்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட முடியும் என்றும் நிகழத்தக்க கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக கூட்டுத்தாபனம் தற்போது கடப்பாடு (சட்ட அல்லது பயன்மிகு) கொண்டுள்ளபோது ஏற்பாடுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சில அல்லது அனைத்து ஏற்பாடுகளையும் மீள் நிரப்பப்படுவதற்கு கம்பனி எதிர்பார்க்கும் போது, அந்த மீள் நிரப்பல் நிச்சயமாக இருப்பின் மாத்திரம் நிரப்பலானது வேறான சொத்தொன்றாக அடையாளப்படுத்தப்படுகின்றது.ஏதேனும் ஏற்பாடுகளுடன் தொடர்புடைய செலவு ஏதேனும் தேறிய மீள் நிரப்பலுக்காக வருமானக் கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பணப் பெறுமதியின் காலத்தாக்கம் முக்கியமானதாக இருப்பின் பணப் பெறுமதிக் காலத்தில் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கின்ற வரி விகிதத்திற்கு முந்திய எதிர்கால காசுப் பாய்ச்சலில் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் பொருத்தமாயின், பொறுப்பிற்கான இடர்களில் விலைக்கழிவு மூலம் ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. காலப் பெயர்ச்சியின் காரணத்தினால் ஏற்பாடுகளிலுள்ள அதிகரிப்பு வட்டிச் செலவொன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**வரையறுக்கப்பட்ட அனுகூல கடப்பாடுகள்-பணிக்கொடை**

பணிக்கொடை தொடர்பாக நிதிநிலைக் கூற்றில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள பொறுப்பானது, திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறையினைப் பயன்படுத்தி அறிக்கையிடும் கால முடிவிலுள்ள கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாகும். வரையறுக்கப்பட்ட அனுகூல கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியானது பல ஊகங்களை பயன்படுத்தி காப்பீட்டு அடிப்படையில் தீர்மானிக்கபடுகின்ற பல காரணிகளில் தங்கியுள்ளது. இந்ந ஊகங்களானவை பணிக்கொடைச் செலவினை தீர்மானிப்பதில் விலைக்கழிவு, எதர்பார்க்கப்படும் பதவியணியினர் மொத்த வரவு,சம்பள ஏற்ற வீதம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்த ஊகங்களிலுள்ள ஏதேனும் மாற்றமானது பணிக்கொடை கடப்பாட்டினை எடுத்துச்செல்லும் தொகையில் தாக்கம் செலுத்தும்.

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நிருவாகமானது பொருத்தமான விலைக்கழிவு வீ தத்தினை தீர்மானிக்கின்றது. இது வரையறுக்கப்பட்ட அனுகூல கடப்பாடுகளைப் நிறைவேற்றுவதற்கு தேவைப்படுமென எதிர்பார்க்கப்படும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதியினை தீர்மானிப்பதில் பயன்படுத்தப்பட வேண்டிய வட்டி வீதமாகும். விலைக்கழிவு வீதத்தினை தீர்மானிக்கையில், நிருவாகமானது இலங்கையில் கூட்டுத்தாபன பிணைமுறிக்கான பெரிய சந்தை இல்லாததனால் அரசாங்க பிணைகளின் வட்டி வீதத்தினைக் கருத்திற்கொள்கின்றது. வரையறுக்கப்பட்ட அனுகூல கடப்பாடுகளுக்கான ஏனைய முக்கிய ஊகங்கள் தற்போதைய சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

அனைத்து ஊழியர்களுக்குமென LKAS 19- ஊழியர் நலன்களுக்கு ஏற்ப சேவையின் முதல் வருடத்திலிருந்து ஓய்வூதிய பணிக் கொடைகளுக்காக நிதியியல் கூற்றுக்களில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இருந்த போதிலும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், தொடர்ச்சியாக 5 வருட கால சேவையினைப் பூர்த்தி செய்த ஊழியருக்கு மாத்திரமே ஊழியருக்கான பொறுப்பு எழுகின்றது. இது ஒரு வெளிவாரியாக நிதியிடப்பட்டு வரையறுக்கப்பட்ட அனுகூலத்திட்டம் அல்ல.

ஆயுட்காலஇலாபம் மற்றும் நட்டங்கள் அவை தோன்றுகின்ற காலப்பகுதியில் ஏனைய விரிவான வருமானத்தில் அறவிடப்படுகின்றன அல்லது வரவு வைக்கப்படுகின்றன.

**வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டம்-ஊழிய சேமலாப நிதியம் மற்றும் ஊழிய நம்பிக்கை பொறுப்பு நிதியம்**

தொடர்புடைய நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைவாக ஊழியர்கள் ஊழிய சேமலாப மற்றும் ஊழிய நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புகளுக்கு உரித்துடையவராவர். கூட்டுத்தாபனமானது ஊழியர்களின் மொத்த வேதனத்தில் முறையே 15% மற்றும் 3% இனை ஊழிய சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப்

பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்வதோடு ஊழியர்களினால் வழங்கப்படுகின்ற சேவைக் காலத்தில் வருமானக் கூற்றில் ஒரு செலவாக பதிவு செய்யப்படுகின்றது.

### 1.4.10 மூலதன ஒதுக்கு

அரசாங்கத்தின் திரட்டு நிதியிலிருந்து கிடைக்கப்பெற்ற குறித்த தொகைகளும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான பின்னுரித்தாளியின் விநியோகிக்கப்பட்ட மூலதனத்தின் இறுதியாகத் தோன்றுகின்ற மீள் கட்டமைத்தல், விற்பனை வரவுகளின் தேறிய பெறுமதி என்பன மூலதன ஒதுக்கு ஒன்றுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளன.

### 1.4.11 நிதியியல் சாதனங்கள்

சாதனத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான தரப்பினர் ஒருவராக கூட்டுத்தாபனம் ஆகுகின்ற போது, நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நியாயத் தொகையில் இனங்காணப்படுகின்றன.
நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை சுவீகரித்தல் அல்லது மாற்றப்படுவதற்கு நேரடியாகப் பங்களிக்கக்கூடிய கொடுக்கல் வாங்கல் செலவுகள் (இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயத் தொகையிலான நிதியியல் சாதனங்கள் தவிர) ஆரம்ப இனங்காணலில் பொருத்தமான நிதியியல் சாதனங்களின் நியாயப் பெறுமதியில் சேர்க்கப்படுகின்றன அல்லது கழிக்கப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயத் தொகையில் நிதிச் சொத்துக்களை சுவீகரித்தலுக்கு நேரடியாகப் பங்களிக்கக்கூடிய கொடுக்கல் வாங்கல் செலவுகள் இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாக அடையாளப்படுத்தப்படும்.

சொத்துக்கள் காலாவதியாகியதிலிருந்து அல்லது மாற்றப்பட்டதிலிருந்து அத்துடன், கூட்டுத்தாபனம் அனைத்து உரிமைத்துவ இடர்களையும், வெகுமதிகளையும் கணிசமான அளவில் மாற்றம் செய்துள்ள போது காசுப் பாய்ச்சல் கிடைக்கப் பெறுவதற்கான உரிமைகளின் போது, நிதிச் சொத்துக்கள் இனங்காணாது விடப்படுகின்றன. ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடு நிறைவேற்றப்படுகின்ற போது, இரத்துச் செய்யப்படுகின்ற போது அல்லது காலாவதியாகின்ற போது நிதிப் பொறுப்புக்கள் இனங்காணாது விடப்படுகின்றன.

ஆரம்ப இனங்காணலில் குழுவானது அதன் நிதியியல் சாதனங்களை பின்வரும் வகைகளாக வகைப்படுத்துகின்றன.

**(i) கடன்களும் வருமதிகளும்**

கடன்களும் வருமதிகளும், செயற்பாடுமிக்க சந்தையொன்றில் விலை குறிப்பிடாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுமதியற்ற நிதியியல் சொத்துக்களாகும். கூட்டுத்தாபனத்தின் கடன்களும் வருமதிகளும், வர்த்தகரீதியாக கிடைக்கத்தக்கவைகள் ஊழியர் கடன்கள் மற்றும் காசுக்கு சமமானவை ஆகியவற்றை உள்ளடக்குவதுடன், நடைமுறை மற்றும் நடைமுறையற்ற சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கடன்களும் வருமதிகளும் விளைவு வட்டி முறையினைப் பயன்படுத்தி பெறுமதிக் கழிவிற்கான ஏற்பாட்டினைக் கழித்து தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. EIRஇன் ஒருங்கிணைந்தபகுதியொன்றாக இருக்கின்றகட்டணங்கள் அல்லது செலவுகள் மற்றும் சுவீகரித்தல் மீதான விலைக்கழிவு அல்லது தவணைக்கட்டணம் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு தேய்மானச் செலவு கணிக்கப்படுகின்றது.

**(ii) முதிர்வு முதலீட்டுக்காக பிடித்து வைக்கப்பட்டவை**

நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுடன் கூடிய நிதியியல் சொத்துக்கள் அத்துடன் நிலையான முதிர்வுகள் என்பன குழுவானது, முதிர்வுக்காக அவற்றைப் பிடித்து வைத்திருப்பதற்கு சாத்தியம்மான நோக்கத்தினையும், இயலுமையினையும் கொண்டிருக்கின்றபோது முதிர்வுக்காக பிடித்து வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்படுகின்றன.
ஆரம்ப அளவீடுகளின் பின்னர், முதிர்வுக்காக பிடித்து வைக்கப்பட்டவை விளைவு வட்டி முறையினைப பயன்படுத்தி ஏதேனும் பெறுமதிக் குறைவினைக் கழித்து, மதிப்பக் குறைப்பு செலவில் அளவிடப்படுகின்றன. EIRஇன் ஒருங்கிணைந்த பகுதியொன்றாக இருக்கின்றகட்டணங்கள் அல்லது செலவுகள் மற்றும் சுவீகரித்தல் மீதான விலைக்கழிவு அல்லது தவணைக்கட்டணம் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு தேய்மானச் செலவு கணிக்கப்படுகின்றது.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முதிர்வுக்காகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள முதலீடுகள் முதிர்வு வரை அவற்றை வைத்திருப்பதற்கான நோக்கத்துடன் பிடித்து வைக்கப்படுகின்ற திறைசேரி முறிகளை உள்ளடக்குகின்றது.

**(iii) விற்பனைக்கு கிடைக்கத்தக்க முதலீடுகள் (வி.கி.மு)**

விற்பனைக்கு கிடைக்கத்தக்க முதலீடுகளானவை இவ்வகுப்பில் நியமிக்கப்பட்டவையோ அல்லது ஏதேனும்

வேறு வகுப்பில் வகைப்படுத்தப்படாத பெறுமதிகள் அற்றவையாகும். கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காகக் கிடைக்கத்தக்க சொத்துக்களானவை காசுக்கு நிகரானவையாக தகுதி பெறாதவை தவிர பங்கு மூலதனப் பிணைகளிலுள்ள (பட்டியலிடப்பட்ட, பட்டியலிடப்படாத இரண்டும்) முதலீடுகளை உள்ளடக்குகின்றது. விற்பனைக்கு கிடைக்கத்தக்க முதலீட்டு சேமிப்பிலிருந்து இலாப அல்லது இழப்புக் கூற்றில் திரண்ட கிரயம் மறுசீரமைக்கப்படும் போது, அதே வேளையில், ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் இனங்காணப்பட்ட திரண்ட லாபம் அல்லது நட்டம் அல்லது தாக்கம் செலுத்துவதில் தீர்மானிக்கப்பட்ட முதலீடு, முதலீட்டுப் பெறுமதி அங்கீகரிக்கப்படாத வரையில்,OCI இல் இனங்காணப்பட்டு வி.கி.மு சேமிப்பில் வரவு வைக்கப்பட்ட அறியப்படாத வரவுகள் அல்லது இழப்புகளுடன் விற்பனைக்கு கிடைக்கத்தக்க முதலீட்டு நிதிச் சொத்துக்கள் அதனையடுத்து நியாயத் பெறுமதியில் அளவிடப்பட்டன. விலை குறிக்கப்பட்ட பங்கு மூலதன முதலீடுகளுக்கான நியாயப பெறுமதிகள் செயற்பாடு மிக்க சந்தையில் குறிக்கப்படும் பொது விலையினை தொடர்புபடுத்துவதன் மூலம் நேரடியாக நிர்ணயிக்கப்படுகின்றன.

(iv) **தேய்மானச் செலவில் நிதியியல் பொறுப்புக்கள்**

தேய்மானச் செலவில்நிதியியல் பொறுப்புக்களானவை, வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், கடன்களும் கடன் பெறுகைகளும் மற்றும் குறுகிய காலக் கடன் பெறுகைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

ஆரம்ப இனங்காணலின் பின்னர், தேய்மானச் செலவில்வட்டிக்கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள் செயல்திறன் மிக்க வட்டி வீத முறையில் தொடர்ந்து அளவிடப்பட்டன. EIRஇன் ஒருங்கிணைந்த பகுதியொன்றாக இருக்கின்றகட்டணங்கள் அல்லது செலவுகள் மற்றும் சுவீகரித்தல் மீதான விலைக்கழிவு அல்லது தவணைக்கட்டணம் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு தேய்மானச் செலவு கணிக்கப்படுகின்றது.
EIR தேய்மானச் செலவானது வருமானக் கூற்றில் நிதிச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**நிதிச் சொத்துக்களின் பெறுமதிக் குறைப்பு**

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், நிதியியல் சொத்தொன்று பெறுமதி குறைந்துள்ளது என்ற உண்மையான சான்று உள்ளதா என்பதை கூட்டுத்தாபனம் மதிப்பிடுகின்றது. மதிப்பு குறைத்தல் இழப்பு ஒன்றின் உண்மையான சான்று உள்ளதா என்பதை நிர்ணயிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பிரமாணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.
கடனாளியின் முக்கிய நிதியியல் கஷ்டம்

வட்டி மற்றும் அடிப்படை கொடுப்பனவுகளில் மாறுபாடுகள்

கடனாளி வங்குரோதுக்கு அல்லது ஏனைய நிதிசார் மீள் அமைப்பிற்கு உட்படுவார் என்ற நிகழ்வு தோற்றம் பெறுதல். மற்றும்,

நிலுவைகள் அல்லது பொருளாதார நிலைமைகளின் மாறுதல்கள் இயல்புநிலைகளுடன் தொடர்புபடுத்துதல் ஆகிய மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலில் அளவிடக்கூடிய குறைவு உள்ளதாக என சுட்டிக்காட்டுகின்ற கவனிக்கத்தக்க தரவு
சம பங்கு மூலதன பிணையங்களுக்காக,, அதன் செலவினத்தின் கீழ் பாதுகாப்பின் நியாயமான பெறுமதியில் ஒரு குறிப்பிடத்தக்க அல்லது நாட்பட்ட சரிவு சொத்துக்கள் பாதிக்கபட்டுள்ளன என சான்றுபடுத்துகிறது. தீர்மானமானது குறிப்பிடத்தக்க தீர்வினை வேண்டுகிறது. தீர்மானத்தை தயாரிப்பதில்,முதலீட்டின் நியாயமான பெறுமதி அதன் செலவினத்திற்கும், முதலீட்டாளர்களுக்கான நிதியியல் ஆரோக்கியம் மற்றும் குறுகிய கால வணிக நோக்கத்திற்கும் குறைவாக இருக்கும் கால அளவிலும், தொழில் மற்றும் துறை செயல்திறன், தொழில்நுட்பம், செயல்பாட்டு மற்றும் நிதியியல் காசுப்பாய்ச்சலின் மாற்றங்கள் ஆகியவை உட்பட, முகாமைத்துவமானது ஏனைய காரணிகளையும் மதிப்பிடுகின்றது.

அத்தகைய சான்றுகள் காணப்படுமிடத்து, பெறுமதிக் குறைப்பு நட்டமொன்றினை கூட்டுத்தாபனம் பின்வரிமாறு இனங்காண்கின்றது. தேய்மானச் செலவில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துக்கள்; நட்டமானது கடன் அல்லது பெறுகையின் தேய்மானச் செலவு மற்றும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான சாதனத்தின் அடிப்படை விளைவு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி கழிவு செய்யப்பட்ட வேறுபாடாகும்.சொத்தின் கொண்டு செல்லும் தொகையானது கணக்கிற்கு ஒதுக்கீடு ஒன்றின் பயன்பாட்டின் ஊடாக நேரடியாகவோ, நேரடியின்றியோ இத்தொகையினால் குறைக்கப்படுகின்றது.

(ii). விற்பனை நிதியியல் சொத்துக்காகக் கிடைக்கத்தக்கவை; பெறுமதிக் குறைப்பு

நட்டமானது சொத்தின் அடிப்படை செலவிற்கும் அளவீட்டுத் திகதியில் உள்ளவாறு அதன் நியாயப் பெறுமதிக்கும் இடையிலான விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட ஏதேனும் முன்னைய பெறுமதிக் குறைப்பு நட்டங்களைக் கழித்த வேறுபாடொன்றாகும்.

பெறுமதிக் கழிக்கப்பட்ட செலவில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துக்கள் மீதான பெறுமதிக் குறைப்பு நட்டங்கள், பெறுமதிக் குறைப்பு இனங்காணப்பட்ட பின்னர் நிகழ்கின்ற நிகழ்வொன்றுக்கு பொருண்மையாக தொடர்புபடக் கூடிய நட்டக் குறைப்புகளினது தொகையாகவிருப்பின் அதனைத் தொடர்ந்த காலத்தில் மறுசீரமைக்கப்படுகின்றன. விற்பனைக்கு கிடைக்கத்தக்க சமமான சாதனங்கள் மீதான சேத இழப்பு நட்டம் மறுசீரமைக்கப்படாது.
விற்பனைக்கு கிடைக்கத்தக்க சமமான சாதனமொன்று சேத இழப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் போது தீர்மானிப்பதற்கு கூட்டுத்தாபனமானது LKAS39 எனும் வழிகாட்டலை பின்பற்றுகிறது.

## 1.5 எதிர்பாரா பொறுப்புகள், வழக்காடல்கள் மற்றும் கடமைப் பொறுப்புகள்

பொருளாதார நலன்களை மாற்றுவது நிகழாததாக அல்லது நம்பகத்தகுந்தவாறு அளவிடமுடியாததாக இருக்கின்ற நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்போதைய கடப்பாடுகள் மூலம் மாத்திரம் அதன் உள்ள தன்மை உறுதிப்படுத்தப்படும் சாத்தியமான கடப்பாடுகள் எதிர்பாராப் பொறுப்புகளாகும். எதிர்பாராப் பொறுப்புகள் நிதிநிலைக் கூற்றில் இனங்காணப்படவில்லை எனினும் அவை சேய்மையில் இல்லாதவிடத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 கணக்கீட்டு நியமங்கள் வெளியிடப்பட்டது எனினும் இன்னும் பயனுறுதி வாய்ந்ததாக இல்லை

எதிர்காலத்தில் செல்லுபடியாகும் திகதியினைக் கொண்டுள்ளஇலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் பின்வரும் SLFRSவெளியிடப்பட்டுள்ளதுடன், இந்த நிதியியல் கூற்றுக்களை தயாரிப்பதில் அவை பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது கூட்டுத்தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் SLFRS ஆகியவை ஒரு விளைவினை ஏற்படுத்துவதுடன் எதிர்கால நிதியியல் கூற்றுக்களில் ஒரு தாக்கத்தினையும் ஏற்படுத்தலாம்.

அ) SLFRS 9- நிதியியல் சாதனங்கள்; வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்
வெளியிடப்பட்டவாறான SLFRS 9 ஆனது,LKAS 39மாற்றத்தின் முதல் கட்டத்தை பிரதிபலிப்பதுடன் நிதி சொத்துகளில் சேதத்தை கணக்கிடுவதற்காக எதிர்பார்க்கப்பட்ட புதியகடன் இழப்பு மாதிரி ஒன்று உட்பட, நிதியியல் சாதனங்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடலுக்கு பயன்படுத்தப்படுகின்றது.
2018 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வருடாந்த காலப்பகுதிகளுக்கு இந்த நியமம் பயனுறுதி வாய்ந்ததாக இருக்கின்றது.

(ஆ) SLFRS 15- வாடிக்கையாளர்களுடான ஒப்பந்தங்களிலிருந்து கிடைக்கும் வருமானம்-
SLFRS 15 ஆனது வருமானத்தை அடையாளம் காணும்பொழுதும், அது எவ்வளவு என்பதை தீர்மானிப்பதற்கான
விரிவானதொருவரைவுச்சட்டக
வேலையைஉருவாக்குகின்றது.அது
எல்.கே.ஏ.எஸ்18வருமானம், எல்.கே.ஏ.எஸ்11 நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் ஐ.எப்.ஆர்.ஐ.சீ 13 வாடிக்கையாளர் உண்மைப்பற்றுறுதி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை உட்பட இருக்கின்ற வருமான அங்கீகார வழிகாட்டலை மாற்றீடுசெய்கின்றது. இந்த நியமம் 2018ம்ஆண்டு ஜனவரி மாதம் 01ம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கின்ற ஆண்டுக் காலப்பகுதிக்குபயனுறுதி வாய்ந்ததாக இருக்கும். இத்தகைய நியமங்கள் பயனுறுதி வாய்ந்ததாக இருக்கும் பொழுதுகூட்டுத்தாபனம் அவற்றை பின்பற்றும்.விரிவான மீளாய்வுப் பூர்த்தியானதுமுடிவுறாதநிலையில்,இந்த நிதிக்கூற்றுக்களின் வெளியீட்டுத் திகதியில் நிதியின் தாக்கம் நியாயமான மதிப்பீடாக இருக்காது

## 1.7 புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம்

புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டமூலம் 2017 செப்ரெம்பர் 07ம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதோடு, அது 2018 ஏப்பிரல் 01ம் திகதியிலிருந்து செயல் வலுவுடையதாக இருக்கும். இந்தச் சட்டம் தற்போது

குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைகள் மீது விளைவை

ஏற்படுத்துவதுடன், எதிர்கால நிதிக்கூற்றுக்களில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

இந்தச் சட்டம் நடைமுறைக்குவரும்பொழுது கூட்டுத்தாபனம் அதற்கு இணங்கியொழுகும். விரிவான மீளாய்வுப் பூர்த்தியானது முடிவுறாதநிலையில், இந்த நிதிக்கூற்றுக்களின் வெளியீட்டுத் திகதியில் நிதியின் தாக்கமானது நியாயமான மதிப்பீடாக இருக்காது

| 2. வருமானம் | 2016 ரூபா.மில் | 2015 ரூபா.மில் | 2016 ரூபா.மில் | 2015 ரூபா.மில் |
|---|---|---|---|---|
| உள்ளூர் | 439,454.172 | 368,847.714 | 439,454.172 | 368,399.502 |
| ஏற்றுமதி | 35,117.794 | 44,279.605 | 35,117.794 | 44,279.605 |
| கப்பல் எரிபொருள் | 478.988 | 1,368.369 | 478.988 | 1,363.413 |
| முனையச் செலவும் ஏனையவையும் | - | - | 382.561 | 980.332 |
| மொத்த விற்பனை | 475,050.954 | 414,495.688 | 475,433.515 | 415,022.852 |
| கழி: மதுவரி & NBT | (51,989.903) | (37,761.201) | (51,989.903) | (37,761.200) |
| **தேறிய வருமானம்** | **423,061.051** | **376,734.487** | **423,443.612** | **377,261.652** |

| 3. ஏனையதொழிற்பாட்டு வருமானம் | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2016 ரூபா.மில் | 2015 ரூபா.மில் | 2016 ரூபா.மில் | 2015 ரூபா.மில் |
| முதலீட்டுச்சொத்துக்கள் மீதான வருமானம் | 38.634 | 47.590 | 38.634 | 47.590 |
| மண்ணெண்ணை மானியம் | 2,982.000 | 3,860.000 | 2,982.000 | 3,860.000 |
| பணியாட்டொகுதியினர் கடன் வட்டி | 161.980 | 173.181 | 477.960 | 530.949 |
| வாடகை வருமானம் | 18.512 | 12.251 | 21.089 | 56.030 |
| PPE விற்பனை மீதான இலாபம்/(நட்டம்) | 36.414 | 20.212 | 87.659 | 28.524 |
| எரிபொருள் நிரப்பும் நிலைய உபகரண விற்பனை மீதான இலாபம் | 15.429 | 16.642 | 15.429 | 16.642 |
| பங்கிலாப வருமானம் | 292.502 | 0.004 | 0.002 | 0.004 |
| சில்லறை வருமானம் | 42.968 | 104.100 | 149.317 | 204.495 |
| | **3,588.439** | **4,233.981** | **3,772.090** | **4,744.234** |

| 4.தொழிற்பாட்டு இலாபம் | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2016 ரூபா.மில் | 2015 ரூபா.மில் | 2016 ரூபா.மில் | 2015 ரூபா.மில் |
| பின்வரும் செலவினங்களை செலுத்தியதன் பிற்பாடு தெரிவிக்கப்பட்ட தொழிற்பாட்டு இலாபம் | | | | |
| பணிப்பாளர் வேதனாதிகள் | 1.762 | 2.487 | 9.114 | 2.487 |
| கணக்காய்வாளர் ஊதியம் | 2.108 | 1.000 | 3.874 | 1.000 |
| பெறுமானத்தேய்வு (குறிப்பு 8 ) | 642.800 | 758.605 | 749.721 | 698.950 |
| விளம்பரச் செலவுகள் | 37.491 | 30.057 | 37.491 | 30.057 |
| சட்ட விதிப்பணமும் ஏனையதொழில்சார் கட்டணங்களும் | 125.467 | 67.119 | 125.467 | 67.119 |
| அனுமதிக்கப்படாத பெறுமதி சேர்வரி | 1,345.762 | 1,280.392 | 1,345.762 | 1,280.392 |
| பொதுத் திறைசேரிக்கான விஷேட கட்டணம் | 1,000.000 | 750.000 | 1,000.000 | 750.000 |
| அறவிடமுடியாக்கடன்/ பதிவழிப்பு | - | 8.405 | - | 8.405 |

| 5. நிதி வருமானம் | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2016 ரூபா.மில் | 2015 ரூபா.மில் | 2016 ரூபா.மில் | 2015 ரூபா.மில் |
| | | | - | |
| திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புக்கள் மற்றும் அழைப்ப | 4,142.347 | 2,930.491 | 4,232.716 | 2,956.301 |
| வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மீதான வட்டி வருமானம் | 0.883 | 1.045 | 0.883 | 1.045 |
| கடன் பட்டியல், நிலுவை வர்த்தகப் படுகடன்கள் மீதான வட்டிவரும | 26.748 | 42.664 | 26.748 | 42.664 |
| இமிச/சுயாதீன மின் உற்பத்தியாளர்கள், விமானத்துறை கடன்படுனர் | 676.857 | 1,105.732 | 676.857 | 1,105.732 |
| திறைசேரி முறிகள் மீதான வட்டிவருமானம் | 3,527.277 | 931.738 | 3,527.277 | 931.738 |
| | **8,374.112** | **5,011.670** | **8,464.482** | **5,037.480** |

| 6. நிதிச் செலவுகள் | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2016 ரூபா.மில் | 2015 ரூபா.மில் | 2016 ரூபா.மில் | 2015 ரூபா.மில் |
| நீண்ட காலக்கடன்கள் மீதான வட்டி | 50.513 | 61.147 | 217.288 | 61.147 |
| வெளிநாட்டு நாணய வங்கிக் கடன்கள் மீதான வட்டி | 11,340.254 | 14,975.672 | 11,340.254 | 14,975.672 |
| ஏனைய நிதிச் செலவுகள் | 13.770 | 11.841 | 13.770 | 11.841 |
| | **11,404.537** | **15,048.660** | **11,571.312** | **15,048.660** |

| 7.வரிச் செலவினம் | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2016<br>ரூபா.மில் | 2015<br>ரூபா.மில் | 2016<br>ரூபா.மில் | 2015<br>ரூபா.மில் |
| **நடைமுறை வரி** | | | | |
| நடைமுறை வருமான வரி | 12,186.470 | 634.384 | 12,401.254 | 746.274 |
| முன்னைய ஆண்டுகளிற்கான ஏற்பாட்டின் கீழ் | - | - | 45.782 | 28.308 |
| விநியோகித்தக்க இலாபம் மீதான வரி | 4,340.132 | - | 4,340.132 | 94.906 |
| **:பிற்போடப்பட்ட வரி:** | | | | |
| தற்காலிக வேறுபாட்டின் தோற்றமும் திரும்புகையும் - வருமானக் கூ | - | - | 363.38 | 51.881 |
| **வருமான வரி செலவு - வருமானக் கூற்று** | **16,526.602** | **634.384** | **17,150.545** | **921.369** |
| **வருமானவரி செலவு - ஏனைய முழு மொத்த வருமானம்** | **-** | **-** | **33.409** | **-** |
| **மொத்த வருமானவரி செலவு** | **16,526.602** | **634.384** | **17,183.955** | **921.369** |

**நடைமுறை வரி விதிப்பணத்திற்கும் வரிக்கு முன்னுள்ள இலாபத்திற்கும் இடையிலான இணக்கக்கூற்று கீழே தரப்பட**

| | | | | |
|---|---|---|---|---|
| **வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம்** | **69,553.681** | **(19,885.780)** | **71,589.544** | **(17,923.324)** |
| | | | - | - |
| கூட்டுக: அனுமதிக்க முடியாச்செலவு | 1,086.100 | 858.445 | 2,363.373 | 2,078.744 |
| கழி: அனுமதிக்கக்கூடிய செலவுகள் மற்றும் விதி விலக்கு வருமானப் | (3,309.971) | (2,689.360) | (4,495.215) | (3,886.062) |
| **சீராக்கப்பட்ட வியாபார இலாபம்** | **67,329.811** | **(21,716.694)** | **69,457.702** | **(19,730.642)** |
| கழி: வரி நட்டங்களின் பயன்பாடு | (23,563.094) | (1,380.693) | (24,410.830) | (2,001.046) |
| கூட்டு: ஆண்டுக்கான வரி நட்டங்கள் | - | 25,363.045 | - | 25,363.045 |
| **வரிசெலுத்தவேண்டிய வருமானம்.** | **43,766.717** | **2,265.659** | **45,046.872** | **3,631.358** |
| 28% **விதிக்கப்பட்ட வருமான வரி** | | | | |
| | 12,136.716 | **634.384** | 12,136.716 | **634.384** |
| சலுகை வீதங்கள் | 49.754 | | 264.538 | **111.890** |
| முன்னைய ஆண்டுகளின் ஏற்பாட்டின் கீழ் | - | - | 45.782 | 28.308 |
| விநியோகித்தக்க இலாபம் மீதான வரி | 4,340.132 | - | 4,340.132 | 94.906 |
| வருமானக்கூற்றுக்கான பிற்போடப்பட்ட வரிக்கட்டணம் | - | - | 363.378 | 51.881 |
| தற்காலிக வேறுபாட்டின்தோற்றமும் திரும்புகையும் - OCI | **-** | **-** | 33.409 | **-** |
| **வருமான வரி செலவு** | **16,526.602** | **634.384** | **17,183.955** | **921.369** |

2006 உள்நாட்டு இறைவரி சட்ட இல 10 மற்றும் திருத்தங்களின் பிரகாரம் மொத்த இலாபத்தில் 25% பங்கிலாபமாக அரசாங்கத்திற்குசெலுத்தப்பட்டால், 2011/ 2012 வரியாண்டுகளிலிருந்து ஆரம்பிக்கின்ற 05 வருட காலத்திற்கு இலாபம் மற்றும் வருமானத்தின் மீது வருமானவரி செலுத்துவதிலிருந்து கூட்டுத்தாபனம் விலக்களிக்கப்பட்டது.

ஆயினும், கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்கு ஏதேனும் பங்கிலாபத்தை செலுத்தாவிடில், உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது கோரப்பட்ட வருமான விலக்களிப்பினை பெற முயலுகிகின்றது. 2011/12 ,2012/13, 2013/14 மற்றும் 2014/15 ஆகிய மதிப்பீட்டு ஆண்டுகளுக்கு முறையே ரூபா 65115350, 91665432, 99942556 மற்றும் 723091623 ரூபா பெறுமதியான மதிப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இ. பெ. கூட்டுத்தாபனம் அந்த மதிப்பீடுகளுக்குச் செல்லுபடியான மேன்முறையீடுகளைச் செய்துள்ளது.

| 8. ஆதனபொறித்தொகுதி உபகரணங் | காணியும் கட்டடமும் | உரித்தளிக்கப்பட்ட ஆதனம் | பொறி, இயந்திரம், உபகரணங்கள். | SPM வசதி | மோட்டார் வாகனங்கள் | தளபாடம்/பொருத்துதல்கள்,அலுவலக உபகரணம், ஏனைய சொத்துக்கள் | தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலை | இ.பெ. கூ. தொகை | குழுத்தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | | ரூபா.மில் |
| **8.1.கிரயம்** | | | | | | | | | |
| 2016/01/01 இல் மீதி | 4,436.351 | 1.016 | 8,747.344 | 2,142.422 | 851.790 | 2,163.890 | 3,494.321 | 21,837.133 | 49,443.830 |
| சேர்த்தல்கள்/மாற்றல்கள் | 56.329 | | 2,289.298 | | 151.143 | 45.125 | (2,064.237) | 477.658 | 1,391.069 |
| 2015 இற்கான ஒருங்கிணைப்பு | | | | | | | | | - |
| சீராக்கல்கள் | (0.019) | | (6.266) | | (13.251) | (4.823) | | (24.358) | (118.599) |
| | | | | | | | | | - |
| **31/12/2016 இல் மீதி** | **4,492.661** | **1.016** | **11,030.376** | **2,142.422** | **989.683** | **2,204.191** | **1,430.084** | **22,290.433** | **50,716.300** |
| | | | | | | | | | |
| 8.2 பெறுமானத்தேய்வு | | | | | | | | | |
| 01/01/2016 ல் மீதி | 573.626 | 0.397 | 4,209.625 | 1,290.634 | 338.794 | 1,552.235 | - | 7,965.311 | 18,884.598 |
| ஆண்டிற்கான விதிப்பணம் | 112.730 | | 526.115 | | 134.640 | 64.422 | - | 837.907 | 1,638.847 |
| அகற்றல்கள் | | | (0.367) | | (13.251) | (4.823) | - | (18.441) | (112.656) |
| | | | | | | | | | - |
| 31/12/2016 இல் மீதி | 686.357 | 0.397 | 4,735.372 | 1,290.634 | 460.184 | 1,611.834 | - | 8,784.778 | 20,410.789 |
| | | | | | | | | | |
| **31.12.2016 இல் தேறிய புத்தகப் பெறு** | **3,806.304** | **0.619** | **6,295.003** | **851.788** | **529.499** | **592.358** | **1,430.084** | **13,505.655** | **30,305.510** |
| | | | | | | | | | |
| 31.12.2015 இல் கிரயம் | 4,436.351 | 1.016 | 8,747.344 | 2,142.422 | 851.790 | 2,163.890 | 3,494.321 | 21,837.133 | 49,409.912 |
| 31.12.2015 இல் திரட்டிய தேய்மானம் | 573.626 | 0.397 | 4,209.625 | 1,290.634 | 338.794 | 1,552.235 | - | 7,965.311 | 18,884.598 |
| **31.12.2015 இல் தேறிய புத்தகப் பெறுட** | **3,862.724** | **0.619** | **4,537.719** | **851.788** | **512.996** | **611.654** | **3,494.321** | **13,871.821** | **30,525.314** |

விலை மதிப்பு திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட விலைமதிப்பின் பிரகாரம் கூ.தாபனத்தின் காணி மற்றும் கட்டடங்களின் சந்தைப் பெறுமதி 12,658 மில். ரூபா.

| 8.3 முதலீட்டுச்சொத்து | இபெ.கூ 2016 | 2015 மீளக்குறிப்பிடப் பட்டது | குழு 2016 | 2015 மீளக் குறிப்பிடப்பட்டது |
|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| **கிரயம்** | | | | |
| ஆண்டு ஆரம்பத்தில் மீதி(மீளக்குறிப்பிடப்பட்டது) | 57.891 | 37.607 | 57.891 | 37.607 |
| கூட்டுக :சேர்த்தல்கள் / மாற்றல்கள் | - | 20.285 | - | 20.285 |
| ஆண்டு இறுதியில் மீதி | 57.891 | 57.891 | 57.891 | 57.891 |
| **பெறுமானத்தேய்வு** | | | | |
| ஆண்டு ஆரம்பத்தில் மீதி | 14.869 | 9.879 | 14.869 | 9.879 |
| கூட்டு : PPE இல் இருந்து மாற்றல்கள் | | 3.543 | | 3.543 |
| கூட்டு: ஆண்டுக்கான விதிப்பணம் | 1.447 | 1.447 | 1.447 | 1.447 |
| ஆண்டு இறுதியில் மீதி | 16.316 | 14.869 | 16.316 | 14.869 |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | **41.575** | **43.022** | **41.575** | **43.022** |

முதலீட்டு ஆதனமானது துர்ஸ்ரன் வீதி, ப்ளவர் வீதியில் அமைந்துள்ள சொத்துக்களை உள்ளடக்கியுள்ளது. அத்துடன் வாடகைக்கு விடப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் கொண்டுள்ளன.

| பெறுமானத்தேய்வு | சந்தைப்பெறுமதி மில்.ரூபா |
|---|---|
| No.80, பிளவ்வர் வீதி, கொழும்பு 07<br>No.22/1,துர்ஸ்ரன் வீதி, கொழும்பு 03 | 40.000 |
| நிரப்பும் நிலையங்கள் | 18.283 |

முதலீட்டு ஆதனங்களின் உண்மையான பெறுமதி விலைமதிப்புத் திணைக்களத்தினால் 2012 , 2016 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் இருந்தது. அவைகள் கூட்டுத்தாபனத்துடன் சம்பந்தப்படாத உண்மையான மதிப்பீடுகளாக உள்ளது.

| கட்புலனாகா சொத்துக்கள் | குழு ERP kமுறைமை | SAP உரிமம் | தானியங்கு அமைப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| ஆண்டு ஆரம்பத்தில் | | | | |
| கிரயம் /எடுக்கப்பட்டபெறுமதி | 412.497 | 9.380 | 37.793 | 459.670 |
| சேர்த்தல்கள் / மாற்றல்கள் | - | - | - | - |
| ஆண்டு இறுதியில் மீதி | **412.497** | **9.380** | **37.793** | **459.670** |
| **பெறுமதிக் கழிவு** | | | | |
| ஆண்டு ஆரம்பத்தில் மீதி | 411.410 | 6.111 | 24.600 | 442.320 |
| ஆண்டுக்கான விதிப்பனவு | 0.304 | 1.876 | 7.560 | 9.741 |
| ஆண்டு இறுதியில் மீதி | 411.714 | 7.987 | 32.160 | 452.061 |
| **எடுக்கப்பட்டபெறுமதி** | | | | |
| **31.12.2016 இல்** | **0.783** | **1.393** | **5.633** | **7.609** |
| **31.12.2015 இல்** | **1.040** | **4.216** | **12.094** | **17.350** |

| 9. துணைக் கம்பனியில் முதலீடு | இபெ.கூ | | இபெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2015 | 2016 | 2015<br>மீள்-<br>குறிப்பிடப்பட் | 2016 | 2015<br>மீள்-<br>குறிப்பிடப் |
| | வைத்திருப்பனை | வைத்திருப்பனை | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஞ் ரேமினல்ஸ் | 66.67% | 66.67% | 5,000.000 | 5,000.000 | - | - |
| | | | **5,000.000** | **5,000.000** | **-** | **-** |

| 10. நடைமுறையல்லா நிதிச்சொத்துக்கள் | குறிப்பு | இபெ.கூ 2016<br>ரூபா.மில் | இபெ.கூ 2015<br>மீள்-குறிப்பிடப்பட்டது<br>ரூபா.மில் | குழு 2016<br>ரூபா.மில் | குழு 2015<br>மீள்-குறிப்பிடப்பட்டது<br>ரூபா.மில் |
|---|---|---|---|---|---|
| கோரப்பட்ட பங்கு மூலதன முதலீடுகள் | 10.1 | 29.500 | 39.500 | 29.500 | 39.500 |
| கோரப்படாத பங்கு மூலதன முதலீடுகள் | 10.2 | 5.626 | 5.626 | 5.626 | 5.626 |
| பங்கு மூலதன முதலீடுகள் அற்றவை | 10.3 | 35,560.335 | 36,680.156 | 35,560.335 | 36,680.157 |
| | | **35,595.461** | **36,725.282** | **35,595.461** | **36,725.283** |

| 10.1.கோரப்பட்ட பங்கு மூலதன முதலீடுகள் | இபெ.கூ 2016<br>ரூபா.மில் | இபெ.கூ 2015<br>மீள்-குறிப்பிடப்பட்டது<br>ரூபா.மில் | குழு 2016<br>ரூபா.மில் | குழு 2015<br>மீள்-குறிப்பிடப்பட்டது<br>ரூபா.மில் |
|---|---|---|---|---|
| லங்கா சீமெந்ற் லிமிடட் | | | | |
| முழுமையா கொடுப்பனவி செய்யப்பட்ட ஒவ்வொன்றும் 10/= ரூபாகொண்ட | 39.500 | 33.000 | 39.500 | 33.000 |
| சந்தைப்பெறுமதி மாற்றங்களுக்கான சீராக்கம் | (10.000) | 6.500 | (10.000) | 6.500 |
| | **29.500** | **39.500** | **29.500** | **39.500** |

| 10.2.கோரப்படாத பங்கு மூலதன முதலீடுகள் | இபெ.கூ 2016<br>ரூபா.மில் | இபெ.கூ 2015<br>மீள்-குறிப்பிடப்பட்டது<br>ரூபா.மில் | குழு 2016<br>ரூபா.மில் | குழு 2015<br>மீள்-குறிப்பிடப்பட்டது<br>ரூபா.மில் |
|---|---|---|---|---|
| **அசோஸியேற்றட் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிடட்** | | | | |
| ஒவ்வொன்றும் 10/= ரூபா கொண்ட 61,206 சாதாரண பங்குகள் | 0.539 | 0.539 | 0.539 | 0.539 |
| **லங்கா லேலன்ட் லிமிடட்** | | | | |
| ஒவ்வொன்றும் 10/= ரூபா பெறுமதியான 100 சாதாரண பங்குகள் | 0.001 | 0.001 | 0.001 | 0.001 |
| **சர்வதேச கூட்டுறவு பெற்றோலிய அமையம்** | | | | |
| ஒவ்வொன்றும் 100 அ.டொ பெறுமதியான முழுமையாக கொடுப்பனவு செய்யப்பட்ட 5,499 பங்குகள் | | | | |
| ஐக்கிய அமெரிக்காவில் கூட்டிணைக்கப்பட்டது. | 5.086 | 5.086 | 5.086 | 5.086 |
| | **5.626** | **5.626** | **5.626** | **5.626** |

விற்பனை முதலீட்டிற்காக கிடைக்கத்தக்கவையாக வகைப்படுத்தப்பட்ட கோரப்படாத முதலீடுகள் செலவில் கொண்டுசெல்லப்படுகின்றன. அறிக்கை திகதியன்று கடன் இறுக்கக்கூடிய அதிகூடிய வெளிப்பாடானது விற்பனைக்காக கிடைக்கத்தக்கவையாக வகைப்படுத்தப்பட்ட பங்கு மூலதனப் பிணையங்கள் கொண்டு செல்லப்படுகின்ற பெறுமதியாகும் . விற்பனைக்காக கிடைக்கத்தக்கவையாக வகைப்படுத்தப்பட்ட நிதிச்சொத்துக்கள் எதுவும் கடந்தகால நிலுவையோ அல்லது மதிப்புக் குறைக்கப்பட்டவையோ அல்ல.

| 10.3.பங்குமூலதனமற்ற முதலீடுகள் | இபெ.கூ 2016<br>ரூபா.மில் | இபெ.கூ 2015<br>மீள்-குறிப்பிடப்பட்டது<br>ரூபா.மில் | குழு 2016<br>ரூபா.மில் | குழு 2015<br>மீள்-குறிப்பிடப்பட்டது<br>ரூபா.மில் |
|---|---|---|---|---|
| நிலையானவைப்புக்களில் முதலீடு | 5.000 | 5.000 | 5.000 | 5.000 |
| திறைசேரி முறிகளில் முதலீடு | 35,555.335 | 36,675.156 | 35,555.335 | 36,675.157 |
| | **35,560.335** | **36,680.156** | **35,560.335** | **36,680.157** |

| 11 .வணிக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை | இ.பெ.கூ 2016 நடைமுறையிலுள்ளவை | | 2015 மீள்-குறிப்பிடப்பட்டது நடைமுறையிலுள்ளவை | |
|---|---|---|---|---|
| | நடைமுறையிலுள்ளவை | நடைமுறையிலற்றவை | நடைமுறையிலுள்ளவை | நடைமுறையிலற்றவை |
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| வணிக கிடைக்கப் பெறத்தக்கவைகள் | 33,262.256 | | 18,734.682 | |
| ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவைகள் | 6,804.863 | 0.667 | 3,859.510 | 286.372 |
| வைப்புக்களும், முற்கொடுப்பனவுகளும் | 1,315.836 | 7,372.314 | 1,291.124 | 8,687.995 |
| முற்பணம் | 6,971.339 | | 2,924.956 | |
| ஊழியர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | 43.681 | 2,953.727 | 49.044 | 2,701.287 |
| | **48,397.974** | **10,326.708** | **26,859.315** | **11,675.654** |

ஸ்ரீலங்கா எயர்லைன்ஸ் லிமிடெட்டினால் 7,900,000,000 ரூபாவினை அமெரிக்க டொலருக்கு மாற்றம் செய்வது தொடர்பாக 2015ம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் 307,063,541 ரூபா நாணயமாற்று வேறுபாடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா எயர்லைன்ஸ் லிமிடெட்டுடனான மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கலந்துரையாடலின் பிரகாரம் ஸ்ரீலங்கா எயர்லைன்ஸ் லிமிடெட்டுக்கும், கூட்டுத்தாபனத்திற்குமிடையில் இந்த நாணயவேறுபாட்டினை சரிசமமாக பங்கிடுவதற்கு உடன்பாடு காணப்படுகின்றது. அதன்பிரகாரம் அமைச்சரவையிடமிருந்து அவசியமான அங்கீகாரத்தைப்பெற்றுக்கொள்வதற்காக தொடர்பான அமைச்சுக்களுக்கு இவ் விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது.

| | குழு 2016 | | 2015 மீள்-குறிப்பிடப்பட்டது | |
|---|---|---|---|---|
| | நடைமுறை | நடைமறையற்ற | நடைமுறை | நடைமறையற்ற |
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| வணிக கிடைக்கப் பெறத்தக்கவைகள் | 34,404.904 | - | 18,539.259 | - |
| ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவைகள் | 6,804.863 | 0.667 | 5,273.516 | 7,969.288 |
| வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும் | 2,301.942 | 7,372.314 | 1,293.132 | 719.374 |
| முற்பணம் | 6,971.339 | - | 2,924.956 | - |
| ஊழியர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | 1,963.851 | 3,395.451 | 2,533.294 | 2,701.287 |
| | **52,446.899** | **10,768.432** | **30,564.156** | **11,389.949** |

வணிகப்பெறுவனவுகளின் பெறுமதி குறைப்பிற்கான ஏற்பாடுகளின் அசைவு பின்வருமாறு.

| | இ.பெ.கூ 2016 | 2015 மீள்-குறிப்பிடப்பட்டது |
|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் |
| ஜனவரி 01 இல் மீதி | 52.099 | 45.272 |
| கழி: அறவிடப்பட்டதொகை | - | (1.391) |
| கழி: பதிவழிப்புச் செய்யப்பட்டதொகை | (1.092) | (0.001) |
| கூட்டு: ஆண்டுக்கான ஏற்பாடு | (1.386) | 8.219 |
| டிசம்பர் 31ல் மீதி | **49.621** | **52.099** |

| 12 நிதியியல் சாதனங்கள்<br>வகுப்புவாரியாக நிதியியல்சொத்துக்கள் | இ.பெ.கூ 2016 | 2015 மீள்-குறிப்பிடப்பட்டது | குழு 2016 | 2015 மீள்-குறிப்பிடப்பட்டது |
|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| **<u>கடன்களும் கிடைக்கப்பெறத்தக்கவைகளும்</u>** | | | | |
| வணிகம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவைகள் | 38,476.763 | 21,467.349 | 41,981.305 | 23,685.259 |
| வங்கி வைப்புக்கள் | 27,149.417 | 11,725.182 | 27,149.417 | 11,725.182 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 14,579.410 | 51,058.236 | 17,034.827 | 51,806.202 |
| **<u>விற்பனைக்காக கிடைக்கக்கூடிய நிதிச்சொத்துக்கள்</u>** | | | - | - |
| கோரப்பட்ட & கோரப்படாத பங்கு மூலதன முதலீடுகள் | 35.126 | 45.126 | 35.126 | 45.126 |
| **<u>முதிர்வுக்காக வைக்கப்பட்டவை</u>** | | | - | - |
| திறைசேரி பிணை முறிகளில் | 36,476.761 | 37,659.833 | 36,476.761 | 37,659.833 |
| **மொத்தம்** | **116,717.477** | **121,955.727** | **122,677.437** | **124,921.603** |

| வகுப்புவாரியாக நிதியியல் பொறுப்புக்கள் | இ.பெ.கூ 2016 | 2015 மீள்-குறிப்பிடப்பட்டது | குழு 2016 | 2015 மீள்-குறிப்பிடப்பட்டது |
|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| **<u>மதிப்பிறக்க கிரயத்தில் நிதியியல் பொறுப்புக்கள்</u>** | | | | |
| கடன் பெறுகைகள் | 193,987.471 | 267,925.753 | 195,497.637 | 270,106.264 |
| வணிகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியனவைகள் | 146,061.828 | 133,852.746 | 143,480.550 | 140,744.649 |
| **மொத்தம்** | **340,049.300** | **401,778.499** | **338,978.187** | **410,850.913** |

## 12.1கு நிதி சாதனங்களின் நியாயமான மதிப்பு

குழுமத்தின் நிதியியல் கூற்றுக்களின் நிதி சாதனங்களாக வகைப்படுத்தவற்றின் செலுத்தும் தொகை மற்றும் நியாயமான மதிப்பு என்பவற்றின இடையிலான ஒப்பீடு கீழே காட்டப்பட்டுள்ளது.

| இ.பெ.சு 31 இல் உள்ளவாறு | | செலுத்தும் தொகை | | நியமான மதிப்பு | |
|---|---|---|---|---|---|
| | | 2016 | 2015 | 2016 | 2015 |
| | | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| **நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| நடைமுறயற்ற நிதிச் சொத்துக்கள | | | | | |
| கோரப்பட்ட பங்கு முதலீடுகள் | 12.1.1 | 29.500 | 39.500 | 29.500 | 39.5 |
| கோரப்படாத பங்கு முதலீடுகள் | 12.1.2 | 5.626 | 5.626 | 5.626 | 5.626 |
| நிலையான வைப்புக்களில் முத | 12.1.3 | 5.000 | 5.000 | 5.000 | 5.000 |
| திறைசேரி முறிகளின் முதலீடு | 12.1.1 | 35,555.335 | 36,675.156 | 32,758.459 | 36,056.856 |
| வர்த்தக பிற வருமதிகள் | 12.1.4 | 38,476.763 | 21,467.349 | 38,476.763 | 21,467.349 |
| குறுங்கால முதலீடுகள் | | | | | |
| வங்கி வைப்புக்கள் | 12.1.3 | 27,144.417 | 11,720.182 | 27,144.417 | 11,720.182 |
எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

(அ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - சீபிசீ

இந்த அறிக்கையின் 2.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

(ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 தொகுதி நிதிக்கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனிக்குள் உள்ள கொடுக்கல் வாங்கல்கள் ஒன்றுக்கொன்று இல்லாமல் செய்ய வேண்டும். எனினும், இலங்கை பெற்றோலியக் ஸ்ரோரேஜ் ரேமினல் கம்பனியின் (சீபிஎஸ்ரீஎல்) இடமிருந்து பெறவேண்டியவையாகவும் அதற்கு கொடுக்க வேண்டியதுமாக முறையே சீபிசீயின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகையும் சீபிஎஸ்ரீஎல் இன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அதற்கு நேரொத்த தொகையும் முறையே ரூபா 39.66 மில்லியன் மற்றும் ரூபா 1,104.15 மில்லியனிற்குமிடையிலான வித்தியாசமானது இல்லாமல் செய்யப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விடயம் | சீபீசீயின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொகை | சீபிஎஸ்ரீஎல் இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொகை | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| சீபிஎஸ்ரீஎல் இடமிருந்து பெறவேண்டியது / சீபீசீக்கு செலுத்தவேண்டிய தொகை | 302.87 | 263.21 | 39.66 |
| சீபிஎஸ்ரீஎல் க்கு கொடுக்கவேண்டிய / சீபீசீ இடமிருந்து பெறவேண்டிய தொகை | 3,589.44 | 4,693.59 | 1,104.15 |

(ஆ) பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான சீபிஎஸ்ரீஎல் இன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(i) வரையறுக்கப்பட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபன திரிபட் சங்கத்தின் (திரிப்ட் சங்கம்) வரையறுத்த சிலோன் பெற்றோலியக் ஸ்டோரேஜ் ரேமினல் கம்பனியின் (சீபிஎஸ்ரீஎல்) (உறுப்பினர்கள்) ஊழியர்களுக்கு ஓய்வூதிய நலன்கள் மற்றும் மருத்துவ நலன்களை செலுத்துகின்றது. திரிப்ட் சங்கமானது, அதனுடைய உறுப்பினர்கள் ஓய்வெடுக்கும் போது அவர்களுடைய ஒவ்வொரு வருட சேவைகளுக்காகவும் அரை மாத சம்பளத்தை மேலதிகமாக செலுத்துகின்றது. அதற்கிணங்க, இலங்கை கணக்கீட்டு நியமம் எல்கேஎஸ் 19 ஊழியர் நலன்களின் பிரகாரம் திரிப்ட் சங்கமானது ஊழியத்திற்கு பின்னரான நலன்கள் திட்டத்தை வழங்குவதுடன், ஊழியத்திற்கு பின்னரான நலன்புரித் திட்டத்திற்கு தகுதி பெறுகிறார். சீபிஎஸ்ரீஎல் ஆனது எல்கேஎஸ் 19 இன் பிரகாரம் மேற்கூறப்பட்ட ஓய்வூதிய நலன்புரி திட்டத்தினை சரியாக மதிப்பிட்டு கணக்கிட்டிருக்கவில்லை.

(ii) வியாபார மற்றும் ஏனைய வருமதிகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறவேண்டிய ரூபா 4,857.2 மில்லியன் தொகை உள்ளடங்கியுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களை அடிப்படையாகக்கொண்டு மேற்குறிப்பிடப்பட்ட தொகையானது நட்டக்கழிவாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 163.5 மில்லியன் (2015 : ரூபா 163.5 மில்லியன்) படிகள் மாத்திரம் வழங்கப்பட்ட ரூபா 652 மில்லியன் (2015 : 336 மில்லியன்) சச்சரவுத் தொகையை உள்ளடக்கியுள்ளது. அதற்கிணங்க, நட்டக்கழிவிற்கான ஏற்பாடானது ரூபா 489 மில்லியனால் (2015 : ரூபா 173 மில்லியனால்) குறைக்கப்பட்டிருந்தது.

(iii) 2017 செப்தெம்பர் 07 இல் பாராளுமன்றத்தால் சமர்ப்பிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரி சட்டமூலத்தின் பிரகாரம், 2018 ஏப்ரல் 01 இலிருந்து கம்பனிக்கான பிரயோகிக்கப்படக்கூடிய வரி வீதம் 28 சதவீதமாக இருக்கும். இந்த சட்டமூலத்திலுள்ள இலும் உள்ள ஏற்பாடுகளானது சபாநாயகரின் சான்றுறுதிப்படுத்தல்கள் பெற்ற

உடனேயே செயற்பாட்டிற்கு வரும் நிதிக்கூற்றுக்களிலுள்ள ஏற்பாடுகள் வெளிப்படுத்தப்படவில்லையெனில் ஏதாவது விளைவு ஏற்படக்கூடும்.

### 2.2.2 சீபிசீயின் நிதிக்கூற்றுக்கள்

#### 2.2.2.1 சீபீசீயின் எதிர்மறையான தேறிய சொத்துக்கள் நிலைமை

2016 ஆம் ஆண்டிற்காக சீபீசீயின் செயற்பாடுகள் ரூபா 53,027 மில்லியன் வரிக்கு பின்னரான தேறிய இலாபத்தினையும் ரூபா 53,137 மில்லியன் முற்றுமடங்கிய மொத்த வருமானத்தினையும் ஈட்டியிருந்தமை மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனம் ரூபா 185,847 மில்லியன் எதிர்மறையான தேறிய சொத்துக்கள் நிலைமையைக் கொண்டிருந்தமை போன்ற விடயங்களின் மீது கவனம் கோரப்படுகின்றது. மீளாய்வாண்டிற்கான நாணயப் பரிமாற்று வேறுபாட்டின் பாதகமான தாக்கமானது முன்னைய ஆண்டுகளில் இடம்பெற்ற இடர் குறைப்பு (ஹெட்ஜிங்) கொடுக்கல்வாங்கல்கள் காரணமாக கூட்டுத்தாபனத்தால் தாங்கிக்கொள்ளப்பட்ட பெருந்தொகையான நட்டங்களின் எதிர்மறையான தாக்கம் முன்னைய ஆண்டுகளிற்கான தேறிய நட்டத்தை அதிகரிப்பதற்கு காரணங்களாக அமைந்திருந்தன. முன்னைய ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றல் முன்னேற்றமடைந்திருந்த போதிலும், முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட பாரிய நட்டத்தின் விளைவாக சீபிசீயின் எதிர்மறையான தேறிய சொத்து நிலைமையில் மேலுமொரு வீழ்ச்சி ஏற்படுவதற்கு வழியமைத்திருந்தது.

#### 2.2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (எல்கேஏஸ்) இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஸ் 19 – ஊழியர் நலன்கள்**

நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட 1.3 ஆம் இலக்க கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம், சிறிய மற்றும் நடுத்தர அளவு முயற்சிகளுக்கு மாத்திரம் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மென்பொருளைப் பயன்படுத்தி எதிர்வுகூறப்பட்ட அலகுச் செலவிடல் முறையினைப் பிரயோகித்து கூட்டுத்தாபனம் ஓய்வூதிய நலனக் கிரயத்தை கணிப்பிட்டிருந்தது. எனினும், ஓய்வூதிய நலன் கட்டுப்பாட்டின் கணிப்பீட்டிற்கான உண்மையான மதிப்பீடு முறைமை பயன்படுத்த வேண்டும். அதற்கிணங்க, பணிக்கொடை ஏற்பாட்டினை

கணிப்பிடுகையில் நியமத்திலுள்ள தேவைப்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) **எல்கேஏஎஸ் 24 – தொடர்புடைய தரப்பு வெளிப்படுத்தல்கள்**

கூட்டுத்தாபனம் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரிற்கிடையிலான தொடர்புடைய தரப்பினர் ஈடுபாடு நிதிக்கூற்றுக்களில் சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொடுப்பனவிற்காக வழங்கப்பட்டு சமர்ப்பிக்கப்படாத ரூபா 989.9 மில்லியன் பெறுமதியான 581 காசோலைகளின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலங்கடந்திருந்தது. மேலும், 2016 யூன் 28 இல் சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் ரூபா 972.25 மில்லியனிற்கு வழங்கப்பட்ட காசோலை மேற்கூறப்பட்ட சமர்ப்பிக்கப்படாத காசோலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும், சீபிசீயானது இது தொடர்பாக சரியாக கணக்கீட்டு நடைமுறைகளை மேற்கொள்வதற்கு தவறியிருந்தது. ஆகையால், காசு மற்றும் உரிய பொறுப்பு கணக்குகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ஒன்றிணைப்பில், கிளைகளிற்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் ஒன்றுக்கொன்று இல்லாமல் செய்தல் வேண்டும். எனினும், கிளைகளிற்கிடையிலான வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் மீதியான ரூபா 1,397,300 தொகை மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் அவதானிக்கப்பட்டது. ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் மீதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. ஆகையால், கிளைகளிற்கிடையிலான கணக்குகளை பதிவுசெய்தல் மற்றும் தீர்ப்பனவு செய்தலின் உண்மைத்தன்மை மற்றும் பூர்த்தியாக்கல் தன்மை கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாகவுள்ளது.

(இ) 2011/2012 ஆம் ஆண்டிலிருந்து 2014/2015 ஆம் ஆண்டு வரையான மதிப்பீட்டாண்டிற்காக வருமான வரியாக 2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 924,879,000 கூட்டுத்தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 157,439,252 தொகையான தண்டப்பணங்களை உள்ளடக்கிய மேற்கூறப்பட்ட காலப்பகுதிக்கான உண்மையான வருமான வரி ரூபா 1,409,169,766 கூட்டுத்தொகையாகும். அதற்கிணங்க, 2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் செலுத்தப்படாத வருமானவரிக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு ரூபா 484,290,530 ஆல் குறைக்கப்படுவதற்கு தென்பட்டது.

(ஈ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 1,703,895,425 ஆன மேலதிக மதிப்பீடானது 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய செலுத்தப்படாத தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) மீது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் விதிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 410,300,842 மொத்தத் தொகை மாத்திரம் என்பீரீயாக வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் செலுத்தப்படாத என்பீரீக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு ரூபா 1,293,594,583 ஆல் குறைக்கப்பட்டிருந்தது.

(உ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டியலின் பிரகாரம், ரூபா 173,504,644 அட்டுறு தொகையும் ரூபா 180,232,833 செலுத்தப்பட்ட தொகையும் உள்ளடக்கி 2016 ஆம் ஆண்டிற்கான சுணக்கக் கட்டணம் மீதான மொத்தச் செலவினம் ரூபா 353,737,477 ஆகும். எனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 173,504,644 தொகை மாத்திரம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2014 ஆம் ஆண்டில் பொதுத்திறைசேரியின் வேண்டுதல் தொடர்பில் விஷேட கட்டணமாக பொதுத்திறைசேரிக்கு ரூபா 10,000 மில்லியனை சீபீசீ செலுத்தியதுடன் இதனை 2014 ஆம் ஆண்டிற்கான வருமானத்திற்கு எதிராக பதிவழிப்பதற்கு செய்வதற்கு வருமதிகளாக கணக்கிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 250 மில்லியன் ரூபா 750 மில்லியன் மற்றும் ரூபா 1,000 மில்லியன் முறையே 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்கான வருமானங்களிற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, உரிய ஆண்டுகளின் தேறிய செயற்பாட்டு வருமானம் அதே தொகையால் குறைக்கப்பட்டிருந்தது. அத்தகைய தவறாக கணக்கீட்டு நடைமுறையானது அடிப்படைக் கணக்கீடு தத்துவங்களை மீறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) ரூபா 160.5 மில்லியன் கூட்டுத்தொகையான ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் இன் தீர்க்கப்படாத பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி தொடர்பாக கணக்கிடப்பட்ட மீளாய்வாண்டிற்கான ரூபா 6.7 மில்லியன் வட்டி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான அட்டுறு வட்டி மற்றும் வட்டி வருமானம் அத்தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2.4 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீபீசீயின் கணக்கு புத்தகங்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு சீபீசீரீஎஸ்எல் க்கு செலுத்த வேண்டிய தேறிய தொகை ரூபா 7,600,745 ஆகும். எனினும், சீபீஎஸ்ரீஎஸஎல் இடமிருந்தான உறுதிப்படுத்தல் மீதியின் பிரகாரம், இது ரூபா 42,460,782 ஆகும். ஆகையால் ரூபா 34,860,037 இணக்கஞ்செய்யப்படாத மீதி இத்தகைய இரண்டு பதிவேடுகளிற்கிடையில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்கான சீபீசீ மற்றும் சீபிஎஸ்எல் இன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட எண்ணெய் களஞ்சியம் மற்றும் விநியோகத்திற்கான கட்டணங்களிற்கிடையில் (உதாரணம் ரேமினல் கட்டணங்கள், போக்குவரத்து கட்டணங்கள் மற்றும் வட்டிக் கொடுப்பனவு) மீதிகள் முறையே ரூபா 177 மில்லியன் மற்றும் 400.9 மில்லியன் இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மருத்துவ செலவினம் ரூபா 38,579,072 ஆக இருந்த அதேநேரம் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற விரிவான பட்டோலையின் பிரகாரம் இது ரூபா 57,951,039 ஆகவிருந்தது. ஆகையால், ரூபா 19,371,967 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) ஆண்டு இறுதி மீதிகளின் உறுதிப்படுத்தல்களின் பிரகாரம், 2007 தொடக்கம் 2009 வரையான எண்ணைய் கொள்வனவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட இடர்குறைவு நடவடிக்கைகள் தொடர்பாக யூ.எஸ்.டொலர் 22.77 மில்லியன் மற்றும் யூ.எஸ்.டொலர் 8.65 மில்லியன் தொகைகள் முறையே மக்கள் வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி பிஎல்சீ க்கு சீபிசீயால் செலுத்தவேண்டியுள்ளது. எனினும், இது சீபீசீயின் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுமதிசேர் வரி (வற்)

ரூபா 326,394,420, ரூபா 124,733,322 மற்றும் ரூபா 172,446,201 ஐ உள்ளடக்கிய ரூபா 623,573,943 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரியானது (வற்) முறையே அறவிடப்படவேண்டிய வற், மீள்நிதியளிக்கக்கூடிய வற் மற்றும் உள்நாட்டு கொள்வனவுகள் தொடர்பிலான வற் ஆக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் ஏனைய வருமதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், இதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 326,394,420 தொகையான அறவிடவேண்டிய வற் 2010 ஆம் ஆண்டிலிருந்து தீர்க்கப்படாமல் ஏனைய வருமதிகளாக இனங்காணப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, வற் பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ஏனைய உரிய ஆதாரமளிக்கின்ற சான்றிதழ்கள் ரூபா 124,733,322 மீள்நிதியளிக்கக்கூடிய வரியை சரிசெய்வதற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

மேலும், சீபீசீயின் கணக்குப் புத்தகங்களின் பிரகாரம், ரூபா 172,446,201 தொகையான உள்நாட்டு கொள்வனவு மீதான வரி மீளாய்வாண்டின் போது தோற்றுவிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்காக சீபீசீயால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வற் வருமானங்களிலுள்ள அறவிடவேண்டிய வற் அல்லது முன்கொண்டுவரப்பட்ட வற் போன்ற எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான வரி பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) சீபீசீயின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாணடின் இறுதியிலுள்ளவாறான அறவிடவேண்டிய மொத்த வற் மற்றும் செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரி) முறையே ரூபா 623,573,943 மற்றும் ரூபா 1,803,656,120 தொகையாகும். எனினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் பராமரிக்கப்பட்ட ஏடுகளில் இவை முறையே ரூபா 29,528,455 மற்றும் ரூபா 2,831,220,633 ஆக காட்டப்பட்டிருந்தது. ஆகையால், அத்தகைய தொகைகளுக்கிடையில் ரூபா 594,045,488 மற்றும் ரூபா 1,027,564,513 தொகையான இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான உள்நாட்டு இறைவரித்

திணைக்களத்தின் ஏடுகளில் காட்டப்பட்ட மொத்த செலுத்த வேண்டிய வற் ரூபா 3,336,528,365 ஆகும். எனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதி எதுவும் காட்டப்பட்டிருக்கவில்லை. இதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிநிலைமைக்கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பொருளாதார சேவைக் கட்டணங்கள் தொடர்பில் (ஈஎஸ்சீ) பெறவேண்டிய அல்லது செலுத்தவேண்டிய மீதி எதுவும் இருக்கவில்லை. எனினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவேடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மொத்த செலுத்த வேண்டிய ஈஎஸ்சீ ரூபா 55,800,000 ஆகும். ஆகையால் ஈஎஸ்சீ யுடன் தொடர்பான நிதிக்கூற்றுக்களின் அறிக்கைகளின் உண்மைத்தன்மை மற்றும் பூர்த்தியாக்கல் தன்மை கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாகவுள்ளது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான தேறிய அறவிடவேண்டிய வருமானவரி ரூபா 3,959,861,589 ஆகும். எனினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவேடுகளின் பிரகாரம் பெறவேண்டிய மீதி ரூபா 6,443,430,012 தொகையாகவிருந்தது. ஆகையால், நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்ட மொத்த நிலுவையாகவுள்ள தொகை ரூபா 10,403,291,601 ஆல் வேறுபடுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிதிநிலைமைக்கூற்றிலுள்ள இலக்கங்களின் பொருந்தக்கூடிய தன்மை, உண்மைத்தன்மை மற்றும் பூர்த்தியாக்கல் தன்மை சந்தேகத்திற்குரியதாகவுள்ளது.

(உ) கூட்டுத்தாபனத்தின் நிதிநிலைமைக்கூற்றின் பிரகாரம், செலுத்தவேண்டிய சுங்க வரி ரூபா 5,119,928,266 தொகையான அதேநேரம், இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பதிவேடுகளின் பிரகாரம் இது ரூபா 5,707,652,279 ஆகும். ஆகையால், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அத்தகைய பதிவேடுகளிற்கிடையில் ரூபா 587,724,103 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் ரூபா 1,511,857,999 தொகையான வருமான வரி ஏனைய வருமதிகளின் கீழே காட்டப்பட்டிருந்ததுடன் அதனுடைய உள்ளடக்கம் பின்வருமாறுள்ளது.

| | தொகை |
|---|---|
| | -------------- |
| | ரூபா |
| ஏனைய வருமதிகள் - உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 376,000,065 |
| ஏனைய வருமதிகள் - உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சுங்கத் திணைக்களம் | 1,135,857,934 |
| | -------------------- |
| **மொத்தம்** | **1,511,857,999** |
| | ========= |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட எந்த வரி வருமானத்திலும் மேலதிக கொடுப்பனவோ அல்லது முன்கொண்டுவரப்பட்ட வரி மீதியோ இருக்கவில்லை.

(ii) அத்தகைய மீதிகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்தான வருமதியாக நேரடியாக வகைப்படுத்தாது ஏனைய வருமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 1998 ஆம் ஆண்டிலிருந்து நிதிநிலைமைக்கூற்றில் ஏனைய வருமதிகளாக ரூபா 376,000,065 தொகை தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. நீண்டகாலத்திற்கு அத்தகைய மீதிகள் தீர்க்கப்படாமல் தொடர்ச்சியாக இருந்தமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வு செய்யாமல் ஆண்டாண்டாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 1,135,857,934 மேற்கூறப்பட்ட ஏனைய வருமதிகளை உரிய தகவல்கள் இன்மையால் திருப்திகரமாக கான்றுறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

ஆகையால், ரூபா 1,511,857,999 கூட்டுத்தொகையான மேற்குறிப்பிடப்பட்ட வருமதிகளின் பொருந்தக்கூடிய தன்மை, உண்மைத்தன்மை, மதிப்பீடுகள் மற்றும் முழுமைத்தன்மை, திருப்திகரமாக சரிசெய்ய முடியாத நிலையிலுள்ளேன்.

(எ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அட்டுறு வட்டி செலவினம் ரூபா 313,820,185 ஆகவிருந்தது. எனினும், பேரேட்டின் பிரகாரம், ரூபா 1,617,112 கூட்டுத்தொகையான 04 வரவு மீதிகளையும் ரூபா 13,763,193 கூட்டுத்தொகையான 31 செலவு மீதிகளையும் உள்ளடக்கிய ரூபா 12,146,081 தேறிய தொகையாகவிருந்தது. மேலும், இந்த மீதி 2010 ஆம் ஆண்டிலிருந்து ஒன்று சேர்க்கப்பட்டமைக்கான ஆதாரமளிக்கின்ற தகவல் இன்மையால் இந்த செலவினத்தின் உண்மைத் தன்மை, உள்ளகத் தன்மை மற்றும் பூர்த்தியாக்கல் தன்மையை காணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபார பெறவேண்டியவைகளானது அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட வேண்டிய முறையே ரூபா 24,136.8 மில்லியன் போன்றவற்றை மற்றும் ரூபா 9,250.2 மில்லியன் உள்ளடக்கி ரூபா 33,387 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இருப்பினும், முன்னைய ஆண்டின் ரூபா 18,787 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த பெறவேண்டியவை 78 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதற்கான வயதுப் பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வாடிக்கையாளர் வகை | மொத்தம் | வயதுப் பகுப்பாய்வு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஓராண்டிற்குக் குறைந்த | 1 – 2 ஆண்டுகள் | 2 – 3 ஆண்டுகள | 3 – 4 ஆண்டுகள் | 4 – 5 ஆண்டுகள் | 5 ஆண்டு களிற்கு மேல் |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வணிகர் | 1,016,605,312 | 990,626,244 | (599,010) | 8,971,155 | 1,282,138 | 1,138,177 | 15,186,606 |
| விமானச்சேவை | 9,263,688,816 | 9,257,815,945 | 217 | 38,391 | 1,803,327 | 1,617,303 | 2,413,630 |
| மின்வலு பொறிகள் | 19,996,044,020 | 19,007,529,141 | 8,582,378 | 226,321,671 | 753,610,829 | - | - |
| அரசாங்க பாவனையாளர் | 2,002,371,035 | 1,312,981,324 | 31,856,507 | 480,596,958 | 61,454,860 | 49,270,208 | 66,211,176 |
| தனியார் பாவனையாளர் | 628,092,693 | 316,810,088 | 23,670,804 | 21,653,010 | 22,533,993 | 25,412,079 | 218,012,717 |
| விவசாய இரசாயனம் | 17,001,940 | 7,782,211 | 1,997,458 | | 50,322 | 49,815 | 7,122,133 |
| ஏனையோர் | 462,891,297 | 458,684,841 | - | - | - | 106,198 | 4,100,258 |
| **மொத்தம்** | **33,386,695,115** | **31,352,229,797** | **65,508,355** | **737,581,182** | **840,735,471** | **77,593,782** | **313,046,522** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) மேலதிக வருமதியான மீதிகள் மீதான வட்டிக் கட்டணங்கள்**

(i) கடன் காலங்களை விஞ்சி நிலுவை மீதிகளை வைத்துள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து கூட்டுத்தாபனம் வட்டியை அறவிடுகின்றது. எனினும், மேற்கூறப்பட்ட காலப்பகுதிக்கான கொடுப்பனவின் தேவையற்ற இழுபடியை கட்டுப்படுத்துவதற்கு சபையில் செயற்திறனற்ற தீர்மானம் எடுக்கப்படாமையால் வட்டியைக் கணிப்பிடுவதற்கு கூட்டுத்தாபனத்தால் சரியான முறைமையொன்று வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வட்டியைக் கையால் கணிப்பிடப்பட்டமையால் வழுக்கள் இருந்தமை முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் அறிவுறுத்தப்பட்டமையால் அறிமுகப்படுத்தப்பட்ட சப் (SAP) முறைமையை பயன்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. எனினும், மீளாய்வாண்டிலும்,

அவதானிக்கப்பட்ட அத்தகைய கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் அத்தகைய வழுக்களை திருத்துவதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 ஆம் ஆண்டிலிருந்து மேல் மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டியுள்ள நிலுவையான ரூபா 31,207,680 மீதி மீது வட்டிக் கட்டணம் அறிவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எரிபொருள் வழங்குனர்களிற்கான ஒப்பந்தம்**

---

(i) சீபிசீயானது முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்காததுடன் விஷேடமாக 17 பிரதான வாடிக்கையாளர்களின் நிலுவை மீதியானது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 27,636 மில்லியன் அல்லது 82 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்றது. ஆகையால், கூட்டுத்தாபனத்திற்கான சட்ட உரிமை இன்மையால் இயல்புநிலை இடத் அதிகமாகவிருந்தது. ஆகையால், தீர்ப்பனவில் சிக்கல் தன்மை அதிகரித்துள்ளது.

(ii) உதாரணமாக ஐ.அ.டொலர் பட்டியலிடப்பட்ட நாணயத்தை உதாசீனம் செய்யும் திகதியில் நிலவிய நிலுவையாகவுள்ள மீதியின் தீர்ப்பனவிற்காக உள்நாட்டு நாயணத்தில் 2015 செப்தெம்பர் 30 இல் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கம்பனியால் ரூபா 7.9 பில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால், கூட்டுத்தாபனமானது அந்தத்தொகையை அத்திகதியில் நிலவுகின்ற ஐ.அ.டொலர் தொகைக்கு மாற்றியதுடன் கணக்கு புத்தகங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொண்டது. அதற்கிணங்க, அதன்பின்னர், அத்தகைய கொடுக்கல் வாங்கல் மீதான ரூபா 307,063,541 தொகையான நாணயமாற்று இலாபத்தை வருமானமாக மாற்றுவதற்கு வேண்டப்பட்டதுடன் முழுத்தொகையும் (நாணயமாற்று இலாபத்தை உள்ளடக்கி) இறுதி தீர்ப்பனவாக கருதுவதற்கும் சீபீசீக்கு வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா எயார் லைண்ஸ் கம்பனி வேண்டுதல் விடுத்திருந்தது. அதற்கிணங்க, இரு தரப்பினர்களிடையிலும் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையிலுள்ள அத்தகைய சச்சரவுகள் தொடர்பான நிறுவன நிபந்தனைகள்

இல்லாதிருந்தமையானது அத்தகைய தீர்ப்பனவுகளை மோசமாக பாதித்திருந்தது என வெளிப்படுத்தப்பட்டது.

மேலும், கூட்டுத்தாபனமானது அண்ணளவாக ரூபா 154 மில்லியன் அண்ணளவாகவுள்ள முன்னதாக இனங்காணப்பட்ட நாணயமாற்று இலாபத்தை சமமாக பகிர்ந்தளிப்பதற்கு இணங்கியது. எனினும், இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) வாடிக்கையாளர்களுக்கு அவர்களுடைய நீண்டகால நிலுவையாகவுள்ள மீதிகளை கருத்திற்கொள்ளாமல் பெற்றோலியப் பொருட்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டிருத்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கான உதாரணங்களாக ரூபா 3,964,634, ரூபா 90,002,930 மற்றும் ரூபா 6,243,570 நீண்டகால நிலுவையாகவுள்ள மீதிகளை கொண்டுள்ள முறையே இலங்கை போக்குவரத்து சபை – யாழ்ப்பாணம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பெற்றோலிய அபிவிருத்தி அமைச்சிற்கு பெற்றோலியப் பொருட்கள் விற்பனை செய்தமை போன்றவற்றைக் கூறவாம்.

(இ) குறுங்கால கடன்கள்

---------------------------------

சீபிசீயால் பெறப்பட்ட குறுங்கால வெளிநாட்டு நாணயமாற்று கடன்கள் (எஸ்ரீஎவ்சீஎல்) தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம், அத்தகைய மொத்தக் கடன்களின் ரூபா 76,488.442 மில்லியன் (யூஎஸ்டி 504.062 மில்லியன்) அல்லது மொத்தகட கடன்களில் 39 சதவீதக் கடன்களிற்காக வழங்கப்பட்ட கடன்காலம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு காலாவதியாகியிருந்ததுடன் அதில், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு மேலாக அதில் 52 சதவீதம் நிலுவையாகவிருந்தது. அத்தகைய குறுங்கால வெளிநாட்டு நாணயக் கடன்கள் 2015 ஒக்தோபர் 01 இலிருந்து 2015 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது மக்கள் வங்கியால் வழங்கப்பட்டிருந்தது.

(ii) கூட்டுத்தாபனமானது உடன்பட்ட காலப்பகுதியனுள் அத்தகைய கடன்களை தீர்க்காமையால் வட்டியாக அண்ணளவாக ரூபா 3,416 மில்லியன் மேலதிக கிரயத்தை ஏற்படுத்த வேண்டியிருந்தது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்தை மிஞ்சிய கடன்காலத்தையுள்ள குறுங்கால வெளிநாட்டு நாணயக்கடன்களிற்காக மேலதிகக் கிரயம் மாத்திரமிருந்தது. எனினும், காலதாமத்தின் முழுக்காலப்பகுதிக்காக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டால் அத்தகைய கடன்களின் தாமத தீர்ப்பனவின் மொத்த கிரயமானது மேலும் அதிகரிக்கும். மேலும், மேற்கூறப்பட்ட கடன் வட்டிவீதத்திலும் குறைவான வருமானத்தை தோற்றுவித்த ரூபா 63,763 மில்லியன் குறுங்கால முதலீடுகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

அவர்களால் வழங்கப்பட்ட நாணயக் கடன்களை தீர்ப்பனவு செய்வதற்கு போதிய எண்ணிக்கையான யூஎஸ்டியை கொள்வனவு செய்யும் நிலையில் வங்கியிலிருக்கவில்லை என கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் இது தொடர்பில் கூறினார்.

அதற்கிணங்க, கடன் வளங்களை தெரிவு செய்வதற்கான சரியான மதிப்பீடு இருந்தமை மற்றும் கடனிற்கு நிபந்தனைகளை வழங்குவதற்கு சரியான தீர்ப்பனவு திட்டம் இருந்தமை போன்றன விஷேடமாக அதிகூடிய வட்டி கிரய விளைவு மற்றும் நாணயத்தின் பெறுமானத்தேய்வால் ஏற்படும் நட்டம் போன்றவற்றை குறைப்பதற்கு இருந்தமை என்பது சந்தேகத்திற்குரியதாகவிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை-நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் | |
| (i) 3.2 ஆம் வழிகாட்டல் | சீபிசீயின் பணிப்பாளர் சபை பெற்றோலிய தொழிற் துறையைச் சேர்ந்த ஒரு உறுப்பினரையும் உள்ளடக்கியிருக்கவில்லை. |
| (ii) 7.4.4 ஆம் வழிகாட்டல் | உள்நாட்டு, வெளிநாட்டு ஊழியங்களின் ஊழிய வினைத்திறனை முன்னேற்றுவதற்கு மாற்றங்களிற்கு இணையாக வினைத்திறனின் மனித வளங்களை பேணுவதற்கு ஏற்றவகையில் நிறுவனத்தின் பயிற்சி தேவைகளானது பயிற்சி குழுவிலும் சிரேஷ்ட முகாமைத்துவ குழுவின் உபகுழுவொன்றும் மதிப்பிட வேண்டியது அவசியமாகும். மேலும், அத்தகைய குழுவானது உள்நாட்டு / வெளிநாட்டு பயிற்சிக்காக ஊழியர்களை தெரிவு செய்வது தொடர்பில் செய்முறைகளை முறைமைப்படுத்த வேண்டும். எனினும், அத்தகைய பொறிமுறைகள் செயற்பாட்டிலிருக்கவில்லை. |
| (iii) 9.14 ஆம் வழிகாட்டல் | ஏ தர அலுவலர்கள் தவிர்ந்த சீபிசீயின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் (எஸ்ஏஆர்) திட்டமானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் (எம்எஸ்டி) அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | 9.3.1 ஆம் வழிகாட்டல் | சிரேஷ்ட முகாமைத்துவ சட்டத்தின் பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான இடரை குறைப்பதற்குரிய சரியான வெற்றித் திட்டத்தை சீபீசீயானது பராமரித்திருக்கவில்லை. |
| (v) | 9.5.1 ஆம் வழிகாட்டி | பயிற்சிக்கான பாதீடு தயாரிக்கப்பட்டு பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட தொகையான பயிற்சி குழுவின் ஆலோசனையுடன் தீர்மானிக்கப்பட வேண்டும். எனினும், அத்தகைய பயிற்சிக்காக பாதீடு இன்றைய திகதி வரை சீபிசீ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 9.5.4 ஆம் வழிகாட்டல் | வர்த்தக கூட்டுத்தாபனத்தின் உள்ளக ரீதியாக உழைக்கப்பட்ட நிதிகள் அல்லது அரச மானியங்கள் திறைசேரி செயலாளரின் விஷேட அங்கீகாரம் பெறப்பட்டாலன்றி வெளிநாட்டுப் பயிற்சிக்காக பயன்படுத்தமுடியாது. எனினும், சீபீசீயினால் இந்த வழிகாட்டலின் பிரகாரம் விஷேட அங்கீகாரம் பெற்றமை கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. |
| (ஆ) | நிதி, திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்தோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க நிதிச்சுற்றறிக்கை. | ஒரு வெற்றிடமான பதவியின் பணிகளைக் கவனிக்கும் காலம் 03 மாதங்களாக மட்டுப் படுத்தப்பட்டிருந்த போதிலும், எனினும், முகாமையாளர் (விசாரணை), சந்தைப்படுத்தல் முகாமையாளர் (சில்லறை), முகாமைத்துவ உதவி முகாமையாளர் (மத்தியம்) போன்ற A தரத்திலுள்ள 08 பதவிகளை உள்ளடக்கிய வெற்றிட பதவிகளின் கடமைகளை ஆற்றுவதற்கான 14 உத்தியோகத்தர்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 மாதங்கள் தொடக்கம் 3 வருடங்கள் வரையான காலப்பகுதிக்காக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். |

| | | |
|---|---|---|
| (இ) | 2013 நவம்பர் 04 ஆந் திகதிய எவ்பி/06/35/02/01ஆம் இலக்க மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய பிஈடீ 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் | ஊழியர்களது ஆளுக்குரிய வேதனங்களிலிருந்து கழித்துக்கொள்ளாது அதன் ஊழியர்களின் மீளாய்வாண்டிற்கான ரூபா 152,690,099 உழைக்கும் போதே செலுத்தும் வரியினை (பீஏவைஈ) சீபிசீ தாங்கிக் கொண்டிருந்தது. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 396 | தெரிவு செய்யப்பட்ட மாதிரியின் பிரகாரம், ரூபா 3,652.74 மொத்தப் பெறுமதியான 1,619 காசோலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலப் பகுதிக்காக வழங்கப்பட்டு வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், 2017 யூலை 27 வரையிலும் நிலுவையாகவுள்ள காசோலைகள் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சீபிசீயின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 69,553.681 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை முன்னைய ஆண்டிற்கு எதிரான வரிக்கு முன்னரான தேறிய நட்டமான ரூபா 19,885.780 மில்லியனுடன் ஒப்பிடுகையில், நிதிசார் விளைவுகளில் ரூபா 89,439.461 மில்லியனான வளர்ச்சியினை காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சர்வதேச சந்தை எண்ணெய் விலைகளின் மாற்றமின்மையால் இறக்குமதி கிரயத்தின் நிலைத்திருக்கும் தன்மை, கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பால் உள்நாட்டு சந்தையில் விற்பனைகளின் வளர்ச்சி, 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சிய டொலரிற்கு எதிராக இலங்கை ரூபாயின் தேய்வுப் போக்கு குறைந்தமை, நிதிச் செலவினம் குறைந்தமை இந்த மிகைக்கு பங்களிப்பு செய்திருந்தது. ரூபா 69,553.681 மில்லியன் வரிக்கு முந்திய இலாபத்திற்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் சீபிசீயின் நாட்டிற்கான பங்களிப்பு ரூபா 153,184 மில்லியனாக காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டில் ரூபா 100,175 மில்லியனாகவிருந்தது.

## 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

### 3.2.1 இலாபத்தன்மை

சீபீசீயின் செயற்பாடுகள் மீளாய்வாண்டில் 29.6 சதவீத இலாப எல்லையை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டின் 11.75 சதவீத இலாப எல்லையுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் 17.85 சதவீத முன்னேற்றத்தைக் காண்பித்திருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டின் ரூபா 39,616 மில்லியன் நேரொத்த மொத்த இலாபத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாபம் ரூபா 57,004 மில்லியனால் அல்லது 144 சதவீதத்தால் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாபம் அதிகரித்திருந்தது. இந்த முன்னேற்றங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு | | மாற்றம் {சாதகமானது/ (பாதகமானது)} | |
|---|---|---|---|---|
| | 2016 | 2015 மீளமைக்கப்பட்ட | | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| வருமானம் | 423,061 | 376,734 | 46,327 | 12 |
| விற்பனைக் கிரயம் | (326,441) | (337,118) | 10,677 | 3 |
| **மொத்த இலாபம்** | **96,620** | **39,616** | 57,004 | 144 |
| ஏனைய வருமானம் | 3,589 | 4,234 | (645) | (15) |
| விற்பனை விநியோக செலவினம் | (14,412) | (13,401) | (1,011) | (7.5) |
| நிர்வாக செலவினம் | (4,384) | (3,592) | ( 792) | (22) |
| **செயற்பாட்டு இலாபம்** | **81,413** | **26,857** | 54,556 | 203 |
| நாணயமாற்று வீத முரண் | (8,829) | (32,841) | 24,012 | 73 |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதிச் செலவினம் | (11,404) | (15,049) | 3,645 | 24 |
| நிதி வருமானம் | 8,374 | 5,011 | 3,363 | 67 |
| இடர் குறைப்பு செலவினம் | - | (3,864) | 3,864 | 100 |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம் /(நட்டம்)** | **69,554** | **(19,886)** | **89,440** | **450** |

### 3.2.2 தேறிய சொத்துக்களிற்கு எதிரான தேறிய இலாபம் /(நட்டம்)

2016 ஆம் ஆண்டிற்கும் கடந்த ஏழு ஆண்டுகளிற்குமான சீபிசீயின் தேறிய இலாபம்/(நட்டம்) மற்றும் தேறிய சொத்து நிலைமை என்பன கீழே உள்ள அட்டவணையிலும் வரைபிலும் காட்டப்பட்டுள்ளன

| ஆண்டு | தேறிய இலாபம்/(நட்டம்) | ஆண்டின் இறுதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்கள் நிலைமை |
|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன். |
| 2011 | (94,357) | (131,236) |
| 2012 | (97,181) | (228,545) |
| 2013 | (7,889) | (236,467) |
| 2014* | 1,129 | (232,257) |
| 2015* | (20,681) | (228,985) |
| 2016 | 53,027 | (185,847) |

* மீளமைக்கப்பட




### 3.2.3 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

-----------------------------------------------------

கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சீபிசீயின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2016 | 2015 (மீளமைக்கப்பட்ட) |
| --- | --- | --- |
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | |
| மொத்த இலாப விகிதம் (ஜீபீ) (%) | 22.84 | 10.52 |
| செயற்பாட்டு இலாப விகிதம் (%) | 19.24 | 7.13 |
| தேறிய இலாப விகிதம் (என்பீ) (%) | 12.53 | (5.45) |

**திரவத்தன்மை விகிதங்கள்**

| | | |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.34:1 | 0.31:1 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.24:1 | 0.21:1 |
| தொழிற்படு மூலதனம் (ரூபா மில்லியன்) | (249,297) | (295,098) |

**முதலீட்டு விகிதங்கள்**

| | | |
|---|---|---|
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (%) | 27.82 | (10.4) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் முறையே 12.33 சதவீதம் மற்றும் 17.98 முன்னேற்றமடைந்திருந்தது.

(ii) 2016 இல் சீபிசீயின் எதிர்மறையான தொழிற்படு மூலதன நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்திருந்தது. வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் மற்றும் குறுங்கால முதலீடுகளின் அதிகரிப்பு மற்றும் கடன்படுதல்களின் குறைவு என்பன இந்த சாதக நிலைமைக்கு பிரதான காரணிகளாக காணப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

சீபிசீயின் நிதிப் பிரச்சினைகளைத் சமாளிப்பதற்காக 2014 செப்தெம்பர் வரை தொடர்ச்சியாக எரிபொருள் பொருட்களின் உள்நாட்டு சில்லறை விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. அதேவேளை, சர்வதேச எரிபொருள் விலைகள் தொடர்ச்சியாக குறைவடையும் போக்கினை காட்டியமையால் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டு சில்லறை விற்பனை விலைகள் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் குறைக்கப்பட்டன. எவ்வாறாயினும், அப்போதிலிருந்து விலை

மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் மேற்படி விலை மாற்றங்கள் சர்வதேச சந்தை விலைகளின் குறைவினை முழு அளவில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. அத்துடன், பின்வரும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களிலிருந்து சீபிசீயானது மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக நட்டத்தை அனுபவித்திருந்தது.

| துறை | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|
| | ஆண்டிற்காக ஏற்பட்டிருந்த மொத்த நட்டங்கள் | | | | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **மின்வலு உற்பத்தி** | | | | | |
| எரிபொருள் எண்ணெய் 1500 | - | 252 | 299 | 1,240 | 34,959 |
| **கைத்தொழில் மற்றும் உள்நாடு** | | | | | |
| எரிபொருள் எண்ணெய் 1500 | - | 262 | 69 | 350 | 2,003 |
| உள்நாட்டு மண்ணெண்ணெய் | 2,982 | 3,860 | 2,715 | 2,449 | 3,525 |
| **ஏற்றுமதி** | | | | | |
| நப்தா | 1,580 | 827 | 1,799 | - | - |
| எரிபொருள் எண்ணெய் | 727 | 5,346 | 1,627 | - | - |
| **நிலக்கீழ் செயற்பாடு** | | | | | |
| எரிபொருள் எண்ணெய் | 68 | - | - | - | - |

மேலும், பெற்றோல் 92 ஒக்டேன் மற்றும் 95 ஒக்டேன் இலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு முறையே ரூபா 8,251 மில்லியன் மற்றும் ரூபா 1,291 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 2016 ஆம் ஆண்டிற்காக பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (லீற்றரொன்றுக்கு) மீதான இலாபத்தன்மை

| உற்பத்திப் பொருள் | லீற்றரொன்றுக்கான விற்பனை விலை | லீற்றரொன்றுக்கான வணிகர் எல்லையின் தேறிய விற்பனை வருமானம் | லீற்றரொன்றுக்கான மொத்த இலாபம் | லீற்றரொன்றுக்கான விற்பனைக் கிரயம் | லீற்றரொன்றுக்கான மொத்தக் கிரயம் | லீற்றரொன்றுக்கான சகல வரிகளையும் உள்ளடக்கிய மொத்தக் கிரயம் | லீற்றரொன்றுக்கான தேறிய இலாபம்/(நட்டம்) | ஆண்டிற்கான மொத்த தேறிய இலாபம்/(நட்டம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா மில்லியன் |
| பெற்றோல் 95 | 128.00 | 124.15 | 95.29 | 28.86 | 67.87 | 133.06 | **(8.91)** | (1,291) |
| பெற்றோல் 92 | 117.00 | 113.49 | 84.29 | 29.20 | 57.89 | 120.84 | **(7.35)** | (8,251) |
| ஒடோ டீசல் | 95.00 | 92.83 | 60.37 | 32.46 | 17.22 | 76.02 | **16.81** | 31,128 |
| சுபர் டீசல் | 110.00 | 107.20 | 66.46 | 40.74 | 24.93 | 83.62 | **23.58** | 1,761 |
| மண்ணெண்ணெய் | 49.00 | 47.77 | 56.38 | (8.61) | - | 65.59 | **(17.82)** | (2,982)* |

*மீளாய்வாண்டில் பொதுத் திறைசேரியிடமிருந்தான மானிய வருமதியில் நிதிநிலைமைக் கூற்றுக்களில் ரூபா 2,982 மில்லியன் மண்ணெண்ணெய் நட்டம் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) திரவ பெற்றோலிய எரிவாயுவின் விற்பனை தொடர்பில் தனியார் எரிவாயு கம்பனியொன்றுக்கும் மற்றும் சீபிசீ இற்குமிடையே உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதுடன் 2006 ஒக்தோபர் 20 இல் காலாவதியாகியிருந்தது. முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் அறிக்கையிடப்பட்டதற்கிணங்க, புதிய உடன்படிக்கையொன்றினை ஏற்படுத்திக் கொள்ளாது அல்லது முந்தைய உடன்படிக்கை புதுப்பிக்காது தொடர்ச்சியாக அந்தக் கம்பனிக்கு திரவ பெற்றோலிய வாயுவினை சீபிசீ விநியோகித்துக் கொண்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, உடன்படிக்கையொன்றினை மற்றுமொரு தனியார் கம்பனிக்கு சீபிசீ பெற்றோலிய எரிவாயுவினை விநியோகிக்கின்றது.

## 4.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **முயற்சிகள் வள திட்டமிடல் (ஈஆர்பி) முறைமை** - சீபிஎஸ்ரீஎல் இனால் அறிமுகப்படுத்தப்பட்ட முயற்சிகள் வள திட்டமிடல் (ஈஆர்பி) முறைமையின் ஈடுபாட்டின் கண்ணியத்தினால் அவர்களின் தனிப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பில் சீபிசீ, சீபிஎஸ்ரீஎல் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கிடையே (எல்ஐஓசி) புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று அல்லது எவ்வித உடன்படிக்கையும் காணப்படாமை அவதானிக்கப்பட்டமையினால் விசேடமாக எரிபொருள் இருப்புக்களினை மீளாயும் நோக்கங்களுக்கு இந்த முறைமை போதுமானதாக பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) **மாதாந்த பயன்பாட்டுக் கட்டணத்தின் சேகரிப்பு (எம்யூஎப்)**

2013 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 38/1140 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் பிரகாரம், 2014 சனவரி 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அனைத்து கூட்டுத்தாபனம் உரிமையைக் கொண்டுள்ள செயற்பாட்டு விநியோகஸ்தர் (சிஓடிஓ) நிரப்பும் நிலையங்கள் மற்றும் திறைசேரி உரிமையைக் கொண்டுள்ள விநியோகஸ்தர் (ரீஓடிஓ) நிரப்பும் நிலையங்களிடமிருந்து மாதாந்த பயன்பாட்டுக் கட்டணத்தை அறவிடுவதற்க சபை அங்கீகரித்திருந்தது. எவ்வாறாயினும், அமுலுக்கு வரும் வகையில் மாதாந்த தொழில்சார் வாடகை (எம்ஓஆர்) இனைச் செலுத்துகின்ற விநியோகஸ்தர்களிடமிருந்து எம்யூஎவ் அறவிடப்படும். அதற்கமைய, முன்னைய ஆண்டின் போது (12 மாதங்கள் காலப்பகுதி) உழைக்கப்பட்ட சராசரி மாதாந்த தரகில் சராசரி மாதந்த தரகின் 35 சதவீதமாக எம்யூஎவ் கணிப்பிடப்படும். மேலும், பின்வரும் அடிப்படையின் பிரகாரம் அவர்கள் நிலைத்திருப்பதற்கு சிறிய அளவு விநியோகஸ்தர்களுக்கு தள்ளுபடியொன்று வழங்கப்பட்டிருந்தது.

| மாதாந்த தரகு வகை | தள்ளுபடி சதவீதம் |
|---|---|
| ரூபா 500,000 ஐ விடக் குறைந்த | 70 |
| ரூபா 500,001 - ரூபா 1,000,000 | 50 |
| ரூபா 1,000,001 - ரூபா 1,500,000 | 25 |
| ரூபா 1,500,001 இற்கு மேல் | 0 |

கருத்திற்கொள்ளத்தக்க தாமதத்தின் பின்னர், 13 மாதங்களின் பின்னர், 2014 சனவரி 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இந்த திட்டத்தின் அமுல்படுத்தல் உடன்படிக்கைகளினை தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக சாத்தியக்கூறு அற்றதாகக் காணப்பட்டது. சீஓடிஓ உடன்படிக்கையின் இறுதியாக்கல், பூர்த்தியாக்கலின் விளிம்பில் காணப்படுகின்றதுடன் இறுதியாக்கப்பட்டதன் பின்னர், சந்தைப்படுத்தல் செயற்பாடுகளின் இந்தத் திட்டம் அனைத்து சீஓடிஓ / ரீஓடிஓ முகவர்களுடன் அமுல்படுத்துவதற்கு எதிர்க்கப்படுகின்றது, என 2014 திசெம்பர் 11 ஆந் திகதிய 16/1154 ஆம் இலக்க சபைப் பத்திரத்தின் மூலம், சபைக்கு சந்தைப்படுத்தல் முகாமையாளர் (சில்லறை) குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், 2016 பெப்ரவரி 16 இல் 11/1179 ஆம் இலக்க பரந்த தீர்மானத்தின் மீதான அந்த உடன்படிக்கைகளினை திருத்தஞ் செய்வதற்கு சபை அவர்களின் அங்கீகாரத்தினை அளித்திருந்தனர். ஆனால், 2017 ஒக்தோபர் 31 வரையேனும் (2016 இல் 248 முகவர்களில் 11 இற்கு மாத்திரம் எம்யூஎவ் அறிவிக்கப்பட்டிருந்தது) மேற்குறிப்பிடப்பட்டதற்கிணங்க இரண்டு பிரிவகளில் முகவர்களிடமிருந்து எம்யூஎவ் இனை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, குறித்த சபைத் தீர்மானத்தினை அமுல்படுத்தாமையின் காரணமாக 2014 ஆம் ஆண்டிலிருந்து சீபிசீ இற்கு ஆண்டிற்கு ரூபா 300 மில்லியனுக்கு மேலதிகமான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**(இ) மருந்து உதவி திட்டம் (எம்ஏஎஸ்)**

கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவல்களின் பிரகாரம், சமூக நியதிகளின் 123(3)(அ) பிரிவின் கீழ் 1981 திசெம்பர் 31 இல் வரையறுக்கப்பட்ட சிலோன் பெற்றோலியம் கோப்பரேஷன் திரிப்ட் சொசைட்டி (சீபிசீரீஎஸ்எல்) பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் செயற்பாட்டிற்கு இலங்கையில் பரிந்துரைக்கப்பட்ட கூற்றில் வழங்கப்பட்ட வரையறையின் பிரகாரம், (அரச சார்பற்ற நிறுவனம்) இலாப நோக்கமற்ற நிறுவனமொன்றாக செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. சீபிசீ மற்றும் சீபிஎஸ்ரீஎல் ஆகிய இரண்டினதும் அனைத்து நிரந்தரமான ஊழியர்களும் சீபிசீரீஎஸ்எல் இன் உறுப்பினர்களாகக் காணப்படுகின்றனர். ஓய்வூதிய நலன்களினை வழங்குதல், உறுப்பினர்களின் இறப்பு நிகழ்வுகளில் அடுத்துள்ள உறவினர்களுக்கு நிதிசார் உதவி, இறப்பு நிகழ்வுகளில் தகுதியான குடும்ப உறுப்பினர்களின்

உறுப்பினர்களுக்கு நிதிசார் உதவி, மருத்துவ நலன் திட்டத்தின் கீழுள்ள உறுப்பினர்களுக்கு நிதிசார் உதவி மற்றும் உறுப்பினர்களுக்கு கடன்களை வழங்குவது என்பன சீபிசீரீஎஸ்எல் இன் பிரதான நோக்கங்களாகக் காணப்படுகின்றன.

சீபிசீரீஎஸ்எல் இனால் அதன் உறுப்பினர்களாகையினால், சீபிசீ மற்றும் சிபிஎஸ்ரீஎல் இன் ஊழியர்களுக்கு பின்வரும் பாரிய நலன்கள் வழங்கப்பட்டிருந்தது.

1. ஓய்வூதிய நலன்களின் செலுத்துகை (ஒவ்வொரு சேவை பூர்த்தி ஆண்டுகளுக்கு அரை மாத சம்பளம்)

2. சீபிசீ மற்றும் சிபிஎஸ்ரீஎல் இன் சார்பில் எம்ஏஎஸ் இனை நடாத்துதல்.

2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு திரண்ட ஒதுக்கங்களிற்கான பங்களிப்பு ரூபா 1,473,714,266 தொகையான எதிர்மறையானதாகக் காணப்பட்டமையால் சீபிசீரீஎஸ்எல் இன் தேறிய பற்றாக்குறையொன்று காரணமாக எம்ஏஎஸ் இனை தொடர்வதற்கு இயலுமையற்றதாகக் காணப்படுகின்றது என, 2016 பெப்ரவரி 23 ஆந் திகதிய சிபிசரீஎஸ்எல் இன் குழுக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர், 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 08/1186 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம், 2016 யூலை 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் சீபிசீ இனால் எம்ஏஎஸ் இன் முகாமைத்துவத்தினை தொடர்வதற்கு மற்றம் பொருத்தமானதொரு மருத்துவ காப்புறுதி வழங்குனர் தெரிவு செய்யப்படும் வரை அல்லது ஆறு மாத காலப்பகுதியொன்றுக்கு சீபிசீ இனால் அடிப்படை உரிமை வழங்கலை வழங்குவதற்கான கிரயத்தினை தாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எம்ஏஎஸ் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சீபிசீரீஎஸ்எல் தொடர்பில் 2017 யூலை 19 இல் தகவல் அழைக்கப்பட்டதன் பின்னர் இரண்டு நினைவூட்டல்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், சீபிசீ இனால் கணக்காய்விற்கு வேண்டிக்கொள்ளப்பட்ட தகவல் வழங்கப்படவில்லை. சீபிசீரீஎஸ்எல் உடனான தொடர்பு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வேண்டிக் கொள்ளப்பட்ட தகவலினை வழங்காமைக்கான காரணங்கள் கணக்காய்வில் கேள்விக்குரியதாகக் காணப்படுகின்றது.

(ii) 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 08/1186 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம், 2016 யூலை 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் சீபிசீ இனால் மருத்துவ உதவி திட்டத்தின் முகாமைத்துவம் தொடரப்பட வேண்டிய போதிலும், இத்திகதி வரை மருத்துவ உதவி திட்டத்தினை முகாமைப்படுத்துவதற்கு எவ்வித கொள்கையோ அல்லது நடைமுறையோ கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. மேலும், அவ்வாறான சபை தீர்மானத்திற்கு முரணாக தொடர்புடைய 2016 யூலை 01 காலப்பகுதிக்குப் பின்னர் சீபிசீ இலிருந்து சீபிசீரீஎஸ்எல் இனால் ரூபா 41,237,505 தொகையான மருத்துவ பட்டியல் கட்டணம் பெறப்பட்டிருந்தது.

**(ஈ) ஒயில் போக்குவரத்திற்கான பைப்லைன் வலைப்பின்னல்**

---

கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவ பெற்றோலியத்திற்கு பெற்ரோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் உலை எண்ணெய் போன்ற முடிவுற்ற பெற்றோலியப் பொருட்களின் போக்குவரத்திற்கு பல தசாப்தங்களுக்கு பின்னால் பைப்லைன்கள் நிறுவப்பட்டது. நிறுவுகைகள் பழுதுபார்த்தலுக்கான நிலையொன்றில் காணப்படுகின்றதுடன் அவற்றில் சில பழுதுபார்த்தலுக்கான நிலைக்கு அப்பால் சீரழிந்துள்ளமை காரணமாக ஏற்கனவே கைவிடப்பட்டுக் காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. அந்த பழுதடைந்த பைப்லைன்களினூடாக கொலன்னாவ எரிபொருள் களஞ்சியத்திற்கு தேசிய தேவைப்பாட்டின் பாரியதொரு அளவிலான பெற்றோலியப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்றமையால், இந்த பைப்லைன்களின் சீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் மிகவும் அவசரமானதொரு தேவையாகக் காணப்படுகின்றது. அந்த சீரழிந்த பைப்லைன்களினூடாக இறக்குமதி செய்யப்பட்ட முடிவுற்ற பெற்றோலியப் பொருட்களின் போக்குவரத்துக் காரணமாக கடுமையான எரிபொருள் நெருக்கடியொன்றுடன் ஒட்டுமொத்த நாட்டினை முடக்குவதன் சாத்தியக்கூறு கணக்காய்வில் ஒழுங்குபடுத்த முடியாதிருந்தது.

இது தொடர்பில் சீபிசீ இன் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

*"முறையே 18" மற்றும் 14" உடைய விட்டத்தினைக் கொண்ட புதிய இரண்டு பரிமாற்ற குழாய்களினை நிர்மாணிப்பதற்கு விலைமனுக்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த குளாய்கள் டொல்பின் டேங்கர் பேர்க் (டீரீபீ) (இரண்டு புதிய சுமையேற்றும் புயவங்களுடன்) இலிருந்து*

*ஆரம்பிப்பதுடன் சிபிஎஸ்ரீஎல் இன் கொலன்னாவ ஒயில் ஸ்தாபிப்பில் முடிவடையும். மேலும், பிரிவுகளின் கிடையான துளையிடுதல்களின் தேவை செய்து முடிக்கப்பட்டதன் பின்னர், தற்போது பழுதுபார்த்திலின் கீழ்க் காணப்படுகின்ற 12'' குளாய் கூட பூர்த்தியாக்கப்படும்.''*

கரையில் இருந்து அண்ணளவாக 6 கிலோமற்றர் மற்றும் முத்துராஜவல முனையத்திலிருந்து 7.2 கிலோமீற்றர் கடல் மத்தியில் ஒற்றை புள்ளி மிதவை நங்கூரமிடல் (single point Buoy Mooring) (எஸ்பிபீஎம்) ஒன்றினூடாக முத்துராஜவல ஊட்டி (Fed) நிறுவப்பட்டிருந்ததுடன் எஸ்பிபீஎம் வசதி பராமரிப்பின் கீழ்க் காணப்படும்பொழுது அல்லது கடினமான கடன் நிலமைகளில் பதிலீடான விநியோக மூலம் காணப்படவில்லை. அதேநேரம், அந்த மட்டுப்படுத்தல்கள் காரணமாக அந்த முடியுமிடங்களின் (Terminals) உத்தமமான பயன்பாடு தடுக்கப்பட்டதாகக்க காணப்பட்டதுடன் (உள்ளக முடியுமிடல்) பொருட்களின் பரிமாற்றங்களுக்கு முத்துராஜவல முடியுமிடம் மற்றும் கொலன்னாவ ஸ்தாபிப்புக்கிடையே எவ்வித இடைத்தொடர்புகளும் காணப்படவில்லை.

2012 செப்தெம்பர் 13 இல் "குரொஸ் கன்றி பைப்லைன் செயற்திட்டம் - Cross Country Pipeline Project" இன் இமுல்படுத்தலுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவ நிலையம் வரை குரொஸ் கன்றி பைப்லைன்ஸ் - எரிபொருள் குழாய்களின் தற்போதைய நிலைமை கீழே காட்டப்படுகின்றன.

| குழாய்களின் விட்டம் (அங்குலம்) | உற்பத்தி | தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 10 | எரிவாயு எண்ணைய் | செயற்படக்கூடிய நிலைமை |
| 10 | ஏனைய வெள்ளை எண்ணெய் | செயற்படவில்லை |
| 10 | நப்த்தா (Naphtha) எண்ணெய் | செயற்படவில்லை |
| 12 | நப்த்தா (Naphtha) எண்ணெய் | செயற்படவில்லை. சிபிஎஸ்ரீஎல் குழாயை மாற்றுகின்றது. |
| 14 | எரிபொருள் எண்ணெய் | செயற்படக்கூடிய நிலைமை |

சீபிசீ இன் பதிவேடுகளின் பிரகாரம், பைப் லைன் கழிவு பரிமாற்று (பிஎல்ரீ) மற்றும் தாமதக் கட்டணங்கள் காரணமாக சீபிசீ இற்கு ஏற்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,096,304,695 தொகையாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கு முறையே 922,800,051 ஆன் பிஎல்ரீ மாறுபாட்டு (Variation) நட்டத்தினையும் மற்றும் ரூபா 173,504,644 ஆன தாமதக் கட்டணங்களினையும் கூட கொண்டிருந்ததுடன், இரண்டு நட்டங்களும் குளாய்களினை விநியோகிப்பதன் காரணமாக பிரதானமாக தோன்றியிருந்தது. எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் இந்த விடயங்கள் தொடர்ச்சியாகக் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், குழாய்களினை விநியோகிப்பதிலுள்ள நட்டத்தினை குறைப்பதற்கு சீபிசீ இன் முாமைத்துவத்தினால் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) திருகோணமலை தாங்கிப் பண்ணை**

விவசாய தொட்டி 100 எண்ணைய் தொட்டிகளினை உள்ளடக்கியுள்ளதுடன், ஒவ்வொன்றும் 12,500 கன மீட்டர்கள் ($M^3$) (10,000 எம்ரீ) கொள்ளவினையும் மற்றும் ஏனைய தொடர்புடைய வசதிகளினைக் கொண்டிருந்ததுடன் 1930 இல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் 999 வருடங்கள் காலப்பகுதியொன்று பிரித்தானியா அரசாங்கத்தின் கர்த்தர் உயர் கடற்படையின் ஆணையாளருக்கு இலங்கை அரசாங்கத்தினால் குத்தகையின் அடிப்படையில் பண்ணை தொட்டிக்கு சொந்தமான 358,553 ஹெக்டேயர்கள் பரப்பளவுடனான காணி வழங்கப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளில் 1961 இல், மூன்று தவணைகளில் 250,000 ஸ்டெர்லிங் பவுன்களினை சீபிசீ செலுத்தியிருந்ததுடன் 1964 ஏப்ரல் 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் காணி, விவசாயத் தொட்டி, கட்டிடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் உரிமைத்துவத்தினை எடுத்திருந்தது. இருப்பினும், மேற்குறித்த காணிக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்வித சட்டரீதியான ஆவணங்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

2003 இல், 35 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு களஞ்சிய வசதிகள் மற்றும் காணியை குத்தகை விடுவதற்கு லங்கா இந்தியன் ஒயில் கம்பனியுடன் (எல்ஐஓசி) எம்ஓயூ ஒன்றினை இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டிருந்ததுடன் உடன்படிக்கை திகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் குத்தகை உடன்படிக்கை செயல்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், சீபிசீ இதுவரையில் எவ்வித குத்தகை உடன்படிக்கையினையும் ஏற்படுத்தியிருக்கவில்லை.

1942 இல் யுத்தத்தினால் ஒரு எண்ணைய் தாங்கி முழுமையாக அழிக்கப்பட்டிருந்தது. மிகுதியாகவுள்ள 99 எண்ணெய்த் தாங்கிகளில், 14 தாங்கிகள் தற்போது எல்ஐஓசி இனால் பயன்படுத்தப்படுகின்றதுடன் மிகுதி 85 தாங்கிகள் கைவிடப்பட்டிருந்தது. 2015 மார்ச் இல் இந்திய பிரதமரின் இலங்கைக்கான விஜயத்தின் போது, இலங்கை ஐஓசி மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணைந்து சைனாபே (China Bay) மேல் பண்ணை தொட்டியினை அபிவிருத்தி செய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. 2016 யூலை 13 இல் சீபிசீ மற்றும் எல்ஐஓசி இனால் உருவாக்கப்பட்ட கூட்டு முயற்சிக்கு பண்ணைத் தொட்டியின் செயற்பாட்டினை கையளிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் 2016 யூலை 13 இல் நடாத்தப்பட்ட பொருளாதார முகாமைத்துவத்திற்கான அமைச்சரவை குழு (சீசீஈஎம்) கூட்டு முயற்சியொன்றுக்கான வழிமுறைகளினை அபிவிருத்தி செய்வதற்கு ஆலோசகர் ஒருவரினை நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இது தொடர்பில் சீபிசீ இன் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

*"கொலன்னாவ ஸ்தாபிப்பில் சீபிசீ இனால் முகங்கொடுக்கப்பட்ட களஞ்சிய கட்டுப்பாட்டிற்கு தீர்வொன்றை வழங்கும் நோக்கொன்றுடன் திருகோணமலை தாங்கி பண்ணையின் இந்தப் பிரச்சினை கலந்துரையாடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திருகோணமலையிலுள்ள இந்த தாங்கிகளின் உரிமைத்துவம் இந்திய மற்றும் இலங்கைக்கு இடையிலான இருபக்க உடன்படிக்கையின் பிரகாரம் முடிவுசெய்யப்பட வேண்டுமென சீபிசீ இன் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. சீபிசீ 16 தாங்கிகளினை மாற்றஞ்செய்வதற்கு மற்றும் நாட்டில் உற்பத்தி பற்றாக்குறை இடரினைக் குறைப்பதற்கு நேரடியாக உதவும் மற்றும் விநியோக கிரயத்தினை குறைக்கக்கூடியதொன்றாகக் காணப்படுகின்ற திருகோணமலையிலிருந்து அருகிலுள்ள பிரதேசங்களுக்கு எரிபொருளினை விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. சில தாங்கிகளின் உரிமை மற்றும் செயற்படுத்துவதற்கு சீபிசீ இற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர், சில மாதங்களுக்குள் செயற்திட்டத்தின் பைப்லைன்களினை அமைத்தல் மற்றும் தொடர்புடைய மாற்றங்களினை ஆரம்பிப்பதுடன் முன்னோக்கிச் செல்வதற்கு சீபிசீ தயாராகக் காணப்படுகின்றது.*

(ஊ) **சீபிசீ மற்றும் சிபிஎஸ்ரீஎல் இற்கு இடையிலான சேவை உடன்படிக்கை**

சீபிசீ மற்றும் சிபிஎஸ்ரீஎல் இற்கு இடையிலான சேவை உடன்படிக்கையொன்று கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், ஒவ்வொரு நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகளின் முறையானதொரு புரிந்துணர்வொன்று தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சிபிஎஸ்ரீஎல் இனால் வேண்டப்படும் தரம் மற்றும் கணியத்தில் பெற்றோலியப் பொருட்களின் ஏற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு, செயலாற்றல் குறிகாட்டிகள் உள்ளடங்கலாக, கண்காணிப்பு கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் சீபிசீ இனால் முறையாக வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) **இருப்பு மீளாய்வு குழு**

சீபிசீ, சிபிஎஸ்ரீஎல், ஜேசீரீ ஒயில் வங்கி, மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி, இலங்கை மின்சார சபை (சீஈபி) மற்றும் வரிசை அமைச்சிலிருந்து உத்தியோகத்தரொருவர் என்பனவற்றிலிருந்து உறுப்பினர்களை உள்ளடக்கிய இருப்பு மீளாய்வுகுழு அதன் கூட்டங்களினை ஒவ்வொரு வாரமும் நடாத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், ஒவ்வொரு பெற்றோலியப் பொருட்களிலும் மீளகட்டளை மட்டம், அதி உத்தம மட்டம், இழிவு மட்டம் மற்றும் மீள கட்டளைக் கனியம் மற்றும் ஏனையவை, இருப்பு மட்டங்களுடன் தொடர்புடைய முறையான பதிவெடுகளினை சீபிசீ பேணியிருக்கவில்லை. சிபிஎஸ்ரீஎல் இனால் சமர்ப்பிக்கப்பட்ட இருப்பு கணியவியல் பேணுகை அறிக்கையின் அடிப்படையில் மாத்திரம் பெற்றோலியப் பொருட்களின் கட்டளைக் கணியம் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் பெற்றோலியப் பொருட்களின் இருப்புக்களின் பேணுகை தொடர்பில் வேறு எவ்வித ஆவணங்களும் இருப்பு மீளாய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2010 இல் எஸ்எபி முறைமையின் அறிமுகத்திலிருந்து, வேண்டப்படும் இருப்பு தொடர்பான அறிக்கைகளினை வெளியிடுவதற்கு தரவுகளினை பிரித்தெடுப்பதற்கு சீபிசீ இனால் முடியாததாகக் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஏ) **முத்துராஜவல முனையத்தின் பயன்பாடு**

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ச்சியாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், முத்துராஜவல முனையம் பெற்றோலியப் பொருட்களின் விநியோகத்திற்கு இதுவரை உத்தமமாகப்

பயன்படுத்தப்படவில்லை. அதற்கமைய முதலீடு மேற்கொள்ளப்பட்டதிலிருந்து சீபிசீ இற்கு பின்வரும் பயன்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

- துறைமுகக் கட்டணங்களை சேமித்தல்.
- கப்பல்கள் தரித்து நிற்கும் காலத்தைக் குறைத்தல்.
- தாமதக் கட்டணங்களை குறைத்தல்.
- விநியோக கிரயங்களைக் குறைத்தல்.
- மனித வளக் கிரயங்களைக் குறைத்தல்.
- குழாய் வழிகளினூடாக எரிபொருளை வழங்குவதன் மூலம் விநியோக இழப்பை சேமித்தல்.
- பவுசர்கள் மூலம் எரிபொருளை விநியோகிப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல்.

### 4.3 மீன்பிடிக் கூப்பன் முறைமை

எரிபொருள் விலைகளின் திருத்தத்தின் விளைவாக மீன்பிடிக் கைத்தொழிலின் மீதான பாதகமான தாக்கங்களை குறைக்கும் நோக்கில் சீபிசீ மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்துடன் இணைந்து 2012 மார்ச் முதல் அமுலுக்கு வரும் வகையில் மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களிற்கு எரிபொருள் மானியத்தினை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை சீபிசீ ஆரம்பித்திருந்தது. மானிய கூப்பன்கள் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் மீன்பிடி படகு உரிமையாளர்களுக்கிடையே பகிரிந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அது 2013 செப்தெம்பர் முதல் நிறுத்தப்பட்டிருந்தது. மானியக் கூப்பன்களிற்காக எரிபொருளை விநியோகிப்பதற்கு சீபிசீ வணிகர்களை தெரிவு செய்திருந்ததுடன் அதற்கமைய, மீன்பிடி உரிமையாளர்கள் கூப்பன்களை அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பிராந்திய வணிகர்களிற்கு சமர்ப்பித்து எரிபொருளை பெற்றுக்கொண்டிருந்தனர். வணிகர்களால் சீபிசீ கூப்பன்கள் சமர்ப்பிக்கப்படுகையில் சீபிசீ நிலுவைத் தொகையினை தீர்ப்பனவு செய்திருந்தது. அதற்கிணங்க, மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் ஊடாக பொதுத் திறைசேரியிடமிருந்து சீபிசீ செலுத்தப்பட்ட தொகை மீளப் பெறப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவலின் படி, மீன்பிடிக் கூப்பன்கள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீபிசீ இனால் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 4,367,320,839 மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 4,371,312,889 ஆகக் காணப்பட்டது. இருப்பினும், சீபிசீ

பொதுத் திறைசேரியிடமிருந்து மூன்று தவணைகளில் ரூபா 4,549,775,000 தொகையினை மீளப்பெற்றிருந்தது.

(ஆ) சீபிசீ இனால் ரூபா 182,454,161 தொகையொன்று மேலதிகமாகப் பெறப்பட்டிருந்த போதிலும், அது இத்திகதி வரை பொதுத் திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சீபிசீ இனால் மீன்படி மானிய பகிர்ந்தளிப்பு செயன்முறை தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீன்பிடி கூப்பன்களிற்கு அனுமதிக்கப்பட்ட எரிபொருள் அளவு மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களால் பெற்றுக்கொள்ளப்படாது அதற்குப் பதிலாக கூப்பன்களின் (மானியம்) முகப்பெறுமதிக்குச் சமமான தொகையினை வணிகர்களிடமிருந்து அவர்கள் பெற்றுக்கொண்டிருந்தனர்.

(ii) எரிபொருளை பெறுவதற்குப் பதிலாக எரிபொருள் கூப்பன்களை கழிவுடன் மாற்றி மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களால் விநியோகஸ்தர்களிடமிருந்து காசினைப் பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், வணிகர்கள் அக் கூப்பன்களை சீபிசீ இற்குச் சமர்ப்பித்து கூப்பன்களின் பெறுமதியின் மொத்தத் தொகையினை மீளப் பெற்றிருந்தனர்.

(iii) விநியோகத்தர்களின் கணக்குகளிற்கு மீளளிக்கப்பட வேண்டிய தொகையினைக் காட்டிலும் கூடுதலான தொகை செலவு வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. தெரிவுச் செவ்வையின் படி, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளளிக்கப்பட வேண்டிய தொகையினைக் காட்டிலும் ரூபா 9,759,350 விநியொகஸ்தர்களின் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவ்வாறான மேலதிக மீளளித்தல்களின் ஒரு பகுதி பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

(iv) சில சந்தர்ப்பங்களில் மீன்பிடிக் கூப்பன்களைப் பெற்றுக்கொள்ளாது வணிகர்களின் கணக்குகளிற்கு பணத் தொகைகள் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், அத்தொகையினை தீர்ப்பதற்காக பின்னர் அவர்கள் கூப்பன்களை வழங்கியிருந்தனர். அவ்வாறான ஒரு

சந்தர்ப்பத்தில், விநியோகஸ்தர்களின் கணக்குகளிற்கு ரூபா 24,310,000 தொகை செலவு வைக்கப்பட்டு 01 முதல் 12 மாத கால வீச்சில் சீபிசீ அத்தொகையினை பின்னர் கிடைத்த கூப்பன்களைப் பயன்படுத்தி நாட்குறிப்புப் பதிவின் மூலம் தீர்த்திருந்தது.

(ஈ) மீன்படி கூப்பன்களிற்காக எரிபொருளை வழங்குவதற்கு பொருத்தமற்ற வணிகர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, மாத்தறை கரையோரப் பிரதேசத்திலிருந்து 24 கிலோ மீற்றர்களுக்கு தொலைவில் ஹக்மன இல் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையமொன்று மீன்பிடி கூப்பன்களிற்காக எரிபொருளை விநியோகிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்த மீன்பிடி கூப்பன்களின் உண்மையான பெறுமதிக்கும் வணிகர்களால் தீர்ப்பனவிற்காக சீபிசீ சமர்ப்பித்திருந்த கூப்பன்களின் பெறுமதிக்கும் இடையே ரூபா 85,878,751 வேறுபாடு காணப்பட்டது.

(ஊ) வணிகர் ஒருவருக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த எரிபொருள் சிட்டைகளின் தொகை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மீன்பிடி கூப்பன் நடைமுறையின் பிரகாரம், ஏனைய மாவட்டங்களிலுள்ள மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களிற்கு எரிபொருளை வழங்குவதற்கு வணிகர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. மேற்குறித்த வணிகரின் எரிபொருள் நிரப்பும் நிலையம் திருகோணமலையில் அமைந்திருந்த போதிலும், அவர் முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலுள்ள படகுகளின் உரிமையாளர்களிடமிருந்து மீன்பிடி கூப்பன்களை கழிவுடன் (எரிபொருளை வழங்காது) பெற்று, எரிபொருள் சிட்டைகளைத் தீர்ப்பதற்காக சீபிசீ சமர்ப்பித்திருந்தார். அதற்கமைய, ரூபா 17,508,875 தொகைக்குரிய மீன்பிடி கூப்பன்கள் சீபிசீ சமர்ப்பித்திருந்த போதிலும், சீபிசீ அவை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், சீபிசீ ஏற்பதற்கு மறுத்திருந்தமை காரணமாக ரூபா 6,281,250 தொகையான ஏனைய கூப்பன்கள் 2016 யூன் 31 இல் உள்ளவாறு அவரிடம் வைக்கப்பட்டிந்தன.

(ii) இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு புலனாய்வின் பிரகாரம், அவரால் சமர்ப்பிக்கப்பட்ட மோசடியான கூப்பன்களிற்கு மேற்படி முகவருக்கு சீபிசீ ரூபா 2,658,015 தொகை செலுத்தியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. இருப்பினும், இது தொடர்பில் பொறுப்புடைய உத்தியோகத்தருக்கு எதிராக சீபிசீ எந்தவொரு புலனாய்வினையும் ஆரம்பித்திருக்கவில்லை.

## 4.4 இடர்குறைப்பு கொடுக்கல் வாங்கல்கள்

2007 தொடக்கம் 2009 காலப்பகுதியின் போது எண்ணெய் பெறுகைகள் தொடர்பில் இடம்பெற்ற இடர்குறைப்பு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் நாட்டிற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 14,028 மில்லியனாகக் காணப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் கூட்ட மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு வர்த்தக வங்கிகளுடன் இடர்குறைப்பு ஒப்பந்தங்களினை ஏற்படுத்துதல் தொடர்பாக நடுவராக செயற்படுவதற்கான தரப்பினர் ஒருவராக சீபிசீ அழைக்கப்பட்டதுடன், தரப்பினரிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட தீர்ப்பனவு உறுதியின் கீழ் 2013 யூன் 3 இல் ஸ்டான்டட் சாட்டட் வங்கி (எஸ்சீபீ) இற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 60 மில்லியன் (ரூபா 7,713 மில்லியன்) தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் 2016 ஆகஸ்ட் 04 இல் டச்சு வங்கி ஏஜி இற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 27 மில்லியன் (ரூபா 3,881 மில்லியன்) செலுத்தப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீபிசீ இனால் தாங்கிக்கொள்ளப்பட்ட மொத்த நட்டம் ரூபா 13,641 மில்லியனாகக் காணப்பட்டது.

(ஆ) சீபிசீ இன் இடர்குறைப்பு கொடுக்கல் வாங்கல்கள் மீது ரூபா 941.2 மில்லியன் தொகையான சட்டச் செலவினங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்பட்டதுடன் அதில், ரூபா 370.6 மில்லியன் தொகையொன்று இலங்கை மத்திய வங்கியினால் தாங்கிக்கொள்ளப்பட்டதுடன் ரூபா 567.5 மில்லியன் தொகையொன்று 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை சீபிசீ இனால் இலங்கை மத்திய வங்கிக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3.1 மில்லியன் தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மேலும், கொமர்சியல் வங்கி வர்த்தக உயர் நீதிமன்றம், கொழும்பில் சீபிசீ இற்கு எதிராக ஐக்கிய அமெரிக்க டொலர் 8,648,300 இனை உரிமை கூறி வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தது.

(ஈ) 2008 இலிருந்து கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட சீபிசீ இன் டிஜிஎம் (நிதி) இற்கு எதிராக முறையானதொரு புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆகஸ்ட் 04 இல் அவரது சேவை நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கு பொறுப்பான நபர்களுக்கு எதிராக சீபிசீ இனால் வேறு எவ்வித புலனாய்வும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 தண்டப்பணம் செலுத்துதல்

எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் அறிக்கையிடப்பட்டதற்கு இணங்க, திறைசேரியிடமிருந்து அத்தொகையினை மீளப்பெறுதல் அடிப்படையில் நிலக்கீழ் செயற்பாடுகளை ஆரம்பித்தல் நோக்கத்திற்கென 2002 முதல் நிலுவையாக உள்ள தொகையினை தீர்ப்பதற்காக 2014 யூன் 20 ஆந் திகதி சுங்கத் திணைக்களத்திற்கு ரூபா 57,736,913 தொகையினை சீபிசீ செலுத்தியிருந்தது. இருப்பினும், இப்பணம் தண்டப்பணமாக செலுத்தப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் இனங்கண்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீபிசீ இனால் செலுத்தப்பட்ட தொகை இந்த அறிக்கை திகதி வரை திறைசேரி அல்லது நிலக்கீழ் வியாபாரத்தினால் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவல்களின் படி, அக் கொடுப்பனவில் 50 சதவீதமானவை அல்லது ரூபா 28,868,456 தொகை சுங்க உத்தியோகத்தர்களுக்கிடையே பகிரப்பட்டிருந்தமையும் ஏனைய 20 சதவீதம் அல்லது ரூபா 11,547,383 தொகை சுங்க உத்தியோகத்தர்களின் நலன்புரி நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) இரண்டு நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களாக காணப்பட்டமையால் அத்தொகையினை எதிரீடு செய்வதற்கான வாய்ப்பு காணப்பட்ட போதிலும், சுங்க கட்டளைச் சட்டத்தின் 154 மற்றும் 165 ஆம் பிரிவுகளின் பிரகாரம் முறையீடு செய்வதற்கு சீபிசீ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.6 செயற்பாட்டு திறமையீன்மைகள்

### 4.6.1 சுத்திகரிப்புச் சாலையின் செயற்பாடுகள்

தற்போது காணப்படுகின்ற 47 வருடங்கள் வயதினுடைய சுத்திகரிப்புச் சாலை 1969 இல் ஆரம்பிக்கப்பட்டு ஒரு அடிப்படையிலான சுத்திகரிப்பு சாலையாக காணப்படுகின்றதுடன் நாட்டில் பெற்றோலியப் பொருட்களுக்கு காணப்படும் அதிகரித்த கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு முடியாததாகக் காணப்படுகின்றதுடன், குறைந்த விலையில் பெற்றோலியப் பொருட்களினை வெளியிடுவதற்கு வசதிகள் உள்ளடங்கலாக உயர்தர தொழில்நுட்பங்களுடன் செயற்படுகின்ற மற்றும் சுத்திகரிப்பு செயற்பாட்டு வினைத்திறனை உத்தமப்படுத்துவதன் மூலம் பெற்றோல் மற்றும் டீசல் போன்ற தரம்குறைந்த பொருட்களினை உயர் பெறுமதியுடைய பொருட்களுக்கு மேம்படுத்துவதற்கான திறன்களினுடைய சுத்திகரிப்புச் சாலைகளுடன் ஒப்பிடும் போது இந்த சுத்திகரிப்புச் சாலை குறைந்த இலாபத்துடன் செயற்படுகின்றது. எவ்வாறாயினும், கிரய வினைத்திறனான முறையொன்றில் சந்தைக்கு பெற்றோலியப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு முன்மொழியப்பட்ட சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை விரிவாக்கல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் (எஸ்ஓஆர்ஈஎம்) சீபிசீ இனால் அமுல்படுத்த முடியாததாகக் காணப்பட்டது. ஆரம்ப சாத்தியவள கற்கை பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் இந்த நோக்கத்திற்கு தேவையான காணி (35 ஏக்கர்கள்) பெறப்பட்டிருந்த போதிலும், இந்த திட்டத்திற்கு முதலிடுவதற்கு போதுமையற்ற நிதிசார் பலம் காரணமாக இன்னமும் செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு சீபிசீ இற்கு முடியாமல் காணப்பட்டது. செயற்திட்டத்தின் மொத்த கிரயம் 8 வருடங்களுக்கு குறைந்த மீளச்செலுத்தும் காலப்பகுதியொன்றுடன் ஐக்கிய அமெரிக்க டொலர் 2.1 பில்லியன் ஆக மதிப்பிடப்பட்டதுடன், செயற்திட்டத்தின் தேறிய இற்றைப் பெறுமதி (என்பிவி) ஐக்கிய அமெரிக்க டொலர் 1,535 மில்லியனாகவும் காணப்பட்டது. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் சொத்துக்கள் மற்றும் மூலதன செயற்திட்டங்களின் முன்னேற்றங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த, ரூபா 837 மில்லியன் தொகையான சீபிசீ இனால் நேரிட்ட செலவினம் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக அவதானிக்கப்பட்டது.

### 4.6.2 நிரப்பும் நிலையங்களின் மேற்பார்வை

அளவிடுகையின் துல்லியத்தன்மையினை பரீட்சித்த பின்னர் கைவிடப்பட்ட பம்பிகளினை முத்திரையிடுவதற்கு அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் (எம்யூஎஸ்எஸ்டி) மற்றும் சீபிசீ நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், இந்த பணி

தொடர்ச்சியான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது. அதன் விளைவாக, கைவிடப்பட்ட பம்பிகளினூடாக வேண்டிக்கொள்ளப்பட்ட 0.25 எல்லைக்குக் குறைந்ததாக அதிகமான சந்தர்ப்பங்களில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

நீண்ட காலப்பகுதியொன்றுக்கு பிரதேச மேற்பார்வையாளரினால் நிரப்பும் நிலையங்களுக்கு தொடர்ச்சியாக வருகை தராமை, நீண்ட காலப்பகுதியொன்றுக்கு உடைந்த காற்று பம்பியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை, தினசரி விற்பனைகள் பதிவேடுகளினை முறையாக மேற்பார்வை செய்யாமை மற்றும் சில்லறை விற்பனை கூடங்களின் பரீட்சிப்பு அறிக்கைகள் மற்றும் ஏனையவை முறையாக பூர்த்தி செய்யாமை போன்றன பிரதேச மேற்பார்வையாளரினால் நிரப்பும் நிலையங்களின் மேற்பார்வை போதுமானதாக மேற்கொள்ளப்பட்டிருக்காமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 4.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

கொள்வனவிலிருந்து பின்வரும் சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டடிருந்தன.

(அ) **வனத்தமுள்ளயிலுள்ள கல்ககா கும்புற காணி** : எல்பி கேஸ் செயற்திட்டம் மற்றும் விளையாட்டு மைதானமொன்றினை ஸ்தாபித்தல் நோக்கத்திற்கு ரூபா 10.6 மில்லியனுக்கு இந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்தக் காணி குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 700 கட்டுமானங்களுக்கு அதிகமாக அது ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) **மஹன காணி** : கிடைக்கக்கூடிய கடிதத் தொடர்புகளின் பிரகாரம், அந்த நிலத்தினை ரூபா 0.625 மில்லியன் தொகையொன்றிற்கு சீபிசீ கொள்வனவு செய்திருந்ததுடன், அதற்குள் அது கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 1986 இல் கொள்வனவுக்குப் பின்னர் கூட முன்னைய உரிமையாளரினால் அந்த நிலம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) **முதலீடுகள்** : 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நான்கு கம்பனிகளின் விலைகூறப்பட்ட மற்றும் விலை கூறப்படாத பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் கீழ்க்கொண்டு செல்லும் பெறுமதி ரூபா 35.125 மில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், கம்பனிகளினால் சீபிசீ இற்கு நீண்ட காலப்பகுதிக்கு எவ்வித பங்கிலாபங்களும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும்,

சர்வதேச கூட்டுறவு பெற்றோலிய கழகத்தில் ரூபா 5 மில்லியன் பெறுமதியான முதலீட்டினைக் கொண்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் காணப்படவில்லை.

## 4.8 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக, குறிப்பாக நல்லாளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்கள் மீதான 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2004 சனவரி 08 இன் 21 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை, மற்றும் அதிமேதகு சனாதிபதி இனால் விநியோகிக்கப்பட்ட 2010 மே இன் சிஎஸ்/1/17/1 ஆம் இலக்க மற்றும் 2006 சனவரி 04 இன் சீஎஸ்ஏ/பிஜ/40 ஆம் இலக்க கடிதங்களுக்கு முரணாக, ஏனைய நிறுவனங்களுக்கு சீபிசீ பின்வரும் வளங்களினை விடுவித்திருந்ததுடன் ஊழியர்களின் விடுவிப்பு தொடர்பில் ஊதியத்தின் செலுத்துகைக்கு மற்றும் ஏனைய படிகளுக்கு மற்றும் விடுவிக்கப்பட்ட வாகனங்களின் பராமரிப்புச் செலவினங்களுக்கு மற்றும் எரிபொருளின் செலுத்துகைக்கு கருத்தில் கொள்ளத்தக்க பணத்தொகையொன்று ஏற்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **சீபிசீ இனால் செலவிடப்பட்ட தொகை** | | | **விடுவிக்கப்பட்ட வளங்களின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 ரூபா | 2015 ரூபா | 2014 ரூபா | 2016 | 2015 | 2014 |
| மனித வளங்கல் | 8,531,754 | 3,452,737 | 46,261,907 | 9 | 11 | 56 |
| வாகனங்கள் | 20,613 | 641,375 | 3,695,910 | 2 | 3 | 7 |
| **மொத்தம்** | **8,552,367** | **4,094,112** | **54,070,868** | **11** | **14** | **63** |

### 4.9 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) வெற்றிடங்களை நிரப்புதல்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீபிசீ இன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 3,284 ஆகக் காணப்பட்ட போதிலும், அந்தத் திகதியில் உள்ளவாறான வெற்றிடங்கள் அங்கீகரித்து பதவியணியினரில் 722 அல்லது 22 சதவீதமாகக் காணப்பட்டது. அந்த வெற்றிடங்களில், பிரதி பொது முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள் & கூட்டிணைந்த விவ்காரங்கள்), பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (பராமரிப்பு & செயற்திட்டங்கள்), பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ஏனையவை உள்ளடங்கலாக சிரேஷ்ட அலுவல்கள் மட்டத்தில் 135 பதவிகள் அல்லது 30 சதவீதமாகக் காணப்பட்டது. அதற்கமைய, சீபிசீ இன் உயர் முகாமையின் முக்கிய பதவிகள் 7 தொடக்கம் 46 மாதங்களிடைப்பட்ட காலப்பகுதி வீச்சில் வெற்றிடமாகக் காணப்பட்டது. அதற்கு மேலாக, முகாமையாளர் (செயலக / சபை வெயலாளர்) இன் பதவி 2012 இல் இருந்து வெற்றிடமாகக் காணப்படுகின்றது. ஆகையினால், நீண்ட காலப்பகுதியொன்றுக்கு உயர்மட்ட முகாமைத்துவத்தின் முக்கிய பதவிகளிலுள்ள வெற்றிடங்களை பூர்த்தியாக்குவதற்கு சாதகமான செயற்பாடுகள் எடுக்காமைக்கான காரணம் கணக்காய்வில் கேள்விக்குறியொன்றாகக் காணப்படுகின்றது.

#### (ஆ) 2016 இல் ஆட்சேர்ப்புக்கள்

2017 ஏப்ரல் 04 ஆந் திகதிய எம்பிஆர்டி/ஐஏ/2/6 (i) ஆம் இலக்க கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடனான கடிதத்தினால் பொது முயற்சிகள் மீதான குழுவுக்கு (சீஓபிஈ) வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம், மொத்த ஆட்சேர்ப்புக்கள் 94 ஆக மாத்திரம் காணப்பட்ட போதிலும் கூட சீபிசீ இனால் 2016 ஆம் ஆண்டின் போது 98 நபர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய, சிஓபிஈ இற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அனைத்து மூன்று தரங்கள் தொடர்பில் பதினேழு (17) ஆட்சேர்ப்புக்கள் குறிப்பிடப்பட்டிருக்காத அதேவேளை இருபத்தியொரு (21) ஆட்சேர்ப்புக்கள் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆகையினால், சிஓபிஈ இற்கு வழங்கப்பட்ட தகவலின் துல்லியத்தன்மை கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாகக் காணப்படுகின்றது.

(இ) ஆட்சேர்ப்புகளுக்கான அறிவித்தலினை விளம்பரப்படுத்தல்

ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகளுக்கான அடிப்படை மற்றும் புள்ளியிடல் திட்டத்தின் (2015/05/26 இன் 01/1163 ஆன சபை அங்கீகாரம்) 03 ஆம் திருத்தத்தின் பிரகாரம், தரம் ஏ-1 அல்லது அதனை விட அதிகமான வெற்றிடத்திற்கு தலைவர் அல்லது முகாமைத்துவப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் மற்றும் ஏனைய ஏ-2 தரங்கள் அல்லது அதற்கு கீழான அனைத்திற்கும் டிஜிஎம் (எச்ஆர் & நிர்வாக) அல்லது எச்ஆர் முகாமையாளரின் கையொப்பத்தின் கீழ் மனிதவள முகாமைத்துவ செயற்பாடுகளின் கீழ் அனைத்து உள்ளக மற்றும் வெளியக விளம்பரப்படுத்தல்கள் வெளியிடப்பட வேண்டும்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்குறித்த திட்டத்திற்கு முரணாக சீபிசீ இன் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் பல்வேறு வெற்றிடங்கள் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட அதிகமான விளம்பரங்கள் முகாமையாளர் (ஐரீ) இற்கு எவ்வித மேற்கோளும் இன்றி தரவு பகுப்பாய்வாளர்க்கு (Data Analysist) (ஐரீ பிரிவு) சீபிசீ இன் தலைவரினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட வாய்மொழி மூலமான அறிவுறுத்தல்களின் அடிப்படையில் பதிவேற்றப்பட்டு மற்றும் அகற்றப்பட்டிருந்தது.

(ii) இணையத்தளத்தில் வெற்றிடங்கள் பதிவேற்றப்பட்டிருந்த போதிலும், அந்த வெற்றிடங்கள் நியாயமான காலப்பகுதிக்கு தோற்றமளிப்பதற்கு மற்றும் விண்ணப்பிக்கக்கூடியதாக இணையத்தளத்தில் காட்சியளிக்கப்பட்டிருக்கவில்லை. சில விளம்பரங்கள் மூன்று அல்லது ஐந்து மணித்தியாலங்களுக்கு குறைந்ததாக இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. ஆகையினால், மேற்குறித்த பதவிகளுக்கு நாட்டின் பொருத்தமான பிரஜைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு சமமான சந்தர்ப்பங்களினை அது தடுத்திருந்தது.

(iii) 2016 பெப்ரவரி 29 இல் சிங்கள செய்தித்தாளில் வெளியிடப்பட்ட செய்தித்தாள் விளம்பரத்தின் பிரகாரம், சீபிசீ இன் அனைத்து எதிர்கால வெற்றிடங்களும் சீபிசீ இன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும் என குறிப்பிட்டு அறிவித்தலொன்று சீபிசீ இனால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் இணையத்தளத்திலிருந்து ஆட்சேர்ப்புக்கான விளம்பரங்கள் அகற்றப்பட்டிருந்தது. உதாரணமாக, பொது ஊழியரின் ஆட்சேர்ப்புக்கான விளம்பரத்தின் முடிவுத் திகதி 2016 யூலை 13 ஆந் திகதி காணப்பட்ட போதிலும், 2016 யூலை 04 இல் அகற்றப்பட்டிருந்தது.

**(ஈ) முகாமைத்துவ உதவியாளர்களின் ஆட்சேர்ப்பு (கணக்குகள் & கணக்காய்வு)**

2017 சனவரி 01 இல் சீபிசீ 19 முகாமைத்துவ உதவியாளர்களினை (கணக்குகள் & கணக்காய்வு) ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அந்த முகாமைத்துவ உதவியாளர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (எம்எஸ்டி) முன் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(ii) தாங்கள் பீ3 இற்கு (எஸ்ஓஆர்ஏபி) ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு எழுத்துப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) நேர்முகப் பரீட்சையொன்றை வைப்பதன் மூலம் மாத்திரம் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு, 2016 ஒக்தோபர் 02 ஆந் திகதிய அவரின் கடிதத்தினால், பிரதிப் பொது முகாமையாளர் (எச்ஆர்எம் & நிர்வாக) ஊடாக சீபிசீ இன் தலைவர் மனித வள முகாமையாளரை அறிவுறுத்தியிருந்தார். எவ்வாறாயினும், சீபிசீ இன் எஸ்ஓஆர்ஏபி மற்றும் 2013 திசெம்பர் 11 இன் 1840/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு வெளி ஆட்சேர்ப்பிற்கு எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படல் வேண்டும்.

(iv) சீபிசீ இன் எஸ்ஓஆர்ஏபி இனால் வேண்டப்பட்டவாறு. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களினால் நிறுவனமொன்றில் தொடர்புடைய துறையில் ஐந்து வருட அனுபவம் பெறப்பட்டிருந்ததா இல்லையா என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு ஆவண ரீதியான சான்று கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) குறிப்பிடப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு விண்ணப்பதாரர் ஒருவரினால் வேறுபட்ட நிறுவனங்களிலிருந்து இரண்டு சேவைச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், விண்ணப்பதாரரினால் வழங்கப்பட்ட சேவைக் கட்டணங்கள் சீபிசீ இனால் சரியாக்கப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்த முடியாததாகக் காணப்படுகின்றது.

(vi) எஸ்ஓஆர்ஏபி இன் பிரகாரம், ஆட்சேர்ப்பின் பின்னர் முதல் ஆறு மாதங்களுக்குள் தொடர்புடைய நிறுவகத்திலிருந்து கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் சரிபார்க்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2017 ஒக்தோபர் 30 ஆன கணக்காய்வுத் திகதி வரையேனும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொது ஊழியர்களின் ஆட்சேர்ப்பு**

---

வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம், மேற்குறித்த பதவிக்கு 6,853 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்திருந்ததுடன் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கு 156 மாத்திரம் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், விண்ணப்பதாரர்களினை குறுகிய பட்டியல்படுத்தலுக்கு பின்பற்றப்பட்ட அடிப்படை கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆட்சேர்ப்புக்கு வெளியிடப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் கூட எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் சீபிசீ இன் முகாமைத்துவப் பணிப்பாளர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

*“முடிவுத் திகதியான, 2016.07.13 இல் உள்ளவாறு 6,853 விண்ணப்பதாரர்களினை சீபிசீ பெற்றிருந்தது. 18 எண்ணிக்கையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவ்வாறான பாரிய விண்ணப்பங்களினைக் கருத்திற்கொள்வதற்கு நடைமுறைக்கு சாத்தியமற்றதொன்றாகக் காணப்பட்டதிலிருந்து, முன்னால் தலைவர் / எம்டி இனால்*

*அறிவுறுத்தப்பட்டதிற்கிணங்க, முதல் 4 நாட்களின் போது பெறப்பட்ட 156 ஆகக் காணப்பட்ட விண்ணப்பங்கள், வேறு எவ்வித செயன்முறை தீர்வொன்றும் காணப்படாமையினால் நேர்முகப் பரீட்சைக்கு கருத்தில் கொள்ளப்பட்டது."*

**(ஊ) பயிற்சி**

-------------

இந்த அறிக்கைத் திகதி வரையேனும் சீபிசீ இனால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சிக் கொள்கை மற்றும் வழிகாட்டலொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், உத்தியோகத்தர்களுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டின் தெரிவுக்கு ஒழுங்கற்ற அடிப்படையொன்றினை சீபிசீ பின்பற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி (எம்பிஆர்டி) அமைச்சிலிருந்தான 2017 மார்ச் 29 ஆந் திகதிய எம்பிஆர்டி/ஏடிஎம்/15/02/40 (சிஓஎம்) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், வெளிநாட்டு பயிற்சியுடன் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டதுடன், அந்தப் பிரச்சினைகளை திருத்துவதற்கு சீபிசீ இன் முகாமைத்துவத்திற்கு ஆலோசனை கூறப்பட்டிருந்தது.

## 4.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------------------------------------

### 4.10.1 மொத்த திறைசேரிக்கு நிதி பரிமாற்றம்

-------------------------------------------------------------------

நிதியமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம், ஒவ்வொரு ஆண்டிலும் ரூபா 10,000 மில்லியனாக 2014 மற்றும் 2016 இல் பொதுத் திறைசேரிக்கு சீபிசீ இனால் ரூபா 20,000 மில்லியன் கூட்டுத்தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

2014 இல் செலுத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட ரூபா 10,000 மில்லியனை 2014 ஆம் ஆண்டிற்கு ரூபா 250 மில்லியன், 2015 ஆம் ஆண்டிற்கு ரூபா 750 மில்லியன் மற்றும் 2016 தொடக்கம் 2024 காலப்பகுதிக்கு ஆண்டொன்றிற்கு ரூபா 1,000 மில்லியன் செலவினமொன்றாக பதிவழிப்பதற்கு 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய அவரது கடிதத்தினால் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் சீபிசீ அறிவுறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்குறித்த கணக்கீட்டு பரிகாரத்தின் நிதித் தாக்கத்தினை கருத்திற்கொள்ளாது பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களினை சீபிசீ முழுமையாக பின்பற்றியிருந்தது.

சமமான தொகையொன்றினால் 2017 இல் சீபிசீ இன் ஐந்தொகையினை வலுவூட்டுவதற்கு பிணைப் பத்திரங்களினை விநியோகிப்பதற்கு பொதுத் திறைசேரிக்கு இயலச்செய்வதற்கு ஆரம்பத்தில் திரண்ட நிதிக்கு ரூபா 10,000 மில்லியன் அனுப்புவதற்காக சீபிசீ இற்கு அறிவுறுத்துவதற்கு 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய பிஈ/ஆர்ஈ/எஸ்பி/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அவரது கடிதத்தின் மூலம் எஸ்பிஆர்டி இன் செயலாளர்க்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ரூபா 186 பில்லியன் எதிர்மறை தேறிய சொத்துக்களின் நிலையில் வியாபாரத்தினை நடாத்துகின்ற நிலைமையொன்றில் அதன் பணத்தினை எடுப்பதன் மூலம், திறைசேரியின் முன்மொழிவின் பிரகாரம் சீபிசீ இன் நிதிசார் நிலைமைக்கு வலுப்படுத்தும் வழியாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதிசார் நிலைமைக்கு வலுப்படுத்துவதற்குப் பதிலாக பற்றாக்குறை அதிகமானதாகக் காணப்பட்டது.

மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் கணக்கீட்டு பரிகாரம் பற்றி சீபிசீ மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குமிடையே பல்வேறு தொடர்பாடல்களுக்குப் பின்னர், இறுதியாக, 2016 ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து அரசுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபமாக அதனை பரிகாரம் செய்வதற்கு மற்றும் சமமான மாதாந்த தவணைகளில் மூன்று வருடங்களில் 2016 ஆம் ஆண்டின் இலாபத்தின் அடிப்படையில் ஏதாவது வரிகள் தொடர்ந்தும் காணப்பட்டால் செலுத்துவதற்கு கூட 2017 ஒக்தோபரில் சீபிசீ அறிவுறுத்தப்பட்டிருந்தது

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 5.1 உள்ளக்க கணக்காய்வு

---

எந்தவொரு நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்கு உள்ளகக் கணக்காய்வுகள் முக்கியமான சேவைகளினை வழங்குகின்றது. அவை மோசடிகளினை கண்டுபிடித்ததும் தடுத்தலும், உள்ளகக் கட்டுப்பாடுகளினை பரீட்சித்தல் மற்றும் நிறுவனக் கொள்கை மற்றும் அரச பிரமாணங்களுடன் ஒருமைப்பாட்டினை மேற்பார்வையிடல் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது. ஆகையினால், உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் நிறுவனத்தின் அபிவிருத்தியில் முக்கியமானதொரு பாத்திரத்தினை வழங்குகின்றது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட 42 பதவியணியினரில், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 09 பதவிகள் அல்லது 21 சதவீதம் வெற்றிடமாகக் காணப்பட்டது. அவற்றில் 07 பதவிகள் அல்லது 54 சதவீதம் சிரேஷ்ட உத்தியோகத்தர் மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) பிரதம உள்ளக்க கணக்காய்வாளர் சீபிசீ இன் சபைக்கு நேரடியாக பொறுப்பானவராகக் காணப்பட்ட போதிலும், கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்ற நிறுவன அமைப்பு வரைபடத்தின் பிரகாரம், பிரதம உள்ளக்க கணக்காய்வாளர் சீபிசீ இன் முகாமைப் பணிப்பாளருக்கு நேரடியான பொறுப்புடையவராகக் காணப்படுகின்றார்.

(இ) மேற்குறிப்பிடப்பட்டதன் காரணமாக, சீபிசீ இன் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் 2011 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக செயற்பாடற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே முக்கியமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால், பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் வினைத்திறனானதொரு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காமையை சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் கூட்டுத்தாபனத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| பெரும்பாண்மை பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஆளணி நிர்வாகம் | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு (எஸ்ஓஆர்) அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தவறியமை. |
| (ஆ) நிதிக்கட்டுப்பாடு | கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக நிதியங்களைப் பயன்படுத்தல். கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிதியங்களின் பயன்பாடு போதுமானதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | நிறுவனங்களை உரிய வேளையில் சேகரித்தல் மீதான கட்டுப்பாடுகளிலும் கடன் ஏய்ப்புச் செய்யப்படுதல் ஆபத்தினைக் குறைப்பதிலும் பலவீனங்கள் காணப்படுதல். |
| (ஈ) பெறுகை | தேசிய பெறுகை வழிகாட்டல்களின் ஏற்பாடுகளுடன் இணங்குதல். |
| (உ) வளங்களினைப் பயன்படுத்தல் | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிகளிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதல். |
| (ஊ) தகவல் முறைமைகள் மீதான கட்டுப்பாடு | மீளாய்வாண்டில் எஸ்ஏபி முறைமையினை அணுகுவதற்கு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நாளேட்டு பதிவுகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பங்கள் நிலவுதல். ஆகையினால், எஸ்ஏபி முறைமையில் கூட ஏனைய தொகுதிகளை திருத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றதுடன் கணக்காய்வில் நிராகரிக்க முடியாதிருந்தது. |

மேலும், எஸ்ஏபி முறைமையில், நகல் வாடிக்கையாளர் கணக்குகள் உருவாக்கப்பட்டிருந்தது. ஆகையினால், சீபிசீ இன் உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் சேதமடைவதற்கும் கடன் எல்லைகளினை தவறாகப் பயன்படுத்துவதற்கு, கடன் காலப்பகுதி மற்றும் கடன்பட்டோர்கள் மீதான தொடர்புடைய கட்டுப்பாடுகளை மீறுவதற்கான சாத்தியக்கூறொன்றும் காணப்படுகின்றது.

டபிள்யூ.பீ.சி.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

# ஒரேபார்வையில்பத்தாண்டுகள்

மொத்த உற்பத்திகளின் உள்நாட்டு விற்பனை

| ரூபா மில்லியக் | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 (மீ.கு) | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **(அ) பெறுமதி** | | | | | | | | | | |
| பெற்றோல் | 46,580 | 66,434 | 60,055 | 65,158 | 90,499 | 117,600 | 132,398 | 140,885 | 127,879 | 145,476 |
| ஓட்டோ டீசல் | 113,737 | 151,070 | 119,046 | 122,360 | 165,800 | 246,441 | 216,420 | 244,407 | 174,984 | 206,545 |
| சுப்பர் டீசல் | 468 | 885 | 866 | 1,170 | 1,588 | 3,540 | 4,152 | 5,104 | 5,998 | 8,006 |
| மண்ணெண்ணெய் | 12,459 | 14,000 | 9,755 | 10,711 | 12,804 | 18,100 | 16,803 | 15,366 | 9,831 | 8,605 |
| உலை எண்ணெய் | 43,941 | 66,220 | 33,157 | 35,791 | 49,991 | 84,790 | 60,651 | 70,021 | 34,841 | 52,971 |
| **மொத்தம்** | **217,185** | **298,609** | **222,879** | **235,191** | **320,682** | **470,471** | **430,424** | **475,783** | **353,533** | **421,603** |
| **(ஆ) அளவு ஆயிரம் மெ.தொ.** | | | | | | | | | | |
| பெற்றோல் | 382 | 384 | 416 | 484 | 563 | 619 | 640 | 687 | 838 | 965 |
| ஓட்டோ டீசல் | 1,450 | 1,371 | 1,427 | 1,422 | 1,849 | 1,930 | 1,559 | 1,757 | 1,579 | 1,875 |
| சுப்பர் டீசல் | 5 | 7 | 9 | 11 | 14 | 22 | 25 | 31 | 47 | 63 |
| மண்ணெண்ணெய் | 169 | 151 | 151 | 165 | 147 | 143 | 126 | 122 | 130 | 138 |
| உலை எண்ணெய் | 985 | 995 | 1,096 | 1,004 | 1,093 | 1,187 | 668 | 722 | 512 | 625 |
| **மொத்தம்** | **2,991** | **2,908** | **3,099** | **3,086** | **3,666** | **3,901** | **3,018** | **3,319** | **3,106** | **3,667** |
| **(இ) பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் சில்லறை விற்பனை வருகை** | | | | | | | | | | |
| (டிசம்பர் 31 இல் உள்ளவாறு லீ ஒன்றுக்கு கொழும்பு அவ்விடத்திலேயான விலை ரூபா | | | | | | | | | | |
| பெற்றோல் -92 ஒக்டேன் | 95 | 92 | 120 | 115 | 115 | 125 | 159 | 162 | 150 | 117 |
| ஒ்டடோ டீசல் | 92 | 60 | 70 | 73 | 73 | 76 | 115 | 121 | 111 | 95 |
| சப்பர் டீசல் | 65.3 | 65.3 | 85.3 | 88.3 | 88.3 | 98.3 | 142 | 145 | 133 | 110 |
| மண்ணெண்ணெய் | 48 | 48 | 50 | 51 | 51 | 61 | 106 | 106 | 81 | 44 |
| உலை எண்ணெய் 800“ | 44.4 | 44.4 | 33.9 | 34.9 | 40 | 52.2 | 92.2 | 92.2 | 92.2 | 80 |
| உலை எண்ணெய் | 43.3 | 43.3 | 31.7 | 32.7 | 40 | 50 | 65 | 90 | 90 | 80 |
| உலை எண்ணெய் | 41 | 41 | 25 | 26 | 40 | 50 | 65 | 90 | 90 | - |
| **தொழிற்பாட்டு பெறுபேறுகள்** | | | | | | | | | | |
| வருமானம் | 238,364 | 341,670 | 237,663 | 256,329 | 356,442 | 512,910 | 490,381 | 525,182 | 376,734 | 423,061 |
| விற்பனை செலவுகள் | (222,763) | (334,849) | (232,271) | (269,316) | (420,227) | (540,439) | (464,374) | (499,956) | (337,119) | (326,441) |
| மொத்த இலாபம் | 15,601 | 6,821 | 5,392 | (12,987) | (63,785) | (27,529) | 26,007 | 25,226 | 39,615 | 96,620 |
| வட்டி உள்ளடங்கலாக பணியாற்று மற்றும் தாபனச் செலவுகள் | (11,617) | (21,557) | (16,745) | (13,936) | (30,572) | (62,041) | (33,897) | (24,097) | (55,927) | ((27,067) |
| ஹெட்ஜிங் செலவுகள் | - | - | - | - | - | -7,612 | - | - | -3,864 | - |
| **வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்)** | **3,984** | **-14,736** | **-11,353** | **-26,923** | **-94,357** | **-97,182** | **-7,890** | **1,129** | **-20,176** | **69,553** |

| ரூபா மில்லியன் | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 (Restated) | 2015 (Restated) | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பொறுப்புகளும்** | | | | | | | | | | |
| மூலதனம் | 1,000 | 1,000 | 1,000 | 1,000 | 3,500 | 3,500 | 3,500 | 3,500 | 28,487 | 28,487 |
| ஒதுக்குகள் | 12,568 | (2,416) | (14,038) | (38,369) | (134,736) | (232,045) | (239,967) | (236,791) | (257,472) | (214,334) |
| நீ/காபொறுப்புகள் | 13,728 | 10,908 | 32,779 | 28,478 | 27,646 | 1,998 | 1,351 | 703 | 342 | 266 |
| பணிக்கடை ஏற்பாடுகள் | 541 | 567 | 735 | 746 | 626 | 547 | 538 | 664 | 861 | 754 |
| **மொத்தம்** | 27,837 | 10,059 | 20,476 | (8,145) | (102,964) | (226,000) | (234,578) | (231,924) | (227,782) | (184,827) |
| **பிரதிநிதித்துவப்படுத்தியது** | | | | | | | | | | |
| முன்னெடுக்கப்படும் | 4,374 | 4,624 | 5,041 | 8,280 | 8,850 | 9,599 | 13,136 | 13,676 | 13,915 | 13,547 |
| முதலீடுகள் | 2,547 | 2,542 | 2,542 | 2,542 | 5,042 | 5,058 | 5,044 | 14,942 | 41,725 | 40,595 |
| தேறிய நடைமறைெ | 20,916 | 2,893 | 12,893 | (18,967) | (116,856) | (240,657) | (252,758) | (260,542) | (283,422) | (238,969) |
| **சொத்துக்கள்** | 27,837 | 10,059 | 20,476 | (8,145) | (102,964) | (226,000) | (234,578) | (231,924) | (227,782) | (184,827) |
| **காசுப்பாய்ச்சல் கூற்றின் சுருக்கம்** | | | | | | | | | | |
| தொழிற்படுத்தலில்(பயன்படுத்தப்பட்ட)இருந்து காசுப்பாய்ச்சல் | 37 | (1,228) | 41,840 | (24,169) | (102,756) | (68,408) | (13,920) | (1,817) | 9,247 | 54,532 |
| முதலீட்டுசெயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் | 1,166 | 41 | (309) | (3,376) | (644) | 1,148 | (7,547) | (1,826) | (23,385) | (6,010) |
| நிதியியல்செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் | (3,326) | (1,001) | (21,340) | (4,379) | 119,017 | 62,540 | 7,232 | 28,745 | 41,036 | (81,200) |
| காசு காசுக்குச் சமமானவற்றில்(குறைவு) அதிகரிப்பு | (2,123) | (2,188) | 20,191 | (31,924) | 15,617 | (4,720) | (14,235) | 25,102 | 26,897 | (32,678) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு காசுக்கு சமமாவை | 12,084 | 9,961 | 7,772 | 27,963 | (3,961) | 11,656 | 6,936 | (7,299) | 17,803 | 44,700 |
| ஆண்டின் இறுதியில் காசு காசுக்குச் சம்மாவை | 9,961 | 7,772 | 27,963 | (3,961) | 11,656 | 6,936 | (7,299) | 17,803 | 44,700 | 12,022 |
| **கணக்கீட்டு விகிதாசாரங்கள்** | | | | | | | | | | |
| **இலாபத்தன்மை விகிதாசாரம்** | | | | | | | | | | |
| மொத்த இலாப விகி | 6.5% | 2.0% | 2.3% | -5.1% | -17.9% | -5.4% | 5.3% | 4.8% | 10.5% | 22.8% |
| தேறிய இலாப விகித | 1.2% | -4.4% | -4.9% | -10.5% | -26.5% | -18.9% | -1.6% | 0.0% | -5.3% | 16.4% |
| **தொழிற்பாட்டு விகிதாசாரங்கள்** | | | | | | | | | | |
| வருமானத்திற்கானெ | 97.9% | 102.6% | 102.7% | 109.4% | 121.8% | 108.9% | 97.8% | 97.7% | 93.0% | 80.9% |
| சொத்து வளர்ச்சி விக | 6.65 | 9.34 | 8.13 | 8.04 | 10.70 | 10.89 | 7.30 | 7.77 | 6.44 | 8.53 |
| பொருட்பதவேட்டு பு | 2.28 | (3.66) | (1.39) | (2.93) | (9.48) | (3.88) | 0.57 | 1.05 | (0.32) | 7.10 |
| **திரவத்தனமை விகிதாசாரம்** | | | | | | | | | | |
| நடைமுறைச்சொத்து | 1.22 | 0.98 | 1.06 | 0.82 | 0.58 | 0.43 | 0.39 | 0.34 | 0.31 | 0.34 |
| துரித விகிதாசாரம் | 0.64 | 0.69 | 0.86 | 0.57 | 0.45 | 0.28 | 0.24 | 0.19 | 0.21 | 0.24 |

## *நிதியியல் கலைச் சொற்கள்*

**கணக்கீட்டுக்கொள்கை-** - நிதிக்கூற்றுக்ளைதயாரித்துஎடுத்துரைக்கையில் ,நிறுவமொன்றினால்பின்பற்றப்படுகின்ற குறித்துரைத்தகோட்பாட்டுகள், அடிப்டைகள், சமவாயங்கள் ,விதிகள் மற்றும், நடைமுறைகள்.

**திரளுகின்றஅடிப்டை** - பொறுகை அல்லதுகாசு கொடுப்பனவு அல்லது அதற்குச்சம்மானவற்றிற்காககாத்திராது, அவைநிகழுகின்றபோது கொடுக்கல் வாங்கல்கள் அல்லது ஏனைய நிகழ்வுகளின். விளைவுளை அடையாளப்படுத்துதல்.

**காசுக்குச் சமமானவைகள்-**பெறுமதியில் முக்கியமற்ற மாற்றங்களின் இடருக்கு உட்படுகின்ற அறியப்பட்ட பணத் தொகைகளுக்கு உடனடியாக மாற்றத்தக்க குறுகியகால உயர்திரவத்தன்மையுடைய முதலீடுகள்.

**எதிர்பாராதபொறுப்புகள்**- நிகழக்கூடிய அல்லது நிகழாத எதிர்கால நிகழ்வுகளின் மூலம் நிதியியல் விளைவுகள் நிர்ணயிக்கப்படும் இடத்து நிதிநிலைமைக் கூற்று திகதிமீது காணப்படுகின்ற நிபந்னைகள் அல்லது நிலைமைகள்.

**தற்போதைய விகிதாசாரம்**– கிடைக்கப்பெறுகின்ற நடைமுறைச் சொத்துக்களுடன் தற்போதைய பொறுப்புக்களை ஈடுசெய்கின்றதடவைகளை அளவிடுதல்

**மொத்த விற்பனை வரவுக்கான கடன்படுநர்கள்-** வாடிக்கயாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் பற்றிய அளவீடு (அதாவது நாட்களில் குறிப்பிடப்பட்டிருப்பின் சராசரி படுகடன் தீர்ப்பனவுக்காலம்).

**அறிக்கயிடும் காலப்பகுதிக்குப் பிந்திய நிகழ்வுகள்**- நிதியியல்கூற்றுதிகதி அத்துடன் நிதியியல் கூற்றுக்கள் வெளியிடப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்ற திகதி ஆகியவற்றின் பின்னர் நிகழ்கின்ற முக்கிய நிகழ்வுகள்.

**நியாயப்பெறுமதி**–மதிநுட்பமாக குறுகிய தூரகொடுக்கல் வாங்கல் ஒன்றின் விரும்புகின்ற தரப்பினர்களுக்கடையில்சொத்துப் பரிமாற்றப்படக் கூடிய அல்லதுபொறுப்பொன்று தீர்ப்பனவு செய்யக்கூடிய தொகை.

**வட்டி உள்ளடக்கம்** – வட்டி மற்றும் வரிக்கு முன்னர் இலாபத்தின் மூலம் வட்டி விதிப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ள அளவினை மதிப்பிடுதல்.

**ஏற்பாடுகள்**- நிச்சயமற்ற காலம் அல்லது தொகை பற்றியபொறுப்பு

**தொடர்புடைய தரப்பினர்**– ஒரு தரப்பு நிதியியல் மற்றும்தொழிற்பாட்டுத் தீர்மானங்கள் /கொள்கைகள் என்பவற்றை ஆக்குவதில் வேறு தரப்பிரைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது கணிசமாகச் செல்வாக்குச்செலுத்துவதற்கு ஆற்றலினைக்கொண்டிருக்க காணப்படிகின்றதரப்பினர்

.

**துறைகள்**–தொழிற்பாடுகளின் தன்மை அத்துடன் அதனை ஒத்த நியதிகளின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டுள்ளஆக்க கூறு தொழில் அலகுகள்.

**பணியாற்று மூலதனம்**- நாளாந்தத்தொழிற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்குத் தேவையான மூலதனம். ((நடைமுறைப் பொறுப்புக்களைக் கழித்த நடைமுறைச் சொத்துக்கள்).).